போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

III-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART III OF THE FORT ST. GEORGE GAZETTE,
JULY 10, 1923.

ந. 12 (5).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் ௵ ஜூலை ௴ 10 ௳. [விலை, 6 அ. 9 பை.

இந்தியா கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்.

BILL OF THE GOVERNMENT OF INDIA.

இராஜாங்க சபையிலும் சட்டநிரூபண சங்கத்திலும் கொண்டுவரப்பட்ட மசோதா ஆக்டுகளும், ௸ சபைக்கும் சங்கத்துக்கும் அனுப்பப்பட்ட ஸெலெக்ட் கம்மிட்டியாரின் ரிபோர்ட்டுகளும், இந்திய சட்டநிரூபண விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி பிரசுரிக்கப்பட்ட மசோதா ஆக்டுகளும்.

இந்தியா கவர்ன்மென்ட்.
சட்டநிரூபண இலாகா.

அடியிற்கண்ட மசோதா ஆக்டானது 1923-ம் ௵ மார்ச் ௴ 26 ௳ சட்டநிரூபண சங்கத்தில் கொண்டுவரப்பட்டது :—

No. 13 of 1923.
1923-ம் ௵த்து 13-வது ௸.

THE CANTONMENTS BILL.
கன்டோன்மென்டுகளைக்குறித்த மசோதா ஆக்ட்.

அட்டவணை.

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

பிரிவுகள்.

1. சுருக்கமான பெயரும் வியாபகமும் வழங்கத்தொடங்குவதும்.
2. அர்த்தம்.

2-ம் அத்தியாயம்.

கன்டோன்மென்டுகள் என்பதன் அர்த்தமும் வரையறையும்.

3. கன்டோன்மென்டுகள் என்பதன் அர்த்தம்.
4. கன்டோன்மென்டுகளின் எல்லைகளை மாற்றுவது.
5. யாதொரு விஸ்தீர்ணத்தைக் கன்டோன்மென்டில் சேர்த்துக்கொள்வதனால் இன்னது விளையுமென்பது.

பிரிவுகள்.

6. யாதொரு விஸ்தீர்ணம் கன்டோன்மென்டாயிருப்பது நின்றுபோனால் கன்டோன்மென்ட் நிதியை ஒருவகை செய்வது.
7. யாதொரு விஸ்தீர்ணம் கன்டோன்மென்டில் சேர்ந்திருப்பது நின்றுபோனால் கன்டோன்மென்ட் நிதியை ஒருவகை செய்வது.
8. 6-வது, 7-வது பிரிவுகளின்படி ட்ரான்ஸ்பர் பண்ணப்பட்ட நிதிகளையும் சொத்தையும் உபயோகிப்பது.
9. இந்த ஆக்ட் பிரயோகப்படுவதற்கு வரையறை.

3-ம் அத்தியாயம்.

கன்டோன்மென்ட் அதிகாரிகளும் கன்டோன்மென்ட் போர்டுகளும்.

10. கன்டோன்மென்ட் அதிகாரசபையும் நிர்வாக உத்தியோகஸ்தரும்.
11. கன்டோன்மென்ட் போர்ட் ஏற்படுத்தவேண்டுமாவென்று பிரதேச கவர்ன்மென்டார் தீர்மானம் செய்யவேண்டுமென்பது.
12. கன்டோன்மென்ட் அதிகாரசபை சட்டப்படி சேர்ந்த சபையாகுமென்பது.
13. நிர்வாக உத்தியோகஸ்தரை நியமிப்பது.
14. கன்டோன்மென்ட் போர்டின் அமைப்பு.
15. மெம்பர்களின் உத்தியோக கால அளவு.
16. காலி ஸ்தானங்களைப் பூர்த்திசெய்வது.
17. விசேஷ விஷயங்களில் ஏற்படும் காலி ஸ்தானங்கள்.
18. பிரமாணம் அல்லது உறுதி மொழி.
19. ராஜிநாமா.
20. ப்ரெஸிடென்டும் வைஸ் ப்ரெஸிடென்டும்.
21. வைஸ் ப்ரெஸிடென்டுடைய உத்தியோகத்தின் கால அளவு.
22. ப்ரெஸிடென்டின் அலுவல்கள்.
23. வைஸ் ப்ரெஸிடென்டின் கடமைகள்.
24. நிர்வாக உத்தியோகஸ்தரின் கடமைகள்.
25. நிர்வாக அதிகாரியின் விசேஷ அதிகாரம்.

எலெக்ஷன்கள்.

26. தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாக்கள்.
27. தெரிந்தெடுப்பவர்களின் யோக்கியதாம்சங்கள்.
28. போர்டில மெம்பராயிருப்பதற்கான யோக்கியதாம்சம்.
29. அர்த்தம்.
30. அவிபக்த குடும்பங்கள் முதலியவை.
31. எலெக்ஷன்கள் விஷயமாய் ஒழுங்கேற்படுவதற்கான விதிகள் செய்வதற்குள்ள அதிகாரம்.
32. மெம்பரானவர் தமக்குப் பற்றுள்ள விஷயம் சம்பந்தமாய் வோட் கொடுக்கக்கூடாதென்பது.
33. மெம்பர்களின் உத்தரவாதம்.
34. மெம்பர்களை நீக்கிவிடுவது.
35. நீக்கிவிட்டால் இன்னவை நேரிடுமென்பது.

ஊழியக்காரர்கள்.

36. கன்டோன்மென்ட் அதிகார சபையின் ஊழியக்காரருக்கு ஏற்படும் யோக்கியதைக் குறைவுகள்.

நடவடிக்கை.

37. சபைகள்.
38. நடத்தவேண்டிய வேலை.
39. க்வோரம்.
40 அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர்.
41. நடவடிக்கை குறிப்புகள்.
42. சபைகளுக்குப் பொது ஜனங்கள் வருவது சாத்தியமாயிருக்கவேண்டுமென்பது.
43. பிரசினைகளைத் தீர்மானம் செய்யும் முறை.
44. ரெகுலேஷன்கள் செய்வதற்குள்ள அதிகாரம்.
45. வேறே பிரதேச அதிகார சபையாருடன் கூட்டாய் நடவடிக்கை நடத்துவது.

மேல்விசாரணை.

46 தஸ்தவேஜுகளை ஹாஜர்படுத்தவேண்டுமென்று உத்தரவு செய்ய பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.
47. பார்வையிடுவது
48. கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருக்குள்ள அதிகாரங்கள்.
49. யாதொரு கட்டுவேலை முதலியதை செய்து முடிக்கவேண்டுமென்று உத்தரவு செய்ய அதிகாரம்.
50. 49-வது பிரிவின்படிக்கான கட்டளைப் பிரகாரம் நடந்துகொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்ய நிபந்தனை ஏற்படுத்துவதற்கு அதிகாரம்.

பிரிவுகள்.

51. போர்டின் அதிகாரத்தை மீறி நடப்பதற்குள்ள அதிகாரம்.
52. 51-வது பிரிவின்படி யாதொரு விஷயம் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படுவதன் மேலாவது மற்றப்படியாவது பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருக்குள்ள அதிகாரம்.
53. 51-வது பிரிவின்படி யாதொரு விஷயம் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படுவதன் மேல் கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.
54. போர்டை நிராகரித்து காரியம் நடத்துவது.
55. நடவடிக்கைகள் முதலியவை சட்டப்படி செலாவணியாகுமென்பது.

4-ம் அத்தியாயம்.

வெறியுண்டாக்கத்தக்க சாராயங்களும் லாகிரி வஸ்துக்களும்.

56. வெறியுண்டாக்கத்தக்க சாராயம் அல்லது லாகிரி வஸ்துவை அனுமதியில்லாமல் விற்பனை செய்வது.
57. வெறியுண்டாக்கத்தக்க சாராயத்தை அனுமதியில்லாமல் வசத்தில் வைத்திருப்பது.
58. அடுத்த முந்திய இரண்டு பிரிவுகளுக்கு விரோதமான குற்றங்களுக்காக நபர்களைப் பிடிப்பதும் வஸ்துக்களைக் கைப்பற்றி பறிமுதல் செய்வதும.

5-ம் அத்தியாயம்.

வரிகள்.

வரி விதிப்பது.

59. ஔஷத சம்பந்தமான காரியங்களுக்காக விற்கப்பட்ட அல்லது சர்ப்பரா செய்யப்பட்ட வஸ்துக்கள் விஷயத்தில் நிவாரணை.
60. வரி விதிப்பதற்குள்ள பொது அதிகாரம்.
61. சில கன்டோன்மென்டுகளுக்கு 1856-ம் வருஷத்து 20-வது ஆக்ட் வியாபிப்பது.
62. பிரதம பிரேரேபணைகளைத் தயார்செய்வது
63. பிரேரேபணைகளைத் தயார்செய்ததற்குப் பிற்பட்ட நடவடிக்கை முறை.
64. வருஷவாரி மதிப்பு என்பதன் அர்த்தம.
65. வரி இன்னார் செலுத்தத்தக்கதாகுமென்பது.
66. வரி விதிப்பு ஜாபிதா.
67. வரி விதிப்பு ஜாபிதாவைப் பிரசித்தம் செய்வது.
68. வரி விதிப்பு ஜாபிதாவைப் புனராலோசனை செய்து திருத்துவது.
69. வரிவிதிப்பு ஜாபிதா சரியானதென்று அதிகார வாயிலாய எண்ணப்படுவது.
70. வரிவிதிப்பு ஜாபிதா இவ்வளவுமட்டில் சாட்சியமாய்ப் பிரயோகப்படுமென்பது.
71. வரி விதிப்பு ஜாபிதாவைத் திருத்துவது.
72. புதிய வரி விதிப்பு ஜாபிதாவைத் தயார் செய்வது.
73. ட்ரான்ஸ்பர்களைக் குறித்து நோடிஸ்.
74. கட்டிடங்கள் கட்டப்பட்டதைக் குறித்து நோடிஸ்.

வஜா செய்துகொடுப்பதும் வாபஸ் செய்வதும்

75. கட்டிடங்களை இடித்துவிடுவது முதலியது.
76. வரி வஜாசெய்து கொடுப்பது.
77. யாதொரு கட்டிடத்தைக்குறித்த விவரங்களை வரிவிதிப்பு ஜாபிதாவில் பதிவுசெய்யும்படி உத்தரவு செய்வதற்கான அதிகாரம்.
78. எந்தக் கட்டிடங்கள் முதலியவை காலியாயிருப்பதாகக் கருதப்படவேண்டுமென்பது.
79. காலியாயிருக்கும் யாதொரு கட்டிடம் அல்லது வீட்டில் குடியேறும் ஒவ்வொரு விஷயத்தைக் குறித்தும நோடிஸ் கொடுக்கவேண்டுமென்பது.

அசையாப்பொருளின்மேலுள்ள பொறுப்பு.

80. கட்டிடங்களுக்கும் நிலங்களுக்கும் வரியானது அவைகளின்மேல் பொறுப்பாயிருக்கவேண்டுமென்பது.

ஆக்டராய் வரி, டெர்மினல் வரி, சுங்கம்.

81. இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள் முதலியவைகளைப் பார்வையிடுவது.
82. ஆக்டராய் அல்லது டெர்மினல் வரி செலுத்தாமல் தப்பித்துக்கொள்வது.
83. ஆக்டராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கத்தைக் குத்தகைக்கு விடுவது.

அப்பீல்கள்.

84. வரி விதிப்புக்கு விரோதமாய்ச் செய்துகொள்ளப்படும் அப்பீல்கள்.
85. அப்பீல் செலவுகள்.

பிரிவுகள்.

86. கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடமிருந்து செலவுகளை வசூல் செய்வது.
87. அப்பீல் உரிமைக்குச் சம்பந்தப்பட்ட திட்டங்கள்.
88. அப்பீல் உத்தரவு முடிவானதாகு மென்பது.

வரிகளைச் செலுத்துவதும் வசூலிப்பதும்.

89. வரிகளைச் செலுத்தவேண்டிய காலமும் மாதிரியும்.
90. பில் கொடுப்பது.
91. டிமாண்ட் நோடிஸ்.
92. வரியை வசூலிப்பது.
93. ஜப்தி.
94. ஜப்தி செய்யப்பட்ட சொத்தை ஒருவகை செய்வது.
95. கன்டோன்மென்டை விட்டுப் போவதாயிருக்கும் நபரிடத்திலிருந்து வசூலிப்பது.
96. வசூலிப்பதற்காக வியாஜ்ஜியம் தொடருவது.

வரிவிதிப்பு சம்பந்தமான விசேஷ நிபந்தனைகள்.

97. வரி விதிக்காமல் தடுக்கவாவது வரி விதிப்பதனின்றும் நிவாரணை செய்யவாவதுள்ள அதிகாரம்.
98. சில விஷயங்களில் (இடங்களை) சுத்தியாய் வைத்திருப்பதற்காக விசேஷ ஏற்பாடு செய்வதற்குள்ள அதிகாரம்.
99. 98-வது பிரிவின்படி நிபந்தனை ஏற்படுத்தப்பட்டால் சாதாரண வரியினின்றும் நிவாரணை.
100. தரித்திரர்களாயுள்ள நபர்கள் நிவாரணையாவது.
101. ராஜி ஏற்பாடு.
102. வசூலிக்க முடியாத கடன்கள்.
103. (வரி விதிக்கப்பட) உட்பட்டிருக்கிறுரென்று தெரிவிக்கக் கடமைபட்டிருப்பது.
104. முக்கியாம்சத் தன்மையாயிராத பிழை பொறுப்பை பாதிக்கமாட்டாதென்பது.
105. முக்கியாம்சத் தன்மையாயிராத குறை காரணமாக ஜப்தி சட்டசம்மத மற்றதாய்விட மாட்டா தென்பது.

6-ம் அத்தியாயம்.

கன்டோன்மென்ட் நிதியும் சொத்தும்.

கன்டோன்மென்ட் நிதி.

106. கன்டோன்மென்ட் நிதி.
107. கன்டோன்மென்ட் நிதியை பந்தோபஸ்து செய்வது.

சொத்து.

108. சொத்து.
109. கன்டோன்மென்ட் சொத்தையும் நிதியையும் உபயோகப்படுத்துவது.
110. அசையாப் பொருளை எடுத்துக்கொள்வது.
111. கன்டோன்மென்ட் நிதிக்கும் சொத்துக்கும் சம்பந்தமாய் விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

7-ம் அத்தியாயம்.

ஒப்பந்தங்கள்.

112. ஒப்பந்தங்களை இன்னுர் எழுதிமுடிக்கவேண்டு மென்பது.
113. அனுமதி.
114. ஒப்பந்தங்களை எழுதிமுடிப்பது.
115. கிரமப் பிசகாய் எழுதிமுடிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் கன்டோன்மென்ட் அதிகார சபையாரைக் கட்டுப்படுத்த மாட்டாவென்பது.

8-ம் அத்தியாயம்.

கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் கடமைகளும் அவர்கள் யுக்தானுசாரமாய்ச் செய்யவேண்டிய அலுவல்களும்.

116. கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் கடமைகள்.
117. கன்டோன்மென்ட் அதிகார சபையார் யுக்தானுசாரமாய்ச் செய்யவேண்டிய அலுவல்கள்.

பிரிவுகள்.

9-ம் அத்தியாயம்.

பொதுஜன க்ஷேமமும் அசங்கியங்கள் அல்லது சங்கடங்களை அடக்குவதும்.

பொது அசங்கியங்கள் அல்லது சங்கடங்கள்.

118. அசங்கியங்கள் அல்லது சங்கடங்கள் விளைத்தால் தண்டனை.

நாய்கள்.

119. நாய்களை ரெஜிஸ்டர் செய்வதும் அவைகள் விஷயமாய் மேல்விசாரணை செய்வதும்.

வண்டிகளின் போக்கு வரவு.

120. ரஸ்தாவைக் குறித்த விதி.

தீ பிடிக்காமல் தடுப்பது முதலியது.

121. தீப்பற்றி யெரியத்தக்க வஸ்துக்களைக் கட்டிடம் கட்டும் காரியங்களுக்காக உபயோகிப்பது.
122. தீப்பற்றி யெரியத்தக்க சாமான்களை அடுக்கிவைப்பது அல்லது சேகரித்துவைப்பது.
123. சிமினியில்லாத விளக்குகளின் விஷயத்தில் ஜாக்கிரதையாயிருப்பது.
124. ஸினெமொடக்ராப் காட்சிகள் விஷயமாயும் நாடகங்கள் விஷயமாயும் ஒழுங்கேற்படுத்துவது.
125. பாணங்கள், துப்பாக்கிகள் முதலியவை விடுவது.
126. கட்டிடங்கள், கிணறுகள் முதலியவைகளை பந்தோபஸ்தாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு செய்வதற்குள்ள அதிகாரம்.
127. அக்கிரமமான காரியங்களுக்கு உபயோகிக்கப்படும் தரிசு நிலங்களுக்கு அடைப்படைப்பது.

10-ம் அத்தியாயம்.

சுகாதாரமும் வியாதிவராமல் தடுப்பதும் அதற்கு சிகிச்சையும்.

சுகாதார சம்பந்தமான அதிகாரிகள்.

128. சுகாதாரத்துக்காக உத்தரவாதம்.
129. ஹெல்த் ஆபிஸரின் பொதுக் கடமைகள்.

சுத்தியாய் வைத்திருப்பதும் சுகாதாரமும்.

130. பொதுவாயுள்ள மலஜலபாதை மறைவிடங்களும் மூத்திரம் பெய்யும் இடங்களும்.
131. (தனி நபர்களின்) சொந்த வீடுகளைச் சுத்திசெய்வதற்கான ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ள கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குள்ள அதிகாரம்.
132. குப்பைகூள முதலியவைகளைச் சேர்த்துவைப்பதும் அவைகளை ஒருவகை செய்வதும்.
133. சாக்கடைக் குழிகள், அசுத்தங்கள் போட்டுவைப்பதற்கான ஏனங்கள் முதலியவை.
134. குளம் முதலியவைகளைத் தூர்த்துவிடுவது.
135. மலஜலபாதை மறைவிடங்கள் ஏற்படுத்துவது முதலியது.
136. தொழிற்சாலை முதலியவைகளின் சுகாதாரம்.
137. சொந்த மலஜலபாதை மறைவிடங்கள்.
138. நெருங்கியிருக்கும் கட்டிடங்களை அப்புறப்படுத்துவது.
139. வாசம்செய்யும் வீடுகளில் ஜனநெருக்கம் ஏற்பட்டிருப்பது.
140. யாதொரு கட்டிடத்துக்கு மராமத்து செய்யவேண்டுமென்றாவது அதை மாற்றவேண்டுமென்றாவது உத்தரவு செய்ய அதிகாரம்.
141. நிலம் அல்லது கட்டிடத்தை சுத்திசெய்யவேண்டுமென்று உத்தரவு செய்ய அதிகாரம்.
142. யாதொரு வீட்டை உபயோகிக்கக்கூடாதென்று உத்தரவு செய்ய அதிகாரம்.
143. தீங்குண்டாக்கத்தக்க செடி கொடிகளை அப்புறப்படுத்துவது.
144. விவசாயமும் நீர்ப்பாசனமும்.

புதைப்பதற்கும் தகனம் செய்வதற்குமான இடங்கள்.

145. புதைப்பதற்கும் தகனம் செய்வதற்குமான இடங்களைக் குறித்து சங்கதி தெரிவிக்கும்படி கேட்பதற்குள்ள அதிகாரம்.
146. புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான புதிய இடத்தை உபயோகிக்க அனுமதி கொடுப்பது.
147. புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான இடத்தை மூடிவிடும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.

பிரிவுகள்.

148. 145 முதல் 147 வரையிலுள்ள பிரிவுகள் பிரயோகப்படுவதனின்றும் நிவாரணை.
149. பிரேதங்களை அப்புறப்படுத்துவது.

தொத்திக்கொள்ளத்தக்க அல்லது ஒட்டிக்கொள்ளத்தக்க வியாதிகள் வராமல் தடுப்பது.

150. தொத்துவியாதிகள் அல்லது ஒட்டுவியாதிகள் கண்டிருப்பதைக் குறித்து சங்கதி தெரிவிக்கக் கடமைப்பட்டிருப்பது.
151. தொத்துவியாதிகளாவது பெருவாரி வியாதிகளாவது தோற்றும் விஷயத்தில் விசேஷ நடவடிக்கைகள்.
152. பாற்காரனிடத்தில் வழக்கமாய்ப் பால் வாங்குகிறவர்களின் பெயர்களைத் தெரிவிக்கும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.
153. வண்ணானிடத்தில் வழக்கமாய்த் துணி போடுகிறவர்களின் பெயர்களைத் தெரிவிக்கும்படி உத்தரவுசெய்ய அதிகாரம்.
154. பாற்சாலை அல்லது வண்ணான் தொழில் நடத்தும் இடத்தைப் பார்வையிட்ட பிறகு ரிபோர்ட் அனுப்புவது.
155. ஹெல்த் ஆபிஸர் அனுப்பும் ரிபோர்ட்டின்மேல் நடவடிக்கை.
156. பால் அல்லது தோயக்கப்பட்ட துணிகளைப் பரீக்ஷை செய்வது
157. பொதுவான வண்டி முதலியவைகளை அசுத்தப்படுத்துவது.
158. பொதுவான வண்டி முதலியவைகளினின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவது.
159 ரிபோர்ட் செய்யத் தவறிப்போனால் தண்டனை.
160. வண்டி முதலியவை ஓட்டுகிறவர் தொத்துவியாதி அல்லது ஒட்டுவியாதியினால் வருந்திக்கொண்டிருப்பவரை ஏற்றிக்கொண்டுபோகக் கடமைபட்டவரல்லவென்பது.
161. யாதொரு கட்டிடத்தினின்றாவது அதிலுள்ள சாமான்களினின்றாவது தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவது
162. தொத்துவியாதி சம்பந்தமுள்ள குடிசை அல்லது கொட்டகையை அழித்துவிடுவது.
163. தொத்துவியாதி சம்பந்தம் நீக்கப்பெற்றாவது அழித்துவிடப்பட்டாவதிருக்கும் கட்டிடம் அல்லது கொட்டகையில் வசிப்பவர்கள் சிறிது காலம் வசிப்பதற்கு இடம் ஏற்படுத்துவது.
164. யாதொரு கட்டிடத்தை வாடகைக்கு விடுவதற்குமுன் அதனின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவது.
165. தொத்துவியாதி சம்பந்தம் பெற்ற வஸ்துவை அந்த சம்பந்தத்தை நீக்காமல் ஒருவகை செய்வது.
166 தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கும் முறை.
167. தொத்துவியாதி கண்ட நபர் ஆகாரவஸ்து முதலியதைச் செய்வது அல்லது விற்பனை செய்வதும் அல்லது துணிகளைத் தோய்ப்பதும்.
168. ஆகாரவஸ்துவையாவது பானப்பொருளையாவது விற்பனை செய்வது விஷயமாய் நிர்பந்தம் ஏற்படுத்துவது அல்லது அதைத் தடுப்பது.
169. கிணறுகள், குளங்கள் முதலியவைகளின் மேல்விசாரணை.
170. தொத்துவியாதி கண்டிறந்தவரின் பிரேதத்தை ஒருவகை செய்வது.

ஆஸ்பத்திரிகளும், டிஸ்பென்ஸரிகளும்.

171 ஆஸ்பத்திரிகள் அல்லது டிஸ்பென்ஸரிகளைப் பராமரித்துவருவது அல்லது ஒருவகை செய்வது.
172. மருந்து வகைகள், உபகரணங்கள் முதலியவைகளை சர்ப்பரா செய்வது.
173. கண்டனம் கொடுக்காத வியாதிஸ்தர்கள்.
174. கண்டனம் கொடுக்கும் வியாதிஸ்தர்கள்.
175. யாதொரு நபர் ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியில் ஹாஜராகவேண்டுமென்று உத்தரவு செய்ய அதிகாரம்.
176. ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியில் ஹாஜராக மறுக்கும் நபர்களைக் கன்டோன்மெண்டிலிருந்து விலக்க அதிகாரம்.

சுகாதார சம்பந்தமான காரியங்களுக்காகப் போக்குவரவின் மேல்விசாரணை.

177. குதிரைக்காரர்களுக்கும் மற்றவர்களுக்குமான மார்க்கங்கள்.

சுகஸ்சுத்தம் செய்வது முதலிய ஊழியங்களைக்குறித்த விசேஷ திட்டங்கள்.

178. வீடுகளில் நடக்கிற ஊழியம் செய்வதற்கான திட்டங்கள்.

11-ம அத்தியாயம்.

கட்டிடங்கள், தெருக்கள், எல்லைகள், மரங்கள் முதலியவைகளின் மேல்விசாரணை.

கட்டிடங்கள்.

179. புதிய கட்டிடங்களைக் குறித்த நோடிஸ்.
180. சட்டசம்மதமான நோடிஸின் திட்டங்கள்.

பிரிவுகள்.

181. அனுமதி கொடுக்க அல்லது மறுக்க கன்டோன்மென்ட் அதிகார சபைருக்கு அதிகாரம்.
182. பிரதிபலன்.
183. அனுமதி செல்லாமற் போவது.
184. சட்ட விரோதமாய்க் கட்டுவது அல்லது புதுப்பிப்பது.
185. கட்டுவதையாவது புதுப்பிப்பதையாவது நிறுத்த அல்லது இடித்துவிட அதிகாரம்.
186. சகாயச் சட்டங்கள் செய்வதற்குள்ள அதிகாரம்.
187. பிதுக்கங்களும், தடங்கல்களும்.
188. சாக்கடைக்கடைக்கால்கள் முதலியவைகளின்மேல் அனுமதியில்லாமல் கட்டிடங்கள் கட்டுவது.
189. மழைத்தண்ணீருக்கான பத்தல்களும் குழாய்களும்.
190. விளக்குக்களுக்கு ப்ராக்கெட் என்னும் சாதனங்கள் அமைப்பதற்குள்ள அதிகாரம்.

தெருக்கள்.

191. யாதொரு தெரு, நிலம் முதலியவற்றைச் சிறிது காலத்துக்கு அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பது.
192. தெருக்களை மூடிவிடுவதும் திறப்பதும்.
193. தெருக்களின் பெயர்களும், கட்டிடங்களின் நம்பர்களும்.

எல்லைகளும், மரங்களும்.

194. எல்லைச் சுவர்களும், வேலிகளும் அடைப்புகளும்.
195. மரங்களை வெட்டுவதும், கிளைகளைத் தறிப்பதும, கத்தரிப்பதும்.
196. பொது நிலத்தைத் தோண்டுவது.
197. நிலத்தை அக்கிரமமாய் உபயோகிப்பது.

12-ம் அத்தியாயம்.

மார்க்கெட்டுகள், ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகள்

வியாபாரங்கள் தொழில்கள்.

198. பொது மார்க்கெட்டுகளும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளும்.
199. பொது மார்க்கெட்டை உபயோகிப்பது.
200. கொட்டில் வீதங்கள், வாடகைகள், கட்டணங்கள் ஆகிய இவைகளை விதித்து வாங்குவது.
201. கொட்டில் வீதங்கள், வாடகைகள் முதலியவைகளைப் பிரசித்தம் செய்ய வேண்டுமென்பது.
202. சொந்த மார்க்கெட்டுகளும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளும்.
203. சொந்த மார்க்கெட் அல்லது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிக்கு லைஸென்ஸ் கொடுப்பதற்கான திட்டங்கள்.
204. லைஸென்ஸ் இலலாமல் சொந்த மார்க்கெட் அல்லது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியைத் திறந்து வைத்திருந்தால் தண்டனை.
205. லைஸென்ஸ் கொடுக்கப்பெற்றிராத மார்க்கெட் அல்லது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியை உபயோகித்தால் தண்டனை.
206. ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளை உபயோகிக்காமல் தடுப்பதும் அது விஷயமாய் நிர்ப்பந்தம் ஏற்படுத்துவதும்.
207. ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளைப் பார்வையிடுவதற்குள்ள அதிகாரம்.
208. சகாயச்சட்டங்கள் செய்ய அதிகாரம்.

வியாபாரங்களும் தொழில்களும்.

209. துணி தோய்க்கும் இடங்களை ஏற்படுத்துவது.
210. சில தொழில்கள் நடத்துவதற்கு லைஸென்ஸுகள் அவசியமாகுமென்பது.
211. லைஸென்ஸுகளில் சேர்க்கப்படக்கூடிய திட்டங்கள்.

பொது நிபந்தனைகள்.

212. லைஸென்ஸை மாற்றுவதற்கான அதிகாரம்.
213. லைஸென்ஸில்லாமலாவது 212-வது பிரிவை மீறியாவது, வர்த்தகம் முதலியன நடத்துவது.
214. அசுத்தங்கள் முதலியவைகள் போட்டுப் பிராணிகளை வளர்ப்பது.

பிரவேசிப்பது, கைப்பற்றுவது, பார்வையிடுவது.

215. பிரவேசிக்கவும் கைப்பற்றவுமுள்ள அதிகாரம்.

கால் நடைகளையும், மாமிசத்தையும் இறக்குமதி செய்வது.

216. கால் நடைகளையும் மாமிசத்தையும் இறக்குமதி செய்வது.

பிரிவுகள்.

13-ம் அத்தியாயம்.

ஜலசர்ப்பரா, சாக்கடைக்கால் ஏற்பாடு, விளக்கு போடுவது.

ஜலசர்ப்பரா.

217. ஜலசர்ப்பராவைப் பராமரித்துவருவது.
218. பொது ஜலசர்ப்பரா ஆதாரங்களின் மேல்விசாரணை.
219. பொது ஜனங்கள் குடிப்பதற்கான ஜலம் சர்ப்பராவாகும் யாதொரு சொந்த ஆதாரத்தைப் பாராமரித்து வரவேண்டுமென்ருவது மூடிவிடவேண்டுமென்ருவது உத்தரவு செய்ய அதிகாரம்.
220. ஜலம் சர்ப்பரா செய்வது.
221. ஜலம் எடுத்துக்கொண்டு போகும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.
222. உடன்படிக்கை செய்துகொண்டு ஜலசர்ப்பரா செய்வது.
223. ஜலசர்ப்பரா நின்றுபோனல் கன்டோன்மென்ட் அதிகார சபையார் உத்தரவாதிகளல்லவென்பது.
224. எல்லா விஷயங்களிலும் பிரயோகப்படக்கூடிய திட்டங்கள்.
225. கன்டோன்மென்டுக்கு வெளியிலிருக்கும் நபர்களுக்கு சர்ப்பரா செய்வது.
226. தண்டனை.

ஜலசர்ப்பரா விஷயமாயும் ஜலதாரை விஷயமாயும் இதர விஷயங்களிலும் சம்பந்தங்கள் ஏற்படுத்துவது.

227. கம்பிகள், குழாய்கள் முதலியவைகளை அமைப்பதற்குக் கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு அதிகாரம்.
228. தரையின் மேற்பரப்புக்குமேல் கம்பி முதலியவைகள் போடுவது.
229. அனுமதியில்லாமல் பிரதான குழாயுடன் சம்பந்தப்படுத்தக்கூடாதென்பது.
230. பெருல்களை நிர்ணயிக்கவும் மீட்டர் முதலியவைகளை ஏற்படுத்தவும் அதிகாரம்.
231. பார்வையிடுவதற்கான அதிகாரம்.
232. வீதங்களையும் கட்டணங்களையும் நிச்சயிப்பதற்குள்ள அதிகாரம்.

கவர்ன்மென்ட் ஜலசர்ப்பராக்களுக்கு இந்த அத்தியாயம் பிரயோகப்படுவது.

233. கவர்ன்மென்ட் ஜலசர்ப்பரா.
234. கட்டணங்களை வசூலிப்பது.

14-ம் அத்தியாயம்.

கன்டோன்மென்டுகளிலிருந்து ஒழுங்கீனமான நபர்கள் முதலியவர்களை அப்புறப்படுத்துவதும் நீக்குவதும் ஸ்திரீ புருஷ சம்பந்தமான துன்மார்க்கங்களை அடக்குவதும்.

235. வேசி வீடுகளையும் விபசாரிகளையும் அப்புறப்படுத்த அதிகாரம்.
236. (அங்குமிங்கும்) திரிந்துகொண்டிருப்பதற்கும் விபசாரத்தின்பொருட்டு தொந்தரவு செய்வதற்கும் தண்டனை.
237. கன்டோன்மென்டிலிருந்து காமாதுரர்களான நபர்களை அப்புறப்படுத்துவது.
238. ஒழுங்கீனமாய் நடந்துகொள்ளும் நபர்களைக் கன்டோன்மென்டுகளிலிருந்து அப்புறப்படுத்துவது.
239. ராஜத்துரோகமாய் நடந்துகொள்ளும் நபர்களைக் கன்டோன்மென்டுகளிலிருந்து அப்புறப்படுத்துவதும் நீக்குவதும்.
240. தண்டனை.

15-ம் அத்தியாயம்.

அதிகாரங்களும் நடவடிக்கை முறையும் தண்டனைகளும் அப்பீல்களும்.

பிரவேசிப்பதும் பார்வையிடுவதும்.

241. பிரவேசிப்பதற்குள்ள அதிகாரம்.
242. போர்டின் யாதொரு மெம்பர் பார்வையிடுவதற்குள்ள அதிகாரம்.
243. பார்வையிடுவது முதலியதற்குள்ள அதிகாரம்.
244. கட்டுவேலை நடந்துவரும் நிலத்துக்குச் சமீபத்திலிருக்கும் நிலத்தில் பிரவேசிக்க அதிகாரம்.
245. வளவை உடைத்து பிரவேசிப்பது.
246. பகல் காலத்தில் பிரவேசிக்கவேண்டுமென்பது.
247. சாதாரணமாய்ச் சொந்தக்காரரின் அனுமதி பெறவேண்டுமென்பது.
248. சமூக ஆசாரங்களையும் மதாசாரங்களையும் கவனிக்கவேண்டுமென்பது.
249. தடங்கல் உண்டாக்கினல் தண்டனை.

பொலீஸ் உத்தியோகஸ்தர்களின் அதிகாரங்களும் கடமைகளும்.

250. வாரன்ட் இல்லாமலே பிடிப்பது.
251. பொலீஸ் உத்தியோகஸ்தர்களின் கடமைகள்.

பிரிவுகள்.

நோடிஸுகள்.

252. நோடிஸுகளில் நியாயமான காலம் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கவேண்டுமென்பது.
253. கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் பிறப்பிக்கப்பட்ட நோடிஸுகளை அதிகாரவாயிலாய்ச் சரியானவையென்று எண்பிப்பதும் அவை சட்டப்படி செலாவணியாகுமென்பதும்.
254. நோடிஸ் முதலியவைகளைச் சேர்ப்பிப்பது.
255. நோடிஸ் கொடுக்கும் முறை.
256. நோடிஸில் கண்டபடி நடந்துகொள்ளாத விஷயத்தில் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் அதிகாரங்கள்.

பணத்தை வசூலிப்பது.

257. சொந்தக்காரர் செலுத்தத் தவறிப்போனால் அனுபோகதாரர் உத்தரவாதியாவது.
258. ஏஜென்டுகளும் ட்ரஸ்டிகளும்.
259. வசூலிக்கும் முறை.

மத்தியஸ்த் கம்மிட்டிகள்.

260. யாதொரு மத்தியஸ்த கம்மிட்டி ஏற்படுத்தவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்வது.
261. மத்தியஸ்த கம்மிட்டியைக் கூட்டுவதற்கான நடவடிக்கை.
262. மத்தியஸ்த கம்மிட்டியின் அமைப்பு.
263. ரோகாய் அக்கறையுடையவராயும் உடனே ஊழியம் செய்ய முடியாதவராயும் இருக்கும் எந்த நபரையும் நேமகம் செய்யக்கூடாதென்பது.
264. மத்தியஸ்த கம்மிட்டிகளின் சபைகளும் அவைகளின் அதிகாரங்களும்.
265. மத்தியஸ்த கம்மிட்டிகளின் தீர்மானங்கள்.

பிராதுகள்.

266. பிராதுகள்.
267. குற்றங்களுக்காக ராஜி செய்துகொள்வது.

தண்டனை சம்பந்தமான பொது நிபந்தனைகள்.

268. பொது தண்டனை.
269. லைஸென்ஸுகள்.
270. கன்டோன்மென்ட் சொத்துக்குச் சேதம் ஏற்படும் விஷயத்தில் செலுத்தப்படக்கூடிய தொகையை வசூலிப்பது.

வரையறை.

271. பிராது தொடருவதற்கு வரையறை.

வியாஜ்ஜியங்கள்.

272. கன்டோன்மென்ட் அதிகார சபையார் முதலியவர்களின் பாதுகாப்பு.
273. வியாஜ்ஜியங்களைக் குறித்து நோடிஸ் கொடுக்கவேண்டுமென்பது.

அப்பீல்களும் புனராலோசனை செய்து திருத்துவதும்.

274. நிர்வாக உத்தரவுகளின்மேல் அப்பீல்கள்.
275. அப்பீல் மனு.
276. அப்பீல் முடிகிறவரையில் நடவடிக்கை நடத்துவதை நிறுத்திவைப்பது.
277. புனராலோசனை செய்து திருத்துவது.
278. அப்பீல் உத்தரவுகள் முடிவானவையாகுமென்பது.
279. அப்பீல்தாரர் சொல்லிக்கொள்ளவேண்டியதைச் சொல்லிக்கொள்ள அதிகாரம்.

16-ம் அத்தியாயம்.

விதிகளும் சகாயச் சட்டங்களும்.

280. விதிகள் செய்ய அதிகாரம்.
281. விதிகளுக்குச் சம்பந்தப்பட்ட உடன்சேர்க்கையான நிபந்தனைகள்.
282. சகாயச்சட்டங்கள் செய்ய அதிகாரம்.
283. சகாயச் சட்டங்களை மீறி நடந்தால் தண்டனை.
284. சகாயச் சட்டங்களுக்குச் சம்பந்தப்பட்ட உடன்சேர்க்கையான நிபந்தனைகள்.
285. விதிகளையும் சகாயச்சட்டங்களையும் பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டுமென்பது.

பிரிவுகள்.

17-ம் அத்தியாயம்.

உடன்சேர்க்கையான நிபந்தனைகள்.

286. இந்த ஆக்டிலும் விதிகளிலும் கண்டிருக்கும் சில நிபந்தனைகளைக் கன்டோன்மென்டு களுக்கு வெளியிலிருக்கும் இடங்களுக்கும் வியாபிக்கும்படிச் செய்வது.
287. ரெஜிஸ்டர் செய்வது.
288. நோடிஸுகளும் இதர தஸ்தவேஜுகளும் சட்டப்படி செலாவணியாவது.
289. யாதொரு தஸ்தவேஜு அல்லது பதிவு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடு மென்பது.
290. கன்டோன்மென்ட் அதிகார சபையைச் சேர்ந்த உத்தியோகஸ்தராவது ஊழியக் காரராவது சாட்சியம் சொல்லுவது.
291. ரத்து.

1-வது ஷெட்யூல்—டிமாண்ட் நோடிஸ்.
2-வது ஷெட்யூல்—வாரன்ட் நமூனா.
3-வது ஷெட்யூல்—ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் ஜாபிதாவுக்கும் விற்பனை நோடிஸுக்கும் நமூனா.
4-வது ஷெட்யூல்—பொலீஸார் வாரன்டில்லாமல் பிடிக்கக்கூடிய விஷயங்கள்.
5-வது ஷெட்யூல்—உத்தரவுகளின்மேல் அப்பீல்கள்.
6-வது ஷெட்யூல்—ரத்து செய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.

A BILL TO CONSOLIDATE AND AMEND THE LAW RELATING TO THE ADMINISTRATION OF CANTONMENTS.

கன்டோன்மென்டுகளின் பரிபாலனத்தைக் குறித்த சட்டதிட்டத்தைத் திருத்தி ஒன்றுய்ச் சேர்ப்பதற்கான மசோதா ஆக்ட்.

கன்டோன்மென்டுகளின் பரிபாலனத்தைக் குறித்த சட்டதிட்டத்தைத் திருத்தி ஒன்றுய்ச்சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியால், இதனுல் விதிக்கப்படுகிறதென்னவென்றுல் :—

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

சுருக்கமான பெயரும் வியாபகமும் வழங்கத் தொடங்குவதும்.

1. (1) இந்த ஆக்டை, 192 -ம் வருஷத்து கன்டோன்மென்டு களாக்டென்று சொல்லலாம்.

(2) இது - ப்ரிடிஷ் பலுசிஸ்தானம் உட்பட ப்ரிடிஷ் இந்தியா முழுமைக்கும் வியாபிக்கிறது.

(3) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - இந்தியா கெஜெட்டில் விளம்பர மூலமாய், இந்த ஆக்டாவது தாம் குறிப்பிடக்கூடியவையாய் அதில் கண்டிருக்கிற நிபந்தனைகளாவது இதுவிஷயமாய் தாம் நிஷ்கரிஷை செய்யக்கூடிய தேதியன்று செலாவணியாகவேண்டுமென்று கட்டளையிடலாம்.

அர்த்தம்.

2. இந்த ஆக்டிலே, சங்கதியினுலாவது முன்பின் தொடர்ச்சியினுலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,—

(i) "அஸிஸ்டென்ட் ஹெல்த் ஆபிஸர்" என்பது - யாதொரு கன்டோன்மென்டின் அஸிஸ்டென்ட் ஹெல்த் ஆபிஸராயிருக்கும்படி பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸரால் நியமிக்கப்பட்ட வைத்திய உத்தியோகஸ்தர் என்று அர்த்தமாகும் ;

(ii) "போர்ட் (சபை)" என்பது - இந்த ஆக்டின்படி அமைக்கப்பட்ட யாதொரு கன்டோன்மென்ட் போர்ட் என்று அர்த்தமாகும் ;

(iii) "(brigade) ப்ரிகேட் விஸ்தீர்ணம்" என்பது - ப்ரிகேட் என்னும் படைவகுப்பு இருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, ராணுவ காரியங்களுக்காக அந்தந்த காலத்தில் இந்தியா எத்தனை ப்ரிகேட் விஸ்தீர்ணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ அவைகளில் ஒன்று என்று அர்த்தமாவதுமல்லாமல், இந்த ஆக்டில் கண்ட சகல காரியங்களுக்காகவுமாவது அவைகளில் எதற்காகவாவது ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் இந்தியா கெஜெட்டில் விளம்பரமூலமாய் யாதொரு விஸ்தீர்ணமானது ஷை காரியம் அல்லது காரியங்களுக்காக ப்ரிகேட் விஸ்தீர்ணமாகுமென்று பிரசித்தம் செய்யக்கூடுமானுல் அப்படிப்பட்ட விஸ்தீர்ணம் என்பதும் அதில் அடங்கும் ;

(iv) "கட்டிடம்" என்பது - எந்த காரியத்துக்காகவாகிலுஞ்சரி எந்த சாமானைக் கொண்டாகிலுஞ் சரி கட்டப்பட்டிருக்கும் யாதொரு வீடு, குடிசை, வெளிவீடு, கொட்டகை, லாயம் அல்லது கூரைபோட்டுள்ள யாதொரு கட்டுக்கோப்பு அல்லது அதன் யாதொரு பாகமென்று அர்த்தமாவதுமல்லாமல், யாதொரு கிணறு என்பதும் அதில் அடங்கும் ; ஆனுல், யாதொரு கூடாரம் அல்லது (ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு) எடுத்துக்கொண்டு போகக்கூடிய தாகவோ சிறிது காலத்துக்கானதாகவோவுள்ள தங்குமிடம் என்பது அதில் அடங்காது ;

(v) "கன்டோன்மென்ட் அதிகார சபை" என்பது - யாதொரு போர்ட் என்றுவது, போர்ட் அமைக்கப்பெற்றிராத அல்லது (ஏற்படுத்தப்பட்ட) போர்ட் இராமற்போயிருக்கிற யாதொரு கன்டோன்மென்ட் விஷயத்தில் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸரென்றுவது அர்த்தமாகும்;

(vi) "தற்செயலான எலெக்ஷன்" என்பது - தற்செயலாய் ஏற்படும் காலிஸ்தானத்தைப் பூர்த்தி செய்வதற்கான எலெக்ஷன் (தெரிந்தெடுப்பது) என்று அர்த்தமாகும் ;

(vii) "தற்செயலாய் ஏற்படும் காலி" என்பது - யாதொரு போர்டைச் சேர்ந்த தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பரின் உத்தியோகத்திலே, கால அளவு முடிந்துபோவதனுலல்லாமல் மற்றப்படி, நேரிடும் காலி என்று அர்த்தமாகும் ;

(viii) "கம்மாண்ட் (சேனுதிபத்தியம்)" என்பது - இராணுவ காரியங்களுக்காக இந்தியாவானது அந்தந்த காலத்தில் எத்தனை கம்மாண்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ

அத்தனை கம்மாண்டுகளில் ஒன்று என்று அர்த்தமாகும்; மேலும், அதில், இந்த ஆக்டின் சகல காரியங்களுக்காகவுமாவது அவைகளில் எதற்காகவாவது கம்மாண்ட் ஆகுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் இந்தியா கெஜெட்டில் விளம்பர மூலமாய்ப் பிரசித்தஞ் செய்யப்படக்கூடிய விஸ்தீர்ணம் என்பது அதில் அடங்கும்;

(ix) "கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர்" என்பது - அந்தந்த காலத்தில் யாதொரு கன்டோன்மென்டிலுள்ள சேனைகளின் கம்மாண்ட் வகிக்கும் யாதொரு ராணுவ உத்தியோகஸ்தரென்ருவது, அந்த உத்தியோகஸ்தர் டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸராயிருந்தால், டிஸ்ட்ரிகடின் கம்மாண்டிங் ஆபிஸர் ஊரில் இராதபோது அந்த சேனைகளின் கம்மாண்ட் வகிக்கும் ராணுவ உத்தியோகஸ்தர் என்ருவது அர்த்தமாகும்;

(x) "பாற்சாலை" என்பதில், யாதொரு ஆடுமாடுகளை மேய்க்கும் இடம், கால்நடை தொட்டி, பால் சேர்த்துவைக்குமிடம், பால்கடை, அல்லது விற்பனை செய்யும் காரியங்களுக்காக எந்த இடத்திலிருந்து பால் சர்ப்பரா செய்யப்படுகிறதோ அல்லது எந்த இடத்தில் பால் வைத்துவைக்கப்படுகிறதோ அல்லது எந்த இடத்தில் அது விற்பனை பொருட்டு வெண்ணெய், நெய், பால்கட்டி அல்லது தயிராக செய்யப்படுகிறதோ அந்த இடம் என்பது அடங்குவதுமல்லாமல், பாலை விற்பனைசெய்வதற்காக யாதொரு இடம் வைத்துக்கொண்டிராத பால்காரன் சம்பந்தப்பட்டமட்டில், பாலை சேர்த்துவைப்பதற்காகிலும் விற்பனை செய்வதற்காகிலும் அவன் உபயோகிக்கும் பாத்திரங்களை அவன் எந்த இடத்தில் வைத்துவைக்கிருனே அந்த இடம் என்பதும் அடங்கும்;

(xi) "பால்காரன்" என்பதில், யாதொரு பசு, எருமை, வெள்ளாடு, கழுதை அல்லது யாதொரு பிராணியின் பால் ஜனங்கள் சாப்பிடுவதற்காகக் கொடுக்கப்பட்டாலும் விற்பனை செய்வதாகச் சொல்லப்பட்டாலும் அப்படிப்பட்ட வேறே பிராணியை வைத்துக் கொண்டிருப்பவர் என்பதும் பால் சாப்பாரா செய்யும் யாதொரு நபர் என்பதும் யாதொரு பாற்சாலையை அனுபவத்தில் வைத்துக்கொண்டிருக்கிற நபர் என்பதும் அடங்கும்;

(xii) "எக்ஸிக்யூடிவ் என்ஜினீர்" என்பது யாதொரு கன்டோன்மென்டிலுள்ள ராணுவ கட்டுவேலைகளின் விசாரணை வகிப்பவராய் ஷை அந்தஸ்துடைய பப்ளிக் வொர்க்ஸ் (பொதுக் கட்டுவேலை) ஆபிஸரென்ருவது அதற்குப் பொருத்தமான அந்தஸ்துடைய மிலிடரி வொர்க்ஸ் (ராணுவ கட்டுவேலை) ஆபிஸரென்ருவது அர்த்தமாவதுமல்லாமல், எந்த அந்தஸ்துடையவராயிருந்தாலுஞ் சரி, யாதொரு கன்டோன்மென்டில் என்ஜினீரிங் வேலையின் நிர்வாக சம்பந்தமாய் நேராக விசாரணை வகிக்கும் யாதொரு உத்தியோகஸ்தர் என்பதும் அதில் அடங்கும்;

(xiii) "நிர்வாக உத்தியோகஸ்தர்" என்பது - இந்த ஆக்டின் பிரகாரம் யாதொரு கன்டோன்மென்டின் நிர்வாக உத்தியோகஸ்தராயிருக்கும்படி நியமிக்கப்பட்ட யாதொரு நபர் என்று அர்த்தமாகும்;

(xiv) "ஹெல்த் ஆபிஸர்" என்பது - ராணுவ உத்தியோகத்திலிருந்துகொண்டு யாதொரு கன்டோன்மென்டிலே அலுவலின்மேலிருக்கும் ஸீனியர் (உயர்தர) நிர்வாக வைத்திய உத்தியோகஸ்தர் என்று அர்த்தமாகும்;

(xv) "ஹில் (மலைப் பிரதேச) கன்டோன்மென்ட்" என்பது - இந்த ஆக்டின் காரியங்களுக்காக ஹில் கன்டோன்மென்டாகுமென்று பிரதேச கவர்ன்மென்டாரால் பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரமூலமாய் பிரசித்தம் செய்யப்பெறும் யாதொரு கன்டோன்மென்ட் என்று அர்த்தமாகும்;

(xvi) "குடிசை" என்பது-யாதொரு கட்டிடத்து (plinth) அடிப்பரப்பின் மட்டத்துக்கு மேற்பட்ட முக்கியாம்சமான பாகமானது சுண்ணும்பு காரையினுலாவது நாலு மூலை சதுரமாக்கப்பட்ட மரச்சட்டங்களினுலாவது இருமபுச் சட்டங்களினுலாவது அமைக்கப்படாதிருந்தால், அப்படிப்பட்ட யாதொரு கட்டிடம் என்று அர்த்தமாகும்;

(xvii) "தொத்து வியாதி அல்லது ஒட்டு வியாதி" என்பதில், வாந்திபேதி, குஷ்டம், என்டெரிக் என்னும் குடல் சம்பந்தமான ஜுரம், பெரியம்மை, டுபர்கலாஸிஸ் என்னும க்ஷயவியாதி (டிப்தீரியா), கண்டக்கரப்பான், ப்ளேக் என்னும் மஹாமாரி, இன்ப்ளுயென்ஜா என்னும் விஷஜுரம் என்பவையும், இந்த ஆக்டின் காரியங்களுக்காக தொத்து வியாதி அல்லது ஒட்டு வியாதியாகுமென்று பிரதேச கவர்ன்மென்டாரால் பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரமூலமாய் பிரசித்தம் செய்யப்படக்கூடிய வேறே யாதொரு பெருவாரி வியாதி அல்லது ஒரு தேசத்தாருக்கு மாத்திரமே காணும் வியாதி அல்லது தொத்து வியாதி என்பதும் அடங்கும்;

(xviii) "வாசம் செய்பவர்" என்பது - யாதொரு கன்டோன்மென்டுக்குச் சம்பந்தப்பட்டமட்டிலே, அதில் சாதாரணமாய் வாசஞ்செய்கிற அல்லது வியாபாரம் நடத்துகிற அல்லது அசையாப்பொருளைச் சொந்தத்தில் வைத்துக்கொண்டாவது அனுபவித்துக்கொண்டாவதிருக்கிற யாதொரு நபரென்றும், யாதொரு விவாவதத்தின் விஷயத்திலே, வாசம் செய்பவராவாரென்று டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டால் பிரசித்தம் செய்யப்படும்யாதொரு நபர் என்றும் அர்த்தமாகும்.

(xix) "லாகிரி வஸ்து" என்பது-அபினி என்றும் கஞ்சா என்றும் பங்கியென்றும் சரஸ் என்றும் அவைகளினாலும் அவைகள் சேர்த்தும் செய்யப்பட்ட பிரதிவஸ்துவென்றும் அர்த்தமாவதுமல்லாமல், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு பிரதேச கவர்ன்மெண்டார் ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரமூலமாய் எதை இந்த ஆக்டின் காரியங்களுக்காக லாகிரி வஸ்துவாகுமென்று நிர்ணயிக்கிறார்களோ அப்படிப்பட்ட வேறே எவ்வித லாகிரி வஸ்து அல்லது திரவரூபமான வஸ்துவென்றும் அர்த்தமாகும் ;

(xx) "மார்க்கெட்" என்பதில், மாமிசம், மீன், பழம், காய்கறிவகைகள், பிராணிகள் அல்லது வேறே யாதொரு உணவுப் பொருளை விற்பனை செய்யும் காரியத்துக்காக நபர்கள் கூடுகிற யாதொரு இடம் என்பதும் அடங்கும் ;

(xxi) "இராணுவ உத்தியோகஸ்தர்" என்பது—

(a) இராணுவ ஆக்டின் தாற்பரியப்படியாவது ஆகாயப்படை ஆக்டின் தாற்பரியப்படியாவது ஒரு ஆபிஸராயிருந்து, மஹாராஜ சக்கரவர்த்தியவர்களுடைய ராணுவ சேனைகளிலாகிலும் ஆகாயப்படைகளிலாகிலும் ராணுவ அலுவலோ ஆகாயப்படை அலுவலோ பார்த்துக்கொண்டிருக்கிற ஆபிஸராகவாயினும் அப்படிப்பட்ட சேனைகளின் யாதொரு பிரிவு, கிளை அல்லது பாகத்தில் அப்படிப்பட்ட அலுவல் பார்த்துக்கொண்டிருக்கிற ஒரு ஆபிஸராகவாயினும் கம்மிஷன் பெற்று சம்பளம் வாங்குகிற நபரென்றும்,

(b) ராணுவ ஆக்டின் தாற்பரியப்படியாவது ஆகாயப்படை ஆக்டின் தாற்பரியப்படியாவது ஒரு ஆபிஸராயிருந்தாலுஞ் சரி இராவிட்டாலுஞ் சரி, அந்த சேனைகளில் எதிலாகிலும் அவைகளின் யாதொரு பிரிவு, கிளை அல்லது பாகத்திலாகிலும் வாரண்ட் உத்தியோகஸ்தராக ராணுவ அலுவல் அல்லது ஆகாயப்படை அலுவல் பார்த்துக்கொண்டிருக்கிற நபரென்றும் அர்த்தமாகும் ;

(xxii) "அசங்கியம் அல்லது சங்கடம்" என்பதில், கட்புலன் நாசிப்புலன் அல்லது செவிப்புலனுக்குத் தீங்காவது அபாயமாவது இடைஞ்சலாவது தோஷமாவது உண்டுபண்ணுகிறதாகவோ அல்லது வெகுசாய் உண்டுபண்ணக்கூடியதாகவோ இருக்கும் அல்லது பிராணனுக்கு அபாயகரமாகவோ தேகாரோக்கியத்துக்கு அல்லது சொத்துக்கு தீங்கு செய்வதாகவோ இருக்கும் அல்லது இருக்கக்கூடிய யாதொரு செய்கை அல்லது செய்யா தொழிகை அல்லது இடம் அல்லது பொருள் என்பதும் அடங்கும் ;

(xxiii) "அனுபோகதாரர்" என்பதில், தம்முடைய சொந்த நிலத்தையாவது கட்டிடத்தையாவது அனுபவித்துக்கொண்டிருக்கும் அல்லது வேறே விதமாய் உபயோகித்துக்கொண்டிருக்கும் யாதொரு சொந்தக்காரர் என்பதும் அடங்கும் ;

(xxiv) "டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸர்" என்பது - இந்தியாவானது ராணுவ காரியங்களுக்காக அந்தந்த காலத்தில் எத்தனை டிஸ்ட்ரிக்டுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ அத்தனை டிஸ்ட்ரிக்டுகளில் யாதொரு டிஸ்ட்ரிக்டின் அல்லது அப்படிப்பட்ட டிஸ்ட்ரிக்டின் பாகமாயிராத யாதொரு ப்ரிகேட் விஸ்தீர்ணத்தின் அல்லது இந்த ஆக்டின் சகல காரியங்களுக்காகவுமாவது அவைகளில் எதற்காகவாவது யாதொரு விஸ்தீர்ணம் அப்படிப்பட்ட டிஸ்ட்ரிக்ட் ஆகுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விளம்பரமூலமாய்ப் பிரசித்தம் செய்தால் அந்த விஸ்தீர்ணத்தின் கம்மாண்டிங் ஆபிஸர் என்று அர்த்தமாகும் :

(xxv) "சாதாரண எலெக்ஷன்" என்பது - காலஅளவு முடிந்துபோவதனால், போர்டைச் சேர்ந்த தெரிந்தெடுக்கப்பட்ட யாதொரு மெம்பரின் உத்தியோகத்தில் ஏற்படும் காலியைப் பூர்த்திசெய்ய நடத்தப்படும் எலெக்ஷன் என்று அர்த்தமாகும்.

(xxvi) "சொந்தக்காரர்" என்பதிலே, யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் வாடகையைத் தம் நிமித்தமாகவாவது தம் நிமித்தமாகவும் பிறர் நிமித்தமாகவுமாவது ஒரு ஏஜண்ட் அல்லது ட்ரஸ்டி ஹோதாவிலாவது பெற்றுக்கொண்டுவருகிற அல்லது பெற்றுக்கொள்ள உரித்தாயிருக்கிற நபரென்பதாகிலும், அந்தக் கட்டிடம் அல்லது நிலத்தை ஒரு வாடகைதாரனுக்குக் வாடகைக்கு விடும்பட்சத்தில் அந்தக் வாடகையை மேற்கண்ட மாதிரியாகவே பெற்றுக்கொள்ளும் அல்லது பெற்றுக்கொள்ள உரித்தாயிருக்கும் நபரென்பதாகிலும் அடங்கும் ;

(xxvii) "மத்திய சுவர்" என்பது - யாதொரு கட்டிடத்தின் பாகமாயிருந்து, வெவ்வேறு சொந்தக்காரர்களுக்குரியதாய் சேர்ந்திருக்கும் கட்டிடங்களுக்கு ஆதாரமாகவாவது அவைகளைப் பிரிப்பதற்காவது உபயோகிக்கப்பட்டோ அல்லது அந்தப்படி உபயோகிப்பதற்காகக் கட்டப்பட்டோ அல்லது வெவ்வேறு நபர்கள் இருப்பதற்காகக் கட்டப்பட்டு அல்லது தகுதியாக்கப்பட்டோ இருக்கும் யாதொரு சுவர் என்று அர்த்தமாகும் ;

(xviii) "சொந்த மார்க்கெட்" என்பது-கன்டோன்மெண்ட் அதிகார சபையாரால் பராமரிக்கப்பட்டுவராமலும் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி அவர்களால் லைசென்ஸ் கொடுக்கப்பெற்றுமிருக்கும் யாதொரு மார்க்கெட் என்று அர்த்தமாகும் ;

(xxix) "ஆடுமாடுகளை அடிக்கும் சொந்த தொட்டி" என்பது - கன்டோன்மெண்ட் அதிகார சபையாரால் பராமரிக்கப்பட்டுவராமலும் இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி அவர்களால் லைசென்ஸ் கொடுக்கப்பெற்றுமிருக்கும் யாதொரு ஆடுமாடுகளை அடிக்கும் தொட்டி என்று அர்த்தமாகும் ;

(xxx) "பொது மார்க்கெட்" என்பது - கன்டோன்மென்ட் அதிகாரசபையாரால் பராமரிக்கப்பட்டுவரும யாதொரு மார்க்கெட் என்று அர்த்தமாகும் ;

(xxxi) "பொது இடம்" என்பது - யாதொரு இடம் வாஸ்தவத்திலே பொது ஜனங்களால் உபயோகிக்கப்பட்டாலுஞ்சரி உபயோகிக்கபபடாவிட்டாலுஞ்சரி, அனுபவிக்கப்பட்டாலுஞ்சரி அனுபவிக்கப்படாவிட்டாலுஞ்சரி பொது ஜனங்கள் உபயோகிக்கக்கூடியதாயும் அனுபவிக்கக்கூடியதாயுமிருந்தால், அப்படிப்பட்ட இடம் என்று அர்த்தமாகும் ;

(xxxii) "ஆடுமாடுகள் அடிக்கும் பொது தொட்டி" என்பது - கன்டோன்மென்ட் அதிகாரசபையாரால் பராமரிக்கப்பட்டுவரும் யாதொரு ஆடுமாடுகள் அடிக்கும் தொட்டி என்று அர்த்தமாகும் ;

(xxxiii) "கொட்டகை" என்பது - நிழலுக்காகவாவது தங்கியிருப்பதற்காகவாவது சொற்பமாக அல்லது சிறிதுகாலத்துக்காக அமைக்கப்பட்ட யாதொரு கட்டுக்கோப்பு என்று அர்த்தமாகும் ;

(xxxiv) "ஆடுமாடுகள் அடிக்கும் தொட்டி" என்பது - ஜனங்கள் சாப்பிடும் பொருட்டு பிராணிகளின் மாமிசத்தை விற்பனைசெய்யும் காரியத்துக்காக அவைகளை அடிப்பதற்கு சாதாரணமாய் உபயோகிக்கப்படும் யாதொரு இடம் என்று அர்த்தமாகும் ;

(xxxv) "ஸோல்ஜர்" என்பது - இராணுவ ஆக்டின் தாத்பரியப்படியாவது ஆகாயப்படை ஆக்டின் தாத்பரியப்படியாவது ஸோல்ஜராகவாகிலும் ஏர்மனுகவாகிலுமிருந்து இராணுவ உத்தியோகஸ்தராயிராத யாதொரு நபர் என்று அர்த்தமாகும் ;

(xxxvi) "வெறியுண்டாக்கத்தக்க சாராயம்" என்பது - புளிப்பேறி பொங்கின யாதொரு மது அல்லது யாதொரு விதமான சாராயம் அல்லது காய்ச்சி வடித்தெடுக்கப்பட்ட யாதொரு மது சாரமுள்ள திரவரூபமான வஸ்துவென்றாவது, பனைமர வகையைச் சேர்ந்த யாதொரு மரத்தின் சாறு என்றாவது அர்த்தமாவதுமல்லாமல், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு பிரதேச கவர்ன்மென்டார் ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பர மூலமாய் எதை இந்த ஆக்டின்படி வெறியுண்டாக்கத்தக்க சாராயம் என்று பிரசித்தஞ்செய்கிறார்களோ அப்படிப்பட்ட மதுசாரத்தினால் அமைந்தாகிலும் அதை உடையதாகவாகிலுமிருக்கிற வேறே எவ்வித திரவரூபமான வஸ்துவென்றும் அர்த்தமாகும் ;

(xxxvii) "தெரு" என்பதில், யாதொரு கன்டோன்மென்டிலுள்ள யாதொரு வழி, ரஸ்தா, சந்து, சதுக்கம், முற்றம், இருபக்கங்களிலும் மரங்களிருக்கும் ஒடுக்கமான சந்து, மார்க்கம் அல்லது திறந்தவெளியான இடமானது ஜனங்கள் தாராளமாய் போகக்கூடியதாயிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, அதன்மேல கட்டிடங்கள் கட்டியிருந்தாலுஞ்சரி, கட்டியிராவிட்டாலுஞ்சரி அதன் வழியாய்ப்போக பொதுஜனங்களுக்கு பாத்தியதையிருந்தால், அப்படிப்பட்ட வழி முதலியவையென்பதும் அடங்குவதுமல்லாமல், யாதொருவாராவதி அல்லது செய்கரையின்மேலிருக்கும் ரஸ்தா, வழி அல்லது ஒற்றடிப்பாதையென்பதும் கூட அதில் அடங்கும் ;

(xxxviii) "வண்டி" என்பது - யாதொரு தெருவில் உபயோகிக்கக்கூடியதாய், யாதொரு வகையைச்சேர்ந்ததாகவுள்ள (சாமான்கள் அல்லது பிரயாணிகளை) ஏற்றிக்கொண்டுபோவதற்கான சக்கரம் அமைக்கப்பெற்றிருக்கும் சாதனம் என்று அர்த்தமாகும் ; மேலும், மோடார் வண்டி, மோடார் லாரி, மோடார் ஆம்னிபஸ், பாரவண்டி, லோகொமோடிவ் என்னும் வண்டி, ட்ராம் வண்டி, கையால் இழுக்கும் வண்டி, ட்ரக் என்னும் சாமான் ஏற்றும் வண்டி, மோடார் பைஸிகில், ட்ரைஸிகில், ரிக்ஷா என்பவையும் அதில் அடங்கும்.

(xxxix) "தண்ணீர்க் கட்டுவேலைகள்" என்பதில், சகல ஏரிகளும், குளங்களும், ஓடைகளும், தொட்டிகளும், பம்ப் என்னும் சூத்திரங்களும், கிணறுகளும், நீர்நிலைகளும், வாய்க்கால்களும், தண்ணீர் ட்ராக்குகளும், மதகுகளும், பிரதான குழாய்களும், குழாய்களும், கல்வர்ட்டுகளும் (சிறிய வாராவதிகளும்), ஹைட்ரன்ட் என்னும் ஜலசூத்திரங்களும், நிலைக்குழாய்களும், நீரோடும் குழல்களும் என்பதும் அடங்குவதுமல்லாமல், யாதொரு கன்டோன்மென்டுக்கு ஜலசப்ளை செய்யும் காரியத்துக்காக உபயோகிக்கப்படும் அல்லது உத்தேசிக்கப்படும் சகல யந்திரங்களும், நிலங்களும், கட்டிடங்களும், வாராவதிகளும், வஸ்துக்களும் என்பதும் அதில் அடங்கும்.

2-ம் அத்தியாயம்.

கன்டோன்மென்டுகள் என்பதன் அர்த்தமும் வரையறையும்.

கன்டோன்மென்டுகள் என்பதன் அர்த்தம்.

3. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப்பெற்று பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், மஹாராஜ சக்ரவர்த்தியவர்களின் ரெகுலர் சேனைகளாவது ரெகுலர் ஆகா

யப்படையாவது எந்த இடம் அல்லது இடங்களில் தங்கியிருக்கிறதோ அந்த இடம் அல்லது இடங்களையாகிலும், எந்த இடம் அல்லது இடங்கள் அப்படிப்பட்ட யாதொரு இடம் அல்லது இடங்களின் சமீபத்திலிருந்து ஷை சேனைகளின் காரியங்களுக்கு வேண்டியிருக்கிறதோ அந்த இடம் அல்லது இடங்களையாகிலும் இந்த ஆக்டின் காரியங்களுக்காகவும் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் வேறே சகல சட்டதிட்டங்களின் காரியங்களுக்காகவும் கன்டோன்மென்டாயிருப்பதாகப் பிரசித்தம் செய்யலாம்; மேலும், மேலேகண்டபடிக்கான அனுமதியைப்பெற்று, அவர்கள் - யாதொரு கன்டோன்மென்ட் கன்டோன்மென்டாயிருப்பது நின்றுபோகுமென்றும் அம்மாதிரியான விளம்பர மூலமாய்ப் பிரசித்தம் செய்யலாம்.

(2) மேலேகண்ட மாதிரியாகவே அனுமதி பெற்று, அதேமாதிரியான விளம்பர மூலமாய் பிரதேச கவர்ன்மென்டார் - மேலேசொல்லப்பட்ட காரியங்களுக்காக யாதொரு கன்டோன்மென்டின் எல்லைகள் இன்னவையாகுமென்று வரையறை ஏற்படுத்தலாம்.

கன்டோன்மென்டின் எல்லைகளை மாற்றுவது.

4. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப்பெற்று, பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், யாதொரு கன்டோன்மென்டுக்கு அடுத்தாற்போல் சமீபத்திலிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை அதற்குள் சேர்த்துக்கொள்ளவாவது யாதொரு கன்டோன்மென்டில் அடங்கியிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தை அதனின்றும் விலக்கிவிடவாவது தாங்கள் உத்தேசித்திருப்பதாய் பிரசித்தம் செய்யலாம்.

(2) எந்த கன்டோன்மென்ட் அல்லது பிரதேச விஸ்தீர்ணத்தின்விஷயமாய் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான விளம்பரம் பிரசித்தம் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த கன்டோன்மென்ட் அல்லது பிரதேச விஸ்தீர்ணத்தில் வாசம் செய்யும் யாதொரு நபர் - அந்த விளம்பரத்துக்குள்ள யாதொரு ஆட்சேபணையை அதன் தேதியிலிருந்து ஆறு வாரத்துக்குள் பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸர் மூலமாய் பிரதேச கவர்ன்மென்டாருக்கு எழுதி அனுப்பலாம்; அதன்மேல், பிரதேச கவர்ன்மென்டார் - அந்த ஆட்சேபணையை ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

(3) ஷை விளம்பரத்தின் தேதியிலிருந்து ஆறு வாரம் கழிந்துபோவதன்மேல், பிரதேச கவர்ன்மென்டார் - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்று, (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அனுப்பப்பட்ட ஆட்சேபணைகள் எவையேனும் இருந்தால் அவைகளைப்பற்றி ஆலோசனை செய்த பிறகு, பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி எந்த பிரதேச விஸ்தீர்ணத்தின் விஷயமாக விளம்பரம் பிரசுரிக்கப்பட்டதோ அந்த விஸ்தீரணத்தையாவது அதன் யாதொரு பாகத்தையாவது கன்டோன்மென்டுக்குள் சேர்த்துக்கொள்ளலாம், அல்லது சந்தர்ப்பத்துக்கேற்றபடி அப்படிப்பட்ட விஸ்தீர்ணத்தையாகிலும் அதன் யாதொரு பாகத்தையாகிலும் கன்டோன்மென்டிலிருந்து விலக்கிவிடலாம்.

யாதொரு விஸ்தீர்ணத்தைக் கன்டோன்மென்டில் சேர்த்துக்கொள்வதனால் இன்னது விளையுமென்பது.

5. 4-வது பிரிவின்படிக்கான விளம்பரத்தின் பிரகாரம் யாதொரு விஸ்தீர்ணம் யாதொரு கன்டோன்மென்டில் சேர்த்துக்கொள்ளப்பட்டால், அதன்மேல் அப்படிப்பட்ட விஸ்தீர்ணமானது - இந்த ஆக்டுக்கும் கன்டோன்மென்ட் முழுதிலும் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் சகல சட்டதிட்டங்களுக்கும், அவைகளின்படி வெளிவிடப்படும் அல்லது செய்யப்படும் சகல விளம்பரங்கள், விதிகள், ரெகுலேஷன்கள், சகாயச்சட்டங்கள், உத்தரவுகள், கட்டளைகள் ஆகிய இவைகளுக்கும் உட்பட்டதாய்விடும்.

யாதொரு விஸ்தீர்ணம் கன்டோன்மென்டாயிருப்பது நின்றுபோனால் கன்டோன்மென்ட் நிதியை ஒருவகை செய்வது.

6. (1) 3-வது விதியின்படிக்கான விளம்பரத்தின் பிரகாரம் யாதொரு கன்டோன்மென்ட் கன்டோன்மென்டாயிருப்பது நின்றுபோய் அதில் அடங்கியிருக்கும் பிரதேச விஸ்தீர்ணம் யாதொரு பிரதேச அதிகாரியின் மேல்விசாரணையில் உடனே வைக்கப்பட்டால், கன்டோன்மென்ட் நிதியும் கன்டோன்மென்ட் அதிகாரியினிடத்தில் சங்கிரமித்திருக்கும் சொத்தும் அந்தப் பிரதேச அதிகார சபையாரிடத்தில் சங்கிரமிக்கவேண்டியதுமல்லாமல், அந்தக் கன்டோன்மென்ட் அதிகாரியின் பொறுப்புகள் - ஷை பிரதேச அதிகார சபையாருக்கு ட்ரான்ஸ்பர் பண்ணப்படவும் வேண்டும்.

(2) அதே மாதிரியாய் யாதொரு கன்டோன்மென்ட் கன்டோன்மென்டாயிருப்பது நின்றுபோய் அதில் அடங்கிய பிரதேச விஸ்தீர்ணமானது உடனே யாதொரு பிரதேச அதிகாரசபையாரின் மேல்விசாரணையில் வைக்கப்படாவிட்டால், கன்டோன்மென்ட் நிதியில மிகுதியாயிருக்கும் தொகையையும் கன்டோன்மென்ட் அதிகாரசபையாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் வேறே சொத்தும் மஹாராஜ சக்ரவர்த்தியவர்களிடத்தில் சங்கிரமிப்பதுமல்லாமல், அந்தக் கன்டோன்மென்ட் அதிகாரசபையின் பொறுப்புகள் ஆலோசனை சபையிலுள்ள ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்கு ட்ரான்ஸ்பர் பண்ணப்படவும் வே- ண்டும்.

யாதொரு விஸ்தீர்ணம் கன்டோன்மென்டில் சேர்ந்திருப்பது நின்றுபோனால் கன்டோன்மென்ட் நிதியை ஒருவகை செய்வது.

7. (1) யாதொரு கன்டோன்மென்டின் பாகமாயிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணமானது 4-வது பிரிவின்படிக்கான விளம்பரத்தின் பிரகாரம் யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையின் மேல்விசாரணையிலிருப்பது நின்றுபோய், வேறே யாதொரு பிரதேச அதிகார சபையாரின் மேல்விசாரணையில் அது உடனே வைக்கப்பட்டால், கன்டோன்மென்ட் நிதி, கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் வேறே சொத்து ஆகிய இவைகளில் பொதுவான அல்லது விசேஷமான உத்தரவுமூலமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் கட்டளையிடக்கூடிய பாகமும், ஷை கன்டோன்மென்ட் அதிகார சபையின் பொறுப்புகளில் அந்தப்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் கட்டளையிடக்கூடிய பாகமும் ஷை வேறே பிரதேச அதிகார சபையாருக்கு ட்ரான்ஸ்பர் பண்ணப்படவேண்டும்.

(2) யாதொரு கன்டோன்மென்டின் பாகமாயிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணமானது அதேமாதிரி யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் மேல்விசாரணையிலிருப்பது நின்றுபோய் அது வேறே யாதொரு பிரதேச அதிகார சபையாரின் மேல்விசாரணையில் உடனே வைக்கப்படாவிட்டால், கன்டோன்மென்ட் நிதி, கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடம் சங்கிரமித்திருக்கும் வேறே சொத்து ஆகிய இவைகளில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் பொதுவான அல்லது விசேஷமான உத்தரவுமூலமாய்க் கட்டளையிடக்கூடிய பாகமும், கன்டோன்மென்ட் அதிகாரியின் பொறுப்புகளில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் அந்தப்படி கட்டளையிடக்கூடிய பாகமும் ஆலோசனை சபையிலுள்ள ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்கு ட்ரான்ஸ்பர் பண்ணப்படவேண்டும்.

6-வது, 7-வது பிரிவுகளின்படி ட்ரான்ஸ்பர் பண்ணப்பட்ட நிதிகளையும் சொத்தையும் உபயோகிப்பது.

8. 6-வது பிரிவிலாகிலும் 7-வது பிரிவிலாகிலும் கண்ட நிபந்தனைகளின்படி மஹாராஜ சக்ரவர்த்தியவர்களிடத்தில சங்கிரமித்திருக்கும் யாதொரு கன்டோன்மென்ட் நிதியையாவது கன்டோன்மென்ட் நிதியின் யாதொரு பாகத்தையாவது கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் வேறே யாதொரு சொத்தையாவது முதலில் ஷை நிபந்தனைகளின்படி ஆலோசனை சபையிலுள்ள ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்கு ட்ரான்ஸ்பர் பண்ணப்பட்டவையாயுள்ள கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் எவையேனும் பொறுப்புகளை நிறைவேற்றவும், இரண்டாவது கன்டோன்மென்டாகவோ சந்தர்ப்பத்துக்கேற்றபடி அதன் பாகமாகவோ இருப்பது நின்றுபோயிருக்கும் யாதொரு பிரதேச விஸ்தீர்ணத்தில் வாசம் செய்பவர்களின் பிரயோஜனத்துக்கும் உபயோகிக்கவேண்டும்.

இந்த ஆக்ட் பிரயோகப்படுவதற்கு வரையறை.

9. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப்பெற்று, பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், யாதொரு கன்டோன்மென்டின் பாகத்தை இந்த ஆக்டின் யாதொரு பாகம் பிரயோகப்படுவதனின்றும் விலக்கலாம், அல்லது யாதொரு கன்டோன்மென்ட் பிரஸ்தாப விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருந்து, அதில் போர்ட் இராமலிருக்கும் விஷயத்திலே, இந்த ஆக்டில் கண்ட யாதொரு நிபந்தனையை அந்தப்படி குறிப்பிடக்கூடிய திருத்தங்களுடன் பிரயோகப்படுத்தலாம்.

3-ம் அத்தியாயம்.

கன்டோன்மென்ட் அதிகார சபைகளும் கன்டோன்மென்ட் போர்டுகளும்.

கன்டோன்மென்ட் அதிகார சபைகள்.

கன்டோன்மென்ட் அதிகார சபையும் நிர்வாக உத்தியோகஸ்தரும்.

10. (1) யாதொரு ராஜதானிப் பட்டணத்தின் எல்லைகளுக்கப்பாலிருக்கும் ஒவ்வொரு கன்டோன்மென்டுக்காகவும் ஒரு கன்டோன்மென்ட் அதிகார சபையும் ஒரு நிர்வாக உத்தியோகஸ்தரும் இருக்கவேண்டும்.

(2) யாதொரு கன்டோன்மென்ட் யாதொரு ராஜதானிப் பட்டணத்தின் எல்லைகளுக்குள் இருந்தால், இந்த ஆக்டினாலாகிலும் அதன்படியாகிலும் யாதொரு அதிகார சபைக்கு கொடுக்கப்பட்டிருக்கும அலுவல்களானவை - அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டத்திற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாக நியமிக்கக்கூடிய அதிகாரியால் செய்யப்படவேண்டும்.

கன்டோன்மென்ட் போர்ட் ஏற்படுத்தவேண்டுமாவென்று பிரதேச கவர்ன்மென்டார் தீர்மானம் செய்யவேண்டுமென்பது.

11. பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், யாதொரு கன்டோன்மென்ட் விஷயத்திலே, அதில் கன்டோன்மென்ட் போர்ட் ஏற்படுத்தவேண்டுமென்று உத்தரவு செய்யலாம் ; மேலும், அவர்கள் - அந்தப்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு போர்ட் வேலைசெய்வது நின்றுபோகுமென்று அதேமாதிரியான விளம்பரமூலமாய் உத்தரவு செய்யலாம்.

கன்டோன்மென்ட் அதிகார சபை சட்டப்படி சேர்ந்த சபையாகுமென்பது.

12. (1) ஒவ்வொரு போர்டும் - எந்த இடத்தை அனுசரித்து கன்டோன்மென்டுக்குப் பெயர் வழங்குகிறதோ அந்த இடத்தின் போர்ட் என்னும் பெயரால் சட்டப்படிக்குண்டான ஒரு சபையாய் இருக்கவேண்டும்; அந்த சபையார் - இடைவிடாமல் ஒருவருக்குபின் ஒருவராய் வந்துகொண்டு, பொதுவான முத்திரையுடையவர்களாயிருக்கவேண்டியதுமல்லாமல், அவர்கள் அசையும் பொருள் அசையாப்பொருள் ஆகிய இவ்விரண்டையும் அடையவும் வைத்திருக்கவும் ஒப்பந்த உடன்படிக்கைகள் செய்துகொள்ளவும் அதிகாரம் உடையவர்களுமாவார்கள்; அல்லாமலும், அவர்கள் பிறர்மேல் வியாஜ்ஜியம் தொடருவதாயிருந்தாலும், பிறர் அவர்கள்மேல் வியாஜ்ஜியம் தொடருவதாயிருந்தாலும் ஷை பெயரால் அந்தப்படி செய்யவேண்டும்.

(2) போர்ட் ஏற்பட்டிராத யாதொரு கன்டோன்மென்ட் விஷயத்திலே, கன்டோன்மென்ட் அதிகார சபை - எந்த இடத்தை அனுசரித்து கன்டோன்மென்டுக்குப் பெயர் வழங்குகிறதோ அந்த இடத்தின் கன்டோன்மென்ட் அதிகாரி என்னும் பெயரால் சட்டப்படிக்குண்டான சபையாயிருப்பார்; மேலும், அந்த அதிகாரியானவர் - அப்படிப்பட்ட கன்டோன்மென்ட் அதிகாரி ஹோதாவில் ஒருவருக்குப்பின் ஒருவராய் வந்துகொண்டு பொதுவான முத்திரையுடையவராயிருக்கவேண்டியதுமல்லாமல், அவர் அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய இவ்விரண்டையும் அடையவும் வைத்திருக்கவும் ஒப்பந்த உடன்படிக்கைகள் செய்துகொள்ளவும் அதிகாரமுடையவருமாவார்; அல்லாமலும், அவர் பிறர்மேல் வியாஜ்ஜியம் தொடருவதாயிருந்தாலும் பிறர் அவர்மேல் வியாஜ்ஜியம் தொடருவதாயிருந்தாலும் ஷை பெயரால் அந்தப்படி செய்யவேண்டும்.

நிர்வாக உத்தியோகஸ்தரை நியமிப்பது.

13. ஒவ்வொரு கன்டோன்மென்டின் நிர்வாக உத்தியோகஸ்தரையும், ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் நியமிக்கவேண்டும்; மேலும், போர்ட் ஏற்பட்டிருக்கும் யாதொரு கன்டோன்மென்டிலே, ஷை உத்தியோகஸ்தர் - அதன் ஸெக்ரெடரி (காரியதரிசி) யாயிருக்கவேண்டுமேயன்றி மெம்பராயிருக்கக்கூடாது.

கன்டோன்மென்ட் போர்டின் அமைப்பு.

14. (1) ஒவ்வொரு போர்டிலும் அடியிற்கண்ட மெம்பர்கள் இருக்கவேண்டும்; அவர்கள் யாரென்றால்:—

(a) கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர்;

(b) டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டினால் நேமகம் செய்யப்பட்ட முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்;

(c) ஹெல்த் ஆபிஸர்;

(d) எக்ஸிக்யூடிவ் என்ஜினீர்;

(e) சங்கியையில் நாலுக்கு மேற்படாமல், கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர் எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு நேமகம் செய்யக்கூடிய ராணுவ உத்தியோகஸ்தர்கள்:

ஆனால், கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸரானவர் - தமக்கு தகுதியாகத் தோற்றும்பட்சத்திலே, பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸருடைய அனுமதியைப் பெற்று, போர்டில் மற்றப்படி பிரதிநிதி ஏற்பட்டிராத யாதொரு தொழில் வகுப்பார் அல்லது சமூகத்தாருக்குப் பிரதிநிதியாயிருக்கும்படி இந்த பகுதியின் பிரகாரம் தாம் நேமகம் செய்ய அனுமதி கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொரு ராணுவ உத்தியோகஸ்தருக்கு பர்த்தியாக, கண்டோன்மென்டிலாகிலும் அதற்குச் சமீபத்திலாகிலும் சாதாரணமாய் வாசம் செய்யும் யாதொரு நபரை, அவர் கவர்ன்மென்ட் ஊழியத்திலிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, நேமகம் செய்யலாம்.

(f) (b) முதல் (c) அடையாளமிட்ட பகுதிவரையிலுள்ள பகுதிகளின்படி நேமகம் செய்யப்பட்ட மெம்பர்களின் சங்கியைக்குச் சமமாயிருக்கக்கூடிய சங்கியையுள்ளவர்களாய் இந்த ஆக்டின்படி தெரிந்தெடுக்கப்படும் மெம்பர்கள்:

ஆனால், யாதொரு கன்டோன்மென்டின் மொத்த ஸிவில் ஜன சங்கியையானது அதிசமீபத்தில் எடுத்த ஸென்ஸஸ் (கானிஷ்மாரி கணக்கின்) பிரகாரம் இரண்டாயிரத்து ஐந்நூறுக்குக் குறைந்த சங்கியையுள்ளதாயிருக்கும்பக்ஷத்திலே, பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், (e), (f) அடையாளமிட்ட பகுதிகளில் கண்ட நிபந்தனைகள் ஷை கன்டோன்மென்ட் விஷயத்திலே பிரயோகப்படமாட்டாவென்று பிரசித்தம் செய்யலாம்; மேலும், அவர்கள் - பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருடைய சம்மதத்துடன், மேற்சொல்லியமாதிரி விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாக, அந்தக் கன்டோன்மென்டிலாவது அதற்கு சமீபத்திலாவதுள்ளவர்களாய், கன்டோன்மென்டில் நிலம் அல்லது வீடு உடைத்தாயிருக்கிறவர்களாகவாகிலும் அதில் வியாபாரம் நடத்துகிறவர்களாகவாகிலுமுள்ள நபர்களை மூன்று பேருக்கு மேற்படாமல் ஷை போர்டின் மெம்பர்களாகவும் நேமகம் செய்யலாம்.

(2) போர்டின் மெம்பரைத் தெரிந்தெடுக்கும், நேமகம்செய்யும் அல்லது நியமிக்கும் ஒவ்வொரு விஷயத்தையும், அதன் மெம்பர்கள் ஸ்தானங்களில் காலி ஏற்படும் ஒவ்வொரு

விஷயத்தையும்பற்றி பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் அறிக்கையிடவேண்டும்.

மெம்பர்களின் உத்தியோக கால அளவு.

15. (1) இந்தப் பிரிவில் வேறே விதமாக நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, போர்டைச் சேர்ந்த யாதொரு மெம்பரின் உத்தியோக கால அளவு மூன்று வருஷமாகும்; மேலும், அது - 14-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அவரைத் தெரிந்தெடுத்திருப்பது அல்லது நேமகம் செய்திருப்பதைப்பற்றிய விளம்பரத்தின் தேதியோ அவர் எந்த காலிஸ்தானதுக்காக அல்லது தெரிந்தெடுக்கப்பட்டு அல்லது நேமகம் செய்யப்பட்டிருக்கிறாரோ அந்த காலிஸ்தானம் ஏற்பட்ட தேதியோ இந்த இரண்டு தேதிகளில் எது பிற்பட்டதாயிருக்கிறதோ அந்தத் தேதியிலிருந்து ஆரம்பமாகும்.

(2) உத்தியோக முறையில் போர்டிலே மெம்பராயிருப்பவருடைய உத்தியோக கால அளவானது - அவர் எந்த உத்தியோகத்தை அனுசரித்து அப்படிப்பட்ட மெம்பராயிருக்கிறாரோ அந்த உத்தியோகம் அவர் வகித்துவருகிறவரையில் தொடரும்.

(3) தற்செயலாய் ஏற்பட்ட யாதொரு காலிஸ்தானத்தைப் பூர்த்திசெய்ய தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பரின் உத்தியோக கால அளவு - அவர் தெரிந்தெடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆரம்பமாகும்; மேலும், அது - எந்த மெம்பருக்கு பர்த்தியாக அவர் தெரிந்தெடுக்கப்பட்டாரோ அந்த மெம்பர் பிரஸ்தாப காலி ஏற்பட்டிராவிட்டால் எவ்வளவு காலம் உத்தியோகம் வகித்திருப்பாரோ அவ்வள்வு காலம்வரையில் தொடரும்.

(4) உத்தியோகத்தைவிட்டு நீங்கும் யாதொரு மெம்பர் - பிரதேச கவர்ன்மென்டார் வேறே விதமாகக் கட்டளையிட்டாலன்றி மற்றப்படி, 14-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி, அவருக்குப் பின்னே (உத்தியோகத்துக்கு) வருபவரைத் தெரிந்தெடுத்திருக்கும் அல்லது நேமகம் செய்திருக்கும் விஷயம் அறிக்கையிடப்படுகிறவரையில் உத்தியோகம் வகித்துவரவேண்டும்.

(5) உத்தியோகத்தை விட்டு நீங்கும் யாதொரு மெம்பர் - யோக்கியதை பெற்றவராயிருக்கும்பட்சத்திலே, மறுபடியும் தெரிந்தெடுக்கப்படலாம், அல்லது மறுபடியும் நேமகம் செய்யப்படலாம்.

காலி ஸ்தானங்களைப் பூர்த்திசெய்வது.

16. (1) தெரிந்தெடுக்கப்பட்டவராயிருக்கும் போர்டைச் சேர்ந்த யாதொரு மெம்பரின் உத்தியோகத்திலே கால அளவு முடிந்துபோவதனுல் ஏற்படும் காலி ஸ்தானங்களை, பிரதேச கவர்ன்மென்டார் பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய் கட்டளையிடக்கூடிய தேதியன்று நடத்தப்படும் சாதாரண எலெக்ஷன் மூலமாய்ப் பூர்த்திசெய்யவேண்டும்.

(2) தற்செயலாய் ஏற்படும் யாதொரு காலி ஸ்தானத்தை, பிரதேச கவர்ன்மென்டார் பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய் நிச்சயிக்கும் தேதியன்று நடத்தப்படும் தற்செயலான எலெக்ஷன் மூலமாய்ப் பூர்த்திசெய்யவேண்டும்; மேலும், அந்த தேதியானது - காலி ஏற்பட்ட பிறகு கூடியசீக்கிரத்தில் இருக்கவேண்டும்:

ஆனுல், கால அளவு முடிந்துபோவதனுல் எந்த தேதியில் யாதொரு காலி ஏற்படுமோ அந்த தேதிக்குமுன் மூன்று மாதத்துக்குள் ஷை காலி ஏற்பட்டால், அந்தக் காலி ஸ்தானத்தைப் பூர்த்திசெய்வதற்காக தற்செயலான எலெக்ஷன் நடத்தக்கூடாது; மேலும், அப்படிப்பட்ட காலிஸ்தானத்தை அடுத்துவரும் சாதாரண எலெக்ஷனில் பூர்த்திசெய்யவேண்டும்.

விசேஷ விஷயங்களில் ஏற்படும் காலி ஸ்தானங்கள்.

17. (1) யாதொரு காரணத்தினுல் யாதொரு சாதாரண எலெக்ஷனில் மெம்பர் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டாலும் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர் போர்டில் ஊழியம் செய்ய விருப்பமற்றவராயிருந்தாலும், உத்தியோகத்தைவிட்டு நீங்கும் மெம்பர் யோக்கியதை பெற்றவராயும் ஊழியம் செய்ய விருப்பமுடையவராயும் இருக்கும்பட்சத்திலே, அவர் - மறுபடியும் தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவார்.

(2) அப்படிப்பட்ட யாதொரு விஷயத்தில் உத்தியோகத்தைவிட்டு நீங்கும் மெம்பர் யோக்கியதையற்றவராயிருந்தாலும் ஊழியம் செய்ய விருப்பமில்லாதவராயிருந்தாலும் தற்செயலான யாதொரு எலெக்ஷனில் மெம்பர் எவரும் தெரிந்தெடுக்கப்படாவிட்டாலும், அந்தக் காலி ஸ்தானத்தைப் பிரதேச கவர்ன்மென்டார்-பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருடைய சம்மதத்துடன் நேமகமூலமாய்ப் பூர்த்திசெய்யவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி நேமகம் செய்யப்படும் அல்லது தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படும் யாதொரு மெம்பரின் உத்தியோக கால அளவானது-அவர் சந்தர்ப்பத்துக்கேற்றபடி சாதாரணமான அல்லது விசேஷ எலெக்ஷனில் தெரிந்தெடுக்கப்பட்டிருந்தால் எந்தக் காலத்தில் முடிவாயிருக்குமோ அந்தக் காலத்திலே முடிவாகும்.

பிரமாணம் அல்லது உறுதிமொழி.

18. (1) தம்முடைய உத்தியோகத்தை அனுசரித்து போர்டில் மெம்பராயிருக்கிற அல்லது போர்டின் மெம்பராக நேமகம் செய்யப்படுகிற அல்லது தெரிந்தெடுக்கப்படுகிற ஒவ்வொரு நபரும் - தம்முடைய ஸ்தானத்தை வகிப்பதற்கு முன்னே, மஹாராஜ சக்ரவர்த்தி அவர்களிடத்தில் தாம் ராஜபக்தியுள்ளவராயிருப்பதாக போர்டின் சபையில் அடியிற்கண்ட நமூனுப்படி பிரமாணம் செய்யவேண்டும், அல்லது உறுதிமொழி கூறவேண்டும், அதாவது :—

ரான
ஏ. பி. என்னும் நான் - இந்தக் கோர்ட்டில் ஒரு மெம்பராய்த் தெரிந்
ராய் நிய

தால்
தெடுக்கப்பட்டிருப்பதால், இந்தியா சக்ரவர்த்தி அவர்களாகிய மாட்சிமை தங்கிய மஹாராஜா
மிக்கப்பட்டிருப்பதால்

அவர்களிடத்திலும் அவருடைய வாரிசுகளிடத்திலும் அவருக்குப் பின் பட்டத்துக்கு வருபவர்களிடத்திலும் விசுவாசமுள்ளவனுயிருப்பேனென்றும் உண்மையான ராஜபக்தியுடன் நடந்துகொள்வேனென்றும், நான் செய்ய ஏற்றுக்கொள்ளப்போகும் கடமையை உண்மையாய் நிறைவேற்றுவேனென்றும் பராபக்தியுடன் பிரமாணம் செய்கிறேன் (அல்லது உறுதிகூறுகிறேன்).

(2) நியாயமானதென்று பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தோற்றக்கூடிய கால அளவுக்குள் அப்படிப்பட்ட யாதொரு நபர் பிரமாணம் செய்யவாவது உறுதி கூறவாவது தவறிப்போனுல், பிரதேச கவர்ன்மெண்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பர மூலமாய் அவருடைய ஸ்தானம் காலியாய்விட்டதாகப் பிரசித்தம்பண்ணலாம்.

ராஜிநாமா.

19. (1) போர்டைச் சேர்ந்துள்ள நேமகம் செய்யப்பட்ட அல்லது தெரிந்தெடுக்கப்பட்ட யாதொரு மெம்பர் தம் உத்தியோகத்தை ராஜிநாமா செய்ய விரும்பினுல், அவர் - தம்முடைய ராஜிநாமாவை எழுதி, போர்டின் ப்ரெஸிடென்ட் மூலமாக கம்மாண்டிங் ஆபிஸருக்கு அனுப்பவேண்டும்; அவர் - அதைப் பிரதேச கவர்ன்மெண்டாரின் உத்தரவுக்கு அனுப்பவேண்டும்.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் ஷெ ராஜிநாமாவை ஒப்புக்கொண்டால், அந்தப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட சமாசாரம் போர்டாருக்குத் தெரிவிக்கப்படும்; அதன்மேல், ராஜிநாமா செய்யும் மெம்பரின் ஸ்தானம் காலியாய்விடும்.

ப்ரெஸிடென்டும் வைஸ் ப்ரெஸிடென்டும்.

20. (1) கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர் - போர்டின் ப்ரெஸிடென்டாவார்.

(2) ஒவ்வொரு போர்டுக்கும் அதன் மெம்பர்களிலிருந்து யாதொரு சபையில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு வைஸ் ப்ரெஸிடென்ட் இருக்கவேண்டும்.

வைஸ் ப்ரெஸிடென்டினுடைய உத்தியோக கால அளவு.

21. (1) யாதொரு வைஸ் ப்ரெஸிடென்டினுடைய உத்தியோக காலஅளவானது—

(a) கவர்ன்மெண்ட் ஊழியத்திலிராத யாதொரு நபர் விஷயத்தில், மூன்று வருஷமோ மெம்பர் ஹோதாவிலே அவருடைய உத்தியோக கால அளவில் பாக்கியாயிருக்கும் காலமோ, இவைகளில் எது குறைவாயிருக்கிறதோ அதுவாவது

(b) கவர்ன்மெண்ட் ஊழியத்திலிருக்கும் யாதொரு நபர் விஷயத்தில், மெம்பர் ஹோதாவிலே அவருடைய உத்தியோக கால அளவில் பாக்கியாயிருக்கும் காலமாவது

ஆகும்.

(2) யாதொரு வைஸ் ப்ரெஸிடென்டானவர் - ப்ரெஸிடென்டுக்கு எழுத்து மூலமான நோடிஸ் கொடுத்து தம்முடைய உத்தியோகத்தை ராஜிநாமா செய்யலாம்; மேலும், அந்த ராஜிநாமா போர்டாரால் ஒப்புக்கொள்ளப்படுவதன்மேல் அந்த உத்தியோகம் காலியாய்விடும்.

ப்ரெஸிடென்டினுடைய அலுவல்கள்.

22. (1) ஒவ்வொரு போர்டின் ப்ரெஸிடென்டினுடைய கடமை என்னவென்றுல் ;—

(a) நியாயமான காரணத்தினுல் தடுக்கப்பட்டாலன்றி மற்றப்படி, போர்டின் சகல சபைகளையும் கூட்டுவதும் அவைகளில் அக்கிராசனம் வகிப்பதும் அதில் நடந்தேறும் வேலை விஷயமாய ஒழுங்கேற்படுத்துவதும் ;

(b) திரவிய சம்பந்தமாய் போர்டின் பரிபாலன விஷயமாகவும் நிர்வாக பரிபாலன விஷயமாகவும் மேற்பார்வையிடுவதும் மேல்விசாரணை செய்வதும் ;

(c) இந்த ஆக்டினுலாகிலும் அதன்படியாகிலும் ப்ரெஸிடென்டுக்கென்றே ஏற்படுத்தப்படும் அல்லது கொடுக்கப்படும் சகல கடமைகளைச் செய்வதும் சகல அதிகாரங்களைச் செலுத்துவதும் ;

(d) இந்த ஆக்டினுல் ஏற்படுத்தப்படும் எவையேனும் நிர்ப்பந்தங்களுக்கும் வரையறைகளுக்கும் திட்டங்களுக்கும் உட்பட்டு, இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை நிறை

வேற்றும் காரியத்துக்காக நிர்வாக அதிகாரத்தைச் செலுத்துவதும் இந்த ஆக்டின் காரியங்கள் நிறைவேற்றப்படுவதற்கு நேராக உத்தரவாதியாய் இருப்பதும்

ஆகும்.

(2) ப்ரெஸிடென்டானவர் - போர்டாரின் தீர்மான மூலமாய் தாம் பிரித்துக் கொடுக்கக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கும் யாதொரு அதிகாரம், கடமை அல்லது அலுவலைத் தவிர (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (c) அடையாளமிட்ட பகுதியில் உதகரித்திருக்கும் வேறே சகல அதிகாரங்களையும் கடமைகளையுமாவது அவைகளில் எதையாவது செலுத்துவதற்கு வைஸ் ப்ரெஸிடென்டுக்கு எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு, அதிகாரம் கொடுக்கலாம்.

(3) இந்தப் பிரிவின்படி ப்ரெஸிடென்டால் பிரித்துக் கொடுக்கப்படும் எவையேனும் அதிகாரங்கள், கடமைகள் அல்லது அலுவல்களை செலுத்துவது அல்லது செய்வதானது - ப்ரெஸிடென்ட் ஏற்படுத்தக்கூடிய நிர்ப்பந்தங்கள், வரையறைகள், திட்டங்கள் எவையேனும் இருந்தால் அவைகளுக்கும் ப்ரெஸிடென்டின் மேற்பார்வைக்கும் அவரால் புனராலோசனை செய்து திருத்தப்படுவதற்கும் உட்பட்டதாகும்.

(4) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்படும் ஒவ்வொரு உத்தரவையும் உடனே போர்டாருக்கும் பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸருக்கும் தெரிவிக்க வேண்டும்.

வைஸ்ப்ரெஸிடென்டின் கடமைகள்.

23. ஒவ்வொரு போர்டின் வைஸ் ப்ரெஸிடென்டினுடைய கடமை என்னவென்றால்—

(a) ப்ரெஸிடென்ட் (ஊரில்) இராதபோதும் நியாயமான காரணத்தினால் தடுக்கப்பட்டாலன்றி மற்றப்படியும் போர்டின் சகல சபைகளிலும் அக்கிராசனம் வகிப்பதும், அந்தப்படி அக்கிராசனம் வகிக்கும்போது 22-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ப்ரெஸிடென்டுக்குள்ள அதிகாரத்தைச் செலுத்துவதும்,

(b) ப்ரெஸிடென்ட் சக்தியற்றவராயிருக்கும்போதாவது அவர் சிறிதுகாலத்துக்கு (ஊரில்) இராதபோதாவது அவர் நியமிக்கப்படுகிற அல்லது (முன் இருந்தவருக்குப்பின் சட்டப்படி) வருகிற வரையிலாவது ப்ரெஸிடென்டினுடைய வேறே யாதொரு கடமையைச் செய்வதும் அவருடைய வேறே யாதொரு அதிகாரத்தைச் செலுத்துவதும்,

(c) 22-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தமக்குப் பிரித்துக் கொடுக்கப்படக்கூடிய எந்த அதிகாரத்தையாவது செலுத்துவதும் எந்தக் கடமையையாவது செய்வதும்

ஆகும்.

நிர்வாக உத்தியோகஸ்தரின் கடமைகள்.

24. நிர்வாக உத்தியோகஸ்தரானவர் - இந்த ஆக்டினாலாவது அதன்படியாவது அவருக்கு ஏற்படுத்தப்படக்கூடிய சகல கடமைகளையும் செய்யவேண்டும்; கன்டோன்மென்ட் அதிகார சபையின் சகல ரெகார்டுகளையும் பந்தோபஸ்தாக வைத்திருப்பதற்கு உத்தரவாதியாய் இருக்கவேண்டும்; போர்டார் அல்லது இந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட போர்டாரின் யாதொரு கம்மிட்டி அல்லது யாதொரு மத்தியஸ்த கம்மிட்டியாரின் நடவடிக்கைகள் சம்பந்தமாய் ஷை சபைகள் அவருக்கு ஏற்படுத்தக்கூடிய கடமைகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்; கன்டோன்மென்டின் பரிபாலனத்துக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விஷயத்தைப் பொறுத்தமட்டில் கன்டோன்மென்ட் அதிகார சபையார் செய்யக்கூடிய ஒவ்வொரு உத்தரவின்படியும் நடந்துகொள்ளவேண்டும்.

நிர்வாக அதிகாரியின் விசேஷ அதிகாரம்.

25. அவசரமான விஷயங்களில் நிர்வாக அதிகாரியானவர் - யாதொரு கட்டுவேலையைச் செய்து முடிப்பதற்காவது யாதொரு காரியத்தைச் செய்வதற்காவது சாதாரணமாய் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் அனுமதியைப் பெறவேண்டியதாயிருந்து பொது ஜனங்களின் உபயோகத்துக்காகவாகிலும் க்ஷேமத்துக்காகவாகிலும் ஷை கட்டுவேலை அல்லது காரியத்தைச் செய்துமுடிப்பது அல்லது செய்வது அவசியமாகுமென்று அவர் அபிப்பிராயப்பட்டால், ஷை கட்டுவேலையையோ காரியத்தையோ செய்துமுடிக்க வேண்டுமென்றாயினும் செய்யவேண்டுமென்றாயினும் கட்டளையிடலாம்; மேலும், அவர் - ஷை கட்டுவேலை அல்லது காரியத்தைச் செய்துமுடிப்பதற்காவது செய்வதற்காவது பிடிக்கும் செலவு கன்டோன்மென்ட் நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்றுகட்டளையிடலாம்:

ஆனால்,—

(a) அவர் - குறித்த யாதொரு கட்டுவேலையைச் செய்துமுடிக்கக்கூடாதென்றாவது குறித்த யாதொரு காரியத்தைச் செய்யக்கூடாதென்றாவது தடுத்து கன்டோன்மென்ட் அதிகார சபை யாதொரு உத்தரவு பிறப்பித்திருந்தால், அதை மீறி இந்தப் பிரிவின்படி பிரவர்த்திக்கக்கூடாது; மேலும்,

(b) அவர் - இந்தப் பிரிவின்படி நடத்தப்பட்ட நடவடிக்கையைப் பற்றியும் அதற்குள்ள காரணங்களைப் பற்றியும் உடனே கன்டோன்மென்ட் அதிகார சபைக்கு ரிபோர்ட் செய்யவேண்டும்.

எலெக்ஷன்கள்.

தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாக்கள்.

26. (1) யாதொரு கன்டோன்மெண்டில் யாதொரு போர்டை அமைப்பதாயிருக்கும் பட்சத்தில், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - ஷை போர்டுக்குச் சம்பந்தப்பட்ட எலெக்ஷன்களில் வோட் கொடுக்க யோக்கியதை பெற்றவர்களாயிருக்கும் நபர்களின் பெயர்களைக் காட்டும் எலெக்டொரல் (தெரிந்தெடுப்பவர்களின்) ஜாபிதா ஒன்றைத் தயார் செய்து பிரசுரிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஜாபிதாவானது - பிரதேச கவர்ன்மென்டார் விதியின் மூலமாய் நிர்ணயிக்கக்கூடிய மாதிரியாகத் தயார் செய்யப்பட்டு, புனராலோசனை செய்து திருத்தப்படவேண்டியதுமல்லாமல் அவர்கள் மேலேகண்டபடி நிர்ணயிக்கக்கூடிய தேதியிலே ஒவ்வொரு வருஷமும் முடிவாய் பிரசுரிக்கப்படவும்வேண்டும்.

(2) முடிவான தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் பெயர் கண்டிருக்கும் ஒவ்வொரு நபரும் - அந்த ஜாபிதா செலாவணியாய்க் கொண்டிருக்கிறவரையிலே, ஷை போர்டுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு எலெக்ஷனில் வோட் கொடுக்க பாத்தியதை யுடையவராவார்; மேலும், வேறே எந்த நபருக்கும் அந்தப்படி பாத்தியதை கிடையாது.

(3) யாதொரு கன்டோன்மென்ட் வார்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தால், தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவை ஒவ்வொரு வார்டுக்கும் தனித்தனி ஜாபிதாக்களாகப் பிரிக்கவேண்டும்.

(4) நிர்ணயிக்கப்பட்ட தேதியிலே யாதொரு வருஷத்தில் புதிதாய்த் தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதா பிரசுரிக்கப்படாமலிருந்தால், பிரதேச கவர்ன்மென்டார் - புதிய ஜாபிதா பிரசுரிக்கப்படுகிறவரையில், தெரிந்தெடுப்பவர்களின் பழைய ஜாபிதா செலாவணியாய்க் கொண்டிருக்கவேண்டுமென்று கட்டளையிடலாம்.

தெரிந்தெடுப்பவர்களின் யோக்கியதாம்சங்கள்.

27. (1) அடியிற்கண்ட நபர்கள் மற்றப்படி யோக்கியதை யற்றவர்களாயிராவிட்டால், தெரிந்தெடுப்பவர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு பாத்தியதை யுடையவர்களாவார்கள்; அவர்களெவரென்றால்—

(a) இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாக நிஷ்கரிஷை செய்யக்கூடிய (ஷை தேதி என்று இந்தப் பிரிவில் இதற்குப் பின்னால் குறிப்பிடப்படும்) தேதியன்றைக்காவது அதற்கு முன்னாவது யாதொரு நபருக்கு நேராகவும் அவருடைய சொந்த நிமித்தமாகவும் (ஆக்ட்ராய் வரி, சுங்கம் அல்லது டெர்மினல் வரியல்லாமல் வேறே) இந்த ஆக்டின்படிக்கான வரிகள் விதிக்கப்பட்டிருந்து, அவைகளின் மொத்தத் தொகையானது பிரதேச கவர்ன்மென்டார் விதி மூலமாய் நிர்ணயிக்கக்கூடிய தொகைக்குக் குறைவாயிருக்கும்பட்சத்திலும் அப்படிப்பட்ட யாதொரு வரி செலுத்துவதில் ஷை தேதியிலே அவர்மேல் பாக்கியிராதபட்சத்திலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும்;

(b) யாதொரு நபர் ஷை தேதிக்கு அடுத்து முன்னதாகப் பன்னிரண்டு மாதத்துக்குக் குறையாத ஒரு கால அளவில் பிரஸ்தாப கன்டோன்மென்டிலே வாசம் செய்திருந்து, ஷை தேதியில்—

(i) பிரதேச கவர்ன்மென்டார் விதி மூலமாய் நிர்ணயிக்கக்கூடியமாதிரி கணக்கிடுவதனால் ஏற்படுவதும் அந்தப்படி நிர்ணயிக்கக்கூடிய தொகைக்குக் குறையாததுமான வருஷவாரி மதிப்புள்ளதாய் கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரராகவாவது, சுவாதீன அடைமானதாரராகவாவது குத்தகைதாரராகவாவது இருந்தாலும்,

(ii) பிரதேச கவர்ன்மென்டார் விதி மூலமாய் நிர்ணயிக்கக்கூடிய மாதிரி கணக்கிடுவதனால் ஏற்படுவதும் அந்தப்படி நிர்ணயிக்கக்கூடிய தொகைக்குக் குறையாததுமான வருஷவாரி வரும்படி கிடைக்கிற யாதொரு வியாபாரத்தைக் கன்டோன்மென்டில் செய்து கொண்டிருந்தாலும்,

(iii) பிரிடிஷ் இந்தியாவில் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு சர்வகலாசாலையில் பட்டதாரியாயிருந்தாலும்,

(iv) மஹாராஜ சக்ரவர்த்தியவர்களின் சேனைகளைச் சேர்ந்தவராய் கம்மிஷன் பெற்றவராயிருந்தாலும்சரி, கம்மிஷன் பெறுதவராயிருந்தாலுஞ்சரி உத்தியோகத்தை விட்டு நீங்கின அல்லது பென்ஷன் பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராயிருந்தாலும், அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும்,

(c) ஷை தேதிக்கு அடுத்து முன்னதாகப் பன்னிரண்டு மாதத்துக்குக் குறையாத ஒரு கால அளவில் கன்டோன்மென்டில் வாசஞ்செய்திருந்து அந்தக்கால அளவில் வருமான வரி விதிக்கப் பெற்றிருக்கும் ஒவ்வொரு நபரும்.

(2) மற்றப்படி யோக்கியதை பெற்றவராயிருந்தாலும் பாதகமில்லாமலே, யாதொரு நபர் ஷை தேதியில்,

(i) ப்ரிடிஷ் குடியாயிராவிட்டாலும்,

(ii) 21 வயதுக்குக் குறைந்தவராயிருந்தாலும்,

(iii) அதிகாரம் பெற்ற யாதொரு கோர்ட்டாரால் புத்தி ஸ்வாதீனமில்லாதவரென்று தீர்மானிக்கப்பட்டிருந்தாலும்,

(iv) கடனிறுக்கச் சக்தியற்றவராயிருந்து அந்தப்படி சக்தியற்றவரென்று விடுதலை பெறாமலிருந்தாலும்,

(v) யாதொரு க்ரிமினல் (குற்ற விசாரணை) கோர்ட்டாரால் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட கால அளவுக்கு காவல் தண்டனையாவது தீபாந்தர சிட்சையாவது விதிக்கப்பட்டிருந்தாலும் 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தின்படி நல்ல நடக்கைக்காக ஜாமீன் கொடுக்கும்படி உத்தரவு செய்யப் பெற்றிருந்தாலும் இந்தியன் பினல்கோட் IX-A அதிகாரத்தின்படிக்கான யாதொரு குற்றத்துக்காக க்ரிமினல் கோர்ட்டாரால் தண்டனை விதிக்கப்பெற்றிருந்தாலும்,

1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.
1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

அவர் - தெரிந்தெடுப்பவராகச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு பாத்தியதையுடையவராக மாட்டார்:

ஆனால், பிரதேச கவர்ன்மெண்டார் - எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு, (v) அடையாளமிட்ட பகுதியின்படி யாதொரு நபருக்கு ஏற்படும் யாதொரு யோக்கியதைக் குறைவை நீக்கிவிடலாம்.

(3) யாதொரு நபர் யாதொரு தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்து, அதற்குப் பிறகு (2) குறிப்பிட்ட உட்பிரிவின் (i), (iii), (iv), (v) அடையாளமிட்ட பகுதிகளில் சொல்லியிருக்கும் யோக்கியதைக் குறைவுகளில் எதற்காவது உள்ளானால், அவருடைய பெயரை, (v) அடையாளமிட்ட பகுதியில் சொல்லியிருக்கும் விஷயத்திலே பிரஸ்தாப யோக்கியதைக் குறைவு பிரதேச கவர்ன்மெண்டாரால் நீக்கப்பட்டாலன்றி மற்றப்படி தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாவிலிருந்து எடுத்துவிடவேண்டும்.

போர்டில் மெம்பராயிருப்பதற்கான யோக்கியதாம்சம்.

28. (1) இதில் பின்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, யாதொரு கன்டோன்மென்டின் தெரிந்தெடுப்பவர்களுடைய ஜாபிதாவில் பெயர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கும் ஒவ்வொரு நபரும் - அந்த கன்டோன்மென்டின் போர்டிலே மெம்பராய்த் தெரிந்தெடுக்கப்படுவதற்கு யோக்கியதை பெற்றவராவார்.

(2) யாதொரு நபர்—

(a) கவர்ன்மெண்ட் ஊழியத்திலிருந்து தள்ளிவிடப்பட்டு, அதில் மறுபடியும் வேலையிலே அமர்த்திக்கொள்ளப்படாமல் தடுக்கப்பட்டிருந்தாலும் கன்டோன்மெண்ட் அதிகார சபையின் தள்ளிவிடப்பட்ட ஊழியக்காரராயிருந்தாலும்,

(b) யோக்கியதையுடைய யாதொரு அதிகாரியின் உத்தரவினால் நியாயவாதியாய்ப் பிரவர்த்திப்பதனின்றும் தடுக்கப்பட்டிருந்தாலும்,

(c) போர்டார் கொடுக்கக்கூடிய அல்லது போர்டாருக்குப் பைசல் அதிகாரமுள்ள யாதொரு லாபம் தரும் ஸ்தானத்தை வகித்திருந்தாலும், ஸ்டிபெண்டியெரி மாஜிஸ்ட்ரேட்டாயிருந்தாலும், பொலீஸ் உத்தியோகஸ்தராயிருந்தாலும், யாதொரு போர்ட் மெம்பரின் ஊழியக்காரராகவாவது அவரிடத்திலே வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டவராகவாவதிருந்தாலும்,

(d) சட்டப்படி சேர்ந்த ஒரு கம்பெனியில் (டைரெக்டரைத் தவிர வேறே) யாதொரு பங்குக்காரராகவல்லாமல் மற்றப்படி, போர்டாரோடு செய்யப்பட்டு இன்னும் செலாவணியாய்க்கொண்டிருக்கிற யாதொரு ஒப்பந்தத்திலாகிலும் அவர்களுக்காகச் செய்யப்பட்டுவருகிற யாதொரு வேலையிலாகிலும் பற்றுள்ளவராயிருந்தாலும்,

(e) இந்த ஆக்டிற்கண்ட வேறே யாதொரு நிபந்தனையின்படி யோக்கியதையற்றவராயிருந்தாலும்,

அவர் - போர்டின் மெம்பராகத் தெரிந்தெடுக்கப்படுவதற்காயினும் நேமகம் செய்யப்படுவதற்காயினும் யோக்கியதையுடையவராகமாட்டார்.

ஆனால்—

(i) (a), (b) அடையாமிட்ட பகுதிகளில் கண்டிருக்கும் யோக்கியதைக்குறைவுகளில் எதையாவது பிரதேச கவர்ன்மெண்டார் - இது விஷயமாய் உத்தரவு பிறப்பித்து, அதன்மூலமாக எடுத்துவிடலாம்; மேலும்,

(ii) யாதொரு நபருக்கு—

(a) அசையாப்பொருளை குத்தகைக்குவிடும், விற்பனைசெய்யும் அல்லது கிரயத்துக்குவாங்கும் யாதொரு விஷயத்திலாவது அப்படி செய்வதற்கான யாதொரு உடன்படிக்கையிலாவது,

(b) பணம் கடன் வாங்குவதுவிஷயமாகச் செய்துகொள்ளப்படும் யாதொரு உடன்படிக்கையிலாவது பணம் செலுத்துவதற்காக மாத்திரம் கொடுக்கப்படும் யாதொரு ஜாமீனிலாவது,

(c) போர்டின் விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு விளம்பரம் பிரசுரிக்கப்படும் எந்த சமாசார பத்திரிகையிலாவது,

(d) ஒப்பந்தம் அல்லது வேலையின் கால அளவுக்குள் யாதொரு வருஷத்திலே அடியிற்கண்ட இரண்டு விஷயங்கள் ஒவ்வொன்றிலும் மொத்தத்தில் 1,500 ரூபாய்க்கு மேற்படாத மதிப்புள்ளவையாய் அவர் கிரமமாக வியாபாரம் செய்கிற எவையேனும் சாமான்களை போர்டுக்கு விற்பனை செய்வதிலாவது போர்டினிடமிருந்து ஷை சாமான்களைக் கிரயத்துக்கு வாங்குவதிலாவது

பங்கு அல்லது பற்று இருக்கிறதென்னும் காரணத்தினாலேயே (d) குறிப்பிட்ட பகுதியில் சொல்லியிருக்கிற யாதொரு ஒப்பந்தம் அல்லது வேலையில் அவருக்கு யாதொரு பற்று இருப்பதாக எண்ணக்கூடாது.

அர்த்தம். 29. 26, 27, 28-வது பிரிவின் காரியங்களுக்காக—

(a) ''நபர்'' என்பது - மனிதவர்க்கத்தைச் சேர்ந்த ஒருவர் என்று அர்த்தமாகும்.

(b) யாதொரு நபர் தாமாகவேயாவது சட்டப்படி நியமிக்கப்பட்ட ஏஜெண்ட் மூலமாகவாவது யாதொரு வரியைச் செலுத்தினால் அவர் அந்த வரியை நேரில் செலுத்துவதாகக் கருதப்படுவார்.

அவிபக்த குடும்பங்கள் முதலியவை.

30. இதில் முன்னே என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பிரதேச கவர்ன்மெண்டார் - யாதொரு அவிபக்த குடும்பத்தின் அல்லது யாதொரு கம்பெனி, பர்ம் என்னும் வர்த்தகக்கூட்டம், வேறே சங்கம் அல்லது சபையின் மானேஜருக்காவது பிரதிநிதிக்காவது யாதொரு நிலத்தின் ட்ரஸ்டிக்காவது போர்டின் எலெக்ஷன்களில் தெரிந்தெடுப்பவராய்ச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான அல்லது அபேக்ஷகராய்ச் நேமகம் செய்யப்படுவதற்கான உரிமையைக் கொடுத்து விதிகள் செய்யலாம்.

எலெக்ஷன்கள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்கான விதிகள் செய்வதற்குள்ள அதிகாரம்.

31. (1) இந்த ஆக்டின்படி எலெக்ஷன்கள் நடத்தும் காரியத்துக்காகப் பிரதேச கவர்ன்மெண்டார் - பொதுவாகவாவது யாதொரு கன்டோன்மெண்ட் அல்லது கன்டோன்மெண்டுகளின் தொகுதிக்கு பிரத்தியேகமாகவாவது அடியிற்கண்ட சகல விஷயங்கள் சம்பந்தமாயாகிலும் அவைகளில் எதன் சம்பந்தமாயாகிலும் ஒழுங்கேற்படுத்தும்பொருட்டு இந்த ஆக்டுடன் முரண்படாத விதிகள் செய்யலாம்; ஷை விஷயங்களாவன :—

(a) யாதொரு கன்டோன்மெண்டை வார்டுகளாகப் பிரிப்பது அல்லது கன்டோன்மெண்டிலுள்ள குடிகளை வகுப்புகளாகப் பிரிப்பது அல்லது இவ்விரண்டும் ;

(b) ஒவ்வொரு வார்டினால் அல்லது ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்த நபர்களால் தெரிந்தெடுக்கப்படவேண்டிய மெம்பர்களின் சங்கியை ;

(c) 27-வது பிரிவின் காரியங்களுக்காக கட்டிடங்கள் நிலங்கள் ஆகிய இவைகளின் வருஷவாரி மதிப்பைக் கணக்கிடும் முறை ;

(d) தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாக்களைத் தயார் செய்வதும், புனராலோசனை செய்து திருத்தி முடிவாய் அவைகளைப் பிரசுரிப்பதும் ;

(e) தெரிந்தெடுப்பவர்களை ரெஜிஸ்டர் செய்வதும், அபேக்ஷகர்களை நேமகம் செய்வதும், எலெக்ஷன்கள் நடத்தவேண்டிய காலமும் மாதிரியும், வோட்டுகளைப் பதிந்து கொள்ளவேண்டிய முறையும் ;

(f) தெரிந்தெடுப்பவர்களின் ஜாபிதாக்களுக்குச் சம்பந்தப்பட்ட அல்லது எலெக்ஷன்கள் காரணமாய் ஏற்படுகிற விவாதங்களைத் தீர்மானம் செய்யவேண்டிய அதிகாரியும் மாதிரியும், அந்த அதிகாரியின் அதிகாரங்களும் கடமைகளும் எந்த சந்தர்ப்பங்களில் ஷை அதிகாரி தற்செயலான காலி ஸ்தானம் ஏற்பட்டிருக்கிறதென்றாவது யாதொரு அபேக்ஷகர் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறாரென்றாவது பிரசித்தம் செய்யக்கூடுமோ அந்த சந்தர்ப்பங்களும் ;

(g) எலெக்ஷன்களை அல்லது எலெக்ஷன்களுக்குச் சம்பந்தப்பட்ட விவாதங்களைக் குறித்த வேறே யாதொரு விஷயம் சம்பந்தமாய் இந்த அத்தியாயத்தின்படி விதிகள் செய்ய பிரதேச கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டோ அது சம்பந்தமாய் இந்த ஆக்டில் நிபந்தனை ஏற்படுத்தப்படாமலோ ஏற்படுத்தியிருக்கும் நிபந்தனை போது

மானதாயிராமலோ இருந்து, நிபந்தனை ஏற்படுத்துவது அவசியமாகுமென்று பிரதேச கவர்ன்மென்டார் அபிப்பிராயப்பட்டால் அப்படிப்பட்ட விஷயம்.

(2) இந்தப் பிரிவின்படி விதிகள் செய்ய பிரதேச கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரமானது - விதிகளை முன்னதாகப் பிரசித்தம் செய்தபிறகு அவைகளைச் செய்ய வேண்டுமென்னும் திட்டத்துக்கும் அவைகள் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் ஊர்ஜ்ஜிதம் செய்யப்பட்டு பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் பிரதேச கவர்ன்மென்டாரால் பிரசித்தம் செய்யப்படுகிறவரையில் செலாவணியாகமாட்டா என்னும் திட்டத்துக்கும் உட்பட்டதாகும்.

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு விதியை ஊர்ஜ்ஜிதப்படுத்தும் போது, ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - தமக்கு அவசியமாகத் தோற்றும் மாறுதலை அதில் செய்யலாம்.

மெம்பர்கள்.

மெம்பரானவர் தமக்குப் பற்றுள்ள விஷயம் சம்பந்தமாய் வோட் கொடுக்கக்கூடாதென்பது.

32. போர்டின் யாதொரு மெம்பரானவர் - போர்டின் யாதொரு சபையிலே தம்முடைய நடத்தையைக் குறித்த யாதொரு பிரசினை சம்பந்தமாகவாவது கன்டோன்மென்டிலுள்ள குடிகளைப் பொதுவாய் பாதிப்பதல்லாமல் தம்முடைய சொந்த திரவிய விஷயத்தையாகிலும் தமக்கு நேராக அல்லது நேராகவல்லாமல் மற்றப்படி எந்த சொத்தின் விஷயத்தில் பற்று இருக்கிறதோ அந்த சொத்தின் மதிப்பையாகிலும் தாம் எந்த சொத்தின் மானேஜராகவாயினும் எந்த சொத்துக்கு ஏஜென்டாகவாயினும் இருக்கிறாரோ அந்த சொத்தின் மதிப்பையாகிலும் பாதிக்கும் வேறே யாதொரு விஷயம் சம்பந்தமாகவாவது வோட் கொடுக்கக்கூடாது.

மெம்பர்களின் உத்தரவாதம்.

33. போர்டின் ஒவ்வொரு மெம்பரும் - போர்டாருக்குச் சொந்தமாயிருக்கும் யாதொரு பணம் அல்லது சொத்து விஷயமாய் நேரிடும் யாதொரு நஷ்டம், விரயம் அல்லது துர்வினியோகமானது தாம் அந்தப்படி மெம்பராயிருக்கும்போது தம்முடைய அசட்டையினாலாவது துர்நடத்தையினாலாவது நேராக உண்டாயிருந்தால், அப்படிப்பட்ட நஷ்டம், விரயம் அல்லது துர்நடத்தைக்காக உத்திரவாதியாவார்; மேலும், ஷை போர்டாராவது ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களாவது ஷை நஷ்டம், விரயம் அல்லது துர்வினியோகம் சம்பந்தமாய்ப் பிரதி பலனுக்காக அவர்மேல் வியாஜ்ஜியம் தொடரலாம்.

மெம்பர்களை நீக்கிவிடுவது.

34. (1) யாதொரு போர்டின் மெம்பரானவர்—

(a) போர்டின் சபைகளுக்குத் தொடர்ச்சியாய் மூன்று மாதத்துக்கு மேற்பட்டு வாராமலிருந்து, அந்தப்படி வாராமலிருந்ததற்கு போர்டாருக்குத் திருப்திகரமாக சமாதானம் சொல்ல சக்தியற்றவராயிருந்தாலும்,

(b) கடனிறுக்கச் சக்தியற்றவராயிருந்து அந்தப்படி சக்தியற்றவரென்று விடுதலை பெறாமலிருந்தாலும்,

(c) சித்தஸ்வாதீனமில்லாதவரென்றோ செவிடும் ஊமையுமென்றோ குஷ்டரோகி என்றோ அதிகாரமுடைய யாதொரு கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டாலும்,

(d) யாதொரு க்ரிமினல் கோர்ட்டாரால் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்குக் காவல் தண்டனையாவது திபாந்தர சிக்ஷையாவது விதிக்கப்பட்டிருந்தாலும் 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்றவிசாரணைச் சட்டத்தின்படி நல்ல நடத்தைக்காக ஜாமீன் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டிருந்தாலும் இந்தியன் பினல் கோட்-IX A அத்தியாயத்தின்படி யாதொரு குற்றத்துக்காக யாதொரு க்ரிமினல் கோர்ட்டாரால் தண்டனை விதிக்கப்பட்டிருந்தாலும்,

1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.
1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

(e) மெம்பராய்த் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது நேமகம் செய்யப்படுவதற்காவது 28-வது பிரிவின் பிரகாரம் யோக்கியதையற்றவராய் விடும்படி, போர்டாருடன் செய்யப்பட்டு அமுலிலிருந்து வரும் யாதொரு ஒப்பந்தத்திலாகிலும் அவர்களுக்காகச் செய்யப்படும் யாதொரு வேலையிலாகிலும் பற்றுள்ளவராயிருந்தாலும்,

(f) தெரிந்திருந்தும் 32-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகளை மீறி நடந்திருந்தாலும்,

(g) நியாயவாதியாயிருந்து, மஹாராஜ சக்ரவர்த்தியவர்களிடத்தில் சங்கிரமித்துள்ளதாய் கன்டோன்மென்டிலிருக்கும் நிலத்துக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு வியாஜ்ஜியத்திலாகிலும் வேறே நடவடிக்கையிலாகிலும் போர்டார் அல்லது ஆலோசனை சபையிலுள்ள இந்தியா ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்கு விரோதமாக வேறே யாதொரு நபர் சார்பில் பிரவர்த்தித்தாலும் அவருக்காக ஹாஜரானாலும், போர்டாராலாவது அவர்கள்

சார்பிலாவது யாதொரு நபர்மேல தொடரப்பட்ட யாதொரு குற்றவிசாரணை சம்பந்தமான நடவடிக்கையிலே ஷை நபர் சார்பில் பிரவர்த்தித்தாலும் அவருக்காக ஹாஜரானாலும் அவரைப் பிரதேச கவர்ன்மென்டார் போர்டிலிருந்து நீக்கிவிடலாம்.

(2) யாதொரு நபர் போர்டின் மெம்பராகத் தமக்குக் கிடைத்திருக்கும் ஹோதாவை, அவர் மெம்பராயிருப்பது பொதுஜன நன்மைக்கு பாதகமாய் ஏற்படும் என்று பிரதேச கவர்ன்மென்டார் அபிப்பிராயப்படக்கூடிய அளவுக்கு பகிரங்கமாய துர்விநியோகப் படுத்தினால், அந்த மெம்பரைப் பிரதேச கவர்ன்மென்டார் - போர்டிலிருந்து நீக்கிவிடலாம்.

(3) யாதொரு மெம்பரை போர்டிலிருந்து நீக்கிவிடக் கூடாதென்பதற்கு காரணம் காட்டுவதற்காக அவருக்கு நியாயமான அவகாசம் கொடுத்திருந்தாலன்றி மற்றப்படி அவரை நீக்கிவிடக்கூடாது.

நீக்கிவிட்டால் இன்னவை நேரிடுமென்பது.

35. (1) 34-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (a) அடையாளமிட்ட பகுதியின்படி நீக்கிவிடப்பட்ட யாதொரு மெம்பர் மறுபடி யோக்கியதையுடையவராயிருந்தால், மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது நேமகம் செய்யப்படுவதற்காவது அர்ஹதையுடையவராவர்.

(2) 34-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (b) அடையாளமிட்ட பகுதியின்படி நீக்கிவிடப்பட்ட யாதொரு மெம்பரானவர் - தாம் விடுதலை பெறுகிறவரையில் மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது நேமகம் செய்யப்படுவதற்காவது அர்ஹதையுடையவராகமாட்டார்.

(3) 34-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நீக்கிவிடப்பட்ட யாதொரு மெம்பரானவர் - அவர் நீக்கிவிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருஷம் கழிந்து போகிற வரையில் மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது நேமகம் செய்யப்படுவதற்காவது அர்ஹதையுடையவராகமாட்டார்.

(4) 34-வது பிரிவிற்கண்ட வேறே யாதொரு நிபந்தனையின்படி நீக்கிவிடப்பட்ட யாதொரு மெம்பரானவர் - மறுபடியும் தெரிந்தெடுக்கப்படுவதற்காவது நேமகம் செய்யப்படுவதற்காவது அர்ஹதையுடையவராவாரென்று பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பர மூலமாய் பிரதேச கவர்ன்மென்டாரால் பிரசித்தம் செய்யப்பட்டாலொழிய அந்தப்படி அர்ஹதையுடையவராகமாட்டார்.

ஊழியக்காரர்கள்.

கன்டோன்மென்ட் அதிகார சபையின் ஊழியக்காரருக்கு ஏற்படும் யோக்கியதைக் குறைவுகள்.

36. (1) யாதொரு நபர் கன்டோன்மென்ட் அதிகாரசபையின் ஊழியக்காரராகவன்றி மற்றப்படி, அந்த கன்டோன்மென்ட் அதிகார சபை யாரோடாவது அவர்களாலாவது அவர்கள் சார்பிலாவது செய்யப்பட்ட யாதொரு ஒப்பந்தத்திலோ கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குக் கீழ்ப்பட்டதாகவாவது அவர்களால் அல்லது அவர்கள் சார்பில் ஏற்படுத்தப்பட்டதாகவாவதுள்ள யாதொரு வேலையிலோ நேராகவாகிலும் நேராகவல்லாமல் மற்றப்படியாகிலும் தாமேயாயினும் தம்முடைய பாகஸ்தர் மூலமாகவாயினும் யாதொரு பங்கு அல்லது பற்றுடையவராயிருந்தால், அவர் - ஷை கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் ஊழியக்காரராகவும் கூடாது ஊழியக்காரராய் இருக்கவும்கூடாது.

(2) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையின் ஊழியக்காரரானவர் அந்தக் கன்டோன்மென்ட் அதிகார சபையின் ஊழியக்காரராகவன்றி மற்றப்படி, அந்தக் கன்டோன்மென்ட் அதிகார சபையாரோடாவது அவர்களாலாவது அவர்கள் சார்பிலாவது செய்யப்பட்ட யாதொரு ஒப்பந்தத்திலோ, கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குக் கீழ்ப்பட்டதாகவாவது அவர்களால் அல்லது அவர்கள் சார்பில் ஏற்பட்டதாகவாவதுள்ள யாதொரு வேலையிலோ நேராகவாகிலும் நேராகவல்லாமல் மற்றப்படியாகிலும் தாமேயாயினும் தம்முடைய பாகஸ்தர் மூலமாகவாயினும் யாதொரு பங்கு அல்லது பற்றுடையவராயிருந்தால், அவர் - இந்தியன் பினல்கோட் 168-வது பிரிவின்படிக்கான குற்றம் செய்திருப்பவராகக்கருதப்படுவார்.

1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

(3) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரோடாவது அவர்களாலாவது அவர்கள் சார்பிலாவது செய்யப்பட்ட யாதொரு ஒப்பந்தத்திலோ அவர்களுக்குக் கீழ்ப்பட்டதாகவாவது அவர்களால் அல்லது அவர்கள் சார்பில் ஏற்பட்டதாகவாவதுள்ள யாதொரு வேலையிலோ உள்ள யாதொரு பங்கு அல்லது பற்றானது ஷை கன்டோன்மென்ட் அதிகார சபையுடன் ஒப்பந்தம் செய்யும் அல்லது அவர்களாலாகிலும் அவர்கள் சார்பிலாகிலும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படும் யாதொரு கம்பெனியில் பங்காயிருந்தாலும், நிலம் அல்லது கட்டிடங்களைக் கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு குத்தகைக்கு விட்டால் அதிலாயினும் அவர்களுக்கு விற்பனைசெய்தால் அதிலாயினும் அவர்களால் கிர

யத்துக்கு வாங்கப்பட்டால் அகிலாயினும் இவைகள் சம்பந்தமான யாதொரு உடன்படிக் கையிலாயினும் பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸருடைய அனுமதியைப் பெற்று அடையப்பட்ட அல்லது வைத்துக்கொள்ளப்பட்ட பங்கு அல்லது பாகமாயிருந்தா லும் அந்த பங்கு அல்லது பாகத்துக்கு இந்தப் பிரிவில் சொல்லியுள்ளதெதுவும் பிரயோகப் படமாட்டாது.

நடவடிக்கைமுறை.

சபைகள்.

37. (1) சாதாரணமாய் ஒவ்வொரு போர்டாரும் இந்த அத்தியாயத்தின் பிரகாரம் போர்டாரால் செய்யப்படும் ரெகுலேஷன்களினால் நிர்ணயிக்கப் படக்கூடிய தினத்தில ஒவ்வொரு மாதத்திலும் குறைந்தது ஒரு முறையாவது சபை கூடவேண்டும்; மேலும், அந்த ரெகுலேஷன்களில் நிபந்தனை கண்டி ருக்கிறவிதமாய் ஷை சபைகூடுவதைப்பற்றி அறிக்கை செய்யவேண்டும்.

(2) ப்ரெஸிடெண்டானவர் - தமக்கு யுக்தமாகத்தோற்றும்போதெல்லாம் விசேஷ சபை கூட்டலாம்; மேலும், போர்டின் நாலில் ஒருபங்குக் குறையாத மெம்பர்கள எழுத்து மூலமாய்க் கேட்டுக்கொள்வதன்மேல் அந்தப்படியே கூட்டவேண்டும்.

(3) எந்த சபையையாவது அடுத்ததினம் வரையிலாகிலும் பிற்பட்ட யாதொரு தினம் வரையிலாவது தள்ளி வைத்துக்கொள்ளலாம்; மேலும், தள்ளிவைத்துக்கொள்ளப் பட்ட யாதொரு சபையை அதேமாதிரியாய் பின்னும் தள்ளிவைத்துக்கொள்ளலாம்.

நடத்தவேண்டிய வேலை.

38. இந்த அத்தியாயத்தின்படி போர்டாரால் செய்யப்படும் யாதொரு ரெகுலேஷனுக்கு உட்பட்டு, யாதொரு சபையில் எந்த வேலையையாவது நடத்தலாம்:

ஆனால், யாதொரு வரியை விதிப்பதற்காவது எடுத்து விடுவதற்காவது அதை மட்டுப்படுத்துவதற்காவது சம்பந்தப்பட்ட எந்தவேலையையும், யாதொரு சபை கூடப் போவதைப்பற்றியும் அதற்காக ஷை செய்யப்பட்டிருக்கும் தேதியைப்பற்றியும் அந்த தேதிக்குக்குறைந்தது எழுதினங்களுக்கு முன்னதாக ஒவ்வொரு மெம்பருக்கும் நோடிஸ் அனுப்பியிருந்தாலன்றி மற்றப்படி நடத்தக்கூடாது.

க்வோரம்.

39. (1) போர்டின் யாதொரு சபையில் வேலை நடத்துவதற்கு அவசியமான க்வோரம் ஐந்தோ, பிரஸ்தாப காலத்திலே வாஸ்தவத்தில் உத்தியோகம் வகித்துக்கொண்டிருக்கும் போர்ட் மெம்பர்களின் சங்கியையில் பாதியோ இவைகளில் எது பெரிய சங்கியையாயிருக்கிறதோ அதுவாகும்.

(2) (யாதொரு சபையில்) க்வோரம் ஹாஜராகாவிட்டால் ப்ரெஸிடெண்டானவர்- (அந்த) சபையைததள்ளிவைத்துக் கொள்ளலாம்; மேலும், க்வோரம் ஹாஜராயிருந்தால், பிரதம சபைக்கு முன் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய வேலையை, க்வோரம் ஹாஜரானு லுஞ்சரி ஹாஜராகாவிட்டாலுஞ்சரி, யாதொரு தள்ளிவைத்துக்கொள்ளப்பட்ட சபையிலே நடத்தலாம்.

அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர்.

40. யாதொரு சபைக்கு ப்ரெஸிடெண்ட் வைஸ் ப்ரெஸிடெண்ட் ஆகிய இருவரும் வராமற்போனால், ஸர்க்கார் ஊழியத்திலிருக்கிறவராய் ஹாஜராகி யிருக்கும் ஸீனியர் (உயர்ந்த அந்தஸ்திலிருக்கும்) மெம்பர் அக்கி ராசனம் வகிக்கவேண்டும்.

நடவடிக்கைக் குறிப்பு கள்.

41. (1) ஒவ்வொரு சபையின் நடவடிக்கைக் குறிப்புகளையும் ஒரு புஸ்தகத்தில் பதிவு செய்யவேண்டியதுமல்லாமல், சபை முடிவதற்கு முன்னதாக ப்ரெஸிடெண்ட் அதில் கையெழுத்துபோடவேண்டும்; மேலும், கன்டோன்மென்டில் வாசம் செய்பவரெவரும் போர்டார் நிஷ் கரிஷை செய்யக்கூடிய காலங்களிலும் இடத்திலும் கட்டணமில்லாமலே ஷை குறிப்புகளைப் பார்வையிடுவது சாத்தியமாயிருக்கவேண்டும்.

(2) நடவடிக்கைக் குறிப்புகளுக்கு நகல்களைச் ஒவ்வொரு முறையும் சபைகூடின தற்குப் பிறகு சாத்தியமான வவளவு சீக்கிரத்தில் பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸருக்கும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டரேட்டுக்கும் சங்கதி தெரிவதற்காக அனுப்பவேண்டும்.

சபைகளுக்குப் பொது ஜனங்கள் வருவது சாத் தியமாயிருக்கவேண்டு மென்பது.

42. போர்டின் ஒவ்வொரு சபைக்கும், யாதொரு விஷயத் தில் ப்ரெஸிடெண்ட் வேறே விதமாய்க் கட்டளையிட்டாலன்றி மற்றப்படி, பொது ஜனங்கள் வருவது சாத்தியமாயிருக்கவேண் டும்; அந்தப்படி கட்டளையிட்டதற்குள்ள காரணங்களை நட வடிக்கைக் குறிப்புகளில் பதியவேண்டும்.

பிரசினைகளைத் தீர்மா னம் செய்யும் முறை.

43. (1) யாதொரு சபைக்குமுன் கொண்டுவரப்படும் சகல சங்கதிகளையும் ஹாஜராகி வோட் கொடுக்கும் மெம்பர்களின் வோட்டுகளில் பெரும்பான்மையானவைகளை அனுசரித்துத் தீர்மானிக்க வேண் டும்.

(2) வோட்டுகள் சமமாக வேறுபடுகிற விஷயத்தில் ப்ரெஸிடென்ட் இரண்டாவது அல்லது (காஸ்டிங்) முடிக்கும் வோட் கொடுக்கக்கூடியவராவார்.

(3) போர்டின் யாதொரு தீர்மானம் விஷயமாய் யாதொரு மெம்பருக்கு அபிப்பிராய பேதம் ஏற்பட்டு, அதை நடவடிக்கைக் குறிப்புகளில் பதியவேண்டுமென்று அவர் கேட்டுக்கொள்ளும் பட்சத்தில, அந்தப்படி அபிப்பிராயபேதம் ஏற்படுவதற்குள்ள முகாந்தரங்கள் கண்டிருக்கும் ஒரு சுருக்கமான ஸ்டேட்மென்ட் சகிதமாக ஷை அபிப்பிராய பேதத்தை அந்தப்படியே பதியவேண்டும்.

ரெகுலேஷன்கள் செய்வதற்குள்ள அதிகாரம்.

44. (1) யாதொரு போர்டார்-அடியிற்கண்ட சகல விஷயங்களுக்காகவுமாவது அவைகளில எதற்காகவாவது நிபந்தனை ஏற்படுத்தும்பொருட்டு இந்த ஆக்டுக்கும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கும் பொருத்தமாயிருக்கும் ரெகுலேஷன்கள செய்யலாம்; ஷை விஷயங்களாவன:—

(a) இன்ன காலத்தில் இன்ன இடத்தில் தங்களுடைய சபைகள் கூடவேண்டுமென்பது;

(b) சபைகள் கூடுவதைக்குறித்து இன்ன விதமாய் நோடிஸ் கொடுக்கவேண்டுமென்பது;

(c) சபைகளிலே நடவடிக்கைகள் நடத்துவதும் சபைகளைத் தள்ளிவைத்துக் கொள்வதும்;

(d) போர்டின் பொது முத்திரை இன்னார் வசம் இருக்கவேண்டுமென்பதும் அதை இன்ன காரியங்களுக்கு உபயோகிக்கவேண்டுமென்பதும்;

(e) யாதொரு காரியத்துக்காகக் கம்மிட்டிகள் ஏற்படுத்துவதும், அந்தக் கம்மிட்டிகளின் அமைப்புக்கும் அவைகளின் நடவடிக்கைக்கும் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் நிச்சயிப்பதும், போர்டாருக்குத் தகுதியாகத்தோற்றி அவர்கள் விதிக்கக்கூடிய எவையேனும் திட்டங்களுக்குட்பட்டு, ரெகுலேஷன்கள் அல்லது சகாயச சட்டங்கள் செய்வதற்கான அதிகாரமல்லாமல் இந்த ஆக்டின்படி போர்டாருக்கு ஏற்பட்டிருக்கும் வேறே அதிகாரங்கள் அல்லது கடமைகளில் எதையாவது ஷை கம்மிட்டிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (e) அடையாளமிட்ட பகுதியின்படி செய்யப்படும் ரெகுலேஷன் எதுவும் - பிரதேச கவர்னமென்டாரால் அங்கீகரிக்கப்படுகிறவரையில் செலாவணியாகமாட்டாது.

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்படும் ரெகுலேஷன் எதுவும் - பிரதேச கவர்ன்மென்டார் கட்டளையிடக்கூடிய மாதிரியாய்ப் பிரசித்தம் செய்யப்படுகிறவரையில் செலாவணியாகமாட்டாது.

வேறே பிரதேச அதிகார சபையாருடன் கூட்டாய் நடவடிக்கை நடத்துவது.

45. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார்—

(a) அடியிற்கண்ட காரியங்களுக்காக வேறே யாதொரு அதிகார சபையாருடன் சேரலாம்:—

(i) அவர்களுக்குக் கூட்டாய் அக்கறையுள்ள யாதொரு காரியத்தின் பொருட்டு கூட்டுக்கம்மிட்டி ஏற்படுத்துவதற்கும் அப்படிப்பட்ட கம்மிட்டியின் அக்கிராசனாதிபதியை நியமிப்பதற்கும்;

(ii) யாதொரு கூட்டுக் கட்டுவேலையை ஏற்படுத்தி பிற்பட்டு அதைப் பராமரித்து வருவதுச் சம்பந்தமாய கன்டோன்மென்ட் அதிகார சபையையும் அப்படிப்பட்ட வேறே பிரதேச அதிகார சபையையும் கட்டுப்படுத்தும் ஷரத்துகள் தயார் செய்யவோ அல்லது ஷை அதிகார சபைகளில் எந்த சபையாவது செலுத்தக்கூடிய யாதொரு அதிகாரத்தைச் செலுத்தவோ ஷை கம்மிட்டிக்கு அதிகாரம் பிரித்துக்கொடுப்பதற்கும்;

(iii) அப்படிப்பட்ட கம்மிட்டி எந்தக் காரியங்களுக்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்தக் காரியங்களுக்குச் சம்பந்தப்பட்டவையாயுள்ள அதன் நடவடிக்கைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்கான விதிகள் செய்வதற்கும்; அல்லது,

(b) பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்று, ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது டெர்மினல் சுங்கம் விதிப்பது சம்பந்தமாய் வேறே யாதொரு பிரதேச அதிகார சபையாருடன் உடன்படிக்கை செய்துகொள்ளலாம்; அதனால், அந்தப்படி ஒப்பந்தம் செய்துகொள்ளும் அதிகார சபைகளினால் முறையே விதிக்கப்படக்கூடிய ஷை வரி அல்லது சுங்கமானது - ஷை அதிகார சபைகளின் மேல்விசாரணைக்குட்பட்ட விஸ்தீர்ணங்களடங்கிய மொத்த விஸ்தீர்ணத்தின் எல்லைகளுக்குள் தனித்தனியே விதிக்கப்படுவதற்கு பர்த்தியாக ஒன்றாய் விதிக்கப்படலாம்.

(2) இந்தப் பிரிவின்படி கூட்டாய்ப் பிரவர்த்திக்கும் எந்த அதிகார சபைகளுக்குள்ளாவது யாதொரு அபிப்பிராய பேதம் உண்டானால், அதன்மேல் பிரதேச கவர்ன்மெண்டாரின் அல்லது இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் யாதொரு உத்தியோகஸ்தரின் தீர்மானம் முடிவானதாகும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (b) அடையாளமிட்ட பகுதியில் சொல்லியிருப்பதைப்போன்ற யாதொரு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தால்,—

(a) கன்டோன்மெண்ட் அதிகார சபையார் வேறே எந்த பிரதேச அதிகார சபையாருடன் ஷை உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறார்களோ அந்த சபையாருக்கு கன்டோன்மெண்டுக்குள் ஆக்ட்ராய் எல்லைகளையும் ஆக்ட்ராய் ஸ்டேஷன்களையும் டெர்மினல் வரி, டெர்மினல் சுங்கம் ஆகிய இவைகளை வசூலிக்கும் இடங்களையும் ஸ்தாபிப்பது சம்பந்தமாய், அதே அதிகாரங்கள் இருக்கவேண்டியதுமல்லாமல் அவர்களுக்கு அப்படிப்பட்ட எல்லைகளுக்குள்ளாவது அப்படிப்பட்ட ஸ்டேஷன்களுக்காவது கொண்டுவரப்படும் அல்லது அப்படிப்பட்ட இடங்களிலிருந்து கொண்டுபோகப்படும் பிராணிகளுக்கும் வண்டிகளுக்கும் சாமான்களுக்கும் ஷை வரி அல்லது சுங்கம் வசூலிக்கும் அதிகாரம் இருக்கவும் வேண்டும்; மேலும், அப்படிப்பட்ட வரி அல்லது சுங்கம் ஷை வேறே பிரதேச அதிகார சபையரால் விதிக்கப்படுவது சம்பந்தமாய் அந்தந்த காலத்தில செலாவணியாய்க் கொண்டிருக்கும் யாதொரு சட்டதிட்டத்திற்கண்ட நிபந்தனைகளானவை - மேலேகண்டபடி ஸ்தாபிக்கப்பட்ட எல்லைகள் இடங்கள் ஸ்டேஷன்கள் சாதாரணமாய் அவர்களுடைய மேல் விசாரணைக்குட்பட்ட விஸ்தீர்ணத்தில் அடங்கியிருந்தால் எப்படியோ அப்படியே அவைகளுக்குப் பிரயோகப்படும்; அல்லாமலும்,

(b) ஷை கன்டோன்மெண்டிலும் சாதாரணமாய் அப்படிப்பட்ட வேறே பிரதேச அதிகார சபையாரின் மேல் விசாரணைக்குட்பட்ட விஸ்தீர்ணத்திலும் வசூல் செய்யப்படும் ஷை வரி, சுங்கம் ஆகிய இவைகளின மொத்தத் தொகையையும் அந்தப்படி வசூலிப்பதற்காகப் பிடிக்கும் செலவையும் (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, கன்டோன்மெண்ட நிதிக்கும் ஷை வேறே பிரதேச அதிகார சபையின மேல் விசாரணைக்குட்பட்ட நிதிக்கும் பிரஸ்தாப உடன்படிக்கையினால் நிச்சயிக்கப்பட்டிருக்கக்கூடிய சங்கியாபரிமாணப்படி பிரிக்கவேண்டும்.

மேல்விசாரணை.

தஸ்தவேஜுகளை ஹாஜர்ப்படுத்தவேண்டுமென்று உத்தரவுசெய்ய பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்.

46. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாவது பிரதேச கவர்ன்மெண்டாராவது - யாதொரு கன்டோன்மெண்ட் அதிகார சபையாருக்கு—

(a) அவர்கள் சுவாதீனத்திலாகிலும் அவர்களுடைய மேல்விசாரணையிலாகிலும் இருக்கும் எந்த ரெகார்டையாயினும், கடிதத்தையாயினும் நக்ஷாவையாயினும் வேறே தஸ்தவேஜையாயினும் ஹாஜர்ப்படுத்தவேண்டுமென்றும்,

(b) அவர்களுடைய நடவடிக்கைகள், கடமைகள் அல்லது கட்டுவேலைகளுக்குச் சம்பந்தப்பட்ட யாதொரு ரிடர்ன் என்னும் விவரக் கணக்கையாகிலும் நக்ஷாவையாகிலும் எஸ்டிமேட்டையாகிலும் ஸ்டேட்மென்டையாகிலும் கணக்கையாகிலும் விவரக்கணக்குகளையாகிலும் சவதரிக்கவேண்டுமென்றும்,

(c) யாதொரு ரிபோர்டைச் சவதரிக்க அல்லது பெற்று சவதரிக்கவேண்டுமென்றும்,

உத்தரவு செய்யலாம்.

பார்வையிடுவது.

47. பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸரானவர் - யாதொரு கன்டோன்மெண்ட் அதிகார சபையைச் சேர்ந்த ஆபிஸின் யாதொரு இலாகாவையாவது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஊழியம் அல்லது கட்டுவேலையையாவது அவர்களுக்குச் சொந்தமாயுள்ள யாதொரு வஸ்துவையாவது பார்வையிட்டோ அல்லது பரீக்ஷித்தோ அதன்மேல் ரிபோர்ட்டு செய்யும்படி கவர்ன்மெண்ட் ஊழியத்திலிருக்கும் யாதொரு நபரை உத்தரவுசெய்து அனுப்பலாம்; மேலும், ஷை கன்டோன்மெண்ட் அதிகார சபையாரும் அதைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் - அந்தப்படி அனுப்பப்பட்ட நபர் நியாயமான சகல காலங்களிலும் கன்டோன்மெண்ட் அதிகார சபையின் வளவு, சொத்து ஆகிய இவைகளுக்குள் பிரவேசிப்பதற்கும் அவர் தம்முடைய கடமைகளை நிறைவேற்றுவது சாத்தியமாயிருப்பதற்கு எந்த ரெகார்டுகளையாவது கணக்குகளையாவது வேறே தஸ்தவேஜுகளையாவது பார்வையிடுவது அவசியமாகுமென்று அவருக்குத் தோற்றக்கூடுமானால், அப்படிப்பட்ட சகல ரெகார்டுகளையும் கணக்குகளையும் வேறே தஸ்தவேஜுகளையும் பார்வையிடுவதற்கும் சௌகரியம் ஏற்படுத்திக் கொடுக்க கடமைபட்டவர்களாவார்கள்.

கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருக்குள்ள அதிகாரங்கள்.

48. கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸரானவர் - எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு—

(a) கன்டோன்மென்ட் அதிகார சபையின் சுவாதீனத்திலாவது மேல்விசாரணைக்குட்பட்டாவது இருக்கும் யாதொரு புஸ்தகம் அல்லது தஸ்தவேஜை ஹாஜர்ப்படுத்தும்படி கேட்கலாம் ;

(b) கன்டோன்மென்ட் அதிகார சபையின் நடவடிக்கைகள், கடமைகள் அல்லது கட்டுவேலைகளுக்குச் சம்பந்தப்பட்ட ஸ்டேட்மென்டுகள், கணக்குகள், ரிபோர்ட்டுகள், தஸ்தவேஜுகளின் நகல்கள் ஆகிய இவைகளில் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிறவைகளைச் சவதரிக்கவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

யாதொரு கட்டுவேலை முதலியதைச் செய்துமுடிக்கவேண்டுமென்று உத்தரவு செய்ய அதிகாரம்.

49. 47-வது பிரிவின்படியாவது 48-வது பிரிவின்படியாவது கிடைத்த யாதொரு சங்கதி அல்லது ரிபோர்ட்டை வாசித்துப்பற்றுக்கொள்வதன்மேல், பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸரானவர்—

(a) இந்த ஆக்டினுலாகிலும் அதன்படியாகிலும் யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு விதிக்கப்பட்ட யாதொரு கடமை செய்யப்படவில்லையென்றாயினும் அறைகுறையாகவோ, திறமையற்ற மாதிரியாகவோ, தகுதியற்ற மாதிரியாகவோ, செய்யப்பட்டிருக்கிறதென்றாயினும்,

(b) அப்படிப்பட்ட யாதொரு கடமையைச் செய்வதற்காகப் போதுமான அளவுக்குத் திரவியாதாரம் ஏற்படுத்தப்படவில்லையென்றாயினும் அபிப்பிராயப்பட்டால்,

அவர் - பிரதேச கவர்ன்மென்டாருடன் கலந்து ஆலோசனை செய்தபிறகு, தமக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய கால அளவுக்குள் தமக்குத் திருப்திகரமாக ஷை கன்டோன்மென்ட் அதிகார சபையார் கடமையைச் சரியாய் செய்யவேண்டுமென்றோ, சந்தர்ப்பத்துக்கேற்றபடி தமக்குத் திருப்திகரமாக அந்தக் கடமையைச் சரியாய் செய்வதற்கு திரவியாதாரம் ஏற்படுத்தவேண்டுமென்றோ கட்டளையிடலாம் :

ஆனால், ஷை உத்தரவின்படி உடனே செய்துமுடிப்பது அவசியமென்று பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸர் அபிப்பிராயப்பட்டாலன்றி மற்றபடி, அவர்- இந்தப் பிரிவின்படி கட்டளையிடுவதற்குமுன், அந்தப்படி ஏன் கட்டளையிடக்கூடாதென்பதற்குக் காரணம் காட்டுவதற்கு கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு அவகாசம் கொடுக்கவேண்டும்.

49-வது பிரிவின்படிக்கான கட்டளையின் பிரகாரம் நடந்துகொள்ளவேண்டுமென்றுநிர்ப்பந்தம் செய்ய நிபந்தனை ஏற்படுத்துவதற்கு அதிகாரம்.

50. 49-வது பிரிவின்படி செய்யப்பட்ட கட்டளையினால் நிஷ்கரிஷை செய்யப்பட்ட கால அளவுக்குள், அந்தப் பிரிவின் பிரகாரம் எந்த நடவடிக்கை நடத்தவேண்டுமென்று கட்டளையிடப்பட்டதோ அந்த நடவடிக்கை கிரமமாய் நடத்தப்பட்டிராவிட்டால், பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸரானவர் - அந்த நடவடிக்கை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்வதுமல்லாமல், அதற்குச் சம்பந்தப்பட்ட சகல செலவுகளும் கன்டோன்மென்ட் நிதியிலிருந்து செய்யப்படவேண்டுமென்று கட்டளையுமிடலாம்.

போர்டின் அதிகாரத்தை மீறி நடப்பதற்குள்ள அதிகாரம்,

51. (1) ப்ரெஸிடென்டானவர் போர்டாரின் தீர்மானத்தினின்றும் வேறுப்பட்ட அபிப்பிராயம்கொண்டால், அவர் - ஒரு மாதத்துக்கு மேற்படாத யாதொரு கால அளவுக்கு அதன்படி நடவடிக்கை நடத்துவதை நிறுத்திவைக்கவேண்டுமென்று எழுத்து மூலமான உத்தரவைக் கொண்டு கட்டளையிடலாம் ; அந்தப்படி கட்டளையிடுவதற்குள்ள காரணங்களை நடவடிக்கை குறிப்புகளில் பதியவேண்டும் ; மேலும், அவர் அந்தப்படி செய்தால், அந்த விஷயத்தை பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருடைய அபிப்பிராயத்துக்கு அனுப்பவேண்டும்.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையின் யாதொரு தீர்மானமானது பொதுஜன தேகாரோக்கியம், க்ஷேமம் அல்லது சௌகரியத்துக்கு பாதகம் உண்டாக்குவதாயிருக்குமென்று டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் நினைத்தால், அவர் - பிரஸ்தாப விஷயத்தைப் பிரதேச கவர்ன்மென்டாரின் அபிப்பிராயத்துக்கு அனுப்பத் தாம் உத்தேசித்திருப்பதைப்பற்றி கன்டோன்மென்ட் அதிகார சபைக்கு எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்த பிறகு, அந்தப்படி செய்யலாம் ; மேலும், பிரதேச கவர்ன்மென்டாரின் அபிப்பிராயத்துக்கு அனுப்பியிருக்கும் விஷயம் பைசலாகிறவரையில், ஷை தீர்மானத்தை அனுசரித்து நடவடிக்கை எதுவும் நடத்தக்கூடாது.

(3) போர்டின் மெம்பராயிருக்கும் யாதொரு மாஜிஸ்ட்ரேட் யாதொரு சபைக்கு வந்திருந்து, யாதொரு தீர்மானம் பொதுஜன தேகாரோக்கியம் க்ஷேமம், அல்லது சௌகரியத்துக்கு பாதகம் உண்டாக்குமென்று எண்ணி, அதனின்றும் வேறுபட்ட அபிப்பிராயம் கொண்டால், அவர் - அந்த விஷயத்தை டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்கு ரிபோர்ட்செய்ய

உத்தேசித்திருப்பதைப்பற்றிப் ப்ரெஸிடெண்டுக்கு எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்த பிறகு அந்தப்படி செய்யலாம்; அந்தப்படி ரிபோர்ட் செய்வதற்குள்ள காரணங்களை நடவடிக்கை குறிப்புகளில் பதியவேண்டும்; மேலும், ப்ரெஸிடென்டானவர் - அப்படிப்பட்ட நோடிஸ் வரப்பெற்றுக்கொள்வதன்மேல், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டுக்குக் கடிதம் அனுப்புவதும் (2) குறிப்பிட்ட உட்பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடி அவர் நடவடிக்கை நடத்துவதும் சாத்தியமாயிருப்பதற்குப் போதுமான கால அளவு வரையில் ஷை தீர்மானத்தின்மேல் நடவடிக்கை நடத்துவதை நிறுத்திவைக்கவேண்டுமென்று கட்டளையிடவேண்டும்.

51-வது பிரிவின்படி யாதொரு விஷயம் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படுவதன்மேலாவது மற்றப்படியாவது பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருக்குள்ள அதிகாரம்.

52. (1) பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸரானவர் - எந்தக் காலத்திலாவது—

(a) 51-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரதேச கவர்ன்மென்டாரின் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படுகிறதல்லாத வேறே யாதொரு விஷயத்தைப்பற்றியாவது யாதொரு விசேஷ பிரேரேபனையைப்பற்றியாவது கன்டோன்மென்ட் அதிகார சபை ஆலோசனை செய்யவேண்டுமென்றாகிலும் புனராலோசனை செய்யவேண்டுமென்றாகிலும் கட்டளையிடலாம்.

(b) உத்தரவு பிறப்பித்து அந்த உத்தரவில் கண்டிருக்கக்கூடிய கால அளவுக்கு 51-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி தமது அபிப்பிராயத்துக்கு அனுப்பப்பட்ட யாதொரு தீர்மானமல்லாமல் கன்டோன்மென்ட் அதிகாரசபையின் வேறே யாதொரு தீர்மானத்தின்மேல் நடவடிக்கையை நிறுத்தவேண்டுமென்று கட்டளையிடலாம்; மேலும், அதன் பிறகு, மேலே கண்டபடி நிறுத்தியிருப்பதை ரத்துசெய்துவிடலாம் அல்லது ஷை தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவரக்கூடாதென்றாவது தாம் குறிப்பிடக்கூடிய திருத்தங்களுடன்மாத்திரமே அதை அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்றாவது கட்டளையிடலாம்.

(2) போர்டாரின் யாதொரு தீர்மானமானது பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸரின் அபிப்பிராயத்துக்காக 51-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அனுப்பப்பட்டிருந்தால், அவர் - எழுத்துமூலமான உத்தரவைக் கொண்டு,—

(a) நடவடிக்கை நடத்துவதை நிறுத்திவைக்கவேண்டுமென்று கட்டளையிட்டு, ப்ரெஸிடெண்ட் செய்த உத்தரவை ரத்துபண்ணிவிடலாம்; அல்லது

(b) உத்தரவின் கால அளவைத் தமக்குத் தகுதியாகத் தோற்றும் கால அளவுக்கு அதிகப்படுத்தலாம்; அல்லது

(c) ஷை தீர்மானமானது தாம் குறிப்பிடக்கூடிய திருத்தங்களுடன் போர்டாரால் அமுலுக்குக் கொண்டுவரப்படவேண்டுமென்று கட்டளையிடலாம்.

51-வது பிரிவின்படி யாதொரு விஷயம் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படுவதன்மேல் கவர்ன்மென்டாருக்குள்ள அதிகாரம்.

53. கன்டோன்மென்ட் அதிகார சபையின் யாதொரு தீர்மானமானது பிரதேச கவர்ன்மென்டாரின் அபிப்பிராயத்துக்காக 51-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அனுப்பப்பட்டிருந்தால், பிரதேச கவர்ன்மென்டார் - பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருடன் கலந்து ஆலோசனை செய்த பிறகு, எழுத்துமூலமான உத்தரவைக்கொண்டு,—

(a) ஷை தீர்மானத்தை அனுசரித்து நடவடிக்கை நடத்தக்கூடாதென்று கட்டளையிடலாம்; அல்லது

(b) ஷை தீர்மானத்தை திருத்தமில்லாமலாவது தாம் குறிப்பிடக்கூடிய திருத்தங்களுடனாவது அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கட்டளையிடலாம்.

போர்டை நிராகரித்து காரியம் நடத்துவது.

54. (1) யாதொரு போர்ட்டார் இந்த ஆக்டினாலாவது அதன்படியாவது மற்றப்படி சட்டத்தினாலாவது அவர்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்ய யோக்கியதையற்றவர்களென்றாகிலும் அந்தப்படி செய்வதில பிடிவாதமாய்த் தவறிப் போய்க்கொண்டிருக்கிறார்களென்றாகிலும் அவர்களுடைய அதிகாரங்களை மீறி நடக்கிறார்களென்றாகிலும் துர்விநியோகப்படுத்துகிறார்களென்றாகிலும் பிரதேச கவர்ன்மென்டார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் - ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்று, பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் உத்தரவைப் பிரசுரித்து அதன்மூலமாய் சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷை போர்டார் யோக்கியதையற்றவர்களென்றாயினும் (தங்களுடைய வேலையைச் செய்ய) தவறிப்போனார்களென்றாயினும் தங்களுடைய அதிகாரங்களை மீறி நடந்தார்களென்றாயினும் துர்விநியோகப்படுத்துகிறார்களென்றாயினும் பிரசித்தம் செய்வ

துமல்லாமல் அந்த உத்தரவில் குறிப்பிடப்படக்கூடிய கால அளவுக்கு அந்த போர்டாரை நிராகரித்து வேலையும் நடத்தலாம்; ஷை உத்தரவுடன் அதைப் பிறப்பிப்பதற்குண்டான காரணங்கள் கண்டுள்ள ஸ்டேட்மென்ட் ஒன்றையும் பிரசுரிக்கவேண்டும்.

(2) 1-குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு போர்டார் நிராகரிக்கப்பட்டிருக்கும்போது—

(a) போர்டின் சகல மெம்பர்களும் - (c) அடையாளமிட்ட பகுதியின்படி தெரிந்தெடுக்கப்படவாவது நேமகஞ்செய்யப்படவாவது அர்ஹராயிருப்பதற்கு பாதகமிலலாமலே, ஷை உத்தாவில் குறிப்பிடப்படக்கூடிய தேதியில் அப்படிப்பட்ட மெம்பர்கள் ஹோதாவில் தங்களுடைய உத்தியோகங்களைக் காலிசெய்யவேணடும் ;

(b) போர்ட் நிராகரிக்கப்பட்டிருக்கும்போது, இந்த ஆக்டினுலாவது அதன்படி யாவது மற்றப்படி சட்டத்தினுலாவது போர்டாருக்குக் கொடுககப்பட்டும் விதிக்கபபட்டுமுள்ள சகல அதிகாரங்களையும் கடமைகளையும் இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் ஏதேனும் அதிகாரங்களைத் தங்களிடத்திலேயே நிறுத்திக்கொள்வதாக நிர்ணயித்தால் அதற்கு உட்பட்டு, பிரஸ்தாப கனடோனமென்டின் கம்மாண்டிங் ஆபிஸர் - செலுத்தவும் செய்யவும் வேண்டும் ;

(c) நிராகரிக்சப்பட்டிருக்கும் கால அளவு கழிந்துபோவதற்குமுன் போர்டை மறுபடியும் அமைக்கும் காரியத்துக்காக எலெக்ஷன்கள் நடத்தவேண்டியதுமல்லாமல் நேமகங்கள் செய்யவும் வேண்டும.

நடவடிக்கைகள் சட்டசம்மதமானவையாவது.

நடவடிக்கைகள் முதலியவை சட்டப்படி செலாவணியாகுமென்பது.

55. (1) போர்டாருடைய அல்லது போர்டைச் சேர்ந்த யாதொரு கம்மிட்டியாருடைய யாதொரு காரியம் அல்லது நடவடிக்கையானது - அந்த போர்டிலாகிலும் கம்மிட்டியிலாகிலும் யாதொரு காலி ஏற்பட்டிருப்பது காரணமாகவே சட்டசம்மதமற்றதாய்விடமாட்டாது.

(2) யாதொரு போர்டின் அல்லது அப்படிப்பட்ட யாதொரு கம்மிட்டியின் யாதொரு காரியமோ நடவடிக்கையோ - அந்தக் காரியம் செய்யப்பட்டுவரும் காலத்திலாகிலும் அந்த நடவடிக்கை நடத்தப்பட்டுவரும் காலத்திலாகிலும் ஹாஜராயிருந்த நபர்களில் பெரும்பான்மையோர் அந்த போர்டின் கிரமமாய் யோக்கியதைபெற்ற மெம்பர்களாயிருக்கும்பட்சத்திலே, அதன் ப்ரெஸிடென்டாகவாவது மெம்பராகவாவது பிரவர்த்திக்கும் யாதொரு நபருக்கு யோக்கியதைக்குறைவு இருப்பதனுலாகிலும் அவரைத் தெரிந்தெடுத்ததிலாவது நேமகம் செய்ததிலாவது நியமித்ததிலாவது குறையிருப்பதனுலாகிலும் பாதிக்கப்படமாட்டாது.

(3) யாதொரு போர்ட் அல்லது போர்டைச் சேர்ந்த யாதொரு கம்மிட்டியினுடைய நடவடிக்கைகளின் ரெகார்டாய் இருப்பதாகக் பொருள்படுகிற எந்த தஸ்தவேஜாவது நடவடிக்கை குறிப்புகளாவது அப்படிப்பட்ட நடவடிக்கைகளின் ரெகார்டைத் தயார் செயது கையெழுத்து போடுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய் முக்கியாம்சத்தில் தயார் செய்து கையெழுத்து போடப்பட்டிருந்தால், அந்த தஸ்தவேஜு அல்லது நடவடிக்கைக் குறிபபுகள் - சந்தர்ப்பத்துக்கேற்றபடி கிரமமாய் ஏற்படுத்தப்பட்ட போர்ட் அல்லது கம்மிட்டியின் சகல மெம்பர்களும் கிரமமாய் யோக்கியதைத் பெற்றவர்களாயிருந்து அதன் யாதொரு சபை கிரமமாய்க் கூட்டப்பட்டால் அந்த சபையின் நடவடிக்கைகளினுடைய சரியான ரெகார்டாய் இருப்பதாகக் கொள்ளப்படும்.

4-ம் அத்தியாயம்.

வெறியுண்டாக்கத்தக்க சாராயங்களும் லாகிரி வஸ்துக்களும்.

வெறியுண்டாக்கத்தக்க சாராயம் அல்லது லாகிரி வஸ்துவை அனுமதியில்லாமல் விற்பனைசெய்வது

56. யாதொரு கன்டோன்மென்டுக்குள்ளாவது யாதொரு கன்டோன்மென்டைச் சுற்றிலும் பிரதேச கவர்ன்மென்டார் பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரமூலமாய நிர்ணயிக்கிற எல்லைகளுக்குள்ளாவது, ராணுவ சட்டம் அல்லது ஆகாயப் படைக்குச் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்படாத எந்த நபராயினும், ஒரு ராணுவ உத்தியோகஸ்தராக அல்லது ஸோல்ஜராகவன்றி மற்றப்படி ராணுவ சட்டம் அல்லது ஆகாய படைக்குச் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்ட எந்த நபராயினும், அந்த கனடோன்மென்டைச் சேர்ந்த கம்மாண்டிங் ஆபிஸரிடத்திலாவது அனுமதி கொடுக்கும்படி கம்மாண்டிங் ஆபிஸரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற நபரிடத்திலாவது எழுத்துமூலமாய் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் யாதொரு ஸோல்ஜருக்காகிலும், தன்னோடு கூடப்போகிறவனுக்காகிலும் ஸோல்ஜருடைய மனைவிக்காகிலும் அப்படிப்பட்டவருடைய உபயோகத்திற்காகவாகிலும், வெறியுண்டாக்கத்தக்க எவ்வித சாராயத்தையாவது லாகிரி வஸ்துவையாவது தெரிந்திருந்து வேறொரு பண்டத்திற்கு மாற்றிக்கொண்டாலும், விற்றாலும், சர்ப்பரா செய்தாலும், அப்படி மாற்றுவது முதலியவை செய்யக்

காட்டினாலும், எத்தனைப்பட்டாலும், அப்படிப்பட்டவர் நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனையாவது மூன்று மாதத்திற்கு மேற்படாமல் ஒரு காலத்திற்குக் காவல் தண்டனையாவது இவ்விரண்டு தண்டனைகளுமாவது விதிக்கப்படத்தக்கவராவார்.

வெறியுண்டாக்கத்தக்க சாராயத்தை அனுமதியில்லாமல வசத்தில் வைத்திருப்பது.

57. யாதொரு கன்டோன்மென்டுக்குள்ளாவது 56-வது பிரிவின்படி நிர்ணயிக்கப்படும் எவையேனும் எல்லைகளுக்குள்ளாவது,—

(a) ஒரு ராணுவ உத்தியோகஸ்தர் அல்லது ஸோல்ஜராகவன்றி மற்றப்படி ராணுவச் சட்டம் அல்லது ஆகாயப் படைக்குச் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்ட எந்த நபராகிலும்,

(b) அப்படிப்பட்ட நபருடைய அல்லது யாதொரு ஸோல்ஜருடைய மனைவியாகிலும் வேலைக்காரனாகிலும்,

கவர்ன்மென்டார் சார்பிலோ அல்லது யாதொரு ராணுவ உத்தியோகஸ்தருடைய சொந்த உபயோகத்திற்காகவோவன்றி மற்றப்படி, அந்த கன்டோன்மென்டைச் சேர்ந்த கம்மாண்டிங் ஆபிஸரிடத்திலாவது அனுமதி கொடுக்கும்படி கம்மாண்டிங் ஆபிஸரால் அதிகாரங் கொடுக்கப்பெற்ற யாதொரு நபரிடத்திலாவது எழுத்து மூலமாய் அனுமதி பெற்றுக்கொள்ளாமல், புளிப்பேறிப் பொங்கவைத்த மால்ட் என்னும் சாராயந்தவிர மற்ற எவ்வித வெறியுண்டாக்கத்தக்க சாராயத்தையும் ஒரு க்வார்ட் எனனும் அளவுக்கதிகமாய்த் தம்வசத்தில் வைத்துக்கொண்டிருந்தால், அப்படிப்பட்டவர் அல்லது அப்படிப்பட்டவள், இந்தப் பிரிவுக்கு விரோதமாகச் செய்யப்பட்ட முதல் குற்றத்திற்காக ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனையும், இந்தப் பிரிவுக்கு விரோதமாகப் பிற்பாடு செய்யப்படுகிற குற்றத்தின் விஷயத்திலே நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை அல்லது மூன்று மாதத்திற்கு மேற்படாத ஒரு காலத்திற்குக் காவல் தண்டனையும் விதிக்கத்தக்கவராவார் அல்லது விதிக்கப்படத்தக்கவளாவாள்.

அடுத்து முந்திய இரண்டு பிரிவுகளுக்கு விரோதமான குற்றங்களுக்காக நபர்களைப் பிடிப்பதும் வஸ்துக்களைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்வதும்.

58. (1) 56-வது பிரிவின்படியாவது, 57-வது பிரிவின்படியாவது யாதொரு குற்றம் செய்பவதைப் பொலீஸ் உத்தியோகஸ்தர் அல்லது எக்ஸைஸ் உத்தியோகஸ்தர் எவராவது கண்டால், அந்த நபரை அந்த உத்தியோகஸ்தர் ஒரு மாஜிஸ்ட்ரேட்டினுடைய உத்தரவில்லாமலும் வாரண்டில்லாமலும் பிடிக்கலாம்; மேலும், எதன் விஷயமாய் அவ்வகையான குற்றம் செய்யப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட எவ்வித வெறியுண்டாக்கத்தக்க சாராயம் அல்லது லாகிரி வஸ்துவையும், அந்த சாராயம் அல்லது வஸ்து எதிலிருக்கிறதோ அப்படிப்பட்ட எவ்வித பாத்திரங்கள் அல்லது மூடிகளையும் கைப்பற்றி மறியல செய்யலாம்.

(2) 56-வது பிரிவின்படி குற்றஞ்சாட்டப்பட்ட எந்த நபராவது இதற்கு முன்னமே அந்தப் பிரிவின்படி குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருந்தால, யாதொரு பொலீஸ் ஸ்டேஷன் விசாரணை வகிக்கும் உத்தியோகஸ்தர் - பிந்திய குற்றஞ்செய்ததாகச் சொல்லப்பட்ட காலத்தில் அப்படிப்பட்டவருடையதாகவாவது அவருடைய ஸ்வாதீனத்திலாவது கன்டோன்மென்டுக்குள் அல்லது ஷை பிரிவின்படி நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்குள்ளிருக்கிற எவ்வித வெறியுண்டாக்கத்தக்க சாராயத்தை அல்லது லாகிரி வஸ்துவையும் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டினுடைய எழுத்துமூலமான உத்தரவைப் பெற்றுக்கொண்டு கைப்பற்றி மறியல் செய்யலாம்.

(3) 56-வது பிரிவு அல்லது 57-வது பிரிவுபடிக்கான குற்றத்தை யாதொரு நபர் செய்து அவரைக் குற்றவாளியென்று தீர்மானிக்கிற கோர்ட்டார் - (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்காகிலும், (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்காகிலும் கைப்பற்றப்பட்ட யாதொரு வஸ்து முழுவதையுமாவது அதன் யாதொரு பாகத்தையாவது பறிமுதல் செய்யும்படி உத்தரவு பண்ணலாம்.

(4) 1898-ம் வருஷத்து க்ரிமினல் ப்ரோஸீஜர் கோட் 43-ம் அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகளுக்குள்பட்டு, (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்காகிலும், (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்காகிலும் கைப்பற்றப்பட்டு, (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பறிமுதல் செய்யப்படாத எந்த வஸ்துவையும் எந்த நபரிடத்திலிருந்து அது எடுத்துக்கொள்ளப்பட்டதோ அந்த நபரிடத்தில் மறுபடி கொடுத்துவிடவேண்டும். 1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

ஔஷத சம்பந்தமான காரியங்களுக்காக விற்கப்பட்ட அல்லது சர்ப்பரா செய்யப்பட்ட வஸ்துக்கள் விஷயத்தில் நிவாரணை.

59. இந்த அத்தியாயத்தின் முந்திய நிபந்தனைகள் - ப்ரஸ்தாப கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸருடைய பொதுவான அல்லது விசேஷமான உத்தரவுமூலமாக இதுவிஷயமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் வைத்தியர்களாலாவது ரசாயனப்பொருள் வியாபாரிகளாலாவது மருந்து சரக்கு வியாபாரிகளாலாவது ஔஷத சம்பந்தமான காரியங்களுக்காக நல்ல எண்ணத்துடன் யாதொரு வஸ்து விற்பனை செய்யப்படுவதற்கு அல்லது சர்ப்பரா செய்யப்படுவதற்குப்பிரயோகப்படமாட்டா.

5-ம் அத்தியாயம்.

வரிகள்.

வரிகள் விதிப்பது.

வரி விதிப்பதற்குள்ள பொது அதிகாரம்.

60. பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், அந்த விளம்பரத்தின் தேதியில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற யாதொரு சட்டதிட்டத்தின்படி பிரஸ்தாப மாகாணத்தைச் சேர்ந்த யாதொரு மியுனிஸிபாலிடியில் விதிக்கப்படக்கூடிய யாதொரு வரியை க்கன்டோன்மென்டில் விதிக்கலாம்.

சில கன்டோன்மென்டுகளுக்கு 1856-ம் ௵த்து 20-வது ஆக்ட் வியாபிப்பது.

1856-ம் ௵த்து 20-வது ஆக்ட்.

61. (1) பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், யாதொரு மியுனிஸிபாலிடியில் சேராமல் ப்ரிடிஷ் இந்தியாவின் எந்த பாகத்தில் 1856-ம் வருஷத்திய வங்காளத்து சௌகிதாரி ஆக்ட் செலாவணியாய்க்கொண்டிருக்கிறதோ அப்படிப்பட்ட யாதொரு பாகத்தில் இருக்கும் எந்த கன்டோன்மென்டுக்காகிலும் அந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகள் வியாபிக்கும்படிச் செய்யலாம்; மேலும், ஷை ஆக்ட் யாதொரு கன்டோன்மென்டுக்கு அந்தப்பிரகாரம் பிரயோகப்படும்படி செய்யப்பட்டால், அந்த கன்டோன்மென்டின் நிர்வாக உத்தியோகஸ்தர் - டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட், பிரதேச கவர்ன்மென்டார் ஆகிய இவர்களின் மேல் விசாரணைக்கு மாத்திரமே உட்பட்டு, ஷை ஆக்டின் பிரகாரம் மாஜிஸ்ட்ரேட்டுக்குரிய சகல அதிகாரங்களையும் செலுத்தலாம்.

1856-ம் ௵த்து 20 வது ஆக்ட்.

(2) பிரதேச கவர்ன்மென்டார் - 1856-ம் ௵த்திய வங்காளத்து சௌகிதாரி ஆக்டிற்கண்ட நிபந்தனைகள் வியாபிக்கும்படி செய்யப்பட்டிருக்கும் யாதொரு கன்டோன்மென்டானது வேண்டிய அத்தனை கன்டோன்மென்ட் டிவிழன்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று உத்தரவு செய்வதுமல்லாமல், ஷை ஆக்ட் 10-வது பிரிவின்படி அப்படிப்பட்ட டிவிழன்கள் ஒவ்வொன்றிலும் விதிக்கப்படவேண்டிய வரியின் இன்னதென்றும் நிச்சயிக்கலாம்.

1856-ம் ௵த்து 20-வது ஆக்ட்.

(3) வரி விதிக்கப்படக்கூடிய நபர்களின் சந்தர்ப்பங்களையும் பாதுகாக்கப்பட வேண்டியதாயுள்ள அவர்களுடைய சொத்தையும் அனுசரித்தாவது, வீடுகள், மனைகள் ஆகிய இவைகளின் வருஷவாரி மதிப்பை அனுசரித்தாவது, யாதொரு கன்டோன்மென்டில் 1856-ம் ௵த்திய வங்காளத்து சௌகிதாரி ஆக்டின்படி வரிவிதிக்கப்பட்டால், இந்த ஆக்ட் 60-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு விளம்பரத்தை அனுசரித்து, யாதொரு தொழிலாகிலும் கைவினையாகிலும் செய்கிற அல்லது யாதொரு வியாபாரமாகிலும் வேலையாகிலும் நடத்துகிற நபர்களுக்கு ஒரு வரியாயினும் கட்டிடங்கள் அல்லது நிலங்களுக்கு ஒருவரியாயினும் விதிக்கப்படத்தக்கதாகும்.

பிரதம பிரேரேபணைகளைத் தயார்செய்வது.

62. (1) பிரதேச கவர்ன்மென்டார்-60-வது பிரிவின்படி யாதொரு வரிவிதிக்க உத்தேசித்தால், அவர்கள் அந்தப்படி தாங்கள் உத்தேசித்திருப்பதைப் பற்றி பிரதேச ஸர்க்கார் கெஜட்டில் விளம்பர மூலமாக அறிக்கையிடவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான ஒவ்வொரு விளம்பரத்திலும்—

(a) விதிக்க உத்தேசித்திருக்கும் வரியையும்,

(b) (வரிக்கு) உட்படுத்தப்படும் நபர்கள் அல்லது நபர்களின் வகுப்புகளையும், எந்த சொத்து அல்லது வரி விதிககபபடக்கூடிய வேறேவஸ்து அல்லது சந்தர்ப்பம் விஷயமாய் அவர்கள் அந்தப்படி உட்படுத்தப் போகிறார்களோ அதன் விவரத்தையும்,

(c) வரிவிதிக்கப்படப்போகும் வீதத்தையும்

குறிப்பிட வேண்டும்.

பிரேரேபணைகளைத் தயார்செய்ததற்குப் பிற்பட்ட நடவடிக்கைமுறை.

63. (1) கன்டோன்மென்டில் வாசம் செய்பவர் எவராகிலும் - 62-வது பிரிவின்படிக்கான விளம்பரத்தின் தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் ஷை விளம்பரத்தில் தயார் செய்யப்பட்டிருக்கும் சகல பிரேரேபணைகளுக்குமாவது அவைகளில் எதற்காவதுள்ள யாதொரு ஆட்சேபணையை எழுத்து மூலமாகப் பிரதேச கவர்ன்மென்டாருக்குத் தெரிவிக்கலாம்; மேலும், பிரதேச கவர்ன்மென்டார் - அந்தப்படி அனுப்பப்பட்ட யாதொரு ஆட்சேபணையைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டும்.

(2) ஷை விளம்பரத்தின் தேதியிலிருந்து பதினைந்து தினங்கள் கழிந்த பிறகும், (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அந்த பிரேரேபணைகளுக்கு அனுப்பப்பட்ட சகல ஆட்சேபணைகளையும்பற்றி ஆலோசித்த பிறகும், பிரதேச கவர்ன்மென்டார்-பிரஸ்தாபவரியைப் பிரதம ரூபத்திலாவது, அந்தப்படி ஆட்சேபணை எதாயினும் அனுப்பப்பட்டிருந்தால் அந்த ரூபத்திலாவது தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி திருத்திய ரூபத்திலாவது பிரஸ்தாபவரியை விதிக்கலாம்—

வருஷவாரி மதிப்பு என்பதன் அர்த்தம்.

64. இந்த அத்தியாயத்தின் காரியங்களுக்காக "வருஷவாரி மதிப்பு" என்பது—

(a) ரெயில்வே ஸ்டேஷன்கள், ஹோட்டல்கள், கலாசாலைகள், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள், தொழிற்சாலைகள், இவைகளைப்போன்ற இதர கட்டிடங்கள் ஆகிய இவைகளின் விஷயத்தில் பிரஸ்தாப கட்டிடத்தைக் கட்டுவதற்கு தற்காலம் பிடிக்கக்கூடிய உத்தேச செலவுத் தொகையுடன் அதற்குச் சேர்ந்திருக்கிற நிலத்தின் உத்தேச மதிப்பைக் கூட்டுவதால் கிடைக்கும் தொகையில் இருபதில் ஒருபாகமென்றும்

(b) (a) அடையாளமிட்ட பகுதியில் நிபந்தனை கண்டிராத யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் விஷயத்திலே, (அதிலிருக்கும் மேஜை நாற்காலி அல்லது யந்திரவகைகள் நீங்கலாக) அப்படிப்பட்ட கட்டிடமாவது நிலமாவது வாஸ்தவத்தில் என்ன மொத்த வருஷவாரி வாடகைக்கு விடப்படுகிறதோ அந்த வாடகை யென்றாகிலும், ஷை கட்டிடம் அல்லது நிலம் வாடகைக்கு விடப்படாமற் போனாலும் நியாயமாய் அது வாடகைக்கு விடப்படக்கூடிய மதிப்புத்தொகைக்குக் குறைவான ஒரு தொகைக்கு வாடகைக்கு விட்டிருக்கிறதென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டாலும் வருஷாவருஷம் அது நியாயமாய் எந்த தொகைக்கு வாடகைக்கு விடக்கூடுமோ அந்த மொத்த வருஷவாரி வாடகைத்தொகை யென்றாகிலும்

அர்த்தமாகும்.

ஆனால், யாதொரு கட்டிடத்தின் வருஷவாரி வாடகைத்தொகையானது, விசேஷ சந்தர்ப்பங்களின் காரணமாக, மேலே சொல்லிய மாதிரி கணக்கிடும்பட்சத்தில் அதிகமாயிருக்கிறதென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், கன்டோன்மென்ட் அதிகார சபையார்-ஷை வருஷவாரி மதிப்புத் தொகையை தங்களுக்குத் தகுதியாய்த்தோற்றுகிற யாதொரு குறைவான தொகையாக கிஷ்கரிஷை செய்யலாம்.

வரி இன்னார் செலுத்தத் தக்கதாகுமென்பது.

65. (1) வரிவிதிக்கப்படுமென்று கண்டு வெளியிடப்படும் விளம்பரத்திலே வெளிப்படையாய் வேறே விதமாக நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, கட்டிடங்கள் அல்லது நிலங்கள், அல்லது இவ்விரண்டின் வருஷவாரி மதிப்புதொகையின்மேல் விதிக்கப்படும் ஒவ்வொரு வரியும்-எந்த சொத்துக்கு வரி விதிக்கப்படுகிறதோ அந்த சொத்தை வாஸ்தவத்தில் அனுபோகத்தில் வைத்துகொண்டிருக்கும் நபர் ஷை கட்டிடங்களுக்காவது நிலங்களுக்காவது சொந்தக்காரராயிருந்தாலும் அவைகளை ஆலோசனை சபையிலுள்ள ஸெக்ரெடரி ஆவ் ஸ்டேட் அவர்களிடமிருந்தோ கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடமிருந்தோ பெற்ற கட்டிட குத்தகை அல்லது நில குத்தகையின் மேலாகிலும் யாதொரு நபரிடமிருந்து பெற்ற கட்டிட குத்தகையின்மேலாகிலும் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருந்தாலும், முக்கியமாய் அவருக்கு விதிக்கப்படத்தக்கதாகும்.

(2) வேறே எந்த விஷயத்திலும், ஷை வரியானது முக்கியமாய் அடியிற் கண்டபடி விதிக்கப்படத்தக்கதாகும் ; அதாவது :—

(a) சொத்து வாடகைக்கு விடப்பட்டிருந்தால், வாடகைக்கு விட்டிருப்பவருக்கு ;

(b) சொத்து கீழ் வாடகைக்கு விடப்பட்டிருந்தால், முதலில் பிரதமவாடகைதாரருக்கு;

(c) சொத்து வாடகைக்கு விடப்படாமலிருந்தால், அதை வாடகைக்கு விடும் உரிமை யாரிடம் சங்கிரமித்திருக்கிறதோ அவருக்கு.

(3) முக்கியமாக உத்தரவாதியாயிருக்கும் நபரிடமிருந்து ஷை வரியின் பொருட்டு பாக்கியாய் ஏற்படும் யாதொரு தொகையை வசூலிக்கத் தவறிப்போவதன்மேல், அந்த வரி எந்தக் கட்டிடங்கள் அல்லது நிலங்கள் விஷயமாய் பாக்கியாயிருக்கிறதோ அந்தக்கட்டிடங்கள் அல்லது நிலங்களுடைய யாதொரு பாகத்தின் அனுபோகதாரரிடமிருந்து, பாக்கியாயிருக்கும வரித்தொகையில் யாதொரு பாகத்தை வசூலிக்கலாம்; அந்த பாகத்துக்கும் ஷை வரித்தொகைக்கும், அந்த அனுபோகதாரர் வருஷவாரியில் செலுத்தக்கூடிய வாடகைத் தொகைக்கும் ஷை கட்டிடங்கள் அல்லது நிலங்கள் எல்லாவற்றின் விஷயமாய் அந்தப்படி செலுத்தப்படக்கூடிய மொத்த வாடகைத் தொகைக்குமாவது சரியானதென்று அதிகாரவாயிலாய்ச் சொல்லப்படும் வரிவிதிப்பு ஜாபிதாவில் அவைகளுக்கு ஏதேனும் வாடகை மதிப்புத் தொகை கண்டிருந்தால் அந்த மொத்தத் தொகைக்குமாவது என்ன சங்கியா பரிமாணம் ஏற்படுகிறதோ அந்த சங்கிய பரிமாணமே இருக்கவேண்டும்.

(4) யாதொரு அனுபோகதாரர் இந்தப் பிரிவின்படி முக்கியமாய்த் தாம் உத்தரவாதியாயிராத யாதொரு தொகையைச் செலுத்தினால், அவர் - பின்னே சொல்லுவதற்கு விரோதமாய் யாதொரு ஒப்பந்தம் இல்லாத பட்சத்திலே அந்தத் தொகையைச் செலுத்துவதற்கு முக்கியமாய் உத்திரவாதியாயிருக்கும் நபரிடமிருந்து தாம் செலுத்திய தொகையைத்திருப்பிப் பெற பாத்தியதை உடையவராவார்.

வரிவிதிப்பு ஜாபிதா.

வரிவிதிப்பு ஜாபிதா.

66. கட்டிடங்கள் அல்லது நிலங்கள் அல்லது இவ்விரண்டின் வருஷவாரி மதிப்பின்மேல் யாதொரு வரிவிதிக்கப்பட்டால, கன்டோன்மென்ட் அதிகார சபையார் - கன்டோன்மென்டிலுள்ள சகல கட்டிடங்களுக்குமாகிலும் நிலங்களுக்குமாகிலும் சந்தர்ப்பத்துக் கேற்றபடி இவ்விரண்டுக்குமாகிலும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் விதிமூலமாய் நிர்ணயிக்கக் கூடிய கமூனாப்படி வரிவிதிப்பு ஜாபிதா ஒன்றைத் தயார் செய்விக்கவேண்டும்.

வரிவிதிப்பு ஜாபிதாவை ப் பிரசித்தம் செய்வது.

67. வரிவிதிப்பு ஜாபிதா தயாராகிவிட்டால், கன்டோன்மென்ட் அதிகார சபையார்-அதைக் குறித்தும் இன்ன இடத்தில் அதையாவது அதன் நகலை யாகிலும் பார்வையிடலாமென்பதைக் குறித்தும் பஹிரங்கமாய் அறிக்கையிடவேண்டும்; மேலும், அந்த ஜாபிதாவில் சேர்க்கப் பட்டிருக்கும் யாதொரு சொத்தின் சொந்தக்காரராகவாகிலும், வாடகைதாரராகவாகிலும், அனுபோகதாரராகவாகிலுமிருப்பதாய்ச் சுதந்தரம் கொண்டாடும் ஒவ்வொரு நபரும் அப்படிப்பட்ட நபரின் அதிகாரம் பெற்ற ஏஜென்டும்-கட்டணமில்லாமலே அந்த ஜாபிதா வைப் பார்வையிட்டு அதிலிருந்து எக்ஸ்ட்ராக்டுகள் எடுத்துக்கொள்ளலாகும்.

வரிவிதிப்பு ஜாபிதாவை ப் புனராலோசனை செய்து திருத்துவது.

68. (1) அதே சமயத்தில் கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அதற்குப் பிறகு ஒருமாதத்துக்கு முற்பட்டதாயிராத ஒரு தேதியில் பிரஸ்தாப வரி விதிப்பு ஜாபிதாவில் பதிந்திருக்கும் மதிப்புகளையும் வரிவிதிப்புக ளையும் பற்றி ஆலோசனை செய்யத் தொடங்குவார்களென்று பஹிரங்கமாய் அறிக்கையிடவேண்டும்; மேலும், யாதொரு சொ த்துக்கு முதல் தடவையாய் வரிவிதிக்கிற அல்லது வரியை அதிகப்படுத்துகிற சகல விஷயங் ளிலும் அவர்கள் அதைக் குறித்து பிரஸ்தாப சொத்தின் சொந்தக்காரருக்கும் யாதொரு வாடகைதாரர் அல்லது அனுபோகதாரருக்கும் நோடிஸ் கொடுக்கவேண்டும்.

(2) யாதொரு மதிப்புக்காவது வரிவிதிப்புக்காவது செய்யப்படும் ஆட்சேபனையை ஷை அறிக்கையில் நிஷ்கரிஷை செய்யப்பட்ட தேதிக்குமுன் கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் எழுத்துமூலமாய்ச் செய்துகொள்ள வேண்டியதுமல்லாமல், எந்த விஷ யத்தில் ஷை மதிப்பு அல்லது வரிவிதிப்பு சம்பந்தமாய் விவாதம் உண்டென்பதைக் காண வும் வேண்டும்; அந்தப்படி செய்யப்படும் சகல ஆட்சேபனைகளையும் - இது காரியத்துக் காகக் கன்டோன்மென்ட் அதிகாரசபையார் வைத்துவரும் ரெஜிஸ்டரில் ரெகார்ட்செய்து கொள்ளவேண்டும்.

(3) ஷை ஆட்சேபனைகளைப்பற்றி விசாரணைசெய்து அவைகளைப் பரிசீலனைசெய்ய வேண்டும்; மேலும், கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் நியமிக்கப்படும் வரிவிதிப் புக் கம்மிட்டியாரிடத்தில் நேரிலாவது அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜென்ட் மூலமாக வாவது தாங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிக்கொள்ள அந்தப்படி ஆட்சேபனைகள் செய்யும் நபர்களுக்கு அவகாசம் கொடுக்கவேண்டும்.

(4) வரிவிதிப்புக் கம்மிட்டியில் மூன்று நபர்களுக்குக் குறையாமல் இருக்கவேண் டும்; மேலும், யாதொரு போர்ட் ஏற்பட்டிருக்கும் பட்சத்திலே, அதன் மெம்பர் எவரையும் வரிவிதிப்புக் கம்மிட்டிக்கு நியமிப்பது அவசியமாகமாட்டாது.

வரிவிதிப்பு ஜாபிதா சரி யானதென்று அதிகாரவா யிலாய் எண்பிப்பது.

69. (1) 68-வது பிரிவின்படிக்கான சகல ஆட்சேபனைகளும் பைசல் செய்யப்பட்டு மதிப்பையும் வரிவிதிப்பையும் புனராலோசனைசெய்து திருத்தும் வேலை பூர்த்தியானதும், வரிவிதிப்பு ஜாபிதாவானது-வரிவிதிப்பு கம்மிட்டியிலிருந்த மெம்பர்களின் கையெழுத்து மூலமாக சட்டப் படி சரியானதென்று எண்பிக்கப்படவேண்டும்; மேலும், அவர் கள் கிரமமாய்ச் செய்யப்பட்ட சகல ஆட்சேபனைகளைப் பற்றியும் ஆலோசித்து, அப்படிப் பட்ட ஆட்சேபனைகளின்மேல் தங்களுடைய தீர்மானங்களை அனுசரித்து ஷை ஜாபிதாவை எவ்வளவு வரையில் திருத்துவது அவசியமாயிற்றோ அவ்வளவு வரையில் அதைத் திருத்தி யிருப்பதாக உறுதிமொழி கூறவேண்டும்.

(2) அந்தப்படி சரியானதென்று அதிகாரவாயிலாய் எண்பிக்கப்பட்ட வரிவிதிப்பு ஜாபிதாவை கன்டோன்மென்ட் அதிகார சபையின் ஆபீஸில் வைத்துவைக்கவேண்டும்; மேலும், அதில் அடங்கியுள்ள சொத்தின் சொந்தக்காரர்கள், குத்தகைதாரர்கள், அனுபோ கதாரர்கள் ஆகிய இவர்களாவது அப்படிப்பட்ட நபர்களின் அதிகாரம் கொடுக்கப்பெற்ற ஏஜென்டுகளாவது ஆபீஸ் மணி நேரங்களில் கட்டணமில்லாமலே அங்கே அதை பார்ப் பது சாத்தியமாயிருக்கவேண்டும்; அல்லாமலும், அந்தப்படி பார்ப்பதுசாத்தியமாகுமென் று பஹிரங்கமான நோடிஸ் ஒன்றை உடனே பிரசித்தம் செய்யவேண்டும்.

வரிவிதிப்பு ஜாபிதா இவ் வளவுமட்டில் சாட்சியமாய் பிரயோகப்படுமென்பது.

70. இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகளின்படியும் அவைகளின் பிரகாரம் செய்து கொள்ளப்பட்ட யாதொரு அப்பீல் முடிவின்படியும் வரி விதிப்பு ஜாபிதாவில் பிற்பட்டு செய்யப்படக்கூடிய மாறுதல்க ளுக்குட்பட்டு, சரியானதென்று அதிகார வாயிலாய் எண்பித்து 69-வது பிரிவில் நிபந்தனை கண்டிருக்கிறபடி வைத்து வைக்கப்பட் டிருக்கும் வரிவிதிப்பு ஜாபிதாவிலுள்ள பதிவுகளானவை—

(i) இந்த ஆக்டின்படிக்கான யாதொரு வரிவிதிக்கும் காரியத்துக்காக, ஷை பதிவு கள் முறையே குறிக்கும் கட்டிடங்கள், நிலங்கள் ஆகிய இவைகளின் வருஷவாரி மதிப்பு அல்லது வேறே மதிப்புக்கும்,

(ii) கட்டிடங்கள் அல்லது நிலங்களுக்கு விதிக்கப்படும் யாதொரு வரியின் கார்யங்களுக்காக அப்படிப்பட்ட ஜாபிதா எந்த வருஷத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ, அந்த வருஷத்தில் அவைகளுக்கு விதிக்கப்படக்கூடிய அப்படிப்பட்ட ஒவ்வொரு வரித்தொகைக்கும் முடிவான சாட்சியமாய் ஒப்புக்கொள்ளப்படும்.

வரிவிதிப்பு ஜாபிதாவைத் திருத்துவது.

71. (1) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - வரிவிதிப்பு ஜாபிதாவைத் திருத்துவதாயிருந்தால், அதைக்குறித்து பிரஸ்தாப திருத்தத்தினால் பாதிக்கப்படும் நபருக்கு நோடிஸ் சேர்ப்பித்து (அது) சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒருமாதத்துக்குக் குறையாத ஒரு கால அளவில் அந்தத் திருத்தம் செய்யப்படுமென்று தெரிவித்தப் பிறகு, ஷை ஜாபிதாவை, யாதொரு நபருடைய பெயர் அதில் சேர்க்கப்பட்டிருக்க அல்லது சோக்கப்பட வேண்டுமானால் அப்படிப்பட்ட நபருடைய பெயரைச் சேர்த்தாவது, யாதொரு சொத்து அதில் சேர்க்கப்பட்டிருக்க அல்லது சேர்க்கப்பட வேண்டுமானால் அப்படிப்பட்ட சொத்தைச் சேர்த்தாவது கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய பங்கிலாயினுஞ்சரி வரிவிதிப்பு கமிட்டியாருடைய பங்கிலாயினுஞ்சரி வரிவிதிக்கப் பெறுபவருடைய பங்கிலாயினுஞ்சரி மோசடியாகவோ தற்செயலாகவோ தவறாகவோ சொத்தின் மதிப்பு தப்பாய்ப் போடப்பட்டிருந்தாலும் அதற்கு வரிவிதிப்பு தப்பாய்ச் செய்யப்பட்டிருந்தாலும் அந்த சொத்தின் வரிவிதிப்பை மாற்றியாவது, அனுபோகதாரரால் செலுத்தப்படக்கூடிய யாதொரு வரி விஷயத்திலே அனுபோக சுதந்தரத்தை மாற்றியாவது திருத்தலாம்.

(2) அப்படிப்பட்ட திருத்தத்தில் அக்கறையுள்ள யாதொரு நபர் ஷை நோடிஸிலே நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கும் காலத்துக்கு முன்னதாக தமக்குள்ள ஆட்சேபணையை கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு எழுதி அனுப்பலாம்; மேலும், அந்த ஆட்சேபணைக்கு ஆதாரமாய்ச் சொல்லிக்கொள்ள விரும்புவதை நேராகவாவது அதிகாரம் கொடுக்கப்பெற்ற எஜென்ட் மூலமாகவாவது தெரிவிக்க அவருக்கு அவகாசம் கொடுக்கவேண்டும்.

புதிய வரிவிதிப்பு ஜாபிதாவைத் தயார் செய்வது.

72. கன்டோன்ட்மென்ட் அதிகார சபையார் - பிரதி வருஷமும் புதிய வரிவிதிப்பு ஜாபிதா ஒன்றைத் தயார் செய்ய வேண்டும்; மேலும், இது காரியத்துக்காக, 66-முதல் 71-வரையிலுள்ள பிரிவுகளில் கண்ட நிபந்தனைகள் முதல் தடவை, வரிவிதிப்பு ஜாபிதாவைத் தயார்செய்யும் காரியத்துக்கு அவை எப்படி பிரயோகப்படுமோ அப்படியே பிரயோகப்படவேண்டும்.

ட்ரான்ஸ்பர்களைக் குறித்து நோடிஸ்.

73. (1) யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் வருஷவாரி மதிப்பின்மேல் யாதொரு வரி செலுத்த முக்கியமாக உத்தரவாதியாயிருக்கும் யாதொரு நபர் அந்த கட்டிடம் அல்லது நிலத்துக்காவது அதன் மேலாவதுள்ள பாத்தியதை ட்ரான்ஸ்பர்பண்ணப்படும் போதெல்லாம், எந்த நபரின் பாத்தியதை ட்ரான்ஸ்பர் பண்ணப்படுகிறதோ அந்த நபரும் எந்த நபருக்கு அது ட்ரான்ஸ்பர் பண்ணப்படுகிறதோ அந்த நபரும் ட்ரான்ஸ்பர் சம்பந்தமான ஆதரவை எழுதிமுடித்த பிறகாகிலும் அதை ரெஜிஸ்டர் செய்த பிறகாகிலும் அந்தப்படி ஆதரவு எதுவும் எழுதி முடிக்கப்படாவிட்டால் ஷை ட்ரான்ஸ்பர் நிறைவேற்றப்பட்ட பிறகாகிலும் மூன்று மாதத்துக்குள் அந்த ட்ரான்ஸ்பரைக் குறித்து நிர்வாக உத்தியோகஸ்தருக்கு நோடிஸ் கொடுக்க வேண்டும்.

(2) மேலே சொன்னபடி முக்கியமாய் உத்தரவாதியாக இருக்கும் யாதொரு நபர் இறந்துவிடும் பட்சத்தில், இறந்து போனவருடைய பாத்தியதை எந்த நபரைச் சேருகிறதோ அந்த நபர் - அந்தப்படி சேர்ந்திருப்பதைக் குறித்து இறந்துபோனவரின் மரணத்தின் தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் நிர்வாக உத்தியோகஸ்தருக்கு நோடிஸ் கொடுக்க வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்படும் நோடிஸானது-நிர்வாக உத்தியோகஸ்தர் கட்டளையிடக்கூடிய நமூனாப்படி இருக்கவேண்டும்; மேலும், ட்ரான்ஸ்பர் செய்யப்பெறுகிறவருக்காவது ஷை பாத்தியதை எவரைச் சேருகிறதோ அந்த வேறே நபருக்காவது ஷை ட்ரான்ஸ்பர் அல்லது பாத்தியதைக்கு சேர்ந்த சாட்சியமாயிருக்கும் எவையேனும் தஸ்தாவேஜுகளை நிர்வாக உத்தியோகஸ்தருக்குமுன் ஹாஜர்ப்படுத்த வேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டால், அவர் - அந்தப்படியே ஹாஜர்ப்படுத்தவேண்டும்.

(4) நிர்வாக அதிகாரிக்கு அப்படிப்பட்ட நோடிஸ் கொடுக்காமலே, மேற்சொல்லியபடி யாதொரு ட்ரான்ஸ்பர் பண்ணுகிற ஒவ்வொரு நபரும் - அந்தப்படி தாம் நோடிஸ் கொடுக்கிற வரையிலாவது பிரஸ்தாப ட்ரான்ஸ்பர் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் ரெஜிஸ்டர்களில் பதியப்பட்டாகிறவரையிலாவது ட்ரான்ஸ்பர் பண்ணபபபட்ட சொத்துக்கு விதிக்கப்படும் சகல வரிகளையும் செலுத்துவதற்கு உத்தரவாதியாக இருந்துகொண்டே வருவார்; ஆனால், இந்தப் பிரிவில் கண்டதெதனாலும், ஷை வரி செலுத்துவதற்கு ட்ரான்ஸ்பர் பண்ணப் பெறுகிறவர் உத்தரவாதியாயிருப்பதற்கு பாதகம் எறபடுவதாகக் கொள்ளப்படமாட்டாது.

கட்டிடங்கள் கட்டப்பட்டதைக் குறித்து நோடிஸ்.

74. (1) 179-வது பிரிவின் தாற்பரியப்படி யாதொரு கட்டிடம் கட்டப்பட்டாலும் புதுப்பித்து கட்டப்பட்டாலும், அதைக்குறித்து அதன் சொந்தக்காரர் - அதைக் கட்டிமுடித்த தேதியோ அதில் குடியேறின தேதியோ எது முந்தியதாயிருக்கிறதோ அதிலிருந்து முப்பது தினங்களுக்குள் நிர்வாக உத்தியோகஸ்தருக்கு நோடிஸ் கொடுக்கவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரில் அவசியமென்று சொல்லியிருக்கும் நோடிஸ் கொடுக்க யாதொரு நபர் தவறிப்போகும் பட்சத்திலே, அவர் - ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனையோ, சந்தர்ப்பத்துக்கேற்றபடி கட்டப்பட்டாவது புதுப்பித்து கட்டப்பட்டாவதிருக்கும் ஷெ கட்டிடத்துக்கு மூன்று வருஷகாலத்துக்கு விதிக்கப்படக்கூடிய வரித்தொகைக்குப் பத்து மடங்கோ, இவைகளில் எது பெரிதாயிருக்கிறதோ அந்த தொகையளவுக்கு அபராத தண்டனையோ விதிக்கப்படத்தக்கவராவார்.

வஜா செய்து கொடுப்பதும் வாபஸ் செய்வதும்.

கட்டிடங்களை இடித்து விடுவது முதலியது.

75. யாதொரு கட்டிடம் முழுதிலுமாவது சிறிதுமட்டிலாவது இடித்து விடப்பட்டாலும் அழிந்துபோய்விட்டாலும் மற்றப்படி அதற்கு மதிப்பு இல்லாமற்போயவிட்டாலும், கன்டோன்மென்ட் அதிகாரசபையார்-சொந்தக்காரர் விண்ணப்பம் செய்து கொள்வதன்மேல், வரியில் தமக்குத் தகுதியாகத் தோற்றும் பாகத்தை வஜா செய்துகொடுக்கலாம் அல்லது வாபஸ் செய்யலாம்.

வரியைவஜா செய்துகொடுப்பது.

76. ஷெ கன்டோன்மென்டாயிராத வேறே யாதொரு கன்டோன்மென்டிலே, யாதொரு கட்டிடமாவது நிலமாவது யாதொரு வருஷத்தில் தொடர்ச்சியாய்த் தொண்ணூறு அல்லது அதற்கு மேற்பட்ட தினங்கள் காலியாகவும் வாடகை வராதபடியும் இருந்திருந்தால், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அந்த வருஷத்தின் விஷயத்தில், வரியில் எவ்வளவு பாகம் ஷெ கட்டிடம் அல்லது நிலம் காலியாகவும் வாடகை வராதபடியும் இருந்துவிட்ட தினங்களின் சங்கியைக்கு ஏற்ற சங்கியா பரிமாணப்படி இருக்கிறதோ அவ்வளவு பாகத்தை சந்தர்ப்பத்துக் கேற்றபடி வஜா செய்துகொடுக்கவேண்டும் அல்லது வாபஸ் செய்ய வேண்டும்.

யாதொருகட்டிடத்தைக் குறித்த விவரங்களை வரிவிதிப்பு ஜாபிதாவில் பதிவு செய்யும்படி உத்தரவு செய்வதற்கான அதிகாரம்.

77. வரி சிறிதுமட்டில் வஜா செய்து கொடுக்கப்பெறும் அல்லது வாபஸ் செய்யப்பெறும் காரியத்துக்காக, பிரத்தியேகமான குடியிருப்பு இடங்களடங்கிய யாதொரு கட்டிடத்தின் சொந்தக்காரரானவர்-பிரஸ்தாப கட்டிடத்துக்கு வரிவிதிக்கும் காலத்திலே, முழுகட்டிடத்தின் வருஷவாரி மதிப்புடன்கூட ஒவ்வொரு தனிக்குடியிருப்பு இடத்தின் வருஷவாரி மதிப்பை விவரமாய்க் கண்டுள்ள ஒரு குறிப்பை வரிவிதிப்பு ஜாபிதாவில் பதிந்துகொள்ளும்படி கன்டோன்மென்ட் அதிகாரசபையைக் கேட்டுக்கொள்ளலாம். வருஷவாரி மதிப்பு தனியே பதிவு செய்யப்பெற்றிருக்கும் யாதொரு குடியிருப்பு இடமானது யாதொரு வருஷத்திலே தொடர்ச்சியாய்த் தொண்ணூறு அல்லது அதற்கு மேற்பட்ட தினங்களுக்கு காலியாகவும் வாடகை வராதபடியும் இருந்திருந்தால், அந்த வருஷத்தின் விஷயமாய்ப் பிரஸ்தாப முழு கட்டிடத்தின் வரியில் எவ்வளவு பாகம் ஷெ இடத்துக்குத்தனியே வரிவிதிக்கப்பட்டிருந்தால் வஜாசெய்து கொடுக்கப்பட்டு அல்லது வாபஸ் செய்யப்பட்டிருக்குமோ அவ்வளவுபாகம் வஜா செய்து கொடுக்கப்படவேண்டும் அல்லது வாபஸ் செய்யப்படவேண்டும்:

ஆனால், இன்ன சந்தர்ப்பங்களில் வஜா செய்துகொடுக்கும்படி சுதந்தரித்துக் கேட்கப்படுகிறதென்று கண்டு கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு எழுத்து மூலமான நோடிஸ் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி அப்படிப்பட்ட வஜா எதுவும் செய்து கொடுக்கக்கூடாது; மேலும், அப்படிப்பட்ட நோடிஸ் கொடுப்பதற்கு பதினைந்து தினங்களுக்கு மேற்பட்டு முன்னதாக ஆரம்பிக்கும் யாதொரு கால அளவு விஷயமாய் செய்யப்படும் வஜாவாவது வாபஸாவது செலாவணியாகமாட்டாது.

எந்தக் கட்டிடங்கள் முதலியவை காலியாயிருப்பதாகக் கருதப்பட வேண்டுமென்பது.

78. (1) 76, 77-வது பிரிவுகளின் காரியங்களுக்காக யாதொரு கட்டிடம், குடியிருப்பு அல்லது நிலம் - உல்லாஸமாய்ப் போவதற்கான பட்டணம் அல்லது நாட்டுப்புறத்து வீடாகப் பராமரிக்கப்பட்டுவந்தால் காலியாயிருப்பதாக கருதப்படவுமாட்டாது, யாதொரு குடியிருப்பவர் அல்லது பாயுக்காரிக்கு வாடகைக்கு விட்டிருந்து அவர் அதை வாஸ்தவத்தில் அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருந்தாலுஞ் சரி வைத்துக்கொண்டிராவிட்டாலுஞ்சரி அதன் விஷயத்தில் அவருக்கு தொடர்ச்சியான அனுபோக பாத்தியதை இருக்கும் பட்சத்தில் அது வாடகை வராதபடியிருப்பதாகக் கருதப்படவுமாட்டாது.

(2) 75-வது பிரிவின்படியாகிலும், 76-வது பிரிவின்படியாகிலும், 77-வது பிரிவின்படியாகிலும் பரிகாரம் வேண்டுமென்று சுதந்தரித்துக் கேட்க யாதொரு நபருக்கு பாத்தியதை உண்டாக்கும் சகல சங்கதிகளையும் ருஜுப்படுத்துவது அவரைப் பொறுத்ததாகும்.

காலியாயிருக்கும் யாதொரு கட்டிடம் அல்லது வீட்டில் குடியேறும் ஒவ்வொரு விஷயத்தைக் குறித்தும் நோடிஸ் கொடுக்கவேண்டுமென்பது.

79. (1) 76-வது பிரிவின்படியாகிலும் 77-வது பிரிவின்படியாகிலும் யாதொரு கட்டிடம், குடியிருப்பு இடம் அல்லது நிலத்தின் விஷயமாய் வரி வஜா செய்து கொடுக்கப்பட்டோ அல்லது வாபஸ் செய்யப்பட்டோ இருந்தால், அப்படிப்பட்ட கட்டிடம், குடியிருப்பு இடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரர் - அந்தக்கட்டிடத்தில் மறுபடியும் குடியேறினாலும் அந்த நிலத்தை மறுபடியும் அனுபோகத்தில் வைத்துக்கொண்டாலும் அந்தப்படி குடியேறினது அல்லது அனுபோகத்தில் வைத்துக்கொண்டதைக் குறித்து அதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் நோடிஸ் கொடுக்கவேண்டும்.

(2) யாதொரு சொந்தக்காரர் (1) குறிப்பிட்ட உட்பிரிவில் அவசியமென்று சொல்லியிருக்கும் நோடிஸ் கொடுக்கத் தவறினால், அவர் - எந்தக் காலத்தில் ஷை கட்டிடத்தில் மறுபடியும் குடியேறியிருந்தார்களோ அல்லது ஷை நிலம் மறுபடியும் அனுபோகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததோ அந்தக் கால அளவின் விஷயமாய் அதற்குச் செலுத்தப்படக்கூடிய வரித்தொகையில் இரட்டத்தனைக்குக் குறையாமலிருக்கவேண்டிய தொகை அளவுக்கு அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்; மேலும், அந்த அபராதமானது- ஐம்பதுரூபாயோ ஷை வரித்தொகைக்குப் பத்து மடங்குள்ள தொகையோ இவைகளில் எது அது அதிகமாயிருக்கிறதோ அந்தத் தொகைக்கு மேற்படாமலிருக்கலாம்.

அசையாப்பொருளின்மேலுள்ள பொறுப்பு.

கட்டிடங்களுக்கும் நிலங்களுக்கும் வரியானது அவைகளின் மேல் பொறுப்பாயிருக்க வேண்டுமென்பது.

80. யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் வருஷவாரி மதிப்பின்மேல் விதிக்கப்பட்ட யாதொரு வரியானது - அதற்காக கவர்ன்மெண்டாருக்குச் செலுத்தவேண்டிய நிலத்தீர்வை எதுவாகிலும் இருந்தால் அதை முதலில் செலுத்துவதற்குட்பட்டு பிரஸ்தாப கட்டிடம் அல்லது நிலத்தின் மேலுள்ள முதல் பொறுப்பாகும்.

ஆக்ட்ராய்வரி, டெர்மினல்வரி, சுங்கம்.

இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள் முதலியவைகளைப் பார்வையிடுவது.

81. ஆக்ட்ராய் வரியாவது டெர்மினல் வரியாவது சுங்கமாவது, விதிக்கப்படக்கூடிய யாதொரு கன்டோன்மெண்டின் எல்லைகளுக்குள் எவையேனும் சரக்குகளையாகிலும், வண்டிகளையாகிலும் பிராணிகளையாகிலும் கொண்டுவரும் அல்லது வரப்பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு நபரும் விதித்து வாங்கப்படக்கூடிய வரித்தொகையை நிச்சயித்தறிவதற்கு அவசியமாயிருக்கக் கூடியவரையில்—

(a) ஷை சரக்குகள், வண்டிகள் அல்லது பிராணிகளை இது விஷயத்தில் கன்டோன்மெண்ட் அதிகார சபையாரால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தர் பார்வையிடவோ, பரிசோதனை செய்யவோ அல்லது எடை போடவோ விடவேண்டுமென்றும்,

(b) அப்படிப்பட்ட சரக்குகள், வண்டிகள் அல்லது பிராணிகளுக்குச் சம்பந்தப்பட்டதாயத் தமக்குத் தெரிந்திருக்கக்கூடிய யாதொரு சங்கதியை ஷை உத்தியோகஸ்தருக்குத் தெரிவிக்க வேண்டுமென்றும் யாதொரு பில், இன்வாய்ஸ் (வார் நாமா) அல்லது அப்படிப்பட்ட யாதொரு தஸ்தாவேஜை அவருக்குக் காட்ட வேண்டுமென்றும்

அந்த உத்தியோகஸ்தர் உத்தரவு செய்யும் பட்சத்தில் ஷை ஒவ்வொரு நபரும் அந்தப்படியே செய்யவேண்டும்.

ஆக்டராய் அல்லது டெர்மினல் வரி செலுத்தாமல் தப்பித்துக்கொள்வது.

82. (1) எவையேனும் சரக்குகள், வண்டிகள், அல்லது பிராணிகளுக்கு விதிக்கப்படக்கூடிய ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கத்தைச் செலுத்தாமலாகிலும் செலுத்துவதாகச் சொல்லாமலாகிலும் யாதொரு நபர் அந்தச் சரக்குகள், வண்டிகள் அல்லது பிராணிகளை யாதொரு கன்டோன்மெண்டின் எல்லைகளுக்குள் கொண்டுவந்தாலும் கொண்டுவர எத்தனித்தாலும் அங்கே கொண்டுவருவதற்கு உடந்தையாயிருந்தாலும், அவர் - ஷை ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கத்தின் தொகைக்குப் பத்துமடங்குள்ள தொகையோ ஐம்பது ரூபாயோ இவைகளில் எது அதிகமாயிருக்கிறதோ அந்த தொகை அளவுக்கு அபராதம் விதிக்கப்படத்தக்கவராவார்; மேலும் அந்த அபராதத் தொகை-சந்தர்ப்பத்துக்கேற்றபடி அப்படிப்பட்ட ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கத்துக்கு இரட்டத்தனைக்குக் குறைவாயிருக்கக்கூடாது.

(2) கேட்கப்படுவதன்மேல் யாதொரு ஆக்ட்ராய் வரியாவது டெர்மினல் வரியாவது சுங்கமாவது செலுத்தப்படாமலிருக்கும் விஷயத்தில், அதை வசூலிக்க அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கிற உத்தியோகஸ்தர் - எந்த சரக்குகள், வண்டிகள் அல்லது பிராணிகளுக்கு ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கம் விதித்து வாங்கப்படத்தக்கதாகுமோ அந்த சரக்குகள், வண்டிகள் அல்லது பிராணிகளையாகிலும் கேட்கப்படும் தொகையைத் திருப்தி செய்வதற்குப் போதுமான மதிப்புள்ளதாயுள்ள அதன் யாதொரு பாகத்தையாகிலும் சங்கியையாகிலும் பிடித்துக்கொள்ளலாம்.

(3) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அந்தப்படி கைப்பற்றிக்கொள்ளப்பட்டதிலிருந்து ஐந்து தினம் கழிந்த பிறகும் ஷை சரக்குகள் வண்டிகள் அல்லது பிராணிகள் கைப்பற்றிக்கொள்ளப்பட்ட காலத்தில் அவை யாருடைய சுவாதீனத்தில் இருந்தனவோ அவருக்கு, விற்பனை செய்யும் காலத்தையும் இடத்தையும் நிஷ்கரிஷை செய்து எழுத்துமூலமான ஒரு நோடிஸ் அனுப்பின பிறகும், கேட்கப்படும் தொகையும் செலவுத் தொகையும் இடையில் செலுத்தப்பட்டாலன்றி மற்றப்படி, அப்பிரகாரம் கைப்பற்றப்பட்ட சொத்தையாகிலும் கேட்கப்படும் தொகையையும் அவைகளைக் கைப்பற்றி பந்தோபஸ்தில் வைத்திருந்து விற்பனை செய்ததற்காகப் பிடித்த தொகையையும் திருப்தி செய்வதற்கு அவசியமாயிருக்கக்கூடியதாயுள்ள ஷை சொத்தின் பாகத்தையாகிலும் ஏலமூலமாய் விற்பனை செய்விக்கலாம் :

ஆனால், யாதொரு விஷயத்தில் நிர்வாக உத்தியோகஸ்தரானவர் - பிரமாதமாய்ச் சேதம் உண்டாகும் பயமில்லாமல் ஐந்து நாள் வைத்துவைக்க முடியாத தன்மையுள்ளதாகவாவது, அதை வைத்துவைக்கும் செலவும், ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கமும் சேர்த்து அதன் மதிப்புக்கு மேற்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, அதை வைத்துவைக்க முடியாததாகவாவதுள்ள அழிந்துபோகக்கூடிய யாதொரு வஸ்துவை, அந்த வஸ்துவின் தன்மையை உத்தேசித்து அவருக்குத் தகுதியாகத் தோற்றக்கூடிய குறைவான கால அளவு கழிந்த பிறகு விற்பனை செய்யவேண்டுமென்று நிஷ்கரிஷை செய்யலாம்.

(4) செய்யப்பட்ட சகல செலவுகளின் தொகையையும் ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கத்தின் தொகையையும், எந்த நபருடைய சொத்து கைப்பற்றிக்கொள்ளப்பட்டதோ அந்த நபரானவர் விற்பனை ஆரம்பிப்பதற்குமுன் எந்தக் காலத்திலாவது நிர்வாக அதிகாரியிடத்தில் கொடுப்பதாகச் சொன்னால், நிர்வாக உத்தியோகஸ்தர் - கைப்பற்றிக் கொள்ளபபட்ட சொத்தை விடுதலை செய்யவேண்டும்.

(5) விற்பனை மூலமாய்க் கிடைத்த தொகையில் மிகுதி ஏதாவதிருந்தால் அதைக் கன்டோன்மென்ட் நிதிக்கு வரவாக வைத்துக்கொள்ளவேண்டும் ; மேலும், விற்பனைக்குப் பிறகு ஒரு வருஷத்துக்குள் விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல் அதை, சொத்து கைப்பற்றப்பட்ட காலத்தில் அது எந்த நபருடைய சுவாதீனத்திலிருந்ததோ அந்த நபருக்குக் கொடுத்துவிடவேண்டும் ; அல்லாமலும், அப்படிப்பட்ட விண்ணப்பம் ஏதுவும் செய்து கொள்ளப்படாவிட்டால், அது - கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய சொத்தாய்விடும்.

ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கத்தைக் குத்தகைக்கு விடுவது.

83. கன்டோன்மென்ட் அதிகார சபையார் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருடைய அனுமதியை முன்னதாகப் பெற்று ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கம் வசூலிப்பதை ஒரு வருஷத்துக்கு மேற்படாத ஒரு கால அளவுக்குக் குத்தகைக்கு விடுவது சட்டசம்மதமாகும் ; மேலும், குத்தகைதாரரும், ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கம் சம்பந்தமான நிர்வாகத்திலும் அதை வசூலிப்பதிலும் அவரால் வேலையிலே அமர்த்திக்கொள்ளப்படும் சகல நபர்களும், அது விஷயத்தில்—

(a) அவர்கள் அனுசரித்து நடந்துகொள்வதற்காக கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் செய்யப்படும் எவையேனும் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டவர்களாகவேண்டும் ;

(b) கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் இந்த ஆக்டின்படி கன்டோன்மென்ட் அதிகார சபையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்களால் செலுத்தப்படக்கூடிய அதிகாரங்களுடையவர்களாவார்கள் ; மேலும்,

(c) சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஆக்ட்ராய் வரி, டெர்மினல் வரி அல்லது சுங்கம் சம்பந்தமாய் மேல்விசாரணை புரியவும் அதை வசூலிக்கவும் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் அவர்கள் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே அதே பரிகாரங்கள் பெற பாத்தியதையுடையவர்களாவதுமல்லாமல், அதே உத்தரவாதங்களுக்கு உட்பட்டவர்களுமாவார்கள் :

ஆனால், ஜப்தி செய்யப்பட்ட எந்த வஸ்துவையும் கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய உத்தரவைப்பெற்றன்றி மற்றப்படி விற்பனை செய்யலாகாது.

அப்பீல்கள்.

வரி விதிப்புக்கு விரோதமாய்ச் செய்துகொள்ளப்படும் அப்பீல்கள்.

84. (1) இந்த ஆக்டின்படி யாதொரு வரி விதித்ததற்காவது வரியை விதித்து வாங்குவதற்காவது விரோதமாகவாகிலும் யாதொரு வரியை வாபஸ் செய்ய மறுத்ததற்கு விரோதமாகவாகிலும் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டிடத்திலோ இதுவிஷயமாய் பிரதேச கவர்ன்மென்டாரால் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் உத்தியோகஸ்தரிடத்திலோ அப்பீல் செய்துகொள்ளலாகும :

ஆனால், யாதொரு போர்ட் ஏற்பட்டிருந்து, சாதாரணமாய் எந்த நபரிடத்தில் அப்பீல் செய்துகொள்ளக்கூடுமோ அந்த நபர் போர்டின் மெம்பராயிருந்தாலும், வரி விதிக்கப்பட்டபோது அந்தப்படி மெம்பராயிருந்திருந்தாலும் பிரஸ்தாப டிவிஷனின் கம்மிஷனரிடத்திலாவது, கம்மிஷனர்கள் இராத யாதொரு மாகாணத்தில் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜினிடத்திலாவது அப்பீல் செய்துகொள்ளலாகும்.

(2) இந்தப் பிரிவின்படிக்கான யாதொரு அப்பீல் விசாரணை செய்வதன்மேல், யாதொரு வரிக்கு உட்பட்டிருப்பதைப்பற்றியாவது வரி எந்த கோட்பாட்டை அனுசரித்து விதிக்கப்பட்டதோ அந்த கோட்பாட்டைப்பற்றியாவது யாதொரு பிரசினை ஏற்பட்டு, அதுவிஷயத்தில் அப்பீல் விசாரணைசெய்யும் உத்தியோகஸ்தருக்கு நியாயமான ஒரு சந்தேகம் உண்டாகும் பட்சத்திலே, அவர் - தாமாகவேயாகிலும் அப்பீல்தாரர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலாகிலும், பிரஸ்தாப கேஸுக்குச் சம்பந்தப்பட்ட சங்கதிகளையும் எந்த அம்சம் விஷயமாய்ச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதோ அந்த அம்சத்தையும் கண்டு ஒரு ஸ்டேட்மென்ட் எழுதி, பிரஸ்தாப அம்ச விஷயத்தில் தம்முடைய அபிப்பிராயம் சகிதமாக அந்த ஸ்டேட்மென்டை ஹைக்கோர்ட்டாருடைய தீர்மானத்துக்கு அனுப்பலாம்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு விஷயம் அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படுவதன்மேல், பிரஸ்தாப கேஸில் அதற்குப் பிற்பட்ட நடவடிக்கைகள் சாத்தியமாயிருக்கக்கூடியவரையில் 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் முதல் ஷெட்யூலைச் சேர்ந்த 46-ம் அத்தியாயத்திலே ஹைகோர்ட்டாருடைய அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படும் விஷயங்கள் சம்பந்தமாய்க் கண்டிருக்கும் விதிகளை ஒத்திருக்கவேண்டும். 1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

அப்பீல் செலவுகள்

85. ஒவ்வொரு அப்பீலிலும் செலவுகளானவை - அப்பீல் விசாரணை செய்யும் உத்தியோகஸ்தருக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி விதிக்கப்படவேண்டும்.

கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடமிருந்து செலவுகளை வசூல் செய்வது.

86. யாதொரு அப்பீல்தாரருக்குச் சேரவேண்டியதாய்த் தீர்ப்பு செய்யப்பட்ட ஏதேனும் செலவுகளைக் கொடுக்கவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்ட தேதியிலிருந்து பத்து தினத்துக்குள் கன்டோன்மென்ட் அதிகார சபையார் அதை கொடுக்கத் தவறினால், செலவைத் தீர்ப்புசெய்யும் உத்தியோகஸ்தர் - அந்தத் தொகையைக் கொடுக்கும்படி கன்டோன்மென்ட் நிதியின் கையிருப்புத் தொகையை எந்த நபர் தம் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறாரோ அந்த நபருக்கு உத்தரவு செய்யலாம்.

அப்பீல் உரிமைக்குச் சம்பந்தப்பட்ட திட்டங்கள்.

87. இந்த அத்தியாயத்தின்படி யாதொரு அப்பீலை—

(a) அந்த அப்பீலானது கட்டிடங்கள் அல்லது நிலங்கள் அல்லது அவ்விரண்டின் வருஷவாரி வாடகை மதிப்பின்மேல் விதிக்கப்பட்ட வரியின் விஷயத்திலே, 69-வது பிரிவின்படி வரி விதிப்பு ஜாபிதா சரியானதென்று அதிகாரவாயிலாய் எண்பிக்கப்பட்ட தேதியிலிருந்து (அந்த ஜாபிதாவில் சம்பந்தப்பட்டவையாயிருக்கும் பதிவுகளுக்கு நகல்கள் பெறுவதற்காகப் பிடிக்கும் காலம் நீங்கலாக) மூப்பது தினங்களுக்குள்ளாகவாவது, சந்தர்ப்பத்துக்கேற்றபடி 71-வது பிரிவின் பிரகாரம் யாதொரு திருத்தம் முடிவாய்ச் செய்யப்பட்டதிலிருந்த முப்பது தினங்களுக்குள்ளாகவாவது செய்துகொள்ளப்பட்டாலன்றி மற்றப்படியும், வேறே யாதொரு வரியின் விஷயத்தில் வரி விதிப்பு அல்லது வரி விதிப்பை மாற்றுவதைக்குறித்த நோடிஸ் வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள்ளாகவாவது நோடிஸ் கொடுக்கப்படாமலிருந்தால், ஷை வரி விஷயமாய் முதலாவது பில் கொடுக்கப்பட்ட தேதிக்குப் பிறகு அடுத்த முப்பது தினங்களுக்குள்ளாகவாவது செய்துகொள்ளப்பட்டிருந்தாலன்றி மற்றப்படியும்,

(b) அப்பீலிலே விவாதத்திலிருக்கும் தொகை ஏதாவதிருந்தால் அது அப்பீல்தாரரால் கன்டோன்மென்ட் அதிகார சபையின் ஆபிஸில் டேவணித் தொகையாய்க் கட்டிவைக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படியும்

விசாரணை செய்யவுங்கூடாது தீர்மானம் செய்யவுங்கூடாது:

ஆனால், அப்பீல்தாரர் ஷை காலஅளவுக்குள் அப்பீல் செய்துகொள்ளாமற்போனதற்குப் போதுமான காரணம் தமக்கு இருந்ததென்று எந்த கோர்ட்டாருக்குமுன் அப்பீல் செய்துகொள்ளப்படுகிறதோ அந்தக் கோர்ட்டாரைத் திருப்தி செய்தால் இந்தப் பிரிவினால் அப்பீலுக்காக நிர்ணயிக்கப்பட்ட காலஅளவு கழிந்துபோன பிறகு அப்பீலை ஏற்றுக்கொள்ளலாம்.

அப்பீல் உத்தரவு முடிவானதாகுமென்பது.

88. யாதொரு மதிப்பு அல்லது வரி விதிப்பு அல்லது வரி விஷயமாய் செய்யப்பட்ட யாதொரு உத்தரவை ஊர்ஜிதப்படுத்தியோ ரத்துசெய்தோ அல்லது திருத்தியோ அப்பீல் அதிகாரியால் பிறப்பிக்கப்படும் யாதொரு உத்தரவு முடிவானதாகும்.

ஆனால், அப்பீல் அதிகாரியானவர் தாமாகவேயாவது விண்ணப்பம் செய்துகொள்ளப் படுவதன்மேலாவது, அப்பீலில் தம்மால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை, அது சம்பந்தமான பிரதம உத்தரவின் தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டால் புனர்விமரிசை செய்வது சட்டசம்மதமாகும்.

வரிகளைச் செலுத்துவதும் வசூலிப்பதும்.

வரிகளைச் செலுத்தவேண்டிய காலமும் மாதிரியும்.

89. இந்த ஆக்டின்படி வெளிப்படையாகவேறே விதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, இந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளின் பிரகாரம் விதிக்கப்பட்ட யாதொரு வரியானது - கன்டோன்மென்ட் அதிகார சபையார் பஹிரங்கமான நோடிஸ் மூலமாய் கட்டளையிடக்கூடிய தேதிகள் எவையேனும் இருந்தால் அந்த தேதிகளிலும் தவணைகள் எவையேனும் இருந்தால் அந்தத் தவணைகளிலும் செலுத்தப்படத்தக்கதாகும்.

பில் கொடுப்பது.

90. (1) யாதொரு வரி செலுத்தப்படத்தக்கதாய்விட்டால், நிர்வாக உத்தியோகஸ்தரானவர் - பாக்கியாயிருக்கும் தொகைக்காக பில் ஒன்றை அதைச் செலுத்துவதற்கு உட்பட்டிருக்கும் நபருக்கு கொடுக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு பில்லிலும் பிரஸ்தாப வரியைப்பற்றிய விவரங்களும் அந்த வரி எந்தக் கால அளவுக்காக வாங்கப்படுகிறதோ அந்தக் கால அளவையும் குறிப்பிட்டிருக்கவேண்டும்.

டிமாண்ட் நோடிஸ்.

91. (1) எந்த வரித் தொகைக்காக பில் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த வரித் தொகை அது கொடுக்கப்பட்டதிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் செலுத்தப்படாவிட்டால், நிர்வாக உத்தியோகஸ்தர் - அதைச் செலுத்துவதற்குட்பட்டிருக்கும் நபருக்கு 1-வது ஷெட்யூலில் கண்டிருக்கும் நமூனாப்படி டிமாண்ட் நோடிஸ் சேர்ப்பிக்கச் செய்யலாம்.

(2) இந்தப் பிரிவின்படி நிர்வாக உத்தியோகஸ்தர் யாதொரு நபருக்குச் சேர்பிக்கச் செய்யும் ஒவ்வொரு டிமாண்ட் நோடிஸுக்காகவும், ஒரு ரூபாய்க்கு மேற்படாமல் ஒவ்வொரு விஷயத்திலும் நிர்வாக உத்தியோகஸ்தரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய கட்டணம் - ஷை நபரால செலுத்தப்படத் தக்கதாகும்; மேலும், அது - வசூலிப்பது சம்பந்தமான செலவில சேர்த்துக்கொள்ளப்படும்.

வரியை வசூலிப்பது.

92. (1) யாதொரு வரியைச் செலுத்துவதற்குட்பட்டிருக்கும் நபர் பாக்கித் தொகையை டிமாண்ட் நோடிஸ் ப்சாப்பிக்கப்பட்டதிலிருந்து பதினைந்து தினஙகளுக்குள் செலுத்தாவிட்டாலும் அதைச் செலுத்தாதற்குப் போதுமான காரணத்தை நிர்வாக உத்தியோகஸ்தருக்குத் திருப்திகரமாகக் காட்டாவிட்டாலும், அந்தத் தொகையை 2-வது ஷெட்யூலில் கண்டிருக்கிற நமூனாப்படி வாரன்ட் பிறப்பித்து (வரி செலுத்தத்) தவறிப் போனவரின் அசையும் பொருளை ஜப்தி செய்து விறபனை செயவதுமூலமாக வசூலிக்கலாம்:

ஆனால, நிர்வாக உத்தியோகஸ்தரானவர் - எந்தத் தொகையைச் செலுத்துவதற்குள்ள பொறுப்பானது இந்த அத்தியாயத்தின்படி அப்பீல் செய்து கொண்டதன்மேல் வஜா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தத் தொகையை வசூலிக்கக்கூடாது.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு வாரன்டிலும் நிர்வாக உத்தியோகஸ்தர் கையெழுத்து போட்டிருககவேண்டும்.

ஜப்தி.

93. (1) கன்டோன்மென்ட் அதிகார சபையைச் சேர்ந்த எந்த ஊழியக்காரருடைய மேல்விலாசத்துக்கு 92-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு வாரன்ட எழுதப்படடிருக்கிறதோ அந்த ஊழியக்காரர் (வரி செலுத்தத்) தவறிப் போனவராக அதில் பெயர் கண்டிருக்கும் யாதொரு நபருடைய அசையும பொருள் எவ்விடத்தில் காணப்பட்டாலும் அதை அடியிற்கண்ட திட்டங்களுக்கும் விலக்குகளுக்கும் நிவாரணைகளுக்கும் உட்பட்டு ஜப்தி செய்வது சட்டசம்மதமாகும்; அவையாவன :—

(a) அடியிற்கண்டிருக்கும் சொத்தை ஜப்தி செய்யக்கூடாது :—

(i) (வரி செலுத்தத்) தவறிப்போனவர், அவருடைய மனைவி, குழந்தைகள் ஆகிய இவர்களுக்கு அவசியமாயிருககிற அணிந்துகொளளும் உடைகளும் படுக்கைகளும்;

(ii) கைத்தொழிலாளர்களின் கருவிகள்;

(iii) கணக்கு புஸ்தகங்கள்; அல்லது

(iv) (வரி செலுத்தத்) தவறிப்போனவர் விவசாயம் செய்கிறவராயிருக்கும் போது அவருடைய உழவுத் தொழில் சம்பந்தமான ஆயுதங்கள், விதை, தானியம் (வரி செலுத்தத்) தவறிப்போனவர் பிழைப்புக்கு வேண்டிய பொருளைச் சம்பாதித்துக்கொள்வது சாத்தியமாயிருக்கும்படிச் செய்வதற்கு அவசியமாயிருக்கக்கூடிய கால்நடைகள்.

(b) ஜப்தியானது (அளவுக்கு) அதிகமாயிருக்கக்கூடாது; அதாவது, ஜப்தி செய்யப்படும் சொத்தானது சாத்தியமான மட்டிலே மதிப்பில் வாரன்டினபடி வசூலிக்கத் தக்கதாகும் தொகைக்குச் சமமானதாயிருக்கவேண்டும்; மேலும், ஜப்தி செய்யப்பட்டிருக்கக்கூடாதென்று நிர்வாக உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்படுகிற யாதொரு சொத்து ஜப்தி செய்யப்பட்டிருந்தால், அதை வாபஸ் செய்துவிடவேண்டும்.

(2) யாதொரு ஜப்தி வாரன்டை நிறைவேற்றும் பொறுப்பு ஏற்படுத்தப் பெற்றிருக்கும் யாதொரு நபர் - அப்படிப்பட்ட வாரன்டினபடி தாம் கைப்பற்றுகிற சொத்தைக் குறித்த ஜாபிதா ஒன்றை உடனே தயார்செய்ய வேண்டும்; மேலும், அவர் - அதே சமயத்திலே 3-வது ஷெட்யூலில் கண்டிருக்கும் நமூனாப்படி எழுத்து மூலமான நோடிஸ் ஒன்றை, சொத்தைக் கைப்பற்றுங் காலத்தில் அதை சுவாதீனத்தில் வைத்துக் கொண்டிருந்தவருக்குக் கொடுத்து, மேலே சொல்லப்பட்ட சொத்து அதில் கண்டிருக்கிறபடி விற்பனை செய்யப்படுமென்று அதில் காணவேண்டும்.

ஜப்தி செய்யப்பட்ட சொத்தை ஒருவகை செய்வது.

94. (1) ஜப்தி செய்யப்பட்ட சொத்து சீக்கிரமாயும் இயற்கையாயும் அழிந்து போவதற்குட்பட்டதாயிருந்தாலும், அதை பந்தோபஸ்தில் வைத்து வைப்பதற்குப் பிடிக்கும் செலவுடன் வசூலிக்கப்படவேண்டிய தொகையைச் சேர்க்கும்போது அந்த தொகை வெகுசாய் அதன் மதிப்புக்கு மேற்படுவதாயிருந்தாலும், நிர்வாக அதிகாரியானவர் - கைப்பற்றப்பட்டபோது சொத்து எந்த நபருடைய சுவாதீனத்திலிருந்ததோ அந்த நபருக்கு அது உடனே விற்பனை செய்யப்படுமென்று கண்டு நோடிஸ் கொடுத்து, வாரன்டில் கண்டிருக்கும் தொகை உடனே செலுத்தப்பட்டாலன்றி மற்றப்படி, அதை அப்பிரகாரமே விற்பனை செய்து விடவேண்டும்.

(2) அதற்கிடையில் வாரன்டானது நிர்வாக உத்தியோகஸ்தரால் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்கப்படாவிட்டாலும் விடுதலை செய்யப்படாவிட்டாலும் கைப்பற்றப்பட்ட சொத்தை, 93-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சேர்ப்பிக்கப்பட்ட நோடிஸில் கண்ட கால அளவு கழிந்துபோன பிறகு நிர்வாக உத்தியோகஸ்தருடைய உத்தரவைக் கொண்டு விற்பனை செய்துவிடவேண்டும்.

(3) விற்பனை செய்ததனால் கிடைத்த பணத்தில் மிகுதி ஏதாவது இருந்தால் அதைக் கன்டோன்மென்ட் நிதிக்கு வரவு வைத்துக்கொண்டு, அந்தப்படி வரவு வைத்துக் கொண்டதைக் குறித்து நோடிஸ் ஒன்றை, எந்த நபருடைய சுவாதீனத்திலிருந்து பிரஸ்தாப சொத்து எடுத்துக்கொள்ளப்பட்டதோ அந்த நபருக்கு அதே காலத்தில் கொடுக்க வேண்டும்; மேலும், ஷை மிகுதித் தொகை அந்த நோடிஸின் தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்குள் கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு விண்ணப்பம் எழுதி அதன் மூலமாகச் சுதந்தரித்துக் கேட்கப்பட்டால், அதை அந்த நபருக்கு வாபஸ் செய்துவிடவேண்டும். மேற்சொல்லியபடி ஒரு வருஷ காலத்துக்குள் சுதந்தரித்து கேட்கப்படாத யாதொரு மிகுதித் தொகையானது - கன்டோன் மென்ட் அதிகார சபையாருடைய சொத்தாய்விடும்.

(4) இந்த அத்தியாயத்தின்படி செய்யப்படும் ஒவ்வொரு ஜப்திக்காகவும் ஒரு ரூபாய்க்கு மேற்படாமல் ஒவ்வொரு விஷயத்திலும் நிர்வாக அதிகாரியால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய தொகையளவுக்குக் கட்டணம் விதிக்கப்படும்; மேலும், அந்தக் கட்டணமானது - வசூலிப்பதைக் குறித்த செலவுகளில் சேர்க்கப்படும்.

கன்டோன்மென்டை விட்டு போவதாயிருக்கும் நபரிடத்திலிருந்து வசூலிப்பது.

95. (1) யாதொரு நபரிடமிருந்து யாதொரு வரியின் பொருட்டு ஏதாவது தொகை பாக்கியாயிருந்து, அவர் கன்டோன்மென்டை விட்டு அப்புறம் போகப்போகிறார் என்று நம்புவதற்கு நிர்வாக உத்தியோகஸ்தருக்கு முகாந்தரமிருந்தால், அவர் - ஷை நபரிடமிருந்து அந்தப்படி பாக்கியாயிருக்கிற அல்லது பாக்கியாக ஏற்படுவதாயிருக்கிற தொகை உடனே செலுத்தப்படவேண்டுமென்று கட்டளையிடுவதுமல்லாமல், அந்தத் தொகைக்காக ஒரு பில்லை அந்த நபருக்குச் சேர்ப்பிக்கும்படிச் செய்யவும் வேண்டும்.

(2) அப்படிப்பட்ட பில் சேர்ப்பிக்கப்படுவதன்மேல் அந்த நபர் அப்பிரகாரம் பாக்கியாயிருக்கிற அல்லது பாக்கியாக ஏற்படுவதாயிருக்கிற தொகையை உடனே செலுத்தாவிட்டால், அந்தத் தொகை இந்த அத்தியாயத்தில் இதன் முன்னால் சொல்லியிருக்கிற மாதிரியாய் ஜப்தியும் விற்பனையும் செய்வது மூலமாக வாங்கப்படத் தக்கதாகும்; ஆனால், (வரி செலுத்தத்) தவறிப்போனவருக்கு யாதொரு டிமாண்ட் நோடிஸும் ஜப்திக்காக வாரன்டும் சேர்ப்பிப்பது அவசியமல்ல; மேலும், யாதொரு காலதாமதமில்லாமல் விற்பனையைத் தொடங்கி நிறைவேற்றலாம்.

வசூலிப்பதற்காக வியாஜ்ஜியம் தொடருவதற்குள்ள அதிகாரம்.

96. (வரி செலுத்தத்) தவறிப் போனவர்மேல் இந்த அத்தியாயத்தில் இதன் முன்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடி ஜப்தி, விற்பனை ஆகிய இவைகள் மூலமாக நடவடிக்கை நடத்துவதற்கு பதிலாகவாகிலும் (வரி செலுத்தத்) தவறிப்போனவரின்மேல் அந்தப்படி நடவடிக்கை நடத்தியும் அது சித்திகரமாயிராமற்போன பிறகாகி

லும் அது சிறிதுமட்டில் மாத்திரமே சித்திகரமாயிருந்த பிறகாகிலும் யாதொரு வரியின் பொருட்டு அந்தப்படி (வரி செலுத்தத்) தவறிப்போனவரிட மிருந்து சந்தர்ப்பத்துக்கேற்றபடி பாக்கியாயிருக்கிற யாதொரு தொகையையாவது பாக்கியில் நிலுவையாயிருக்கிற தொகையையாவது தகுதியான விசாரணை அதிகாரம் பெற்றிருக்கும் யாதொரு கோர்ட்டில் வியாஜ்ஜியமூலமாக அவரிடமிருந்து வசூலிக்கலாம்.

வரி விதிப்பு சம்பந்தமான விசேஷ நிபந்தனைகள்.

1881-ம் ௵த்து 11-வது ஆக்ட்.

வரி விதிக்காமல் தடுக்கவாவது வரி விதிப்பதினின்றும் நிவாரணை செய்யவாவதுள்ள அதிகாரம்.

97. 1881-ம் ௵த்து மியுனிஸிபல் வரிவிதிப்பு ஆக்ட் 3-வது, 4-வது பிரிவுகளில் கண்ட காரியங்களுக்காக ஒவ்வொரு கன்டோன்மெனட் அதிகார சபையாரும் மியுனிஸிபல் கம்மிட்டியாரா யிருப்பதாகக் கருதப்படுவார்கள்.

சில விஷயங்களில் (இடங்களை) சுத்தியாய் வைத்திருப்பதற்கு விசேஷ ஏற்பாடு செய்வதற்குள்ள அதிகாரம்.

98. யாதொரு தொழிற்சாலை, ஹோட்டல், க்ளப் என்னும் போஜனத்திற்கும் வசிப்பதற்குமான விடுதி அல்லது யாதொரு காரியத்துக்காக உபயோகிக்கப்படும் யாதொருவருடைய நிர்வாகத்தின் கீழிருந்தும் வரும் கட்டிடங்கள் அல்லது நிலங்களின் தொகுதியைச் சுத்தி செய்வதற்காக கன்டோன்மென்ட் அதிகார சபையார் விசேஷ ஏற்பாடு செயவதுமல்லாமல், விசேஷ வீதம் ஒன்றையும் அதை நிர்ணய காலங்களுக்கு ஒரு முறையாகச் செலுத்துவதற்கான தேதிகளையும் இதர திட்டங்களையும் நிஷ்கரிஷையும் செய்யலாம்; அந்த வீதங்கள் முதலியவைகளை மேற்படி தொழிற்சாலை, ஹோட்டல், க்ளப் அல்லது கட்டிடங்கள் அல்லது நிலங்களின் தொகுதி விஷயமாய் சுத்திசெய்வதுசம்பந்தமான வரியையாவது கக்கூஸ் வரியையாவது செலுத்துவதற்கு உட்பட்ட நபருடன் செய்துகொள்ளப்படும் எழுத்து மூலமான உடன்படிக்கையைக் கொண்டு நிச்சியிக்கவேண்டும்:

ஆனால், மேற்படி தொகையை நிஷ்கரிஷை செய்யும்போது, செய்யப்படும் ஊழியங்களுக்காக வெகுசாய் கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குப் பிடிக்கக்கூடிய செலவை கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

98-வது பிரிவின்படி நிபந்தனை ஏற்படுத்தப்பட்டால் சாதாரண வரியினின்றும் நிவாரணை.

99. 98-வது பிரிவை அனுசரித்து யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் யாதொரு தொழிற்சாலை, ஹோட்டல், க்ளப், அல்லது நிலங்கள் அல்லது கட்டிடங்களின் தொகுதிக்காக விசேஷ வீதம் ஒன்றை நிஷ்கரிஷை செய்திருந்தால், மேற்படி வளவுகள் கன்டோன்மென்டில் விதிக்கப்படும் சுத்திசெய்வதுசம்பந்தமான யாதொரு வரியினின்றாவது யாதொரு கக்கூஸ் வரியினின்றாவது நிவாரணையாக வேண்டும்.

தரித்திரர்களாயுள்ள நபர்கள் நிவாரணையாவது.

100. இந்த ஆக்டின்படி விதிக்கப்படும் யாதொரு வரியையாவது வரியின் பாகத்தையாவது யாதொரு நபர் தரித்திரம் காரணமாக செலுத்த முடியாதென்று யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்படும் பட்சத்தில், அவர்கள் - ஒரு தடவையில் ஒருவருஷத்துக்கு மேற்படாத கால அளவுக்கு அந்த வரி செலுத்துவதினின்றும் அவரை நிவாரணை செய்யலாம்.

ராஜி ஏற்பாடு.

101. (1) பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருடைய அனுமதியை முன்னதாகப் பெற்று, யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - யாதொரு வரி விஷயமாய் ராஜி ஏற்பாடு செய்து கொள்ள யாதொரு நபருக்கு அனுமதி கொடுக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு விஷயமாக ராஜி ஏற்பாடு செய்து கொண்டது காரணமாய் பாக்கியாக ஏற்படும் ஒவ்வொரு தொகையும் - அது வரியாயிருந்தால் எப்படியோ அப்படியே வசூலிக்கப்படத்தக்கதாகும்.

வசூலிக்க முடியாத கடன்கள்.

102. யாதொரு வரியின் பொருட்டாவது யாதொரு வரியை வசூலிப்பதன் செலவுகளின் பொருட்டாவது பாக்கியாய் ஏற்படும் யாதொரு தொகையை வசூலிக்க முடியாதென்று யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் - அந்தத் தொகையைக் கணக்கிலிருந்தும் அடித்துவிடலாம்.

(வரி விதிக்கப்பட) உட்பட்டிருக்கிறாரென்று தெரிவிக்கக் கடமைபட்டிருப்பது.

103. (1) நிர்வாக உத்தியோகஸ்தானவர் - கன்டோன்மென்டில் வாசம் செய்யும் யாதொரு நபருக்கு கடிதம் எழுதி அனுப்பி—

(a) அந்தப்படி வாசம் செய்பவர் இந்த ஆக்டின்பிரகாரம் விதிக்கப்படும் யாதொரு வரி செலுத்த உட்பட்டவரா என்றும்,

(b) அவருக்கு எவ்வளவு தொகை விதிக்கவேண்டுமென்றும்,

(c) அவர் அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருக்கிற நிலம் அல்லது கட்டிடத்தின் வருஷவாரி மதிப்பு இவ்வளவென்றும் அதன் சொந்தக்காரர் அல்லது குத்தகைதாரரின் பெயரும் மேல்விலாசமும் இன்னவையென்றும்
நிச்சயித்தறிவதற்காக அவசியமாயிருக்கக்கூடிய சங்கதி சவதரிக்கும்படி கேட்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சங்கதி சவதரிக்க வேண்டுமென்று யாதொரு நபரைக் கேட்டிருந்த, அவர் அந்த சங்கதி சவதரிக்காமல் போய்விட்டாலும் தமக்கு நன்றாய்த் தெரிந்தவரையிலாவது நம்பக்கூடிய வரையிலாவது மெய்யாயிராத சங்கதி சவதரித்தாலும், அவர் - நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கவராவார்.

முக்கியாம்சத் தன்மையாயிராத பிழை பொறுப்பை பாதிக்கமாட்டாதென்பது.

104. இந்த ஆக்டிலும் அதன்படி செய்யப்பட்ட விதிகளிலும் சகாயச் சட்டங்களிலும் கண்டிருக்கும் கட்டளைகளை அனுசரித்து முக்கியாம்சத்திலும் வாஸ்தவமாயும் நடந்துகொண்டிருந்தால், யாதொரு வரி அல்லது கட்டணம் செலுத்துவதற்கு உட்பட்டிருக்கும் நபரின் பெயர் விஷயமாகவாவது யாதொரு சொத்து அல்லது வஸ்துவைக் குறித்த விவரத்திலாவது யாதொரு பிழையிருப்பது காரணமாக மாத்திரமே யாகிலும், வரி விதிப்பு, கட்டணம் அல்லது டிமாண்ட் தொகை விஷயத்தில் யாதொரு பிழையிருப்பது காரணமாக மாத்திரமே யாகிலும் அந்த வரிவிதிப்பைப் பற்றியும் அந்த வரியின் பொருட்டோ கட்டணத்தின் பொருட்டோ வாங்கப்படும் தொகை அல்லது டிமாண்ட் செய்யப்படும் தொகையைப் பற்றியும் குற்றம் சொல்லவுங் கூடாது, அதற்கு பாதகம் ஏற்படவுமாட்டாது ; ஆனால், அப்படிப்பட்ட யாதொரு பிழையின் காரணமாக யாதொரு நபருக்கு விசேஷமாய்ச் சேதம் நேரிட்டால், அவர் - தகுதியான விசாரணை அதிகாரம் பெற்றிருக்கும் யாதொரு கோர்ட்டில வியாஜ்ஜியம் செய்து அதன் மூலமாக அதற்குப் பிரதிபலன் பெற பாத்தியதை யுடையவராவார்.

முக்கியாம்சத் தன்மையாயிராத குறை காரணமாக ஜப்தி சட்டசம்மதமற்றதாய்விடமாட்டாதென்பது.

105. இந்த அத்தியாயத்தின்படி செய்யப்படும் எந்த ஜப்தியும் - டிமாண்ட் நோடிஸ் நமூனாவிலாவது ஜப்தி வாரன்ட் நமூனாவிலாவது வேறே நடவடிக்கையின் நமூனாவிலாவது யாதொரு குறையிருப்பதனால் மாத்திரமே சட்டபடிக்கில்லாததாய்க் கருதப்படவு மாட்டாது அந்தப்படி ஜப்திசெய்யும் நபர் ஹத்துமீறி நடந்தவராகக் கருதப்படவுமாட்டார் ; மேலும், அப்படிப்பட்ட யாதொரு நபர் - பிற்பட்டு தம்மால் ஒழுங்கீனமாய்ச் செய்யப்படும் யாதொரு காரியத்தின் காரணமாக முதலில் ஹத்துமீறி நடந்தவராகக் கருதப்படமாட்டார் ; அதனால், அப்படிப்பட்ட யாதொரு ஒழுங்கீனம் காரணமாக யாதொரு நபருக்கு விசேஷமாய்ச் சேதம் நேரிட்டால், அவர் - தகுதியான விசாரணை அதிகாரம் பெற்றிருக்கும் யாதொரு கோர்ட்டில் வியாஜ்ஜியமூலமாகப் பிரதிபலன் பெற பாத்தியதை யுடையவராவார்.

6-ம் அத்தியாயம்.

கன்டோன்மென்ட் நிதியும் சொத்தும்.

கன்டோன்மென்ட் நிதி.

கன்டோன்மென்ட் நிதி.

106. ஒவ்வொரு கன்டோன்மென்டுக்கும் ஒரு கன்டோன்மென்ட் நிதி ஏற்படுத்த வேண்டும் ; மேலும், அடியிற்கண்ட தொகைகளை அந்த நிதிக்கு வரவாய் வைக்கவேண்டும் ; அவையாவன :—

(a) கன்டோன்மென்ட் அதிகார சபையாராலாவது அவர்களுக்காகவாவது வரப்பெற்றுக் கொள்ளப்படும் சகல தொகைகளும்,

(b) 1898-ம் ௵த்து க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட் என்னும் குற்றவிசாரணைச் சட்டத்தின் 545-வது பிரிவின்படிக்காவது அந்தந்த காலத்திலே செலாவணியாய்க் கொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டத்தின்படிக்காவது பிரதேச கவர்ன்மென்டாரின் யாதொரு உத்தரவின்படிக்காவது கழிக்கவேண்டிய தொகைகளைக் கழிப்பதற்குட்பட்டு, கன்டோன்மென்டுக்குள்— 1898-ம் ௵த்து 5-வது ஆக்ட்.

(i) இந்த ஆக்டின்படியாகிலும் அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின் படியாகிலும்,

(ii) 1861-ம் ௵த்து பொலீஸ் ஆக்ட் 34-வது பிரிவு அல்லது அதற்குப் பொருத்தமானதாய் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கும் யாதொரு சட்டத்தின்படியாகிலும், 1861-ம் ௵த்து 5-வது ஆக்ட்.

(iii) இந்தியன் பினல் கோட் 13-ம் அத்தியாயம் அல்லது 14-ம் அத்தியாயத்தின் படியாகிலும், 1860-ம் ௵த்து 45-வது ஆக்ட்.

(iv) இராணுவ ஆக்ட் 156-வது பிரிவின்படிக்காகிலும், 44 - 45, விக்ட். அ. 58.

(v) யாதொரு சட்டத்திலோ அல்லது அதன்படியோயாதொரு அபராதத்தைக் கன்டோன்மென்ட் நிதிக்கு வரவுவைத்துக் கொள்ளுவதற்கு ஏற்பாடு செய்திருந்தால் அந்த சட்டத்திறகண்ட நிபந்தனைகளின்படியாகிலும்,

(vi) அந்தந்த காலத்தில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற வேறே யாதொரு சட்டதிட்டத்தின் விஷயமாக ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் பொதுவான அல்லது விசேஷமான உத்தரவு மூலமாய், அதன்படி வசூலிக்கப்பட்ட அபராதங்கள் கன்டோன்மென்ட் நிதிக்கு வரவுவைக்கவேண்டுமென்று கட்டளையிடக் கூடுமானால், அந்த சட்டதிட்டத்தின்படியாகிலும்

செய்யப்பட்ட குற்றங்களுக்காக குற்றவாளிகளென்று தீர்மானிக்கப்பட்ட நபர்களிடமிருந்து வசூலிக்கப்படும் சகல அபராதங்களும்.

107. (1) யாதொரு கன்டோன்மென்டிலாகிலும் அதற்குச் சமீபத்திலாகிலும் கவர்ன்மென்ட் ட்ரெழரி அல்லது ஸப் ட்ரெழரியாவது இந்திய இம்பீரியல் பாங்கின் யாதொரு ப்ரான்சாவது (கிளையாவது) இருந்தால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த ட்ரெழரியிலாகிலும் பாங்கியிலாகிலும் கன்டோன்மென்ட் நிதியை வைத்திருக்கவேண்டும.

கன்டோன்மென்ட் நிதியை பந்தோபஸ்து செய்வது.

(2) அப்படிப்பட்ட ட்ரெழரியாவது ஸப் ட்ரெழரியாவது பாங்கியாவது இல்லாவிட்டால் கன்டோனமென்ட் நிதியை கவர்னமென்ட் ட்ரெழரி வேலைகள் ஒப்புவிக்கப் பெற்றிருக்கிற யாதொரு பாங்கியில் செலுத்தி வைத்திருக்கலாம்; மேலும், அப்படிபபட்ட யாதொரு பாங்கி இராமற் போகும்பட்சத்தில், அதை யாதொரு பாங்கரிடத்திலாவது பாங்கர் தொழில் நடத்துகிற யாதொரு நபரிடத்திலாவது செலுத்தி வைத்திருக்கலாம்; அந்த பாங்கர் அல்லது பாங்கர் தொழில் நடத்துகிறவர் - அப்படி செலுத்திவைக்கபபட்ட நிதியை பத்திரமாய் பந்தோபஸ்து செயவதற்கும் கேட்கும்போது திருப்பிக் கொடுத்துவிடுவதற்கும எவ்வளவு ஜாமீன் போதுமானதென்று ஒவ்வொரு விஷயத்திலும் பிரதேச கவர்ன்மெண்டார் எண்ணுகிறார்களோ அவ்வளவு ஜாமீன் கொடுத்திருக்கவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது, (2) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்று, உடனே உபயோகிப்பதற்கு வேண்டியிராமல் தம்மிடத்திலிருக்கும் எந்த மிகுதிப் பணத்தொகைகளையாவது இந்திய இம்பீரியல் பாங்கியில் நிலையான டிபாஸிட் என்னும் நிஷ்கரிஷையான ஒரு கால அளவுக்குப் பிறபட்டு வாங்கப்படும் டேவணித் தொகையாக செலுத்திவைக்கலாம்; அல்லது, இந்திய கவர்ன்மென்டாருடைய அல்லது பிரதேச கவர்ன்மென்டாருடைய பத்திரங்களிலாகிலும் இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் அங்கீகரிக்கக்கூடிய வேறே பத்திரங்களிலாகிலும் போட்டுவைக்கலாம்; மேலும், அவர்கள் அந்தபபடி போட்டுவைத்திருக்கும் தொகைகளை அதே தன்மையுள்ள வேறே பத்திரங்களின்மேல போடுவதுமல்லாமல், அவசியமாயிருக்கக்கூடிய பத்திரங்களை ஒருவகையும் செய்யலாம்.

(4) யாதொரு நிலையான டிபாஸிட்டிலிருந்தாவது, (3) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடிக்குள்ள யாதொரு பத்திரத்திலிருந்தாவது அப்படிப்பட்ட யாதொரு பத்திரத்தை விற்பனை செய்வதிலிருந்தாவது கிடைக்கும் வரும்படியைக் கன்டோன்மென்ட் நிதிக்கு வரவாக வைக்கவேண்டும்.

சொத்து.

108. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களாலாகிலும் பிரதேச கவர்ன்மென்டாராலாகிலும் தங்களிடத்திலேயே நிறுத்தி வைத்துக்கொள்ளப்படும யாதொரு விசேஷ அதிகாரத்துக்குட்பட்டு, யாதொரு கன்டோன்மெனட் அதிகார சபையாரால் அடையப்பட்டிருப்பதாய் அல்லது ஏற்படுத்தப்பட்டிருப்பதாய் அல்லது பராமரிக்கப்பட்டு வருவதாய் இந்தப் பிரிவில் இதன் பின்னால் குறிப்பிடப்பட்டிருக்கும் தன்மையுடைய சகல சொத்தும் - அந்த கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் சங்கிரமித்து அவர்களுக்குச் சொந்தமாவதுமல்லாமல் அவர்களுடைய கட்டளைகளுக்கும் நிர்வாகத்துக்கும் மேல்விசாரணைக்கும் உட்பட்டிருக்கவும் வேண்டும். ஷை சொத்து என்னவென்றால் :—

சொத்து.

(a) சகல மார்க்கெட்டுகளும், ஆடுமாடு முதலியவை அடிக்கும்தொட்டிகளும் எருவும் மலம் முதலியவையும் போட்டுவைக்கும் டெப்போக்களும் ஒவ்வொரு வகையைச் சேர்ந்த கட்டிடங்களும் ;

(b) பொதுக் காரியங்களுக்காக தண்ணீர் சர்ப்பரா செய்வதற்கு, சேர்த்து வைப்பதற்கு அல்லது பங்கீடு செய்வதற்கான சகல தண்ணீர் கட்டுவேலைகளும் சகல வாராவதிகளும் கட்டிடங்களும் என்ஜின்களும் சாமான்களும் அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட அல்லது அவைகளைச் சேர்ந்த வஸ்துக்களும் ;

(c) சகல சாக்கடைகளும், ஜலதாரைகளும், கல்வர்ட்டுகளும் (சிறிய வாராவதிகளும்), வாய்க்கால்களும் அவைகளைச் சேர்ந்த சகல கட்டுவேலைகளும் சாமான்களும் வஸ்துக்களும் ;

(d) தெருக்கள், வீடுகள், கக்கூஸுகள், சாக்கடைகள், கக்கூஸ் குழிகள் அல்லது வேறெந்த இடங்களிலிருந்தாகிலும் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் சேர்க்கப்பட்டாவது போட்டுவைக்கும் காரியத்துக்காக கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் ஏற்படுத்தப்பட்ட இடங்களில் போட்டுவைக்கப்படாவதிருக்கும் ஒவ்வொரு வகையையும் சேர்ந்த சகல தும்பும், அழுக்கும், சாணமும், சாம்பலும், கழிகடை வஸ்துக்களும், மாமிச சம்பந்தமான வஸ்துக்களும், அசுத்தங்களும் குப்பை கூளமும், இறந்த பிராணிகளின் தேகங்களும்;

(e) சகல தீபங்களும் தீப ஸ்தம்பங்களும் அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட அல்லது அவைகளைச் சேர்ந்த சகல உபகரணங்களும்;

(f) மஹாராஜ சக்ரவர்த்தியவர்களாலாவது, தானம், கிரயத்துக்குவாங்குவது அல்லது மற்றப்படியாவது பிரதேச பொதுக் காரியங்களுக்காக கன்டோன்மென்ட் அதிகாரசபையாருக்கு ட்ரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கும் சகல நிலமும் அல்லது வேறே சொத்தும்;

(g) சகல தெருக்களும் அதைச் சேர்ந்த தளவரிசைகளும் கற்களும் இதர சாமான்களும், சகல மரங்களும், கட்டுகோப்புகளும், சாமான்களும் ஆயுதங்களும் தெருக்களில் இருந்துவரும் அல்லது அவைகளைச் சேர்ந்தவையாயிருக்கும் வஸ்துக்களும்.

கன்டோன்மென்ட் சொத்தையும் நிதியையும் உபயோகப்படுத்துவது.

109. கன்டோன்மென்ட் நிதியையும் யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் சங்கிரமித்திருக்கும் சகல சொத்தையும், இந்த ஆக்டினால் அல்லது அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் வேறே யாதொரு சட்டத்திலாவது அதன்படியாவது எந்தக் காரியங்களுக்கு உபயோகிக்க வெளிப்படையாகவாயினுஞ்சரி மறை பொருளாகவாயினுஞ்சரி கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு அதிகாரங்கள் கொடுத்திருக்கிறதோ அல்லது எவை விஷயமாய் அவர்களுக்குக் கடமைகளாகிலும் பொறுப்புகளாகிலும் ஏற்படுத்தியிருக்கிறதோ அந்தக் காரியங்களுக்கு மாத்திரமே உபயோகிக்க வேண்டும்:

ஆனால், கன்டோன்மென்ட் அதிகார சபையார்—

(a) பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியுடனும்

(b) பிரதேச கவர்ன்மென்டார் விதிக்கக்கூடிய ஷரத்துகளின்மேலும் திட்டங்களின் மேலுமன்றி மற்றப்படி

கன்டோன்மென்டின் ஹத்துக்களுக்கு அப்பாலுள்ள நிலத்தை எடுத்துக்கொள்ளவாகிலும் வாடகைக்கு வாங்கிக்கொள்ளவாகிலும் அந்த ஹத்துக்களுக்கப்பால் யாதொரு கட்டுவேலையை அமைக்கவாகிலும் பணச்செலவு எதுவும் செய்யக்கூடாது;

மேலும், யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் அடியிற்கண்ட உத்தரவாதங்களையும் பொறுப்புகளையும் இதில் பின்னால் கொடுத்திருக்கும் வரிசைக கிரமததை அனுசரித்து முந்தி கவனிக்கவேண்டும்; அதாவது—

(a) சட்டப்படி யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார்மீது சுமத்தப்பட்ட அல்லது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட யாதொரு ட்ரஸ்ட்வாயிலாய் ஏற்படும் உத்தரவாதங்களுக்கும் பொறுப்புகளுக்கும்;

(b) பிரதேச அதிகார சபைகள் கடன் வாங்குவதைக் குறித்த 1914-ம் வருஷத்து 9-வது ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி வாங்கப்பட்ட யாதொரு கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கும் அதற்கு வட்டி கொடுப்பதற்கும்; 1914-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

(c) சிப்பந்தி செலவுகளைக் கொடுப்பதற்கும்;

(d) இந்த ஆக்டிலாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதியிலாவது சகாயச் சட்டத்திலாவது கண்ட நிபந்தனைகளில் யாதொரு தொகையை அவசியமாய்க் கொடுக்கவேண்டுமென்று வெளிப்படையாய்ச் சொல்லியிருந்தால் அப்படிப்பட்ட தொகையைக் கொடுப்பது.

அசையாப் பொருளை எடுத்துக்கொள்வது.

110. இந்த ஆக்டின் காரியங்களுக்காக கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு வேண்டியிருக்கும் யாதொரு நிலத்தைத் தொகை கொடுப்பதன்பேரில் நிரந்தரமாகவோ சிறிது காலத்துக்கோ எடுத்துக்கொள்வதற்குத் தடை ஏதாகிலும் இருந்தால், பிரதேச கவர்ன்மென்டார் - கன்டோன்மென்ட் அதிகார சபையார் கேட்டுக்கொள்வதன்மேல், 1894-ம் வருஷத்து நிலமெடுத்துக்கொள்வதைக் குறித்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளின்படி அதை எடுத்துக்கொள்ளத் தொடங்கலாம்; மேலும், அந்த ஆக்டின்படி தீர்ப்பு செய்யப்பட்ட தொகையையும் பிரஸ்தாப நடவடிக்கைகள் சம்பந்தமாய் கவர்ன்மென்டாரால் செய்யப்பட்ட செலவுகளையும் கன்டோன்மென்ட் அதிகார சபையார் கொடுப்பதன்மேல் அந்த நிலம் ஷை கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் சங்கிரமிக்கவேண்டும். 1894-ம் வருஷத்து 1-வது ஆக்ட்.

கன்டோன்மென்ட் நிதிக்கும் சொத்துக்கும் சம்பந்தமாய் விதிகள் செய்வதற்கான அதிகாரம்.

111. ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் - அடியிற்கண்ட சகல விஷயங்களுக்காகவுமாவது அவைகளில் எதற்காகவாவது இந்த ஆக்டுக்குப் பொருத்தமாயிருக்கும் விதிகள் செய்யலாம் ; அவையாவன :—

(a) இன்ன திட்டங்களின்மேல் கன்டோன்மென்ட் அதிகார சபையார் சொத்து அடையலாமென்பது அல்லது கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் சங்கிரமிக்கும் சொத்து விற்பனை, கொதுவை, குத்தகை, அல்லது பரிவர்த்தன மூலமாகவாவது மற்றப்படியாவது ட்ரான்ஸ்பர் பண்ணப்படலாமென்பது ;

(b) கன்டோன்மென்ட் நிதிக்காவது சொத்துக்காவது சம்பந்தப்பட்ட வேறே யாதொரு விஷயத்தைக் குறித்து இந்த ஆக்டினாலாகிலும் அதன்படியாகிலும் நிபந்தனை ஏற்படுத்தப்படாமலிருந்து அல்லது ஏற்படுத்தப்பட்ட நிபந்தனை போதுமானதல்லாததாயிருந்து, அது விஷயமாய் நிபந்தனை ஏற்படுத்துவது அவசியமாகுமென்று ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் அபிப்பிராயப்பட்டால், அப்படிப்பட்ட விஷயம்.

7-ம் அத்தியாயம்.

ஒப்பந்தங்கள்.

ஒப்பந்தங்களை இன்னார் எழுதி முடிக்கவேண்டுமென்பது.

112. இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒவ்வொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரும் - இந்த ஆக்டின் காரியங்களுக்காக அவசியமாயிருக்கும் யாதொரு ஒப்பந்தம் செய்து நிறைவேற்ற தகுதியுடையவர்களாவார்கள்.

அனுமதி.

113. (1) பன்னிரண்டு மாதத்துக்கு மேற்பட்டு அமுலில் இருக்கவேண்டிய யாதொரு குத்தகை அல்லது வேறே ஒப்பந்தத்தை, பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸருடைய அனுமதியை முன்னதாகப் பெறாமல் கன்டோன்மென்ட் அதிகார சபையாராவது அவர்களுக்காக எவராவது எழுதி முடிக்கக்கூடாது.

(2) யாதொரு ஒப்பந்தமானது—

(a) பட்ஜெட்டில் (வரவு செலவு திட்டக் கணக்கில்) ஏற்பாடு செய்யப் பெறாததாயிருந்தாலும்,

(b) நூறு ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புடையதாகவாவது தொகை பிடிப்பதாகவாவதிருந்தாலும்

அப்படிப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தத்தின் விஷயமாயும் கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய அனுமதியைப் பெறவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது, (2) குறிப்பிட்ட உட்பிரிவிலாவது சொல்லப்பட்டிருப்பதைப் போன்றதல்லாத வேறே ஒவ்வொரு ஒப்பந்தத்துக்கும் கன்டோன்மென்ட் அதிகார சபையாராவது கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் சார்பாய் நிர்வாக உத்தியோகஸ்தராவது அனுமதி கொடுக்கவேண்டும்.

ஒப்பந்தங்களை எழுதி முடிப்பது.

114. (1) கன்டோன்மென்ட் அதிகார சபையாராலாவது அவர்கள் சார்பிலாவது செய்யப்பட்டு அதன் மதிப்பு அல்லது தொகையானது நூறு ரூபாய்க்கு மேற்படாமலிருக்கும் ஒவ்வொரு ஒப்பந்தமும் எழுத்துமூலமாயிருக்கவேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தத்திலும், போர்ட் ஒன்று ஏற்பட்டிருந்தால், (அதன்) இரண்டு மெம்பர்கள் கையெழுத்து போடவேண்டும்; அவர்களில் ப்ரெஸிடென்ட் அல்லது வைஸ் ப்ரெஸிடென்ட் ஒருவராயிருக்கவேண்டும் ; மேலும், அதில் நிர்வாக உத்தியோகஸ்தர் மேற்கையெழுத்து போடவேண்டியதுமல்லாமல், அதற்கு போர்டின் பொது முத்திரையைக் கொண்டு முத்திரை போடவேண்டும் ; அல்லது, போர்ட் ஒன்று ஏற்பட்டிராவிட்டால், கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர் அதில் கையெழுத்து போடவேண்டியதுமல்லாமல், அதற்குக் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் ஆபிஸ் முத்திரையைக்கொண்டு முத்திரை போடவேண்டும் :

ஆனால், போர்ட் ஒன்று ஏற்பட்டிருக்கும்பட்சத்தில், அவசரமான யாதொரு விஷயத்திலே போர்ட் ப்ரெஸிடென்டினுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு நிர்வாக உத்தியோகஸ்தர் - மதிப்பாவது தொகையாவது நூறு ரூபாய்க்கு மேற்படுவதாயிராத யாதொரு ஒப்பந்தத்தை போர்டார் சார்பில் எழுதி முடிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு நிர்வாக உத்தியோகஸ்தர் போர்டாரின் சார்பில் யாதொரு ஒப்பந்தத்தை எழுதிமுடித்தால், அவர் - தமது நடவடிக்கையைக் குறித்தும் அதற்குள்ள காரணங்களைக் குறித்தும் போர்டாருடைய அடுத்த சபையில் அவர்களுக்கு ரிபோர்ட் செய்யவேண்டும்.

கிரமப் பிசகாய் எழுதி முடிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் கன்டோன்மென்ட் அதிகார சபையைக் கட்டுப்படுத்தமாட்டாவென்பது.

115. இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகளுக்குப் பொருத்தமாயிருக்கும்படிக்கன்றிப்படி, கன்டோன்மென்ட் அதிகார சபையாராலாகிலும் அவர்களுடைய சார்பிலாகிலும் யாதொரு ஒப்பந்தம் எழுதி முடிக்கப்பட்டால், அது கன்டோன்மென்ட் அதிகார சபையைக் கட்டுப்படுத்துவதாகமாட்டாது.

8-ம் அத்தியாயம்.

கன்டோன்மென்ட் அதிகார சபைகளின் கடமைகளும் அவர்கள் யுக்தானுசாரமாய்ச் செய்யவேண்டிய அலுவல்களும்.

கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் கடமைகள்.

116. ஒவ்வொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரும் தங்கள் வசத்தில் இருக்கும் பணத்தைக்கொண்டு ஏற்பாடு செய்யக்கூடியவரையில், கன்டோன்மென்டுக்குள் அடியிற்கண்ட விஷயங்களுக்காக நியாயமான ஏற்பாடு செய்யவேண்டும் :—

(a) தெருக்களிலும் இதர பொது இடங்களிலும் விளக்கு போடுவது ;

(b) தெருக்களிலும் இதர பொது இடங்களிலும் தண்ணீர் தெளிப்பது ;

(c) தெருக்களையும் பொது இடங்களையும் சாக்கடைகால்களையும் சுத்திசெய்வதும் அசங்கியங்களும் சங்கடங்களும் இல்லாமற்செய்வதும், தீங்குண்டாக்கத்தக்க செடிகொடி முதலியவைகளை அப்புறப்படுத்துவதும் ;

(d) அருவருப்புண்டாக்கத்தக்க அல்லது அபாயகரமான அல்லது தீங்குண்டாக்கத்தக்க வர்த்தகங்கள், வேலைகள் முறைகள் ஆகிய இவைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவது ;

(e) தெருக்களிலும் இதர பொது இடங்களிலுமுள்ளவையாயும் சோரக்கூடியவையல்லாதனவாயுமிருக்கும் தடங்கல்களையும் பிதுக்கங்களையும் பொது ஜன க்ஷேமம், தேகாரோக்கியம் அல்லது சௌகரியத்தை முன்னிட்டு அப்புறப்படுத்துவது ;

(f) அபாயகரமான கட்டிடங்களுக்கும் இடங்களுக்கும் பந்தோபஸ்து ஏற்படுத்துவதும் அவைகளை அப்புறப்படுத்துவதும் ;

(g) பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான இடங்களை அடைவதும் பராமரித்து வருவதும் மாற்றுவதும் அவைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதும் ;

(h) தெருக்கள், கல்வர்ட்டுகள், மார்க்கெட்டுகள் ஆடுமாடுகள் முதலியவை அடிக்கும் தொட்டிகள் கைகால் முதலியவை கழுவிக்கொள்ளும் இடங்கள், கக்கூஸ்களள், மூத்திரம் பெய்யும் மறைவிடங்கள், சாக்கடைக்கால்கள், சாக்கடைக்கால் சம்பந்தமான கட்டுவேலைகள், ஜலதாரை சம்பந்தமான கட்டுவேலைகள் ஆகிய இவைகளைக் கட்டுவதும் மாற்றுவதும், பராமரித்துவருவதும் ;

(i) ரஸ்தா ஓரங்களிலும் இதர பொது இடங்களிலும் மரங்கள் வைப்பதும் அவைகளைப் பராமரித்துவருவதும் ;

(j) சுத்தமானதும் ஆரோக்கியமானதுமான ஜலத்தை சர்ப்பரா செய்வது அல்லது அதற்காக ஏற்பாடு செயவதும், ஜனங்கள் குடிப்பதற்காக உபயோகிக்கப்படும் ஜலம் கெட்டுப்போகாதபடி பார்த்துக்கொள்வதும் கெட்டுப்போன ஜலத்தை அதற்காக உபயோகிக்காமல் தடுப்பதும் ;

(k) ஜனன மரணங்களை ரெஜிஸ்டர் செய்வது ;

(l) பொது ஜனங்களுக்கு அம்மைகுத்தும் முறையை ஸ்தாபித்து அதைப் பராமரித்துவருவது ;

(m) பொது ஆஸ்பத்திரிகளையும் டிஸ்பென்ஸரிகளையும் ஸ்தாபித்து அவைகளைப் பராமரித்துவருவது அல்லது ஆதரிப்பதும் பொது ஜனங்களுக்கு வைத்திய சிகிச்சைக்காக ஏற்பாடு செய்வதும் ;

(n) மூலாதார பாடசாலைகளை ஸ்தாபிப்பதும் பராமரித்துவருவதும் ;

(o) தீ பற்றிக்கொள்ளும் விஷயங்களில் அதை அவிப்பதற்கு உதவிபுரிவதும் தீ பற்றிக்கொள்ளும் விஷயங்களில் பிராணத்தையும் சொத்தையும் காப்பாற்றுவதும் ;

(p) கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் சங்கிரமித்திருக்கிற அல்லது அவர்களுடைய நிர்வாகத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற சொத்தின் மதிப்பு குறையாமல் பார்த்துக்கொள்வதும் அந்த மதிப்பை அதிகப்படுத்துவதும் ;

(q) இந்த ஆக்டினுல் அல்லது அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் வேறே சட்டத்தினுலாவது அதன்படியாவது அவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய வேறே யாதொரு பொறுப்பை நிறைவேற்றுவது ;

கன்டோன்மென்ட் அதிகார சபையார் யுக்தானுசாரமாய்ச் செய்யவேண்டிய அலுவல்கள்.

117. யாதொரு கன்டோன்மென்டுக்குள், கன்டோன்மென்ட் அதிகார சபையார்—

(a) ஏற்கனவே கட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தாலுஞ்சரி கட்டப்பட்டிராவிட்டாலுஞ்சரி (எவையேனும்) விஸ்தீர்ணங்களில் புதிதாய்த் தெருக்கள் அமைப்பதற்காகவும் அது காரியத்துக்காக நிலம் எடுத்துக்கொள்வதற்காகவும் அந்தத் தெருக்களைச் சார்ந்திருக்கும்படி கட்டிடங்களையும் அந்தக் கட்டிடங்களின் காம்பௌண்டுகளையும் (சுற்றிலுமுள்ள தோட்டம் முதலிய வளவுகளையும்) கட்டுவதற்காகவும்,

(b) பொது பார்க்குகள் (உத்தியானவனங்கள்), தோட்டங்கள், ஆபீஸுகள், பாற்சாலைகள், ஸ்நானம் செய்வதற்கு அல்லது துணி முதலியவை தோய்ப்பதற்கான இடங்கள், குடிக்கும் ஜலத்துக்கான குழாய்கள், குளங்கள், கிணறுகள், பொது ஜனங்களுக்கு உபயோககரமான இதர கட்டுவேலைகள் ஆகிய இவைகளை அமைப்பதற்காகவும் அல்லது தாஸ்பிப்பதற்காகவும் அல்லது பாராமரித்துவருவதற்காகவும்,

(c) அனாரோக்கியமான பிரதேசங்களைச் சீர்படுத்துவதற்காகவும்,

(d) மூலாதார பாடசாலைகளை ஸ்தாபிப்பதும் பாராமரிப்பதுமல்லாமல் வேறே நடவடிக்கைகள் மூலமாக கல்வி சம்பந்தமான காரியங்களை விருத்தி செய்வதற்காகவும்,

(e) (கானிஷ்மாரி) ஸென்ஸஸ் கணக்கெடுப்பதற்காகவும் ஜனனமரண விவரங்களைச் சரியாய் ரெஜிஸ்டர் செய்வது சாத்தியமாயிருக்கும்படிச் செய்வதற்கு உபயோககரமாயிருக்கக்கூடிய சங்கதி தெரிவிப்பதற்காகவும்,

(f) ஸர்வே செய்வதற்காகவும்,

(g) வைத்திய சிகிச்சைக்கான வேலைகளை ஸ்தாபித்தோ பராமரித்தோ அல்லது மற்றப்படியோ பிரஸ்தாப பிரதேசத்துக்குள் பெருவாரி வியாதிகள் தோன்றுவதன்மேல வைத்திய பரிகாரம் ஏற்படுத்துவதற்காகவும்,

(h) எவையேனும் அருவருக்கத்தக்க அல்லது அபாயகரமான அல்லது தீங்குண்டாக்கத்தக்க வர்த்தகம் வேலை அல்லது தொழிலுக்குத் தகுதியான இடங்கள் கிடைக்கும்படி செய்வதற்காகவும் அதற்கு உதவிபுரிந்தும்,

(i) சாக்கடை ஜலத்தை ஒருவகை செய்வதற்கான பண்ணையையாவது வேறே இடத்தையாவது ஸ்தாபிப்பதற்காகவும் பாராமரித்து வருவதற்காகவும்,

(j) ட்ராம்வேக்கள் அல்லது சாமான்களையும் பிரயாணிகளையும் ஒரு இடத்திலிருந்து மற்றொரிடத்துக்குக் கொண்டுபோகும் வேறே சாதனங்களையும் மின்சார விளக்குகள் அல்லது மின்சார கட்டுவேலைகளையும் அமைப்பதற்காகவும் அவைகளுக்கு திரவிய சகாயம் செய்வதற்காகவும் அவைகளிலிருந்து சரியான லாபம் கிடைக்குமென்று உத்தரவாதம் செய்வதற்காகவும்,

(k) 116-வது பிரிவிலாகிலும் இந்தப் பிரிவின் முந்திய நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட காரியங்களாயிராமல், கன்டோன்மென்டில் வாசம் செய்பவர்களின் க்ஷேமம், தேகாரோக்கியம் அல்லது சௌகரியத்தை வெகுசாய் விருத்தி செய்யக்கூடிய யாதொரு காரியம் செய்வதற்காகவும், அல்லது

(l) யாதொரு காரியத்தைச் செய்வதற்காக பணம் செலவு செய்வது கன்டோன்மென்ட் நிதிக்குத் தகுந்த பொறுப்பாகுமென்று பிரதேச கவர்ன்மென்டாராலாவது பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியைப்பெற்று கன்டோன்மென்ட் அதிகார சபையாராலாவது நிர்ணயிக்கப்பட்டிருந்தால், அப்படிப்பட்ட யாதொரு காரியத்தைச் செய்வதற்காகவும்

ஏற்பாடு செய்யலாம்.

9-ம் அத்தியாயம்.

பொதுஜன க்ஷேமமும் அசங்கியங்கள் அல்லது சங்கடங்களை அடக்குவதும்.

பொது அசங்கியங்கள் அல்லது சங்கடங்கள்.

அசங்கியங்கள் அல்லது சங்கடங்கள் விளைத்தால் தண்டனை.

118. (1) யாராகிலும்—

(a) யாதொரு கன்டோன்மென்டுக்குள் யாதொரு இடத்திலாவது வேறே பொது இடத்திலாவது—

(i) குடித்துவிட்டு ஒழுங்குத்தவறி நடந்துகொண்டாலும், குடித்துவிட்டுத் தம்மைத் தாம் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்வதற்குச் சக்தியற்றவராயிருந்தாலும்,

(ii) அமைதியைக் கலைக்கும் நோக்கத்துடனாகிலும் வெகுசாய் அமைதி கலையக் கூடியபடியாகிலும் பயமுறுத்தும் சொற்களாவது வசைச் சொற்களாவது கோபமூட்டும் சொற்களாவது உபயோகித்தாலும் பயமுறுத்தும் அல்லது கோபமூட்டும் மாதிரியாக நடந்துகொண்டாலும்,

(iii) மூத்திரம் பெய்தாலும் வேண்டுமென்றோ ஒழுங்குதவறும்படியோ தம்முடைய தேகத்தை வெளியே காட்டினாலும்,

(iv) வேலையின்றி திரிந்துகொண்டிருந்தாலும் பிச்சைவேண்டுமென்று மிக வருந்திக் கேட்டாலும்,

(v) தருமம் செய்யும்படித் தூண்டும் நோக்கத்துடன் தம் தேகத்திலுள்ள யாதொரு விகார ரூபத்தையாவது வியாதியையாவது அருவருப்புண்டாக்கத்தக்க காயம் அல்லது புண்ணையாவது திறந்து வைத்துக்கொண்டிருந்தாலும் வெளியே காட்டினாலும்,

(vi) பொது ஜனங்கள் பார்க்கக்கூடியபடி மாமிசத்தை எடுத்துக்கொண்டு போனாலும்,

(vii) சூதாடிக்கொண்டிருக்கக் காணப்பட்டாலும்,

(viii) பிராணிகளைக் கட்டிவைத்தாலும் பாரவண்டிகளை ஒன்றாக விட்டுவைத்தாலும்,

(ix) மலம் முதலியவைகளையாவது அருவருப்புண்டாக்கத்தக்க வேறே வஸ்துவையாவது குப்பைகூள முதலியவற்றையாவது அப்புறப்படுத்தும் வேலையில் அமர்ந்திருந்து, ஷை தெரு அல்லது இடத்தில் வேண்டுமென்றாகிலும் அசட்டையினாலாகிலும் அதன் யாதொரு பாகத்தைச் சிந்தவிட்டாலும் கீழே விழவிட்டாலும் மற்றப்படி அதன் யாதொரு பாகம் கீழே சிந்தியாயினும் விழுந்தாயினுமிருந்து அதைச் செவ்வையாய் அப்புறப்படுத்தாமல் அசட்டை செய்தாலும்,

(x) கிரமமான அதிகாரம் பெறாமல் யாதொரு கட்டிடம், ஞாபகச்சின்னம், கம்பம், சுவர், அடைப்பு மரம் அல்லது வேறே வஸ்துவின்மேல் யாதொரு பில், நோடிஸ் அல்லது வேறே தஸ்தவேஜை ஒட்டினாலும்,

(xi) கிரமமான அதிகாரம் பெறாமல் யாதொரு கட்டிடம், ஞாபகச்சின்னம், கம்பம், சுவர், அடைப்பு மரம் அல்லது வேறே வஸ்துவை விகாரப்படுத்தினாலும் அதன்மேல் எழுதினாலும் மற்றப்படி அதற்கு அடையாளம் போட்டாலும்,

(xii) இந்த ஆக்டின்படி ஒட்டப்பட்டிருக்கும் அல்லது காட்டிவைக்கப்பட்டிருக்கும் யாதொரு நோடிஸ் அல்லது வேறே தஸ்தவேஜைக் கிரமமான அதிகாரம் பெறாமல் அப்புறப்படுத்தினாலும், அழித்தாலும், விகாரப்படுத்தினாலும் மற்றப்படி கெடுத்தாலும்,

(xiii) கிரமமான அதிகாரம் பெறாமல் யாதொரு தெருவைச் சேர்ந்த தளவரிசை, சாக்கடை, மழைத்தண்ணீர் போகும் சாக்கடைக்கால், கொடிகள் அல்லது இதர சாமான்களையாவது அப்படிப்பட்ட யாதொரு தெரு அல்லது இடத்தில் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் பராமரிக்கப்படும் யாதொரு தீபம், ப்ராக்கெட் என்னும் உபகரணம், கைகாட்டிமரம், ஹைட்ரன்ட் என்னும் ஜலசூத்திரம், தண்ணீர் குழாய் ஆகிய இவைகளையாவது எடுத்துவிட்டாலும் அவைகளுக்குச் சேதம் உண்டாக்கினாலும் அவைகளில் யாதொரு மாறுதல் செய்தாலும் மற்றப்படி அவைகளின் ஜோலிக்குப் போனாலும், பொது விளக்கை அவித்தாலும்,

(xiv) யாதொரு பிரேதத்தை நன்றாய் மூடாமலாவது தொத்து வியாதியினால் அபாயம் உண்டாவதையாகிலும் பொது ஜன தேகாரோக்கியத்துக்குத் தீங்கு விளைவதையாகிலும் சமீபமாய்ப் போகிறவர்களுக்கோ அல்லது சமீபத்தில் வாசஞ்செய்யும் நபர்களுக்கோ தொந்தரவு உண்டாவதையாகிலும் தடுப்பதற்குக் கிரமமாய் முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யாமலாவது கொண்டுபோனாலும்,

(xv) பகிரங்கமான நோடிஸ் மூலமாய்க் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் தடுக்கப்பட்டிருக்கும் யாதொரு மணிநேரத்திலாவது இது காரியத்துக்காகக் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் அங்கீகரிக்கப்பட்டிராத யாதொரு மாதிரியாயுள்ள வண்டியிலாவது ஏனத்திலாவது மலம் முதலியவற்றையாகிலும் அருவருப்புண்டாக்கத்தக்க வேறே வஸ்துவையாகிலும் குப்பைகூள முதலியவற்றையாகிலும் கொண்டுபோனாலும், அப்படிப்பட்ட வண்டி அல்லது ஏனத்தை உபயோகித்துக்கொண்டிருக்கும்போது அதை மூடிவைக்கத் தவறிப்போனாலும்,

(b) இது விஷயமாய் பகிரங்கமான நோடிஸ் மூலமாக கன்டோன்மென்ட் சபையாரால் பிறப்பிக்கப்படும் யாதொரு தடை உத்தரவை மீறி யாதொரு வழிநெடுக மலம் முதலியவைகளையாகிலும் அருவருக்கத்தக்க இதர வஸ்துவையாகிலும் குப்பைகூளம் முதலியவற்றையாகிலும் கொண்டுபோனாலும்,

(c) கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் நிர்வாகத்துக்குட்பட்ட யாதொரு தெரு அல்லது வேறே பொது இடத்திலாவது தரிசு அல்லது அனுபோகத்திலிராத நிலத்

திலாவது இது காரியத்துக்காக உத்தேசிக்கப்பட்டிராத யாதொரு இடத்திலாவது யாதொரு வகைப்பட்ட மண்ணையாகிலும் சாமான்களையாகிலும் யாதொரு அருவருக்கத்தக்க வஸ்துவையாகிலும் குப்பைகூளம் முதலியதையாகிலும் போட்டுவைத்தாலும் போட்டு வைக்கச் செய்தாலும் போட்டுவைக்காவிட்டாலும்,

(d) யாதொரு பிரேதத்தைத் தம்வசத்தில் வைத்திருந்து, மரணம் நேரிட்ட பிறகு இருபத்தினான்கு மணிநேரத்துக்குள் அதைப் புதைக்காவாவது தகனம் செய்யவாவது மற்றப்படி சட்டப்பிரகாரம் அதை ஒருவகை செய்யவாவது தவறிப்போனாலும்,

(e) இது காரியத்துக்காகப் பிரத்தியேகபபடுத்திவைக்கப்பட்ட யாதொரு இடத்திலே யாதொரு பிரேதக்குழி ஏற்படுத்தினாலும் யாதொரு பிரேதத்தைப் புதைத்தாலும் தகனம் செய்தாலும்,

(f) யாதொரு இடத்தைப் பொதுவாய்ச் சூதாடும் வீடாக வைத்திருந்தாலும் உபயோகித்தாலும், அந்தப்படி வைத்திருக்கவோ உபயோகிக்கவோ தெரிந்திருந்தும் அனுமதி கொடுத்தாலும் பொதுவான யாதொரு சூதாடும் வீட்டைச் சேர்ந்த காரியங்களை நடத்துவதற்கு உதவி செய்தாலும்,

(g) பொதுவான அல்லது விசேஷமான விளம்பர மூலமாக யாதொரு காலத்திலாவது இடத்திலாவது ட்ரம் என்னும் முரசாகிலும் தமுக்காகிலும் அடிக்கக்கூடாதென்றாயினும் ஹார்ன் என்னும் ஊதுகருவியாகிலும் ட்ரம்பெட் என்னும் தாரையாகிலும் ஊதக்கூடாதென்றாயினும் யாதொரு பாத்திரங்களை அடிக்கக்கூடாதென்றாயினும் பித்தளையினாலே செய்யப்பட்ட அல்லது வேறே (சங்கீதக்) கருவியை ஒலி செய்யக்கூடாதென்றாயினும் சங்கீதம் வாசிக்கக்கூடாதென்றாயினும் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் தடுக்கப்பட்டிருந்து, மேலேகண்டபடி ட்ரம் அடிப்பது முதலிய காரியங்கள் செய்தாலும்,

(h) பாட்டுபாடுவதனாலாவது வீரிடுவதனாலாவது ஆரவாரிப்பதனாலாவது பொது ஜன அமைதியைக் கலைத்தாலும்,

(i) யாதொரு நபருக்குத் தீங்காவது அபாயமாவது அச்சமாவது தொந்தரவாவது உண்டாகும்படி யாதொரு பிராணியைக் கட்டாமல் விட்டுவிட்டாலும் அசட்டை காரணமாக யாதொரு பிராணியானது அந்தப்படி தீங்கு முதலியவை செய்ய இடங்கொடுத்தாலும்,

(j) யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் அனுபோகதாரராயிருந்து, அந்தக் கட்டிடம் அல்லது நிலத்தில் யாதொரு பிராணி இறந்து போய்விட்டால் அது இறந்து போனதிலிருந்து மூன்று மணி நேரத்துக்குள்ளாவது அந்தப் பிராணி இராத்திரிகாலத்தில் இறந்துபோயிருந்தால் சூரியோதயத்துக்குப் பிறகு மூன்றுமணி நேரத்துக்குள்ளாவது—

(i) ஷை பிராணியின் சவத்தை பொது இடங்களை சுத்தியாக வைத்துக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட இலாகாகாரர்கள அப்புறப்படுத்தி ஒருவகைசெய்யும்படிச் செய்யும் பொருட்டு பிரஸ்தாப சம்பவத்தை நிர்வாக உத்தியோகஸ்தரிடத்திலாகிலும் இது விஷயமாய அவரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடத்திலாகிலும் ரிபோர்ட் செய்யாமல் அசட்டை செய்தாலும்,

(ii) பஹிரங்கமான விளம்பர மூலமாக கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் பிறப்பிக்கப்பட்ட எவையேனும் பொதுக்கட்டளைகளையாவது மேலே சொல்லப்பட்டபடிக்குள்ள ரிபோர்ட்டை வரப்பெற்றுக் கொள்வதன்மேல் நிர்வாக உத்தியோகஸ்தரால் பிறப்பிக்கப்படும் எவையேனும் விசேஷ கட்டளைகளையாவது அனுசரித்து ஷை சவத்தை அப்புறப்படுத்தாமலும் ஒருவகை செய்யாமலும் அசட்டை செய்தாலும்,

(k) கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் எழுத்துமூலமான அனுமதியைப் பெற்றும் அவர்கள் அனுமதி கொடுக்கக்கூடிய மாதிரியாகவுமன்றி மற்றப்படி மலம் முதலியவற்றையாகிலும் எருவையாகிலும் குப்பை கூளத்தையாகிலும் அருவருப்பான நாற்றம் உண்டாக்கும் வேறே யாதொரு வஸ்துவையாகிலும் சேர்த்துவைத்தாலும் உபயோகப்படுத்தினாலும்,

(l) அது காரியத்துக்காக உத்தேசிக்கப்பட்டிராத யாதொரு இடத்தை மலஜல பாதை மறைவிடமாக உபயோகித்தாலும் உபயோகிக்க அனுமதி கொடுத்தாலும்

அவர் - ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கவராவார்.

(2) யாதொரு நபர் பன்னிரண்டு வயதுக்குறைந்துள்ள சிறுவரைத் தம் விசாரணையில் வைத்திருந்து, அந்த சிறுவர் கன்டோன்மென்டிலுள்ள யாதொரு தெரு அல்லது வேறே பொது இடத்தில மூத்திரம் பெய்யாதபடி தடுப்பதற்கு நியாயமான வழி தேடாமற் போனால், அந்த நபர் - இருபத்தைந்து ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கவராவார்.

(3) யாதொரு கன்டோன்மென்டிலுள்ள யாதொரு தெருவிலாவது பொது இடத்திலாவது கட்டிவைக்கப்பட்டிருப்பதாகவாவது காவற்காரரிராமல் பட்டியாய்த் திரிந்து கொண்டிருப்பதாகவாவது காணப்படும் யாதொரு பிராணியின் சொந்தக்காரராகிலும் காவற்காரராகிலும் இருபது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கவராவார்.

(4) மேற்சொல்லியபடி கட்டி வைக்கப்பட்டிருப்பதாகக் காணப்படும் யாதொரு பிராணியை கன்டோன்மென்ட் அதிகார சபையைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது யாதொரு பொலீஸ் உத்தியோகஸ்தராவது - அந்தப் பிராணி பட்டியாய்த் திரிந்துகொண்டிருப்பதாகக் காணப்பட்டால் எப்படியோ அப்படியே அதை பௌண்டில் கொண்டுபோய் விட்டுவிடலாம்.

நாய்கள்.

நாய்களை ரெஜிஸ்டர் செய்வதும் அவைகள் விஷயமாய் மேல்விசாரணை செய்வதும்.

119. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார்- கன்டோன்மென்டுக்குள் வைத்துவரப்படும் சகல நாய்களையும் ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்துவதற்காக சகாயச்சட்டங்கள் செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட சகாயச் சட்டங்களிலே—

(a) ஒவ்வொரு ராணுவ யூனிட் என்னும் படைவகுப்பு குடியிருக்கும் லைன்களில் (வீட்டு வரிசைகளில்) வைத்துவரப்படும் சகல நாய்களையும் அந்த யூனிட்டின் கம்மாண்டிங் ஆபிஸர் ரெஜிஸ்டர் செய்யவேண்டுமென்று காணவேண்டும்;

(b) ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஒவ்வொரு நாய்க்கும் கழுத்துப்பட்டை ஒன்று போட்டு அதில் ரெஜிஸ்டர் செய்யும் அதிகாரியால் கொடுக்கப்படும் டோகன் என்னும் பில்லை ஒன்றைக் கட்டிவைக்கவேண்டுமென்று உத்தரவு செய்வதுமல்லாமல் அதைக் கொடுப்பதற்கான கட்டணத்தை நிஷ்கரிஷை செய்யவும்வேண்டும்;

(c) ரெஜிஸ்டர் செய்யப்பட்டிராத அல்லது ஷை டோகன் அணிந்துகொண்டிராத யாதொரு நாய் யாதொரு பொது இடத்தில் காணப்பட்டால், இது காரியத்துக்காக பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்ட இடத்தில் அதை மறியல் செய்துவைக்கவேண்டுமென்று உத்தரவு செய்யவேண்டும்;

(d) அந்தப்படி மறியல் செய்வதற்காக விதிக்கப்படும் கட்டணத்தை நிஷ்கரிஷை செய்யவேண்டியதுமல்லாமல், அப்படிப்பட்ட யாதொரு நாயானது சுதந்தரித்துக் கேட்கப்பட்டு அதற்குச் சம்பந்தப்பட்ட பணம் ஒரு வாரத்துக்குள் செலுத்தப்படாவிட்டால் அது கொன்றுவிடப்படுவதற்காவது மற்றப்படி ஒருவகை செய்யப்படுவதற்காவது உள்ளாகுமென்று நிபந்தனை காணவேண்டும்;

மேலும் அவைகளில், கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குத் தகுதியாகத் தோற்றுகிற காரியங்களுக்காக நிபந்தனை ஏற்படுத்தலாம்.

(3) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார்—

(a) யாதொரு நாய்க்கு வெறி பிடித்திருந்தாலும் வெறி பிடித்திருப்பதாக நியாயமாய்ச் சந்தேகிக்கப்பட்டாலும் வெறி பிடித்திருக்கிற அல்லது வெறி பிடித்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிற யாதொரு நாயாவது வேறே பிராணியாவது ஷை நாயைக் கடித்திருந்தாலும் அந்த நாயைக் கொன்றுவிடும்படி செய்யலாம் அல்லது ஷை அதிகார சபையார் கட்டளையிடக்கூடிய கால அளவுக்கு காவலில் வைத்திருக்கும்படிச் செய்யலாம்;

(b) பஹிரங்கமான விளம்பரம் பிரசித்தம் செய்து அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய தேதிக்குப் பிறகு கழுத்துப்பட்டைகளாவது அவை தனி நபர்களின் சொந்த சொத்தென்று வேறுபடுத்திக்காட்டும் அடையாளங்களாவதில்லாமல், அவைகளுக்குச் சொந்தக்காரர்கள் எவர்களாவதிருந்தால் அவர்களுடைய வீடுகளின் அடைப்புகளுக்கப்பால் தெருக்களில் பட்டியாய்த் திரிந்துகொண்டிருக்கும் நாய்கள் கொல்லப்படக்கூடுமென்று கட்டளையிடுவதுமல்லாமல் அப்பிரகாரமே அவைகளைக் கொன்றுவிடும்படியும் செய்யலாம்.

(4) இந்தப் பிரிவின்படி கொன்றுவிடப்படும் அல்லது மற்றப்படி ஒருவகை செய்யப்படும் யாதொரு நாய் அல்லது வேறே பிராணி விஷயமாய் நஷ்ட ஈட்டுத்தொகைகள் எவையும் கொடுக்கப்படத்தக்கவையாகமாட்டா.

(5) எந்த நபராகிலும் யாதொரு நாயின் சொந்தக்காரராகவாவது அதைத் தம் வசத்தில் வைத்துக்கொண்டிருப்பவராகவாவதிருந்து, அது வாய் பூட்டப்படாமலும் சங்கிலியினால் பத்திரப்படுத்தப்படாமலும் யாதொரு தெருவில் திரியாதபடி அதை நிர்ப்பந்தப்படுத்தாமல் அசட்டை செய்தால், அவர்—

(a) ஷை நாய் யாதொரு நபரை வெகுசாய்த் தொந்தரவு செய்யும் அல்லது பயமுறுத்தும் என்று அவருக்குத் தெரிந்திருக்கிற யாதொரு விஷயத்திலாவது,

(b) நாய்களின் வெறி என்னும் நோய், ஊரில் கண்டிருக்கும்போது கன்டோன்மென்ட் அதிகார சபையார் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாக நாய்களை வாய்ப்பூட்டுகளும் சங்கிலிகளுமில்லாமல் திரியவிடக்கூடாதென்று கட்டளையிட்டிருக்கும் யாதொரு விஷயத்திலாவது

நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

(6) கன்டோன்மென்டிலிருக்கும் எவராவது—

(a) தமக்குச் சொந்தமாகவாவது தம்முடைய வசத்திலாவதிருக்கும் யாதொரு துஷ்டநாயை வாய்ப்பூட்டில்லாமல் திரியவிட்டாலும்,

(b) யாதொரு நபரை எதிர்க்கவாகிலும் தொந்தரவு செய்யவாகிலும் பயமுறுத்தவாகிலும் யாதொரு நாய் அல்லது வேறே பிராணியை ஏவினாலும் தூண்டினாலும்,

(c) தமக்குச் சொந்தமாகவாவது தம் வசத்திலாவதிருக்கும் யாதொரு நாய்க்கு வெறி பிடித்திருக்கிறதென்றாகிலும் வெறி பிடித்திருப்பதாக நியாயமாய்ச் சந்தேகிக்கப்படும் யாதொரு பிராணியால் கடிக்கப்பட்டிருக்கிறதென்றாகிலும் தெரிந்திருந்தோ அல்லது நம்புவதற்குக் காரணமிருந்தோ அது விஷயத்தைக் குறித்து உடனே நிர்வாக உத்தியோகஸ்தருக்கு சங்கதி தெரிவிக்காமல் அசட்டை செய்தாலும் பொய்யாயிருக்கும் சங்கதி தெரிவித்தாலும்

அவர் - இரு நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

வண்டிகளின் போக்குவரவு.

ரஸ்தாவைக் குறித்த விதி.

120. யாராகிலும் யாதொரு தெரு வழியாய் யாதொரு வண்டியை ஓட்டுகையிலாவது செலுத்துகையிலாவது தள்ளுகையிலாவது, வாஸ்தவமாய் அவசியமாக இருக்கும் விஷயத்திலன்றி மற்றப்படி—

(a) எதிர் திசையிலிருந்து வரும் யாதொரு வண்டியைத் தாண்டிப் போகும்போது இடதுபக்கமாக போகவும்,

(b) தாம் போகும் திசையிலேயே போகும் வண்டியைத் தாண்டிப் போகும்போது வலது பக்கமாக போகவும்

தவறினால்,

அவர் - ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

தீ பிடிக்காமல் தடுப்பது முதலியது.

தீப்பற்றி யெரியத்தக்க வஸ்துக்களை கட்டிடம் கட்டும் காரியங்களுக்கு உபயோகிப்பது.

121. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகாரசபையார்-பஹிரங்கமான விளம்பரம் பிரசுரித்து, கன்டோன்மென்டிலுள்ளதாய் அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்படக்கூடிய ஹத்துக்களுக்குள் குடிசைகள் அல்லது இதர கட்டிடங்களின் கூரைகளையும் வெளிப்புறத்துச் சுவர்களையும் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் எழுத்துமூலமான அனுமதியில்லாமல் புல், பாய், இலை அல்லது தீப்பற்றி எரியத்தக்க வேறே சாமான்களைக்கொண்டு அமைக்கக்கூடாதென்றாவது புதுப்பிக்கக்கூடாதென்றாவது ஷை விளம்பர மூலமாய்க் கட்டளையிடலாம்; மேலும், அவர்கள் - மேலே சொல்லப்பட்டபடிக்குள்ள யாதொரு கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் நடந்துகொண்டிருக்கும் யாதொரு நபர் அந்தப்படி அமைக்கப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட கூரைகளையாகிலும் சுவர்களையாகிலும் அப்புறப்படுத்த வேண்டுமென்றோ அல்லது மாற்ற வேண்டுமென்றோ கண்டு எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்து உத்தரவு செய்யலாம்.

(2) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் மேலே சொல்லப்பட்டபடிக்குள்ள யாதொரு சாமானால் அமைக்கப்பட்ட வெளிப்புறத்து கூரை அல்லது சுவரையுடையதாய் கன்டோன்மென்டிலிருக்கும் யாதொரு கட்டிடத்தின் சொந்தக்காரருக்கு எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்து, (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பஹிரங்கமான விளம்பரம் செய்யப்பட்டிராவிட்டாலும் அப்படிப்பட்ட கூரை அல்லது சுவர் கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய அனுமதியுடனாகிலும் மேற்படி பஹிரங்கமான விளம்பரம் வெளியிடப்படுவதற்கு முன்னாகிலும் அமைக்கப்பட்டிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, அதை ஷை நோடிஸில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய கால அளவுக்குள் அப்புறப்படுத்த வேண்டுமென்று உத்தரவு செய்யலாம் :

ஆனால், அப்படிப்பட்ட பஹிரங்கமான விளம்பரம் வெளிவிடப்படுவதற்குமுன் ஏற்கனவே இருக்கிற அல்லது கன்டோன்மென்ட் அதிகாரசபையாருடைய அனுமதியுடன் அமைக்கப்பட்டிருக்கிற அப்படிப்பட்ட யாதொரு கூரை அல்லது சுவரின் விஷயத்திலே, ஷை அதிகார சபையார் - அப்புறப்படுத்துவதனால் ஏற்படும் யாதொரு நஷ்டத்துக்காக அந்தக் கூரை அல்லது சுவரை கட்டுவதற்குப் பிரதமத்தில் பிடித்த செலவுத்தொகைக்கு மேற்படாமல் பிரதிபலன் கொடுக்கவேண்டும்.

தீப்பற்றி யெரியத்தக்க சாமான்களை அடுக்கிவைப்பது அல்லது சேகரித்து வைப்பது.

122. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - பஹிரங்கமான விளம்பரம் பிரசுரித்து, யாதொரு விஷயத்திலே கன்டோன்மென்டுக்குள்ளாயாதொரு இடத்திலாவது அந்த விளம்பரத்தில் குறிப்பிடக்கூடியதாய் அதற்குள்ளிருக்கும் எந்த ஹத்துக்களுக்குள்ளாவது பிராணத்துக்காகிலும் சொத்துக்காகிலும் அபாயம் நேரிடாதபடி தடுக்கும் காரியத்துக்காக மரம், உலர்ந்த புல், வைக்கோல் அல்

லது தீப்பற்றி யெரியக்கூடிய வேறே சாமான்களை அடுக்கி வைப்பதையோ சேகரித்து வைப்பதையோ பாய்கள் அல்லது கிடுகு மூடிய குடிசைகள் அமைப்பதையோ தீ யெரிப்பதையோ தடுப்பது அவசியமென்று தோற்றினால் ஷை நோடிஸ்மூலமாய் அந்தப்படியே தடுக்கலாம்.

சிமினியில்லாத விளக்குகளின் விஷயத்தில் ஜாக்கிரதையாயிருப்பது.

123. எந்த நபரும் - தீப்பற்றிக்கொண்டு அபாயம் விளையக்கூடிய மாதிரியாக கன்டோன்மென்டிலிருக்கும் யாதொரு தெருவிலாவது வேறே பொது இடத்திலாவதிருக்கிற யாதொரு இடத்தின்மேலாகிலும் அதற்குச் சமீபத்திலாகிலும் சிமினி என்னும் மேல்மூடியில்லாத யாதொரு விளக்கை வைக்கக்கூடாது:

ஆனால், இந்தப் பிரிவில் சொல்லியிருப்பதெதனாலும், யாதொரு திருவிழா காலத்திலாவது பொதுவான அல்லது தனி நபர்களுக்குச் சம்பந்தப்பட்ட விநோத சம்பவத்தின் காலத்திலாவது பிரகாசம் உண்டாக்கும் காரியங்களுக்காக, கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் எழுத்துமூலமான அனுமதிக்குட்பட்டு விளக்குகள் உபயோகிப்பதற்கு தடை ஏற்படுவதாக கருதப்படமாட்டாது.

ஸினெமடக்ராப் காட்சிகள் விஷயமாயும் நாடகங்கள் விஷயமாயும் ஒழுங்கேற்படுத்துவது.

124. (1) 1918-ம் வருஷத்து ஸினெமடக்ராப் ஆக்டில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, இந்தப் பிரிவின்படி கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் லைஸென்ஸ் கொடுக்கப்பெற்றிருக்கிறதாய்க் கன்டோன்மென்டிலுள்ள யாதொரு வளவில்லாமல் வேறே எந்த இடத்திலும் ஸினெமடக்ராப் மூலமாகவாகிலும் எந்த உபகரணத்தின் காரியத்துக்காக தீப்பற்றி யெரியத்தக்க பிலிம்கள் உபயோகிக்கப்படுகின்றனவோ அப்படிப்பட்ட வேறே யாதொரு உபகரணத்தின் மூலமாகவாகிலும் படங்களை காட்டவாயினும் கண்களைக் கவரும் காட்சியைக் காட்டவாயினும் யாதொரு பொது நாடகம் அல்லது ஊமைக்கூத்தை நடத்தவாயினும் கூடாது. 1918-ம் வருஷத்து 2-வது ஆக்ட்.

(2) இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகளை மீறி யாதொரு ஸினெமடக்ராப் அல்லது வேறே உபகரணத்தின் சொந்தக்காரர் அந்த உபகரணத்தை உபயோகித்தாலும் உபயோகிக்க அனுமதி கொடுத்தாலும் யாதொரு பொது நாடகம் அல்லது ஊமைக்கூத்தில் யாதொரு நபர் சேர்ந்து பிரவர்த்தித்தாலும், எவையேனும் வளவுகளின் அனுபோகதாரர் இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகளையாகிலும் இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு லைஸென்ஸில் கண்ட திட்டங்களையாகிலும் மீறி அவைகளை உபயோகிக்க அனுமதி கொடுத்தாலும், அவர்-இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதத் தண்டனை விதிக்கப்படத்தக்கவராவதுமல்லாமல், குற்றம் தொடர்ச்சியாய் செய்துகொண்டேவரும் விஷயத்திலே, குற்றம் முதலில் செய்யப்பட்ட தினத்திற்குப் பிறகு குற்றம் தொடர்ச்சியாய்ச் செய்யப்பட்டுவரும் காலத்தில் ஒவ்வொரு தினத்துக்கும ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான அபராத தண்டனையும் விதிக்கப்படத்தக்கவராவார்.

(3) இந்தப் பிரிவில் சொல்லியிருப்பதெதனாலும், கவர்ன்மென்டாருடையதாயிருக்கும் யாதொரு நாடகசாலை அல்லது ஸ்தாபனத்திலே, யாதொரு காட்சியையாவது யாதொரு நாடகம் அல்லது ஊமைக்கூத்தையாவது ராணுவ அதிகாரிகளுடைய அனுமதியுடனும் அவர்களுடைய மேல்விசாரணையின்கீழும் நடத்துவதாயிருக்கும்பட்சத்திலே, அந்தக் காட்சி, நாடகம் அல்லது ஊமைக்கூத்தை நடத்துவதற்குத் தடை ஏற்படுவதாகக் கருதப்படமாட்டாது.

பாணங்கள் துப்பாக்கிகள் முதலியவை விடுவது.

125. யாதொரு கன்டோன்மென்டுக்குள் யாராகிலும் துப்பாக்கி முதலியவை சுட்டாலும் பாணங்கள் அல்லது தீபம் வைக்கப்பட்டிருக்கும் புகைக்கூண்டுகளை விட்டாலும், வழியில் போய்க்கொண்டிருக்கும் நபர்களுக்காவது சமீபத்தில் வாசம்செய்துகொண்டாகிலும் வேலை செய்துகொண்டாகிலுமிருக்கிற நபர்களுக்காவது அபாயம் உண்டாக்கக்கூடியபடியோ சொத்துக்குத் தீங்கு உண்டாக்கக்கூடியபடியோ யாதொரு விளையாட்டில் பிரவர்த்தித்தாலும், அவர் - ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

கட்டிடங்கள், கிணறுகள் முதலியவைகளை பந்தோபஸ்தாய் வைத்திருக்கவேண்டுமென்று உத்தரவு செய்வதற்குள்ள அதிகாரம்.

126. யாதொரு கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடமாவது சுவராவது அதில் பொருத்தப்பட்டிருக்கும் யாதொரு வஸ்துவாவது யாதொரு கிணறு, குளம், நீர் நிலை, குட்டை, பள்ளம் அல்லது தோண்டப்பட்ட இடமாவது யாதொரு கரை அல்லது மரமாவது, அதற்குப் போதுமான மராமத்துகள், பாதுகாப்பு அல்லது அடைப்பு இராதது காரணமாக வழியில் போகும் நபர்களுக்காகிலும் சமீபத்தில் வாசஞ்செய்கிற அல்லது வேலைசெய்கிற நபர்களுக்காகிலும் அபாயம் விளைக்கக்கூடியதாயிருக்கிறதென்று கன்டோன்மென்ட் அதிகாரசபையார் அபிப்பிராயப்படும்பட்சத்தில், அந்தக் கன்டோன்மென்ட் சபையார் அதன் சொந்தக்காரருக்கு எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி, அவர்களுக்கு அவசியமாயிருப்பதாகத் தோற்றுகிறமாதிரி ஷை கட்டிடம் முதலியவைகளுக்கு மராமத்து செய்யவேண்டுமென்றோ, பாதுகாப்பு ஏற்படுத்தவேண்டுமென்

ளே, அடைப்பு அடைக்கவேண்டுமென்றோ ஷை நோடிஸ் மூலமாக உத்தரவு செய்யலாம்; மேலும், ஷை அபாயம் உடனே நேரிடக்கூடியதாயிருந்தால், கன்டோன்மென்ட் அதிகார சபையார்-அந்த அபாயத்தைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை உடனே நடத்த வேண்டும்.

அக்கிரமமான காரியங்களுக்கு உபயோகிக்கப்படும் தரிசு நிலங்களுக்கு அடைப்படைப்பது.

127. கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலமானது உபயோகிக்கப்பட்டுவராதது காரணமாகவாகிலும் அதன் சொத்துவகை பாத்தியதையைக்குறித்து விவாதம் ஏற்பட்டிருப்பதுகாரணமாகவாகிலும் வேறே காரணத்தினாலாகிலும அனுபோகத்தில் இராமலிருந்து சோம்பேரிகளாயும் ஒழுங்கு தவறினவர்களாயும் இருக்கும் நபர்களுக்கோ பிழைப்புக்கு வெளிப்படையான யாதொரு ஆதாரமில்லாத அல்லது திருப்திகரமாய்த் தங்கள் வரலாறு சொல்லமுடியாத நபர்களுக்கோ சேருவதற்கான இடமாய் ஏற்பட்டிருந்தாலும் சூதாடும அல்லது தீயகுணமுள்ள காரியங்களுக்கு உபயோகிக்கப்பட்டுவந்தாலும் மற்றப்படி அசங்கியம் அல்லது சங்கடம் விளைவித்துக்கொண்டோ அல்லது வெகுசாய் விளைவிக்கக்கூடியதாகவோயிருந்தாலும் அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரருக்காயினும் பாகஸ்தராயிருக்கும் சொந்தக்காரருக்காயினும் சொந்தக்காரராகவாவது பாகஸ்தராயிருக்கும் சொந்தக்காரராகவாவது இருப்பதாகச் சுதந்தரம் கொண்டாடும நபருக்காயினும், அப்படிப்பட்ட யாதொரு நிலத்தின் குத்தகைதாரருக்காயினும் குத்தகைதாரராகயிருப்பதாகச் சுதந்தரம் கொண்டாடும் நபருக்காயினும் கன்டோன்மென்ட் அதிகார சபையார் - எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்து அந்த நோடிஸில் குறிப்பிடப்படக்கூடிய கால அளவுக்குள் அதற்கு அடைப்பு ஏற்படுத்தி பந்தோபஸ்து செய்யும்படி உத்தரவு செய்யலாம்.

10-ம் அத்தியாயம்.

சுகாதாரமும் வியாதிவாராமல் தடுப்பதும் அதற்கு சிகிச்சையும்.

சுகாதார சம்பந்தமான அதிகாரிகள்.

சுகாதாரத்துக்காக உத்தரவாதம்.

128. சுகாதாரத்தின் காரியங்களுக்காக அடியிற்கண்ட உத்தியோகஸ்தர்கள் முறையே அவர்கள் ஒவ்வொருவர் விஷயத்திலும் குறிப்பிடப்பட்டு கன்டோன்மென்டைச் சேர்ந்ததாயிருக்கும் பாகங்களின் மேல்விசாரணையுடையவர்களாவதுமல்லாமல், அவைகளை சுகாதாரமான ஸ்திதியில் வைத்துவருவதற்கும் உத்தரவாதிவாதிகளாவார்கள்; அதாவது:—

(a) கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர்—ராணுவ காரியங்களுக்காக அனுபோகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் அல்லது உபயோகிக்கப்பட்டுவரும் சகல கட்டிடங்களும் நிலங்களும்;

(b) கன்டோன்மென்டிலுள்ள ஆகாயப்படைகளின் கம்மாண்டிங் ஆபிஸர்—ஆகாயப்படையின் காரியங்களுக்காக அனுபோகத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருக்கும் அல்லது உபயோகிக்கப்பட்டுவரும் சகல கட்டிடங்களும் நிலங்களும்;

(c) யாதொரு ஸிவில் இலாகா அல்லது ரெயில்வே பரிபாலனத்தின் தலைவர் ஹோதாவில் கன்டோன்மென்டின் யாதொரு பாகத்தை அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருக்கும் ஷை தலைவர்—இலாகா அல்லது பரிபாலனத்தின் தலைவர் ஹோதாவில் தாம விசாரணைவகிக்கும் சகல கட்டிடங்களும் நிலங்களும்.

ஹெல்த் ஆபிஸரின் பொதுக் கடமைகள்.

129. (1) ஹெல்த் ஆபிஸரானவர் - கன்டோன்மென்ட் முழுவதின்மேலும் பொதுவாய் சுகாதாரசம்பந்தமான மேற்பார்வை செலுத்தவேண்டும்; மேலும், அவர் - கன்டோன்மென்டின் சுகாதார ஸ்திதியைக் குறித்த ஒரு ரிபோர்ட்டை அது சம்பந்தமாய்த் தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற சிபாரிசுகள் சகிதமாக ஒவ்வொரு மாதமும் கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு அனுப்பவேண்டும்.

(2) அஸிஸ்டன்ட் ஹெல்த் ஆபிஸரானவர் - கன்டோன்மென்டின் சுகாதார சம்பந்தமாய், கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய மேல்விசாரணைக்குட்பட்டு ஹெல்த் ஆபிஸரால் ஏற்படுத்தப்படக்கூடிய கடமைகளைசெய்யவேண்டும்.

சுத்தியாய் வைத்திருப்பதும் சுகாதாரமும்.

பொதுவாயுள்ள மலஜலபாதை மறைவிடங்களும் மூத்திரம் பெய்வதற்கான இடங்களும்.

130. கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்லது பராமரிக்கப்பட்டுவரும் பொதுவாயுள்ள சகல மலஜலபாதை விடங்களையும் மூத்திரம் பெய்யும் இடங்களையும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிரத்தியேகமான இடங்கள் ஏற்படும்படியும் அசங்கியம் அல்லது சங்கடத்துக்கு இடங்கொடுக்காதபடியும் கட்டவேண்டும்; மேலும், அவைகளுக்கு அவசியமாயுள்ள சுத்தி செய்வதற்கான சகல சிப்பந்திகளையும் ஏற்படுத்தவேண்டியதுமல்லாமல், அவைகளை கிரமமாய்ச் சுத்தஞ்செய்து சரியாயும் ஒழுங்காயும் வைத்திருக்கவும் வேண்டும்.

(தனி நபர்களின்) சொந்த வீடுகளைச் சுத்திசெய்வதற்கான ஏற்பாடுகளை ஏற்றுக்கொள்ள கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குள்ள அதிகாரம்.

131. (1) யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் அனுபோகதாரர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலாவது அவருடைய அனுமதியைப் பெற்றாவது, யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் அனுபோகதாரர் இந்தப் பிரிவில் கண்டிருக்கும் விஷயங்களுக்காக கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குத் திருப்திகரமாயிருக்கும்படி ஏற்பாடுகள் செய்யத் தவறிபபோகும்பட்சத்தில் ஷை அனுமதியில்லாமலும் அனுபோகதாரருக்கு எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்தபிறகுமாவது யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் வீட்டு கக்கூஸைச் சுத்திசெய்யும் காரியத்தைத் தங்களுக்குத் தகுதியாய்த் தோற்றக்கூடிய கால அளவுக்குத் தாங்கள் இதுவிஷயமாய் நிர்ணயிக்கக்கூடிய திட்டங்களின்மேல் ஏற்றுக்கொள்ளலாம்.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையார் இந்தப் பிரிவில் உதகரித்திருக்கும் கடமைகளை ஏற்றுக்கொண்டிருந்தால், அப்படிப்பட்ட கடமையைச் செய்கையில அப்புறப்படுத்தப்படும் சகல வஸ்துக்களும் அந்த அதிகார சபையின் சொத்தாகும்.

(3) இந்தப் பிரிவின் காரியங்களுக்காக "வீட்டுக் கக்கூஸை சுத்திசெய்வது" என்பது - யாதொரு கக்கூஸ், மலஜலபாதை மறைவிடம், மூத்திரம் பெய்யும் இடம், சாக்கடைக்கால், சாக்கடைக்குழி அல்லது அப்படிப்பட்ட வஸ்துக்களுக்கான வேறே பொது ஏனத்திலிருந்து அசுத்தங்களையாவது குப்பை கூளம் முதலியவற்றையாவது வேறே அருவருக்கத்தக்க வஸ்துவையாவது அப்புறப்படுத்துவது என்று அர்த்தமாகும்.

குப்பை கூளம் முதலியவற்றைச் சேர்த்துவைப்பதும் அவைகளை ஒருவகை செய்வதும்.

132. (1) ஒவ்வொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரும் - தகுதியாயும் சௌகரியமாயுமுள்ள ஸ்தானங்களிலே, வீடுகளில் சேரும் குப்பை கூளம் முதலியவற்றையும், அருவருக்கத்தக்க வஸ்துக்களையும், இறந்த பிராணிகளின் பிரேதங்களையும், சாக்கடை அழுக்கையும் சிறிதுகாலம் போட்டுவைப்பதற்காகவாவது ஒருவகை செய்வதற்காகவாவது பொது ஏனங்கள், டிப்போக்கள் அல்லது இடங்களை ஏற்படுத்தவேண்டும் அல்லது நியமிக்கவேண்டும்.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் யாதொரு வஸ்துவை இன்ன நேரத்திலும் இன்ன மாதிரியாகவும இன்ன திட்டங்களுக்குட்பட்டும் யாதொரு தெருவின் வழியாய் அப்புறப்படுத்தலாமென்றாவது போட்டுவைக்கலாமென்றாவது ஒருவகை செய்யலாமென்றாவது பகிரங்கமான யாதொரு விளம்பரமூலமாய்க் கட்டளைகள் பிறப்பிக்கலாம்.

(3) இந்தப் பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஏனங்களிலாவது டெப்போக்களிலாவது இடங்களிலாவது போட்டுவைக்கப்பட்டிருக்கும் சகல வஸ்துக்களும் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் சொத்தாகும்.

சாக்கடைக் குழிகள், அசுத்தங்கள் போட்டுவைப்பதற்கான ஏனங்கள் முதலியவை.

133. யாதொரு கன்டோன்மென்டின் நிர்வாக உத்தியோகஸ்தர் எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்து—

(a) கன்டோன்மென்டிலுள்ள யாதொரு நிலம் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரராகவாவது குத்தகைதாரராகவாவது அனுபோகதாரராகவாவது அதன் மேல்விசாரணை செய்யும் யாதொரு நபர்—

(i) ஷை நிலம் அல்லது கட்டிடத்துக்குச் சேர்ந்ததாயுள்ள யாதொரு சாக்கடைக் குழி அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாக்குவதாயிருக்கிறதென்று நிர்வாக உத்தியோகஸ்தர் அபிப்பிராயப்பட்டால், அப்படிப்பட்ட சாக்கடைக்குழியை மூடிவிடவேண்டுமென்றாகிலும்,

(ii) ஷை நிலத்தின்மேலாயினும் கட்டிடத்திலாயினும் சேரும் அசுத்தங்கள் அல்லது சாக்கடை அழுக்குக்கான யாதொரு ஏனத்தை ஷை நோடிஸ் மூலமாக நிர்ணயிக்கப்படக்கூடியபடி சுத்தமான ஸ்திதியில் வைத்திருக்கவேண்டுமென்றாகிலும்,

(iii) யாதொரு சொந்த மலஜலபாதை மறைவிடம், மூத்திரம் பெய்யுமிடம், குழி அல்லது ஸ்நானம் செய்யுமிடத்திலிருந்துவரும் ஜலமாவது வேறே யாதொரு அருவருக்கத்தக்க வஸ்துவாவது ஷை நிலம் அல்லது கட்டிடத்திலிருந்து வெளியே வந்து யாதொரு தெருவின்மேலாகிலும் பொது இடத்தின் மேலாகிலும் இது காரியத்துக்காக உத்தேசிக்கப்பட்டிருக்காத யாதொரு நீர் ஓடை அல்லது வாய்க்காலிலாகிலும் ஊறாதபடியாயினும், வந்து விழாதபடியாயினும் பாயாதபடியாயினும், போடப்படாதபடியாயினும் தடுக்கவேண்டுமென்றாகிலும்,

(iv) அந்த நபர் அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது நிலத்தின் கீழாவது அதிலாவது அதன்மேலாவது சேர அல்லது இருக்கவிட்டிருக்கும் யாதொரு அருவருக்கத்தக்க வஸ்துவையாகிலும் குப்பை கூள முதலியவற்றையாகிலும் பிரஸ்தாப வளவின் அதிசமீபத்திலிருக்கும் எல்லையிலிருந்து நூறு அடிக்கு மேற்படாத தூரத்தில் அமைத்திருப்பதாய் ஷை நோடிஸில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய யாதொரு காலத்திலும் ஏனம் அல்லது

இடத்திலும் கன்டோன்மென்ட் அதிகார சபையைச்சேர்ந்த சுத்திசெய்வதற்கான சிப்பந்தியால் அப்புறப்படுத்தப்படுவதற்காக அவர் சேர்த்து போட்டுவைக்கவேண்டுமென்றாகிலும், உத்தரவு செய்யலாம்; அல்லது

(b) யாதொரு நபர் யாதொரு பொதுச் சாக்கடைக்காலில் போய்ச்சேரும் யாதொரு சாககடைக்காலை அமைக்காமலாவது மாற்றாமலாவது இருக்கவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்; அல்லது

(c) கன்டோன்மென்டிலிருக்கும் யாதொரு சாக்கடைக்காலின் மேல்விசாரணைவகிக்கும் யாதொரு நபர் ஷை நோடிஸில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய கால அளவுக்குள் அதை சுத்திசெய்யவேணடுமென்றாவது, அதில் அழுக்கு இராமலிருக்கும்படி செய்யவேண்டுமென்றாவது, அதற்கு மராமத்து செய்யவேண்டுமென்றாவது மறறப்படி அதை நல்ல ஒழுங்கான நிலைமையில வைத்திருக்கவேண்டுமென்றாவது உத்தரவு செய்யலாம்.

குளம் முதலியவற்றைத் தூர்த்துவிடுவது.

134. (1) தண்ணீர் சேர்த்துவைக்கப்படுகிறதாய் அல்லது சேருகிறதாய் கன்டோன்மென்டுக்குள்ளிருக்கும் யாதொரு கிணறு, குளம், தொட்டி, நீர்நிலை, எனம அல்லது வேறே இடமானது யாதொரு (தனி நபரின்) சொந்த அடைப்புக்குள்ளிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, அசங்கியம் அல்லது சங்கடம் விளைக்கக்கூடிய நிலைமையில் இருந்தாலும் கொசுக்கள் பிறந்து வளரக்கூடிய நிலைமையில் இருக்கிறதென்றாவது அந்தப்படி வெகுசாய் இருக்கக்கூடுமென்றாவது ஹெல்த் ஆபிஸர் அல்லது அஸிஸ்டென்ட் ஹெல்த் ஆபிஸர் அபிப்பிராயப்பட்டாலும், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி, ஷை கிணறு முதலியவைகளின் சொந்தக்காரரோ குத்தகைகாரரோ அனுபோகதாரரோ அந்த நோடிஸில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய கால அளவுக்குள் சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்தக்கிணறு, தொட்டி, நீர்நிலை அல்லது எனத்தைத் தூர்த்துவிடவேண்டுமென்றாகிலும் அதற்கு மூடி ஏற்படுத்தவேண்டுமென்றாகிலும், பிரஸ்தாப குளத்தைத் தூர்த்துவிடவேண்டுமென்றாகிலும தண்ணீரை வெளியே பாய்ச்சிவிடவேண்டுமென்றாகிலும் அப்புறப்படுத்தவேண்டுமென்றாகிலும் உத்தரவு செய்யலாம்.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - தங்களுக்குத் தகுதியாகத் தோற்றினால், டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸருடைய அனுமதியை முன்னதாகப் பெற்று, (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான உத்தரவின்பிரகாரம் நடந்துகொள்வதற்காகப் பிடிக்கும் செலவு முழுவதையுமாவது அதில் யாதொரு பாகத்தையாவது செய்யலாம்.

மலஜலபாதை மறைவிடங்கள் ஏற்படுத்துவது முதலியது.

135. யாதொரு கன்டோன்மென்ட் அதிகாரசபையார் - கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரருககு எழுத்து மூலமான நோடிஸ் அனுப்பி அந்தக் கட்டிடம் அல்லது நிலத்துக்கு ஷை நோடிஸில் குறிப்பிடப்படக்கூடிய மாதிரியாய் யாதொரு மலஜலபாதை மறைவிடம், மூத்திரம் பெய்வதற்கான இடம், சாக்கடைக்குழி, குப்பைதொட்டி அல்லது அசுத்தங்கள், சாக்கடை அழுக்கு அல்லது குப்பை கூளத்தைப் போடுவதற்கான வேறே எனம் ஏறபடுத்தவேண்டுமென்றாவது அதிகப்படியான யாதொரு மலஜலபாதை மறைவிடம், மூத்திரம் பெய்வதற்கான இடம், சாக்கடைக்குழி அல்லது மேலே சொல்லப்பட்ட வேறே எனத்தை ஏற்படுத்துவது அவசியமென்று அவர்களுக்குத்தோன்றினால் அந்தப்படியே ஏற்படுத்தவேண்டுமென்றாவது உத்தரவு செய்யலாம்.

தொழிற்சாலைகள் முதலியவைகளின் சுகாதாரம்.

136. கன்டோன்மென்டுக்குள் கவர்ன்மென்டார் சார்பாகவாயினுஞ் சரி மற்றப்படியாயினுஞ்சரி பத்து வேலையாட்கள் அல்லது தொழிலாளர்களுக்கு மேற்பட்டு வேலையில் அமர்த்திக்கொள்ளும் ஒவ்வொரு நபரும் யாதொரு மார்க்கெட், பாடசாலை, நாடகசாலை அலலது பொது ஜனங்கள் வேடிக்கையாகக்கூடும் வேறே யாதொரு இடத்தின்மேல் விசாரணைவகிக்கும் ஒவ்வொரு நபரும் அது சங்கதியைக் கன்டோன்மென்ட் அதிகார சபையாருககுத் தெரிவிக்கவேண்டியதுமலலாமல், கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குத் தகுதியாகத் தோற்றும் சங்கியையுள்ள விளக்குபவர்களை வேலையில் அமர்த்திக்கொள்ளவும்வேண்டும்; மேலும், மலஜலபாதை மறைவிடங்களும் மூத்திரம் பெய்வதற்கான இடங்களும் சுத்தமாயும் சரியான நிலைமையிலும் வைக்கப்பட்டிருக்கும்படிச் செய்யவேண்டும்:

1911-ம்ஹூத்து 12-வது ஆக்ட்.

ஆனால், இந்தப்பிரிவில் சொல்லியிருப்பதெதுவும் 1911-ம்ஹூத்திய இந்து தேசத்து வருமானவரி ஆக்ட் பிரயோகப்படுகிற யாதொரு தொழிற்சாலை விஷயத்தில் பிரயோகப்படமாட்டாது.

சொந்த மலஜலபாதை மறைவிடங்கள்.

137. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் எழுத்து மூலமான நோடிஸ் கொடுத்து, அதன் மூலமாய்—

(a) கன்டோன்மென்டிலுள்ள யாதொரு சொந்த மலஜலபாதை மறைவிடம் அல்லது மூத்திரம் பெய்வதற்கான இடத்தின் சொந்தக்காரர் அல்லது மேல்விசாரணை வகிக்கும் வேறே நபர் அதைப் பொதுஜனங்கள் உபயோகிப்பதற்கு விடக்கூடாதென்று உத்தரவு செய்யலாம்;

(b) சொந்த மலஜலபாதை மறைவிடங்கள் அல்லது மூத்திரம் பெய்வதற்கான இடங்கள் கட்டுவதற்காக யாதொரு நக்ஷா கன்டோன்மெண்ட் அதிகார சபையாரால் அங்கீகரிக்கப்பட்டிருந்து அதற்கு நகலகளை விண்ணப்பம்செய்துகொள்வதன்மேல் இலவசமாய்ப் பெறக்கூடுமோனால—

(i) அப்படிப்பட்ட யாதொரு மலஜலபாதை மறைவிடம் அல்லது மூத்திரம் பெய்வதற்கான இடத்தை மாமத்துசெய்யும் அல்லது கட்டும் யாதொரு நபர், அது ஹெல்த் ஆபீஸராலாவது அவருடைய கட்டளைப்படியாவது பார்வையிடப்பட்டு ஷை நக்ஷாவுடன் ஒத்திருக்கிறதென்று அவரால் அங்கீகரிக்கப்படுகிறவரையில், அதை உபயோகிக்கவொட்டகூடாதென்று உத்தரவு செய்யலாம்; அல்லது

(ii) அப்படிப்பட்ட மலஜலபாதை மறைவிடம் அல்லது மூத்திரம் பெய்வதற்கான இடத்தின் மேல்விசாரணை வகிக்கும் யாதொரு நபர் அதை ஷை நக்ஷாவை அனுசரித்து மறுபடியும் கட்டவேண்டுமெனறாகிலும் மாற்றவேண்டுமென்றாகிலும் உத்தரவு செய்யலாம்; அல்லது

(c) அப்படிப்பட்ட யாதொரு சொந்த மலஜலபாதை மறைவிடம் அல்லது மூத்திரம் பெய்வதற்கான இடம் அசங்கியம் அல்லது சங்கடம் விளைப்பதாயிருக்கிறதென்று கன்டோன்மெண்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், அதன் சொந்தக்காரராவது மேல்விசாரணை வகிக்கும் யாதொரு நபராவது அந்த மலஜலபாதை மறைவிடம் அல்லது மூத்திரம் பெய்வதற்கான இடத்தை அப்புறப்படுத்திவிடவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்; அல்லது

(d) சொந்தக்காரராகவாயினுஞ்சரி குத்தகைதாரராகவாயினுஞ்சரி அனுபோகதாரராகவாயினுஞ்சரி கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் மேல் விசாரணை வகிக்கும் யாதொரு நபர்—

(i) அதற்காக ஏற்படுத்தப்பட்ட எவையேனும் மலஜலபாதை மறைவிடங்களுக்கு போதுமானபடி கூரையும் சுவர் அல்லது அடைப்பும் ஏற்படுத்தி வழியில் போகும் நபர்களுடைய அல்லது சமீபத்தில் வசிக்கும் நபர்களுடைய கண்களில் அதுபடாதபடி செய்யவேண்டுமென்றாகிலும்,

(ii) அந்தக்கட்டிடம் அல்லது நிலத்தைச்சேர்ந்த யாதொரு மலஜலபாதை மறைவிடம் அல்லது மூத்திரம் பெய்வதற்கான இடத்தை ஷை நோடிஸில் கன்டோன்மெண்ட் அதிகார சபையார் குறிப்பிடக் கூடியபடி சுத்தம் செய்யவேண்டுமென்றாகிலும்

உத்தரவு செய்யலாம்; அல்லது

(e) கன்டோன்மென்டிலிருக்கிற யாதொரு சாக்கடைக்காலின் சொந்தக்காரராயிருந்து அதன் மேல்விசாரணை வகிக்கும் யாதொரு நபர் ஷை நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பத்து தினத்துக்குள்ளே அந்த நோடிஸில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய மூடியை ஏற்படுத்தவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

நெருங்கியிருக்கும் கட்டிடங்களை அப்புறப்படுத்துவது.

138. (1) கன்டோன்மென்டிலுள்ள கட்டிடங்களின் யாதொரு தொகுதியானது அந்தக் கட்டிடங்களை நெருக்கிக்கட்டியிருக்கும் மாதிரி காரணமாகவாவது தெரு ஒடுக்கமாயிருப்பது அல்லது அடங்கியிருப்பது காரணமாகவாவது சாக்கடைக்கால்கள் அல்லது காற்று வருவாய் சரியாய் ஏற்படுத்தப்பட்டிராதது காரணமாகவாவது ஷை கட்டிடங்களை சுத்தம் செய்வது சாத்தியமாயிராதது காரணமாகவாவது அப்படிப்பட்ட வேறே காரணத்தினாலாவது அனாரோக்கியமான ஸ்திதியிலிருக்கிறதென்று கன்டோன்மெண்ட் அதிகார சபையாருக்குத் தோற்றினால், அவர்கள்—

(a) ஹெல்த் ஆபீஸர்,

(b) பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் ஸிவில் ஸர்ஜன் அல்லது அவர் வருவது சாத்தியமாயிராவிட்டால், கன்டோன்மென்டைச் சேர்ந்த வேறே வைத்திய உத்தியோகஸ்தர்,

(c) எக்ஸிகூடிவ் என்ஜினீர் அல்லது இது விஷயமாய் அவரால் ஏற்படுத்தி அனுப்பப்பட்ட யாதொரு நபர்

ஆகிய இவர்கள் அடங்கிய யாதொரு கம்மிட்டி மூலமாய் பிரஸ்தாப தொகுதியைப் பார்வையிடச் செய்யலாம்.

(2) ஷை கம்மிட்டியார்-பிரஸ்தாப தொகுதியின் சுகாதார ஸ்திதியைக்குறித்து கன்டோன்மெண்ட் அதிகார சபையாருக்கு எழுத்துமூலமான ஒரு நோடிஸ் அனுப்பவேண்டும். மேலும், ஷை நிலைமையின் காரணமாக பிரஸ்தாப கட்டிடத்தில் அல்லது அதன் சமீபத்தில் வாசம் செய்பவர்களுக்கு வெகுசாய் வியாதி வரக்கூடுமென்றாவது மற்றப்படி பொதுஜன தேகாரோக்கியத்துக்கு அபாயம் நேரிடக்கூடுமென்றாவது அவர்கள் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் - அந்தத் தொகுதியின் அனாரோக்கியமான நிலைமையை நீக்கும்பொருட்டு எந்தக் கட்டிடங்களை முழுவதுமாயினும் சிறிதுமட்டிலாயினும் அப்புறப்படுத்தவேண்டுமென்று

தாங்கள் நினைக்கிறார்களோ அந்தக் கட்டிடங்களை எக்ஸிக்யூடிவ் என்ஜினீராகிலும் ஷை கம்மிட்டியில் வேலைபார்க்க அவரால் ஏற்படுத்தி அனுப்பப்பட்ட நபராகிலும் சரிபார்க்கப்பட்ட ஒரு நக்ஷாவில் காட்டவேண்டும்.

(3) அப்படிப்பட்ட ரிபோர்ட்டை வரப்பெற்றுக் கொள்வதன்மேல் கன்டோன்மென்ட் அதிகார சபையார் (நக்ஷாவில்) காட்டப்பட்டிருக்கும் சகல கட்டிடங்களையாவது ஏவையேனும் கட்டிடங்களையாவது அப்புறப்படுத்தவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டால் அவர்கள் அவைகளை அப்புறப்படுத்திவிடவேண்டுமென்று அவைகளின் சொந்தக்காரர்களுக்கு எழுத்துமூலமான நோடிஸைக்கொண்டு உத்தரவு செய்யலாம்:

ஆனால், அந்தப்படி அப்புறப்படுத்தப்படும் எவையேனும் கட்டிடங்கள் கிரமமான அனுமதியைப்பெற்று கட்டப்பட்டிருக்கக்கூடுமானால் அவைகளுக்காக அவற்றின் சொந்தக்காரர்களுக்கு கன்டோன்மென்ட் அதிகார சபையார் பிரதிபலன் கொடுக்கவேண்டும்:

மேலும், அப்புறப்படுத்தப்படும் எவையேனும் கட்டிடங்கள் கிரமமான அனுமதியைப்பெற்று கட்டப்படாமலிருந்து, பிரஸ்தாப சந்தர்ப்பங்களை உத்தேசிக்கையில் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் பிரதிபலனை அவைகளின் சொந்தக்காரர்களுக்கு கொடுப்பது நியாயமாகுமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குத் தோற்றினால், அவர்கள் - அந்தப்படியே செய்யலாம்.

(4) இந்தப்பிரிவின் காரியங்களுக்காக "கட்டிடங்கள்" என்பதில் கட்டிடங்களைச் சேர்ந்த சுவர்களும் அடைப்புகளும் என்பதும் அடங்கும்.

வாசம் செய்யும் வீடுகளில் ஜன நெருக்கம் எற்பட்டிருப்பது.

139. (1) வாசம் செய்வதற்கு உபயோகிக்கப்படுவதாய்க் கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடத்திலாவது அதன் பாகத்திலாவது, அங்கே வாசம் செய்பவர்களின் தேகாரோக்கியத்துக்கு அபாயம் நேரிடக்கூடியபடி ஜனநெருக்கம் ஏற்பட்டிருக்கிறதென்று கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு தோன்றினால், அவர்கள் - தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் விசாரணை செய்த பிறகு சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்தக் கட்டிடம் அல்லது அதன் பாகத்தினுடைய சொந்தக்காரருக்காகிலும் அனுபோகதாரருக்காகிலும் எழுத்து மூலமான நோடிஸ் கொடுத்து, ஒரு மாதத்துக்குக் குறையாமல் அந்த நோடிஸில் குறிப்பிடப்படக்கூடிய கால அளவுக்குள், அதில் வாசம் செய்பவர்கள், குடியிருப்பவர்கள் அல்லது மற்றப்படி அங்கே இருப்பவர்களின் சங்கியையை ஷை நோடிஸில் குறிப்பிடப்படக்கூடிய சங்கியைக்குக் குறைத்து அதில் ஜனநெருக்கத்தை நீக்கவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

(2) நியாயமான காரணமில்லாமல் (1) குறிப்பிட்ட உட்பிரிவின் பிரகாரம் தமக்கு செய்யப்பட்ட உத்தரவின்படி நடந்துகொள்ளத் தவறிப்போகும் யாதொரு நபர் - ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனையும் தொடர்ச்சியாய்க் குற்றம் செய்துகொண்டேவரும் விஷயத்தில், அந்தப்படி தவறிப்போன முதல் தினத்துக்குப் பிறகு தவறிக்கொண்டேயிருக்கும் ஒவ்வொரு தினத்துக்கும் ஐந்து ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனையும் விதிக்கப்படத்தக்கவராவார்.

யாதொரு கட்டிடத்துக்கு மராமத்து செய்யவேண்டுமென்றாவது அதை மாற்ற வேண்டுமென்றாவது உத்தரவு செய்ய அதிகாரம்.

140. (1) கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடம் சுகாதாரமற்ற நிலைமையில் இருக்கக்கூடிய அளவுக்கு சரியாய் கட்டப்பட்டிருக்கவில்லையென்றாவது பாழடைந்து இருக்கிறதென்றாவது கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அதன் சொந்தக்காரருக்கு எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்து, அந்த நோடிஸில் குறிப்பிடக்கூடிய கால அளவுக்குள், ஷை குறைகளை நீக்கும் காரியத்துக்காக அவசியமாயிருப்பதாகத் தங்களுக்குத் தோற்றும் மராமத்துகள் செய்துமுடிக்கவேண்டுமென்றாகிலும் மாறுதல்கள் செய்யவேண்டுமென்றாகிலும் உத்தரவு செய்யலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நோடிஸிக்கும் நகல் ஒன்றை அது எதற்குச் சம்பந்தப்பட்டதோ அந்தக் கட்டிடத்தின் மேல் நன்றாய்த் தெரியும்படி ஒட்டவேண்டும்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு நோடிஸ் எந்தக் கட்டிடத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த கட்டிடத்தின் சொந்தக்காரர் நோடிஸ் மூலமாய்க் கட்டளையிடப்பட்டிருக்கும் மராமத்துகள் செய்து முடிப்பதற்கு அல்லது மாறுதல்கள் செய்வதற்கு பர்த்தியாக அந்தக் கட்டித்தை அப்புறப்படுத்திவிட்டால், அது - அந்த நோடிஸின்படி நடந்துகொண்டிருப்பதாகக் கருதப்படும்.

நிலம் அல்லது கட்டிடத்தை சுத்திசெய்யவேண்டுமென்று உத்தரவு செய்ய அதிகாரம்.

141. (1) நிர்வாக உத்தியோகஸ்தரானவர் - கன்டோன்மென்டிலிருப்பதாய் அசுத்தமான அல்லது சுகாதாரமற்ற நிலைமையிலிருக்கிறதென்று தமக்குத் தோற்றுகிற யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரர் குத்தகைக்காரர் அல்லது அனுபோகதாரருக்கு எழுத்து மூலமான நோடிஸ் கொடுத்து, இருபத்திநான்கு மணி நேரத்துக்குள் அதை ஷை நோடிஸில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய

மாதிரி சுத்தம்செய்ய வேண்டுமென்றாவது மற்றப்படி சுத்தமான நிலைமையில் வைக்க வேண்டுமென்றாவது உத்தரவு செய்யலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நோடிஸ் சேர்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் அந்த நோடிஸ் எந்த கட்டிடத்தின விஷயமாய் கொடுக்கப்பட்டதோ அந்தக் கட்டிடமானது மறுபடியும் அசுத்தமான அல்லது சுகாதாரமற்ற ஸ்திதியிலிருந்தால், சந்தர்ப்பத்துக்கேற்றபடி சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரர் இரு நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

யாதொரு வீட்டை உபயோகிக்கக்கூடாதென்று உத்தரவு செய்ய அதிகாரம்.

142. வாசம் செய்வதற்கான இடமாய் உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டதாய் அல்லது உபயோகிக்கப்படுவதாய் கன்டோன்மென்டிலிருக்கும் யாதொரு கட்டிடமாவது அதன் பாகமாவது மனிதர்கள் வாசம் செய்வதற்குத் தகுதியற்றதென்று யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் தெரிந்து திருப்தியடைந்தால், கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குத் திருப்திகரமாக அது அந்தப்படி உபயோகிக்கப்படுவதற்கு தகுதியானதாகப்படுகிறவரையில் அதன் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் அந்தக் கட்டிடம் அல்லது அறையை மனிதர்கள் வாசம் செய்வதற்கு உபயோகிக்கக்கூடாதென்றோ அந்தப்படி உபயோகிக்கவிடக்கூடாதென்றோ தடுத்து ஒரு நோடிஸை அவர்கள்-அந்தக் கட்டிடத்தின் நன்றாய்த் தெரியும்படியான ஓரிடத்தில் ஒட்டுவிக்கலாம்.

தீங்குண்டாக்கத்தக்க செடி கொடி முதலியவைகளை அப்புறப்படுத்துவது.

143. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - கன்டோன்மென்டிலுள்ள யாதொரு நிலத்தின் சொந்தக்காரர் குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரருக்கு எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்து சமீபத்தில் வாசம் செய்யும் நபர்களின் தேகாரோக்கியத்துக்குத் தீங்குண்டாக்கத்தக்கதாகவோ அருவருப்புண்டாக்கத்தக்கதாகவோ தமக்குத்தோற்றுவதாய் அடர்ந்துள்ள அல்லது தீங்குண்டாக்கத்தக்க ஏதேனும் செடி கொடி முதலியவைகளையாவது தரையில் மூளைத்திருக்கும் பூண்டு முதலியவைகளையாவது பரிஷ்கரித்து அப்புறப்படுத்தவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

விவசாயமும் நீர்ப்பாசனமும்.

144. கன்டோன்மென்டுக்குள் யாதொரு வகைப்பயிர் செய்வதாவது யாதொரு விதமான எருவை உபயோகிப்பதாவது அதிலுள்ள யாதொரு நிலத்துக்குக் குறிப்பிடப்பட்ட யாதொரு மாதிரியாய் நீர்ப்பாய்ச்சுவதாவது சமீபத்தில் வசிக்கும் நபர்களின் தேகாரோக்கியத்துக்குத் தீங்குண்டாக்கத்தக்கதாயிருக்குமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - பஹிரங்கமாய் விளம்பரம் பிரசித்தம் செய்து அதன் மூலமாய் அந்த நோடிஸில் குறிப்பிடக்கூடிய காலத்துக்குப் பிறகு அந்தப்படி பயிரிடக்கூடாதென்றாகிலும் உபயோகிக்கக்கூடாதென்றாகிலும் நீர்பாய்ச்சக்கூடாதென்றாகிலும் தடுக்கலாம்; அல்லது, கன்டோன்மென்ட் அதிகாரிகளுக்குத் தகுதியாய்த் தோற்றக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு ஷை காரியத்தைச் செய்யலாமென்று அதேமாதிரியான விளம்பரமூலமாய்க் கட்டளையிடலாம்:

ஆனால், இந்தப் பிரிவின்படி யாதொரு விளம்பரம் பிரசித்தம் செய்யப்பட்டிருந்து, அந்த விளம்பரம் சம்பந்தப்படுகிற யாதொரு நிலம் பயிரிடுவதற்காகச் சட்டப்படி தயார் செய்யப்பட்டிருந்தாலும் அதில் யாதொரு பயிர் ஏற்றப்பட்டோ முளைத்தோயிருந்தாலும், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - ஷை விளம்பரமானது சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்தப்பயிர் சாதாரணமாய் ஏற்றப்படும் அல்லது அறுவடை செய்யப்படும் காலத்துக்கு முற்பட்ட ஒரு தேதியில் செலாவணியாகவேண்டுமென்று தாங்கள் கட்டளையிடுகிறபட்சத்தில், ஷை நோடிஸின்பிரகாரம் நடந்துகொள்வது காரணமாக அந்த நிலத்திலாகிலும் பயிரிலாகிலும் அக்கறையுள்ள நபர்கள் முறையே அடையும் ஏதாவது நஷ்டத்துக்காக பிரதிபலன் கொடுக்கலாம்.

புதைப்பதற்கும் தகனம் செய்வதற்குமான இடங்கள்.

புதைப்பதற்கும் தகனம் செய்வதற்குமான இடங்களைக்குறித்து சங்கதி அனுப்பும்படி கேட்பதற்குள்ள அதிகாரம்.

145. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - கன்டோன்மென்டிலிருக்கும் யாதொரு புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான இடத்தின் சொந்தக்காரருக்காவது அதன் விசாரணை வகிக்கும் நபருக்காவது எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி, ஷை இடத்தின் ஸ்திதி, நிர்வாகம் அல்லது நிலைமையைக்குறித்து அந்த நோடிஸில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய சங்கதி சவதரிக்க வேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான புதிய இடத்தை உபயோகிக்க அனுமதி கொடுப்பது.

146. (1) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்குவதற்குமுன் புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான இடமாக உபயோகிக்கப்படாதிராததாய் கன்டோன்மென்டிலிருக்கும் எந்த இடத்தையும் கன்டோன்மென்ட் அதிகாரசபையாரின் எழுத்துமூலமான அனுமதியில்லாமல் அந்தப்படி உபயோகிக்கக்கூடாது.

(2) சமீபத்தில் வாசம் செய்யும் நபர்களுக்குத் தொந்தரவு உண்டாவதையாகிலும் அபாயம் நேரிடுவதையாகிலும் தடுக்கும் காரியத்துக்காக கன்டோன்மென்ட் அதிகா

சபையார் ஏற்படுத்தக்கூடிய எவையேனும் திட்டங்களுக்குட்பட்டு ஷை அனுமதியைக் கொடுக்கலாம்.

புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான இடத்தை மூடிவிடும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.

147. (1) கன்டோன்மென்டிலுள்ள யாதொரு புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான இடமானது சமீபத்தில் வாசம் செய்யும் நபர்களுக்கு அருவருப்புண்டாக்கத்தக்கதாகவாகிலும் அவர்களுடைய தேகாரோக்கியத்துக்கு அபாயம் விளைக்கக்கூடியதாகவாகிலுமாய்விட்டதென்று பிரதேச விசாரணை செய்தபிறகாவது செய்வித்த பிறகாவது யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள்-பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்றுக்கொண்டு, ஷை நிலத்தின் சொந்தக்காரர் அல்லது அதன் விசாரணை வகிக்கும் நபருக்கு எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி அதன் மூலமாய் அதை அந்த நோடிஸில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய தேதியிலிருந்து மூடிவிடவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நோடிஸ் கொடுக்கப் பிரதேச கவர்ன்மென்டார் அனுமதி கொடுக்கும்பட்சத்தில், அவர்கள் - இன்ன திட்டங்களின்படிக்கானால் ஷை புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான இடத்தை மறுபடியும் திறக்கலாமென்று நிர்ணயிக்கவேண்டும்; மேலும், அந்நிர்ணய பத்திரிகைக்கு ஒரு நகலை ஷை நோடிஸுடன் சேர்க்கவேண்டும்.

(3) அப்படிப்பட்ட யாதொரு நோடிஸ் கொடுக்கப் பிரதேச கவர்ன்மென்டார் அனுமதி கொடுக்கும்பட்சத்தில், அவர்கள் - கன்டோன்மென்ட் நிதியின் செலவில் ஒரு புதிய புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான இடம் ஏற்படுத்தப்படவேண்டுமென்று உத்தரவு செய்யவேண்டும்; அல்லது, சம்பந்தப்பட்ட சமூகத்தார் ஒரு புதிய புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான இடம் ஏற்படுத்த விரும்பும்பட்சத்தில், அதற்குப் பிடிக்கும் செலவுக்காக கன்டோன்மென்ட் நிதியிலிருந்து ஒரு க்ரான்ட் கொடுக்கப்படவேண்டுமென்று பிரதேசகவர்ன்மென்டார் உத்தரவு செய்யவேண்டும்.

(4) புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான எந்த இடத்தின் சம்பந்தமாய் இந்தப் பிரிவின்படிக்கான நோடிஸ் அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கிறதோ அந்த இடத்தில் எந்த பிணத்தையும் புதைக்கவாவது தகனம் செய்யவாவது கூடாது.

145 முதல் 147 வரையிலுள்ள பிரிவுகள் பிரயோகப்படுவதனின்றும் நிவாரணை.

148. அந்தந்த காலத்தில் கவர்ன்மென்டாராலாகிலும் அவர்கள் சார்பிலாகிலும், நிர்வாகம் செய்யப்பட்டுவரும் யாதொரு புதைப்பதற்கான இடத்தின் விஷயத்திலே, 145, 146, 147-வது பிரிவுகளில் கண்டிருக்கும் நிபந்தனைகள் பிரயோகப்படமாட்டா.

பிரேதங்களை அப்புறப்படுத்துவது.

149. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - கன்டோன்மென்டிலுள்ள இன்ன மார்க்கங்கள் வழியாகமாத்திரமே புதைப்பதற்கான அல்லது தகனம் செய்வதற்கான இடங்களுக்குப் பிரேதங்களை அப்புறப்படுத்தலாமென்று பஹிரங்கமான நோடிஸ் மூலமாய் நிர்ணயிக்கலாம்.

தொத்திக்கொள்ளத்தக்க அல்லது ஒட்டிக்கொள்ளத்தக்க வியாதிகளைத் தடுப்பது.

தொத்திக் கொள்ளத்தக்க அல்லது ஒட்டிக் கொள்ளத்தக்க வியாதிகளைக்குறித்து சங்கதி தெரிவிப்பது கடமையாகுமென்பது.

150. யாராகிலும் வைத்திய அப்பியாசி ஹோதாவிலோ மற்றப்படியோ கன்டோன்மென்டிலிருக்கும் யாதொரு நபரைத் தம் விசாரணையில் வைத்துக்கொண்டாவது அவருக்கு வைத்தியம் முதலியவை செய்துகொண்டாவதிருந்து, அந்த நபர் ஒட்டிக்கொள்ளத்தக்க அல்லது தொத்திக்கொள்ளத்தக்க வியாதியினால் வருந்திக்கொண்டிருக்கிறாரென்று தமக்குத் தெரிந்தாலும், அந்தப்படி நம்புவதற்கு முகாந்தரமிருந்தாலும், அல்லது கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடத்தின் சொந்தக்காரராகவோ குத்தகைதாரராகவோ அனுபோகதாரராகவோ இருந்து அந்தக் கட்டிடத்திலே, மேற்சொல்லியபடி வருந்திக்கொண்டிருக்கும் யாதொரு நபர் இருக்கிறாரென்று தெரிந்திருந்தாலும், அவர் - அப்படிப்பட்ட வியாதியிருப்பதைப்பற்றி கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குச் சங்கதி தெரிவிக்கத் தவறிப்போகும்பட்சத்திலாகிலும் பொய்யான சங்கதி தெரிவிக்கும் பட்சத்திலாகிலும், நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராததண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்:

ஆனால், ஷை சங்கதி ஏற்கனவே கிரமமாய்த் தெரிவிக்கப்பட்டிருக்கிறதென்று யாதொரு நபர் நம்புவதற்கு முகாந்தரமிருந்து சங்கதி தெரிவிக்க அவர் தவறிப்போனால், அவர் - இந்தப் பிரிவின்படி தண்டனை விதிக்கப்படத்தக்கவராகமாட்டார்:

மேலும், ஸ்திரீ ரோகத்தினால் வருந்திக்கொண்டிருக்கும் யாதொரு நபர் பிரத்தியேகமானதும் போதுமானதுமானதுமான வைத்திய சிகிச்சையின்கீழிருந்து அவருடைய ஜீவிய

பழக்கங்கள், நிலைமை, வாசம் செய்யும் இடம் ஆகிய இவைகள் காரணமாக ஷை வியாதி வெகுசாய்ப் பரவமாட்டாதானால் அந்த வியாதியின் விஷயத்தில் இந்த பிரிவு பிரயோகப் படமாட்டாது.

தொத்துவியாதிகளாவது பெருவாரிவியாதிகளாவது தோற்றும் விஷயத்தில் விசேஷ ஏற்பாடுகள்.

151. (1) யாதொரு கன்டோன்மெண்டிலே, அதில் வாசம் செய்யும் ஜனங்களுக்குள் யாதொரு தொத்துவியாதி அல்லது ஒட்டுவியாதியாவது அதில் இருக்கும் எவையேனும் பிராணிகளுக்குள் யாதொரு பெருவாரி வியாதியாவது தோன்றியிருக்கும்போதாகிலும் தோன்றக்கூடு மென்னும் பயம் ஏற்பட்டிருக்கும்போதாகிலும், இந்த ஆக்டிலோ அந்தந்த காலத்தில் ஷை கன்டோன்மெண்டில் செலாவணியாய்க் கொண்டிருக்கிற யாதொரு சட்டத்திலோ கண்டிருக்கும் நிபந்தனைகள் இது காரியத்துக்கு போதுமானவையல்லவென்று பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸர் நினைக்கும் பட்சத்திலே, அவர் - பிரதேச கவர்ன்மெண்டாரின் அனுமதியை முன்னதாகப் பெற்று, அந்த வியாதி தோன்றாமலிருப்பதையாயினும் அது பரவுவதையாயினும் தடுப்பதற்கு அவசியமாகுமென்று அவருக்குத் தோற்றுகிற

(a) விசேஷ ஏற்பாடுகள் செய்யலாம்; மேலும்,

(b) பொது ஜனங்களாவது பொது ஜனங்களில் யாதொரு வகுப்பார் அல்லது பிரிவாராவது சிறிது காலத்துக்கான ஷை ரெகுலேஷன்களை அனுசரிக்கும்படி பகிரங்கமான விளம்பரமூலமாய்ச்செய்யலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட சிறிதுகாலத்துக்கான யாதொரு ரெகுலேஷனை எவராகிலும் மீறி நடந்தால், அவர் - இந்தியன் பினல் கோட் 188-வது பிரிவின்படி குற்றம் செய்திருப்பவராகக் கருதப்படுவார். 1860-ம் வருஷ 45-வது ஆக்ட்.

பாற்காரனிடத்தில் வழக்கமாய்ப் பால்வாங்குகிறவர்களின் பெயர்களைத் தெரிவிக்கும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.

152. கன்டோன்மெண்டில யாதொரு தொத்துவியாதி தோன்றியிருப்பதாவது பரவியிருப்பதாவது யாதொரு பாற்காரன் சர்ப்பரா செய்யும் பாலின் மூலமாய் ஏற்பட்டதென்று யாதொரு வைத்தியாப்பியாசி அபிப்பிராயப்படுவதாக அவர் நிர்வாக உத்தியோகஸ்தருக்கு உறுதிமொழிகூறினால், அந்த நிர்வாக உத்தியோகஸ்தர் ஷை பாற்காரனுக்கு எழுத்து மூலமான நோடிஸ் கொடுத்து, கன்டோன்மெண்டிலிருப்பவர்களாகப் தன்னிடத்தில் வழக்கமாகப் பால்வாங்குகிற சகல நபர்களின் பெயர்களையும் மேல்விலாசங்களையும் அந்த நோடிஸில் குறிப்பிடப்படக்கூடிய காலத்துக்குள், சவதரிக்க வேண்டுமென்றாகிலும் ஷை பாற்காரன் எந்த நபர்களுக்குப் பாலை விற்பனை செய்திருக்கிறானோ அந்த நபர்களைக் கண்டுபிடிப்பது சாத்தியமாகும்படிச் செய்யக்கூடிய சங்கதியை ஷை காலத்துக்குள் தெரிவிக்கவேண்டுமென்றாவது உத்தரவு செய்யலாம்.

யாதொரு வண்ணானிடத்தில் வழக்கமாய்த் துணி போடுகிறவர்களின் பெயர்களைத் தெரிவிக்கும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.

153. கன்டோன்மெண்டில் யாதொரு தொத்துவியாதி அல்லது ஒட்டுவியாதி பரவுவதைத் தடுக்கும்பொருட்டு, யாதொரு வண்ணானிடத்தில் வழக்கமாய்த் துணிபோடுகிறவர்களின் ஜாபிதாவை ஹெல்த் ஆபிஸருக்குச் சவதரிப்பது கோரக்கூடியதாகுமென்று ஹெல்த் ஆபிஸர் நிர்வாக உத்தியோகஸ்தருக்கு உறுதிமொழி கூறும்பட்சத்தில், நிர்வாக உத்தியோகஸ்தரானவர் - ஷை வண்ணானுக்கு எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி, கன்டோனமெண்டுக்குள் இருப்பவர்களாய் ஷை வண்ணான் தோய்க்கிற அல்லது அந்த நோடிஸின் தேதிக்கு அடுத்து முந்திய ஆறு வாரங்களில் தோய்த்திருக்கிற துணிகள் இதர சாமான்கள் ஆகிய இவைகளின் சகல சொந்தக்காரர்களின் பெயர்களையும் மேல்விலாசங்களையும் ஷை நோடிஸில் குறிப்பிடப்படும் கால அளவுக்குள் ஷை ஹெல்த் ஆபிஸருக்குச் சவதரிக்கவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

பாற்சாலையையாவது வண்ணான் வியாபாரம் நடத்தும் இடத்தையாவது பார்வையிட்ட பிறகு ரிபோர்ட் அனுப்புவது.

154. யாதொரு தொத்துவியாதியாவது ஒட்டுவியாதியாவது பாற்சாலையிலிருந்து சர்ப்பரா செய்யப்படும் பாலைக் குடிப்பதனாலாகிலும் துணிகளையோ வேறே சாமான்களையோ யாதொரு இடத்தில் தோய்ப்பதனாலாகிலும், வண்ணானை உபயோகிக்கிற யாதொரு முறையின் காரணமாகவாகிலும் உண்டாயிருக்கிறதென்றாயினும் வெகுசாய் உண்டாகக்கூடுமென்றாயினும் மேலேகண்டபடி பார்வையிட்ட பிறகு ஹெல்த் ஆபிஸர் அபிப்பிராயப்பட்டால், அது விஷயத்தைப்பற்றி, அவர் - நிர்வாக உத்தியோகஸ்தருக்கு ரிபோர்ட் செய்யவேண்டும்.

ஹெல்த் ஆபிஸர் அனுப்பும் ரிபோர்ட்டின்மேல் நடவடிக்கை.

155. 154-வது பிரிவின்படி ஹெல்த் ஆபிஸர் அனுப்பின ரிபோர்ட்டை வரப்பெற்றுக்கொள்வதனமேல், நிர்வாக உத்தியோகஸ்தர் - எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி—

(a) அந்த நோடிஸ் ரத்து செய்யப்படுகிறவரையில் ஷை பாற்சாலையிலிருந்து பால் சர்ப்பரா செய்யப்படுவதைத் தடுத்துவிடலாம்; அல்லது

(b) ஷை நோடிஸ் ரத்து செய்யப்படுகிறவரையிலாவது, நிர்வாக உத்தியோகஸ்தர் அந்த உத்தரவுமூலமாய்க் கட்டளையிடக்கூடிய இடத்தை அவர் கட்டளையிடக்கூடியமாதிரி

யாய் உபயோகித்தாலன்றி மற்றப்படியாவது அவர் கட்டளையிடக்கூடிய முறைப்படி துணிகளைத் தோய்த்தாலன்றி மற்றப்படியாவது ஷை வண்ணான் துணிகளை அல்லது சாமான்களை மேலே சொல்லப்பட்டபடிக்குள்ள யாதொரு இடத்திலோ முறைப்படியோ தோய்க்கக்கூடாதென்று தடுக்கலாம்.

பாலையாவது தோய்க்கப்பட்ட துணிகளையாவது பரீக்ஷை செய்வது.

156. ஹெல்த் ஆபிஸரானவர் - 152-வது பிரிவின்படிக்கான நோடிஸ் சேர்ப்பிக்கப்பெற்றிருக்கும் யாதொரு பாற்காரனுடைய சுவாதீனத்திலிருக்கிற அல்லது சமீபகாலத்தில் அவருடைய சுவாதீனத்திலிருந்த எந்த பாலையாவது துணிகளையாவது வேறே சாமான்களையாவது, அல்லது 153-வது பிரிவின்படிக்கான நோடிஸ் சேர்ப்பிக்கப்பெற்ற யாதொரு வண்ணானுடைய சுவாதீனத்திலிருக்கிற அல்லது சமீபகாலத்தில் அவனுடைய சுவாதீனத்திலிருந்த எந்தத் துணிகளையாவது வேறே வஸ்துக்களையாவது தம் சுவாதீனத்தில் எடுத்துக்கொள்வதுமல்லாமல், அதைத் தமக்கு அவசியமாகத் தோற்றக்கூடிய யாதொரு ரஸாயன சாஸ்திர முறைக்காகிலும் வேறே முறைக்காகிலும் உட்படுத்தலாம், அல்லது உட்படுத்தும்படி செய்விக்கலாம்; மேலும், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - ஷை முறைக்காகப பிடிக்கும் சகல செலவுகளையும் கன்டோன்மென்ட் நிதியிலிருந்து கொடுப்பதுமல்லாமல ஷை பால், துணி அல்லது வேறே வஸ்துக்களின் சொந்தக்காரருக்கு ஷை முறையினால் ஏற்படும் ஏதேனும் நஷ்டத்துக்குப் பிரதிபலனாக தங்களுக்கு நியாயமாகத் தோற்றும் தொகையைக் கொடுக்கவும்வேண்டும்.

பொதுவான வண்டி முதலியவைகளை அசுத்தப்படுத்துவது.

157. யாராகிலும் கன்டோன்மென்டில்—

(a) யாதொரு தொத்துவியாதி அல்லது ஒட்டுவியாதியினால் வருந்திக்கொண்டிருக்கும்போது பொதுவான வண்டி முதலியவைகளை உபயோகித்தாலும்,

(b) அப்படிப்பட்ட யாதொரு வியாதியினால் வருந்திக்கொண்டிருக்கும் யாதொரு நபரை ஏற்றிக்கொண்டு போவதற்காக பொதுவான வண்டி முதலியவைகளை உபயோகித்தாலும்,

(c) அப்படிப்பட்ட யாதொரு வியாதியினால் மாணம் அடைந்துவிட்ட நபரின் பிரேதத்தை ஏற்றிக்கொண்டு போவதற்காக பொதுவான வண்டி முதலியவைகளை உபயோகித்தாலும்,

அவர் - அந்த வண்டி முதலியவைகளை உபயோகிக்கிற அல்லது அதற்கு பிறகு உபயோகிக்கக்கூடிய வேறே நபர்களுக்கு ஷை வியாதி ஒட்டிக்கொள்ளாதபடி கிரமமாயுள்ள முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகள் செய்யவும் அந்தப்படி உபயோகிக்கப்பட்டதைக் குறித்து ஷை வண்டி முதலியவைகளின் சொந்தக்காரர், ஓட்டுகிறவர் அல்லது அவைகளின் விசாரணை வகிப்பவருக்கு அறிக்கைசெய்யவும் கடமைப்பட்டவராவதுமல்லாமல் வண்டி முதலியவைகளின் நம்பரையும் அந்தப்படி அறிக்கை செய்யப்பெற்ற நபரின்பெயரையும் தாமதமில்லாமலே நிர்வாக உத்தியோகஸ்தருக்கு ரிபோர்ட் செய்யவும் கடமைப்பட்டவருமாவார்.

பொதுவான வண்டி முதலியவைகளினின்றும் தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்குவது.

158. (1) யாதொரு தொத்துவியாதி அல்லது ஒட்டு வியாதியினால் வருந்திக்கொண்டிருக்கும் யாதொரு நபரையாவது அல்லது அப்படிப்பட்ட யாதொரு வியாதியினால் மரணமடைந்த யாதொரு நபரின் பிரேதத்தையாவது கன்டோன்மென்டுக்கள் சாதாரணமாய் வாடகைக்கு ஓட்டப்படுகிற பொதுவான வண்டி முதலியவைகளில் ஏற்றிக்கொண்டுபோயிருந்தால், அவைகளின் சொந்தக்காரர் - அதுசங்கதியைப்பற்றி நிர்வாக உத்தியோகஸ்தருக்கு ரிபோர்ட் செய்யவேண்டும்; உடனே அந்த உத்தியோகஸ்தரானவர் - ஷை வண்டி முதலியவைகளினின்றும் தொத்து வியாதி சம்பந்தம் ஏற்கனவே நீக்கப்படாமலிருந்தால், அதை நீக்கும்படிச் செய்யவேண்டும்.

(2) அப்படிப்பட்ட வண்டி முதலியவைகள் எதையும் - தொத்துவியாதி சம்பந்தம் உண்டாக்கும் என்னும் பயம் இல்லாமலே அதை உபயோகிக்கலாமென்று கண்டு நிர்வாக உத்தியோகஸ்தர் யாதொரு ஸெர்டிபிகேட் கொடுக்கிறவரையில், உபயோகிக்கக்கூடாது.

ரிபோர்ட் செய்யத்தவறினால் தண்டனை.

159. யாராகிலும் 157-வது பிரிவின்படியாவது 158-வது பிரிவின்படியாவது செய்யவேண்டிய யாதொரு ரிபோர்ட்டை நிர்வாக உத்தியோகஸ்தருக்குச் செய்யத் தவறினால் அவர் - நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராததண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

வண்டி முதலிய ஓட்டுகிறவர் தொத்துவியாதி அல்லது ஒட்டு வியாதியால் வருந்திக்கொண்டிருக்கிறவரை ஏற்றிக்கொண்டுபோக கடமைபட்டவரல்லவென்பது.

160. அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டதிட்டத்தில் என்னசொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே, பொதுவான வண்டி முதலியவைகளின் சொந்தக்காரர், ஓட்டுகிறவர் அல்லது அதைத் தம் விசாரணையில் வைத்துக்கொண்டிருக்கிறவர் - கன்டோன்மென்டிலாவது அதற்குச் சமீபத்திலாவதிருக்கும் யாதொரு வண்டிமுதலியவற்றில் யாதொரு தொத்துவியாதி அல்லது ஒட்டுவியாதியினால் வருந்திக்கொண்டிருக்கிற யாதொரு நபரையாகிலும் அப்படிப்பட்ட வியாதியினால் மரணமடைந்த யாதொரு நபரின் பிரேதத்தையாகிலும் அந்த வண்டியினின்றும் தொத்துவியாதி

சம்பந்தத்தை நீக்குவதனால் சாதாரணமாய் ஏற்படக்கூடிய யாதொரு நஷ்டத்துக்கும் அதற்குச் சாதாரணமாய்ப் பிடிக்கும் யாதொரு செலவுக்கும் போதுமானதாயிருக்கக்கூடிய யாதொரு தொகை கொடுப்பதாக அந்த நபர் சொன்னாலன்றி மற்றப்படியும் அப்பிரகாரம் கொடுப்பதாகச் சொல்லுகிறவரையிலும் ஏற்றிக்கொண்டு போகவாயினும் ஏற்றிக்கொண்டு போகவிடவாயினும் கடமைப்பட்டவராகமாட்டார்.

யாதொருக் கட்டிடத்தினின்றாவது அதிலுள்ள வஸ்துக்களினின்றாவது தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவது.

161. ஹெல்த் ஆபிஸர் ஆலோசனை சொல்வதன்மேல் யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் வெகுசாய் தொத்து வியாதி சம்பந்தம் நின்றிருக்கக்கூடியதாய் கன்டோன்மென்டிலிருக்கும் யாதொரு கட்டிடத்தையாவது கட்டிடத்தின் பாகத்தையாவது அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது பாகத்திலுள்ள எந்த வஸ்துக்களையாவது சுத்தஞ்செய்வதனாலும் அதனின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவதனாலும் அப்படிப்பட்ட கட்டிடம் அல்லது அப்படிப்பட்ட கட்டிடத்தினுடைய பாகத்தின் அடித்தரையைப் புதுபபிப்பதனாலும் யாதொரு தொத்துவியாதி அல்லது ஒட்டுவியாதிவராமலாவது பாவாமலாவது தடுக்கக்கூடுமென்று அபிப்பிராயப்பட்டால், அவர்கள் - சொந்தக்காரருக்காகிலும் அனுபோகதாரருக்காகிலும் எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி, அந்த நோடிஸில் குறிப்பிடப்படக்கூடிய காலத்துக்குள் சந்தர்பத்துக்கேற்றபடி ஷை கட்டிடம், பாகம் அல்லது வஸ்துவை சுத்தம் செய்து அதனின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கவேண்டுமென்றாயினும் ஷை அடித்தரையைப புதுப்பிக்கவேண்டுமென்றாயினும் உத்தரவு செய்யலாம் :

ஆனால், ஷை சொந்தக்காராாவது அனுபோகதாராாவது வறுமைகாரணத்திலாகிலும் வேறே யாதொரு காரணத்திலாகிலும் ஷை உத்தரவின் பிரகாரம் சரியாய் செய்விக்க சக்தியற்றவராயிருக்கிறாரென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், அந்தக் கன்டோன்மென்ட் அதிகார சபையார் - கன்டோன்மென்ட் நிதியின் செலவில் சந்தர்ப்பத்துக் கேற்றபடி ஷை கட்டிடம், பாகம் அல்லது வஸ்துக்களை சுத்தஞ்செய்து அவைகளினின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்கலாம், அல்லது ஷை அடித்தரையைப் புதுப்பிக்கலாம்.

தொத்துவியாதி பரவக்கூடிய குடிசை அல்லது கொட்டகையை அழித்துவிடுவது.

162. (1) யாதொரு தொத்துவியாதி அல்லது ஒட்டுவியாதி பரவுவதைத் தடுப்பதற்காக கன்டேன்மென்டிலுள்ள யாதொரு குடிசையையாவது கொட்டகையையாவது அழித்துவிடுவது அவசியமாகுமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், அந்தக் கன்டோன்மென்ட் அதிகார சபையார் - சொந்தக்காரருக்கு எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி, அந்தக் குடிசை அல்லது கொட்டகையையும் அதைச்சேர்ந்த சாமான்களையும் ஷை நோடிஸில் குறிபபிடப்படக்கூடிய காலத்துக்குள் அழித்துவிடவேண்டுமென்று உத்தரவுசெய்யலாம்.

(2) யாதொரு தொத்துவியாதி அல்லது ஒட்டுவியாதி பரவுவதைத் தடுக்கும் காரியத்துக்காக யாதொரு குடிசையையாவது கொட்டகையையாவது உடனே அழித்துவிடுவது அவசியமாகுமென்று போர்டின் ப்ரெஸிடென்டாகிலும், போர்ட் ஒன்று இராவிட்டால் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸராகிலும் தெரிந்து திருப்தியடைந்தால், அவர் - ஷை குடிசை அல்லது கொட்டகையின் சொந்தக்காரருக்காகிலும் அனுபோகதாரருக்காகிலும எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்து அதை உடனே அழித்துவிடும்படி உததரவு செய்யலாம், அல்லது அதன் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரருக்கு இரண்டு மணி நேரத்துக்குக் குறையாமல் நோடிஸ் கொடுத்த பிறகு அதைத் தாமே அழித்துவிடும்படிச் செய்யலாம்.

(3) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - இந்தப் பிரிவின்படி அழித்துவிடப்பட்ட யாதொரு குடிசை அல்லது கொட்டகையின் சொந்தக்காரருக்கு நஷ்டத்துககாக பிரதிபலன் கொடுக்கவேண்டும்.

தொத்துவியாதி சம்பந்தம் நீக்கப்பெற்றாவது அழித்துவிடப்பட்டாவதிருக்கும் கட்டிடம் அல்லது குடிசையில் வசிப்பவர்களுக்கு சிறிதுகாலம் வசிப்பதற்கு இடம் ஏற்படுத்துவது.

163. யாதொரு குடும்பத்தில் தொத்துவியாதி அல்லது ஒட்டுவியாதி தோன்றி, அதைச் சேர்ந்த நபர்கள 161-வது பிரிவின்படியாவது 162-வது பிரிவின்படியாவது நடத்தப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக தங்கள் வாசஸ்தலத்தை வீட்டு வெளியேபோகும்படி நிர்ப்பந்தம் ஏற்பட்டு, இலவசமாய் தங்களுக்கு சிறிதுகாலத்துக்கு இருப்பிடமாகிலும் வசதியிடமாகிலும் ஏற்படுத்திக்கொடுக்கப்படவேண்டுமென்று அவர்கள் விரும்பினால், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அந்தப்படியே ஏற்படுத்திக்கொடுக்கவேணடும்.

யாதொரு கட்டிடத்தை வாடைகைக்கு விடுவதற்கு முன் அதனின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவது.

164. (1) வாடகைக்குவிட உத்தேசிக்கப்பட்டதாய் கன்டோன்மென்டிலிருக்கும் யாதொரு கட்டிடம் அலலது அதன் யாதொரு பாகத்திலே, அடுத்து முந்திய ஆறு வாரகாலத்தில் யாதொரு நபர் தொத்திக்கொள்ளத்தக்க அல்லது ஒட்டிக்கொள்ளத்தக்க வியாதியினால் வருந்திக்கொண்டிருந்திருந்தால், அந்தக் கட்டிடம அல்லது பாகத்தை வாடகைக்கு விடும் நபர் - அந்தப்படி செய்வதற்குமுன், பொதுவான அல்லது விசேஷ நோடிஸ் மூலமாக கன்டோன்மென்ட்

அதிகார சபையார் கட்டளையிடக்கூடிய மாதிரியாக அந்தக் கட்டிடத்திலிருந்து மாத்திரமேயல்லாமல் தொத்துவியாதி சம்பந்தம் நின்றிருப்பதற்கு உட்பட்டவையாய் அதில் இருக்கும் சகல சாமான்களிலிருந்துங்கூட தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கவேண்டும்.

(2) இந்தப் பிரிவின் காரியங்களுக்காக யாதொரு ஹோட்டல் ஜனங்கள் தங்குவதற்கான விடுதி அல்லது சரையை வைத்துக்கொண்டிருப்பவர் - அதில் தாம் ஏற்றுக்கொள்ளும் யாதொரு நபருக்கு, அப்படிப்பட்ட நபரை பிரஸ்தாப கட்டிடத்தின் எந்த பாகத்தில் வாசம் செய்யவிடுகிறாரோ அந்த பாகத்தை வாடகைக்கு விடுவதாகக்கருதப்படுவார்.

தொத்துவியாதி சம்பந்தம் ஏற்பட்ட வஸ்துவை அதனின்றும் தொத்துவியாதி சம்பந்தம் நீக்காமலே ஒருவகை செய்யக்கூடாதென்பது.

165. எந்த நபரும் - யாதொரு வஸ்து அல்லது சாமானானது யாதொரு தொத்து வியாதி அல்லது ஒட்டுவியாதியினால் அசுத்தமாக்கப்பட்டதென்று தமக்குத்தெரிந்திருந்தோ அல்லது தாம் நம்புவதற்கு முகாந்தரமிருந்தோ அதுவெகுசாய்க் கன்டோன்மென்டுக்குள் உபயோகிக்கப்படுவதாயிருந்தாலும் கொண்டுபோகக் கூடியதாயிருந்தாலும் அதை, முன்னதாக அதனின்றும் தொத்து வியாதி சம்பந்தம் நீக்காமல் வேறொரு நபருக்குக் கடன் கொடுக்கவுங்கூடாது, விற்பனை செய்யவுங்கூடாது, அனுப்பவுங்கூடாது, மற்றப்படி ஒருவகை செய்யவுங்கூடாது.

தொத்துவியாதி சம்பந்தம் நீக்கும் மார்க்கங்கள்.

166. (1) ஒவ்வொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரும்—

(a) தொத்து வியாதி சம்பந்தத்துக்கு உட்படுத்தப்பட்ட வண்டி முதலியவைகள், துணிகள், படுக்கைகள் அல்லது வேறே சாமான்களிலிருந்தும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவதற்கு அவசியமான வேலைக்காரர்கள் சகிதமாகவும் உபகரணங்கள் சகிதமாகவும் சரியான இடங்களை ஏற்படுத்தவேண்டும்;

(b) தொத்து வியாதி சம்பந்தம் நீக்கப்படுவதற்காக கொண்டுவரப்படும் வண்டி முதலியவைகள், துணிகள் அல்லது வேறே சாமான்களினின்றும் கட்டணமில்லாமலாவது தாங்கள் நிஷ்கரிஷை செய்யக்கூடிய கட்டணங்கள் செலுத்தப்படுவதன்மேலாவது தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்கும்படிச் செய்யவேண்டும்.

(2) கன்டோன்மென்ட் அதிகாரசபையார் - தொத்துவியாதி சம்பந்தத்துக்குட்படுத்தப்பட்ட உடுப்பு சாமான்கள், படுக்கை சாமான்கள், வண்டிமுதலியவைகள் அல்லது வேறே சாமான்களினின்றும் இன்ன இடங்களில் தொத்துவியாதி சம்பந்தம் நீக்கப்படுமென்று அறிக்கையிடலாம்; மேலும், அவர்கள் அந்தப்படி செய்தால், எந்த நபரும் - அப்படிப்பட்ட யாதொரு வஸ்துவினின்றும் முன்னதாகவே தொத்து வியாதி சம்பந்தத்தை நீக்காமல் மேலே கண்டபடி அறிக்கையிடப்பெறாத யாதொரு இடத்தில் சுத்தஞ்செய்யக்கூடாது.

(3) போர்டின் ப்ரெஸிடென்டாவது போர்ட் இராமற்போனால் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸராவது கன்டோன்மென்டிலிருப்பதாய் தொத்துவியாதி சம்பந்தம் நின்றிருக்கக்கூடிய எந்தத் துணிகளாவது படுக்கையாவது வேறே சாமானாவது அழித்துவிடப்படவேண்டுமென்று கட்டளையிடலாம்.

தொத்துவியாதி கண்டநபர் ஆகாரவஸ்து முதலியதைச் செய்வது அல்லது விற்பனைசெய்வதும் துணிகளைத்தோய்ப்பதும்.

167. யாராகிலும் யாதொரு தொத்து வியாதி அல்லது ஒட்டுவியாதியினால் வருந்திக்கொண்டு அல்லது அது பரவக்கூடிய சந்தர்ப்பங்களில் இருந்து—

(a) மனிதர்கள சாப்பிடுவதற்கான யாதொரு ஆகார வஸ்துவையாவது பான வஸ்துவையாவது மருந்து வஸ்துவையாவது ஔஷத வஸ்துவையாவது அல்லது தேகத்துக்கு உபயோகிப்பதற்காயினும் அணிந்துகொள்வதற்காயினும் உரிய உடுப்பு சாமானையாவது படுக்கை சாமானையாவது கன்டோன்மென்டுக்குள் செய்தாலும், எடுத்துக்கொண்டு போனாலும் விற்பனைசெய்வதாகச் சொன்னாலும் அங்கே அவைகளைச் செய்வதிலோ எடுத்துக்கொண்டுபோவதிலோ விற்பனை செய்வதிலோ சேர்ந்திருந்தாலும்,

(b) துணிகளைத் தோய்க்கும் அல்லது கொண்டுபோகும் வியாபாரத்தில் சேர்ந்திருந்தாலும்.

அவர் - நூறு ரூபாய்க்குமேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

ஆகாரவஸ்துவையாவது பானவஸ்துவையாவது விற்பனைசெய்யக்கூடாதென்று தடுப்பதற்குள்ள அதிகாரம்.

168. யாதொரு கன்டேன்மென்டில் யாதொரு தொத்து வியாதியாவது ஒட்டுவியாதியாவது தோன்றியிருந்தாலும், தோன்றக்கூடுமென்னும் பயம் ஏற்பட்டிருந்தாலும், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - பஹிரங்கமான விளம்பரம் பிரசுரித்து, அதன்மூலமாக, மனிதர்கள் சாப்பிடுவதற்கானதாய் அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய யாதொரு ஆகார வஸ்துவையாகிலும் பானவஸ்துவையாகிலும் விற்பனைசெய்வது அல்லது தயார்செய்வது விஷயமாக அல்லது அந்தப்படி குறிப்பிடப்பட்ட யாதொரு வகையைச்சேர்ந்த பிராணிகளின் மாமிசம் எதையாயினும் விற்பனைசெய்

வது விஷயமாக ஷை விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய மாதிரியாய் நிர்ப்பந்தம் ஏற்படுத்தலாம் அல்லது அக்காரியங்கள் செய்யக்கூடாதென்று தடுக்கலாம்.

கிணறுகள், குளங்கள் முதலியவைகளின் மேல் விசாரணை.

169. (1) யாதொரு கிணறு, குளம் அல்லது வேறே இடத்திலுள்ள தண்ணீரைக் குடிப்பதற்கு உபயோகித்தால் அது வியாதி உண்டாக்குமென்றாவது வியாதியைப் பரவச்செய்யுமென்றாவது கன்டோன்மெண்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள்—

(a) அந்தத் தண்ணீரை குடிப்பதற்காக எடுத்துக்கொண்டுபோகக்கூடாதென்றாகிலும் உபயோகிக்கக்கூடாதென்றாகிலும் பகிரங்கமான விளம்பரமூலமாய்த் தடுக்கலாம்;

(b) அப்படிப்பட்ட கிணறு, குளம் அல்லது இடத்தின் சொந்தக்காரருக்காவது மேல்விசாரணை வகிக்கும் நபருக்காவது எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி, அந்தத் தண்ணீரண்டை பொது ஜனங்கள் போவதையாகிலும் அதை உபயோகிப்பதையாகிலும் தடுப்பதற்காக ஷை நோடிஸில் கட்டளையிடப்பட்டிருக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

(c) அப்படிப்பட்ட யாதொரு வியாதி தோன்றுவதையாவது பரவுவதையாவது தடுப்பதற்கு யுக்தமானவையென்று தங்களுக்குத் தோன்றக்கூடிய வேறே ஏற்பாடுகள் செய்யலாம்.

(2) யாதொரு கன்டோன்மெண்டிலோ அதன் யாதொரு பாகத்திலோ யாதொரு தொத்து வியாதியாவது ஒட்டுவியாதியாவது தோன்றினாலும் தோன்றக்கூடுமென்று பயம் ஏற்பட்டிருந்தாலும் ஹெல்த் ஆபிஸர் அல்லது இதுவிஷயமாய் அவரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபர்-குடிக்கும் காரியங்களுக்காக எந்த கிணறு, குளம் அல்லது வேறே இடத்திலிருந்து தண்ணீர் எடுத்துக்கொண்டு போகப்படுகிறதோ அல்லது வெகுசாய் எடுத்துககொண்டுபோகப்படக்கூடுமோ அந்த கிணறு முதலியவைகளை நோடிஸ் கொடுக்காமலும் எந்தக் காலத்திலாவதும் பார்வையிட்டு அதனின்றும் தொத்துவியாதி சம்பந்தத்தை நீக்குவதுமல்லாமல், தண்ணீர் சுத்தமாயிருக்கும்படி பார்த்துகொள்வதற்காயினும் அதைக்குடிக்கும் காரியங்களுக்காக உபயோகிக்காதபடி தடுப்பதற்காயினும் தமக்குத் தகுதியாகத் தோற்றும் ஏற்பாடுகளைப் பின்னும் செய்யலாம்.

தொத்து வியாதிக்குட்பட்ட பிரேதத்தை ஒரு வகை செய்வது.

170. யாதொரு கன்டோன்மெண்டில் யாதொரு நபர் யாதொரு தொத்துவியாதியினாலாவது ஒட்டுவியாதியினாலாவது மரணமடைந்திருந்தால், நிர்வாக உத்தியோகஸ்தர் எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி—

(a) அந்தப் பிரேதத்தை தம் சுவாதீனத்தில் பெற்றிருக்கும் யாதொரு நபர் அதற்கப்புறம் அதை சட்டப்படி ஒருவகை செய்யப்படுவதற்காக பிரேத பரிசோதனைச்சாலைக்குக் கொண்டுபோகவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்; அல்லது,

(b) புதைக்கும் அல்லது தகனம் செய்யும் இடம் அல்லது பிரேத பரிசோதனைச்சாலைக்குக் கொண்டுபோவதற்காகவன்றி மற்றப்படி ஷை பிரேதத்தை மரணம் நேரிட்ட இடத்திலிருந்து அப்புறப்படுத்தக்கூடாதென்று தடுக்கலாம்.

ஆஸ்பத்திரிகளும், டிஸ்பென்ஸரி என்னும் ஔஷதச்சாலைகளும்.

ஆஸ்பத்திரிகள் அல்லது டிஸ்பென்ஸரிகளைப் பராமரிப்பது அல்லது அவைகளுக்கு உதவிசெய்வது.

171. (1) யாதொரு கன்டோன்மெண்ட் அதிகார சபையார்—

(a) தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற அத்தனை ஆஸ்பத்திரிகளையும் டிஸ்பென்சரிகளை கன்டோன்மெண்டுக்குள்ளாவது அதற்குள்ளாவது ஏற்படுத்தி பராமரித்து வரலாம்; அல்லது

(b) கன்டோன்மெண்டுக்குள்ளிருந்தாலுஞ்சரி வெளியிலிருந்தாலுஞ்சரி, தங்களால் பராமரிக்கப்படாத யாதொரு ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரிக்குத் தங்களுக்குத் தகுதியாகத்தோற்றி விதிக்கும் ஷரத்துகளின்மேல் க்ரான்ட்-இன்-எய்ட் என்னும் சகாயத் தொகை கொடுக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பராமரிக்கப்படும் அல்லது உதவி செய்யப்பெறும் ஒவ்வொரு ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியுடனும் தொத்துவியாதிகள் அல்லது ஒட்டு வியாதிகளினால் வருந்திகொண்டிருக்கும் நபர்களுக்குச் சிகிச்சை செய்வதற்காக ஒரு வார்ட் அல்லது பல வார்டுகள் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

(3) பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடக்கூடிய மாதிரியாய் நியமிக்கப்பட்ட யாதொரு வைத்திய உத்தியோகஸ்தர் - இந்தப் பிரிவின்படி பராமரிக்கப்படும் அல்லது உதவிசெய்யப்பெறும் ஒவ்வொரு ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியின் விசாரணை வகிக்கவேண்டும்.

வைத்திய சம்பந்தமாய் சர்ப்பரா செய்யப்படும் சாமான்கள் ஆயுதங்கள் முதலியவை.

172. (1) 171-வது பிரிவின்படி பராமரிக்கப்படும் அல்லது உதவி செய்யப்பெறும் ஒவ்வொரு ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியையும், ஆஸ்பத்திரிகளிலும டிஸ்பென்ஸரிகளிலும் வேலை நடத்துவது சமபந்தமாய் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் அல்லது பிரதேச கவர்ன்மென்டாரால் பிறப்பிக்கப்பட்ட எவையேனும் பொதுவான அல்லது விசேஷமான உத்தரவுகளை அனுசரித்தாகிலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கோ பிரதேச கவர்னமென்டாருக்கோ தகுதியாகத் தோற்றுகிறமாதிரி திருத்தப்பட்டபடிக்குள்ள ஷை உத்தரவுகளை அனுசரித்தாகிலும் பராமரித்து வரவேண்டும்.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அப்படிப்பட்ட ஒவ்வொரு ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியிலும் அவசியமான ஔஷதங்களும், ஆயுதங்களும், உபகரணங்களும், மேஜை நாற்காலி முதலியவைகளும், இசைப்புகளும், ஆஸ்பத்திரியிலேயேயிருந்து வைத்தியம் செய்துகொள்ளும் நோயாளிகளுக்காகப் போதுமான அளவுக்கு கட்டில்களும் துணிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்படி செய்யவேண்டும்.

கட்டணம் கொடுக்காத வியாதிஸ்தர்கள்.

173. 171-வது பிரிவின்படி பாமரிக்கப்பட்டுவரும் அல்லது உதவி செய்யப்பெறும் ஒவ்வொரு ஆஸ்பத்திரி அலலது டிஸ்பென்ஸரியிலும், வியாதிஸ்தர்களாய் கன்டோன்மென்டிலிருக்கும் ஏழை ஜனங்களும், தொத்து வியாதி அல்லது ஒட்டு வியாதியினால் வருந்திகொண்டிருப்பவர்களாய் கன்டோன்மென்டில் வாசம்செய்யும் இதர ஜனங்களும், வியாதிஸதாகளாயிருக்கும் வேறே நபர்கள் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் அனுமதியைப்பெற்றும் செலவொன்றும் இல்லாமலே வைத்திய சிகிச்சை பெறலாம்; மேலும், அவர்களை ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியிலேயே வைத்துக்கொண்டு சிகிச்சை செய்யும பட்சத்தில், அவர்களுக்கு இலவசமாய் ஆகாரம் கொடுக்கவேண்டும்; அல்லது, பிரஸ்தாப இடத்தின் விசாரணை வகிக்கும் வைத்திய உத்தியோகஸ்தர் கன்டோனமென்ட் அதிகார சபையாரால் நிஷ்கரிஷை செய்யப்படக்கூடிய வீத நிர்ணயப்படி போஜன வர்த்தனை கொடுக்கவேண்டுமென்று கட்டளையிடும் பட்சத்தில், அந்தப்படியே கொடுக்கவேண்டும் :

1908-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

ஆனால், ஷை போஜன வர்த்தனையானது - 1908-ம் வருஷத்து ஸிவில் ப்ரொஸீஜர் கோட் என்னும் ஸிவில் விவகார விசாரணைச் சட்டத்தின் 57-வது பிரிவின்படி தீர்ப்பான கடனாளிகளுக்காகப் பிரதேச கவர்ன்மென்டாரால் அந்தந்த காலத்தில் நிஷகரிஷை செய்யப்படும் மிகக்குறைந்த வர்த்தனையைக் காட்டிலும் குறைவாயிருக்கக்கூடாது.

கட்டணம் கொடுக்கும் வியாதியஸ்தர்கள்.

174. 173-வது பிரிவின்படி யாதொரு ஆஸ்பத்திரியிலாவது டிஸ்பென்ஸரியிலாவது பணச் செலவில்லாமலே வைத்தியம் செய்யப்பெறுவதற்கு அர்ஹதையுள்ளவனாயிராமல் வியாதி கண்டிருக்கும் யாதொரு நபர்- கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குத் தகுதியாகத் தோற்றுகிற ஷரத்துகளின்மேல் ஷை இடத்தில் சிகிச்சைக்காக ஏற்றுக்கொள்ளபபடலாம்,

யாதொரு நபர் ஆஸ்பத்திரியிலாவது டிஸ்பென்ஸரியிலாவது ஹாஜராக வேண்டுமென்று உத்தரவு பண்ண அதிகாரம்.

175. (1) 181-வது பிரிவின்படி பராமரிக்கப்படும் அல்லது உதவி செய்யப்பெறும் யாதொரு ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியின் விசாரணை வகிககும் உத்தியோகஸ்தருக்கு கன்டோன்மென்டில் வாசம்செய்யும் யாதொரு நபர் யாதொரு தொத்துவியாதி அல்லது ஒட்டு வியாதியினால் வருந்திக்கொணடிருக்கிறாரென்று நம்புவதற்கான முகாந்தரமிருந்தால், அவர் - தமக்கு அவசியமாகத் தோற்றும் பட்சத்தில் எழுத்து மூலமான உத்தரவு பிறப்பித்து, அப்படிப்பட்ட நபர் ஷை கோடிவில் குறிப்பிட்ட காலத்தில் ஷை ஆஸ்பததிரி அல்லது டிஸ்பென்ஸரியில் ஹாஜராக வேண்டுமென்றும், அதன் விசாரணை வகிக்கும் உத்தியோகஸ்தருடைய அனுமதியில்லாமல அங்கிருந்து போகக்கூடாதென்றும் உத்தரவு செய்யலாம்; அல்லது, அது விஷயத்தில் தமக்கு அவசியமாகத் தோற்றுகிற வேறே ஏற்பாடுகள் செய்யலாம் அல்லது வேறு கட்டளைகள் பிறப்பிக்கலாம்.

(2) அப்படிப்பட்ட யாதொரு நபர் ஷை ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியில் ஹாஜராலதன்மேல், ஷை வைத்திய உத்தியோகஸ்தர் அந்த நபர் தொத்து வியாதி அல்லது ஒட்டு வியாதியினால் வருந்திக்கொண்டிருக்கிறாரா இல்லையாவென்று தாம் தெரிந்து திருப்தியடையும் காரியத்துக்காக அவரைப் பரீக்ஷைசெய்து, அவர் அந்தப்படி வருந்திக் கொண்டிருப்பதாகத் தெரியவந்தால், அந்த வைத்திய உத்தியோகஸ்தர் - அவருக்கு தொத்து வியாதியாகிலும் ஒட்டு வியாதியாகிலும் நீங்குகிற வரையில் அவரை ஆஸ்பத்திரியில் வைத்திருக்கும்படிச் செய்யலாம்; அல்லது, வியாதியின் தன்மையையோ, அதனால் வருந்திக்கொண்டிருக்கும் நபரின் ஸ்திதியையோ, பொதுவாய் அவர் வசிக்கும் இடத்துக்கு அக்கம்பக்கத்திலிருப்பவர்களையோ, சந்தர்ப்பங்களையோ, கவனிக்கையில், அவரை ஷை ஆஸ்பத்திரியிலாகிலும் டிஸ்பென்ஸரியிலாகிலும் வைத்துக்கொள்வது யுக்தமாகாதென்று அவருக்குத் தோற்றினால், அந்த நபரை விடுதலைசெய்து, அது விஷயத்தில் தமக்கு அவசியமாகத் தோற்றுகிற ஏற்பாடுகள் செய்யலாம் அல்லது கட்டளைகள் பிறப்பிக்கலாம்.

ஆஸ்பத்திரியில் அல்லது டிஸ்பென்ஸரியில் ஹாஜராக மறுக்கும் நபர்களைக் கன்டோன்மென்டிலிருந்து வெளிப்படுத்த அதிகாரம்.

176. (1) 171-வது பிரிவின்படி பராமரிக்கப்படும் அல்லது உதவி செய்யப்பெறும் ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியின் விசாரணை வகிக்கும் வைத்திய உத்தியோகஸ்தரானவர் யாதொரு நபர் 175-வது பிரிவின்படி நோடிஸ் வரப்பெற்றுக்கொண்டு ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியில் ஹாஜராக மறுத்தாரென்றாவது தவறிப் போய் விட்டாரென்றாவது, அப்படிப்பட்ட நபர் ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியில் ஹாஜராகி ஷை வைத்திய உத்தியோகஸ்தரின் அனுமதியில்லாமல் அங்கிருந்து போய்விட்டாரென்றாவது, 175-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு கட்டளையின்பிரகாரம் நடந்துகொள்ளத் தவறிப்போய் விட்டாரென்றாவது கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸருக்கு எழுத்துமூலமாய் ரிபோர்ட் செய்தால், அந்தக் கம்மாண்டிங் ஆபிஸர் - எழுத்துமூலமான உத்தரவைக் கொண்டு, அப்படிப்பட்ட நபர் இருபத்து நான்குமணி நேரத்துக்குள் கன்டோன்மென்டை விட்டு அப்புறம் போகவேண்டுமென்றும் தம்முடைய எழுத்துமூலமான அனுமதியில்லாமல் அதில் பிரவேசிக்கக்கூடாதென்றும் கட்டளையிடலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கன்டோன்மென்டைவிட்டு அப்புறம் போகவேண்டுமென்றும் மறுபடியும் அதில் பிரவேசிக்கக்கூடாதென்றும் உத்தரவு செய்யப்பெற்றிருக்கும் எந்த நபரும் - ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள வேறே யாதொரு கன்டோன்மென்டில் அந்த கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸருடைய எழுத்துமூலமான அனுமதியில்லாமல் பிரவேசிக்கக்கூடாது.

சுகாதார சம்பந்தமான காரியங்களுக்காக வண்டி முதலியவைகளின் போக்குவரவு விஷயமாய் மேல்விசாரணை செய்வது.

யாத்திரைக்காரர்களுக்கும் இதரர்களுக்குமான மார்க்கங்கள்.

177. (1) கன்டோன்மென்ட் அதிகார சபையார்—

(a) சந்தைகள் அல்லது யாத்திரை ஸ்தலங்கள் அல்லது பொது ஜனங்கள் போகும் வேறே இடங்களுக்காகிலும் அவைகளிலிருந்தாகிலும்

(b) யாதொரு தொத்து வியாதி அல்லது ஒட்டு வியாதி தோன்றியிருக்கும் காலங்களிலாகிலும்

கன்டோன்மென்ட் வழியாய்ப்போகும் நபர்களின் உபயோகத்துக்காக தகுந்த மார்க்கங்களை ஏற்படுத்தலாம் அல்லது நிர்ணயிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட அல்லது நிர்ணயிக்கப்பட்ட சகல மார்க்கங்களும் இன்னவையென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் ஸ்பஷ்டமாயும் போதுமானபடியும் தெரிவிக்கவேண்டும்.

கக்கூஸ் முதலியவைகளை சுத்திசெய்யும் ஊழியங்கள் விஷயமாய் விசேஷ திட்டங்கள்.

விளக்குகிற ஊழியம் செய்வதற்கான திட்டங்கள்.

178. (1) யாராகிலும், கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டவராயிருந்து, பின்னை கண்டபடி செய்வதற்கு அவருக்கு அனுமதி கொடுக்கும் யாதொரு ஒப்பந்தம் இராமலும் நியாயமான காரணம் இராமலும் தம்முடைய வேலையை ராஜிநாமா செய்தாலும் கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு ஒரு மாத நோடிஸ் கொடுக்காமல் தம்முடைய வேலையிலிருந்து நின்று போய் விட்டாலும் தம்முடைய கடமைகளை யாகிலும் அவைகளில் எதையாகிலும் செய்யாமல் அசட்டை செய்தாலும் நிராகரித்தாலும், அவர் - ஒரு மாதத்துக்கு மேற்படாமல் காவல் தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

(2) பிரதேச கவர்ன்மென்டார் - பிரதேச ஸர்க்கார் கெஜெட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாய், அந்த விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய தேதியிலும் அந்தத் தேதியிலிருந்தும் இந்தப் பிரிவிற்கண்ட நிபந்தனைகள் - கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்படும் குறிப்பிட்ட எந்த வகுப்பைச் சேர்ந்த ஊழியக்காரர்களின் அலுவல் பொதுஜன தேகாரோக்கியத்துக்காவது க்ஷேமத்துக்காவது சம்பந்தப்படுகின்றனவோ அந்த ஊழியக்காரர்களின் விஷயத்தில் பிரயோகப்படவேண்டுமென்று கட்டளையிடலாம்.

(3) இந்தப் பிரிவின் காரியங்களுக்காக "விளக்குகிறவர்" என்பதில் அசுத்தங்களை யாவது குப்பைகூள முதலியவற்றையாவது அப்புறப்படுத்துவதில் கன்டோன்மென்ட் அதிகார சபையரால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டு குற்றேவல் செய்யும் சேவகன் என்பதும் அடங்கும்.

11-ம் அத்தியாயம்.

கட்டிடங்கள், தெருக்கள், எல்லைகள், மரங்கள் முதலியவைகளின் மேல்விசாரணை.

கட்டிடங்கள்.

புதிய கட்டிடங்களைக் குறித்து நோடிஸ்.

179. (1) எவராவது ஒரு கன்டோன்மென்டில் யாதொரு கட்டிடத்தைக் கட்டவோ புதுப்பிக்கவோ உத்தேசித்தால் அவர் - தம்முடைய உத்தேசத்தைக் குறித்து கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு எழுத்து மூலமாய் நோடிஸ் கொடுக்கவேண்டும்.

(2) யாதொரு நபர்—

(a) யாதொரு கட்டிடத்தில் முக்கியாம்சமான மாறுதல் செய்தாலும் அதைப் பெரிதாக்கினாலும்,

(b) ஏற்கனவே மனிதர்கள் வசிக்கும் காரியத்துக்காக கட்டப்படாத யாதொரு கட்டிடத்தை மனிதர்கள் வசிப்பதற்கான இடமாக மாற்றினாலும்,

(c) மனிதர்கள் வசிப்பதற்கான ஒரே இடமாக ஏற்கனவே கட்டப்பட்ட ஒரு கட்டிடத்தை அப்படி வசிப்பதற்கான பல இடங்களாக மாற்றினாலும்,

(d) மனிதர்கள் வசிப்பதற்கான இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களை அதற்கு அதிக சங்கியையுள்ள அப்படிப்பட்ட இடங்களாக மாற்றினாலும்,

(e) மனிதர்கள் வசிப்பதற்காக ஏற்கனவே கட்டப்பட்ட யாதொரு கட்டிடத்தை குதிரை லாயமாகவாவது மாட்டுக்கொட்டகையாகவாவது பசுத்தொழுவமாகவாவது மாற்றினாலும்,

(f) யாதொரு கட்டிடம் நிலையாயிருப்பதையாவது அதன் ப்த்திரத்தையாவது சாக்கடைக்கால் விஷயமாகவோ சுகாதார விஷயமாகவோ தேகாரோக்கிய விஷயமாகவோ யாதொரு கட்டிடத்தின் நிலமையையாவது வெகுசாய் பிரதிகூலமாக பாதிக்கக்கூடுமென்று தாம் நம்புவதற்கு காரணம் இருக்கும் யாதொரு மாறுதலைச் செய்தாலும்,

(g) யாதொரு கட்டிடத்தின் உயரத்தையோ அது பரவியிருக்கும் விஸ்தீர்ணத்தையோ அதன் கன அளவையோ அதிகப்படுத்தும் அல்லது குறைக்கும் யாதொரு மாறுதலையாவது அந்த கட்டிடத்திலுள்ள யாதொரு அறையின் கன அளவை இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு சகாயச்சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட அதம திட்டத்துக்குக் கீழ் குறைக்கும் யாதொரு மாறுதலையாவது அப்படிப்பட்ட கட்டிடத்தில் செய்தாலும்,

அவர் - இந்த ஆக்டின் காரியங்களுக்காக ஒரு கட்டிடத்தை கட்டுவதாகவோ புதுப்பிப்பதாகவோ எண்ணப்படுவார்.

சட்டசம்மதமான நோடிஸின் திட்டங்கள்.

180. (1) 179-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடி நோடிஸ் கொடுக்கும் யாதொரு நபர் - அந்த நோடிஸ் எதற்கு சம்பந்தப்படுகிறதோ அந்தக் கட்டிடத்தை இன்ன காரியத்துக்காக உபயோகிக்க உத்தேசிக்கப்படுகிற தென்பதை குறிப்பிடவேண்டும்.

(2) (1) குறிப்பிட்ட உபவிதியின்படி தெரிவிக்கவேண்டிய சங்கதியையும் இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட சகாய சட்டங்களின் பிரகாரம் அவசியமாயிருக்கக்கூடிய பின்னும் ஏதேனும் சங்கதியையும் நக்ஷாக்களையும் நோடிஸுடன்கூட கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு திருப்திகரமாய் சவதரித்திருந்தாலொழிய எந்த நோடிஸும் சட்ட சம்மதமானதாகாது.

அனுமதிகொடுக்க அல்லது மறுக்க கன்டோன்மென்ட் அதிகார சபைக்கு அதிகாரம்.

181. (1) கன்டோன்மென்ட் அதிகார சபையார்-சந்தர்ப்பத்துக்கேற்றபடி பிரஸ்தாப கட்டிடத்தை கட்டுவதற்கோ புதுப்பிப்பதற்கோ அனுமதி கொடுக்க மறுக்கலாம் அல்லது அறுதியாகவோ அடியில்கண்ட விஷயங்கள் எல்லாவற்றையும் குறித்தாவது அவைகளில் எதைக் குறித்தாவது தாங்கள் எழுத்துமூலமாய்க் கொடுப்பது தகுதியென்று நினைக்கும் கட்டளைகளுக்கு உட்படுத்தியோ அதற்கு அனுமதி கொடுக்கலாம் ; ஷை விஷயங்களாவன—

(a) கட்டிடத்தின் முன்புறத்தில் விட்டுவைக்கவேண்டிய தாராளமாய்ப் போவதற்கான பாதை அல்லது வழி.

(b) காற்று தாராளமாய் வீசும்படி செய்வதற்கும் குப்பை கூள முதலியவைகளை வாருவதையும் நெருப்புப் பிடிப்பதை தடுப்பதையும் சுலபமாக்குவதற்கும் கட்டிடத்தை சுற்றிலும் விட்டு வைக்கவேண்டிய இடம்.

(c) கட்டிடத்துக்கு காற்று வருவாய் ஏற்படுத்துவதும், அவைகள் குறைந்தது இவ்வளவு கன அளவுள்ளவையாய் இருக்கவேண்டுமென்பதும், அந்தக் கட்டிடத்தில் எத்தனை அடுக்குகள் இருக்கக்கூடுமோ அவைகளின் சங்கியையும் உயரமும் ;

(d) சாக்கடைக்கால்கள், கக்கூஸுகள், மூத்திரம் பெய்யும் இடங்கள், சாக்கடைக் குழிகள் அல்லது அசுத்தங்களை போட்டுவைப்பதற்கான வேறே ஏனங்களை ஏற்படுத்துவதும் அவைகளின் நிலமையும் ;

(e) அஸ்திவாரத்தின் மட்டமும் அகலமும், எல்லாவற்றிற்கும் அடியிலுள்ள தளத்தின் மட்டமும் கட்டுக்கோப்பின் உறுதியும் ;

(f) கட்டிடம் ஒரு தெருவில் பிதுங்கி வந்திருந்தால் அக்கம்பக்கத்திலுள்ள கட்டிடங்களுடன் இன்ன ரேகையில் முன்னுக்கு அப்படி பிதுங்கி வந்திருக்கிறதென்பது ;

(g) தீ பிடிக்கும் விஷயத்தில் கட்டிடத்திலிருந்து வெளியே போவதற்காக ஏற்படுத்தவேண்டிய மார்க்கம் ;

(h) வெளிச்சுவர்களுக்கும் (இரண்டு) அறைகளுக்கு நடுவிலுள்ள இடைச் சுவர்களுக்கும் அடித்தரைகளுக்கும் அடுப்புகளுக்கும் புகைப்போக்கிகளுக்கும் உபயோகிக்கவேண்டிய சாமான்களும் அவைகளை இந்தமாதிரியாக கட்டவேண்டியதென்பதும் ;

(i) மனிதர்கள் வசிக்கப்போகும் அல்லது சமையல் முதலியவைகள் செய்யப்படப்போகும் மிகவும் உயரத்திலுள்ள தளத்தின்மேலிருக்கும் கூரையின் உயரமும் சாய்வும் ;

(j) கட்டிடத்தில் காற்று வீசுவதையும் அதன் சுகாதாரத்தையும் பாதிக்கும் வேறே யாதொரு விஷயம் ; மேலும், அந்தக் கட்டிடத்தைக் கட்டும் அல்லது புதுப்பிக்கும் நபர் அப்படிப்பட்ட எழுத்துமூலமான சகல கட்டளைகளுக்கும் ஒவ்வொரு அம்சத்திலும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையார் பிரஸ்தாப கட்டிடத்தைக் கட்டவோ புதுப்பிக்கவோ அனுமதி கொடுக்க மறுப்பதாய்த் தீர்மானித்தால், அவர்கள் - எவரால் நோடிஸ் கொடுக்கப்பட்டதோ அந்த நபருக்கு அப்படி மறுப்பதற்கான காரணங்களை எழுத்து மூலமாய்த் தெரிவிக்கவேண்டும்.

(3) கன்டோன்மென்ட் அதிகார சபையார் சட்டசம்மதமான ஒரு நோடிஸை வரப்பெற்றுக் கொண்டபிறகு ஆறுவாரம் வரையில் நோடிஸ் கொடுத்திருக்கிற நபருக்கு, இந்தப் பிரிவில் குறிப்பிட்டிருக்கும் யாதொரு தன்மையுள்ள எந்த உத்தரவையாவது செய்து ஒப்புவிக்க அசட்டை செய்தோ அல்லது தவறியோ இருந்து, அதற்குப் பிறகு அப்படிப்பட்ட நபர் மேலேகண்டபடி அசட்டை செய்ததையோ தவறினதையோ கடிதம் எழுதி அதன் மூலமாய் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் கவனத்துக்கு கொண்டு வரும்பட்சத்திலும், அதன்பிறகும் அப்படி அசட்டை செய்வதோ தவறுவதோ ஷை கடிதத்தின் தேதியிலிருந்து பின்னும் பதினைந்து தினங்களுக்கு நடந்துகொண்டே போனாலும், கன்டோன்மென்ட் அதிகார சபையார் யாதொரு திட்டமும் ஏற்படுத்தாமல் சந்தர்ப்பத்துக்கேற்றபடி (கட்டிடத்தைக்) கட்டுவதற்கோ, புதுப்பிப்பதற்கோ அனுமதி கொடுத்திருப்பதாக எண்ணப்படுவார்.

(4) குறித்த யாதொரு கட்டிடத்தை பாதிக்கும் காரணங்களைக் கொண்டாவது, ஜனநெருக்கத்தை தடுப்பதற்காகவாகிலும் குறித்த யாதொரு எல்லைகளுக்குள் வசிக்கும் நபர்களின் நன்மையை உத்தேசித்தாகிலும் வேறே யாதொரு பொதுக்காரியத்துக்காகவாகிலும் மேலேகண்ட எல்லைகளுக்குள் கட்டிடங்கள் கட்டுவதைக் குறித்தோ புதுப்பிப்பதைக் குறித்தோ நிர்ப்பந்தம் ஏற்படுத்தி கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபீஸரால் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒரு பொது ஏற்பாட்டை அனுசரித்தாவது அந்தக் கட்டிடத்தை கட்டுவதற்கோ புதுப்பிப்பதற்கோ அனுமதி கொடுக்க மறுக்கலாம்.

பிரதி பலன்.

182. (1) கன்டோன்மென்ட் அதிகார சபையார் யாதொரு கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்க மறுத்துவிட்டதன் காரணமாகவாவது, 181-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அந்த சபையாரால் பிறப்பிக்கப்பட்ட யாதொரு கட்டளை விஷயமாகவாவது யாதொரு நபருக்கு ஏற்படக்கூடிய யாதொரு சேதம் அல்லது நஷ்டத்துக்காக அந்த நபர் பிரதிபலன் எதுவும் சுதந்தரித்துக் கேட்கக்கூடாது.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - யாதொரு கட்டிடத்தை புதுப்பிக்கக் கூடாதென்று தடுத்ததன் காரணமாகவாவது அதன் சொந்தக்காரரைச் சேர்ந்த யாதொரு நிலத்தைத் தெருவுடன் சேர்க்க வேண்டுமென்று தாங்கள் கேட்டதன் காரணமாகவாவது அவருக்கு ஏற்பட்ட யாதொரு சேதம் அல்லது நஷ்டத்துக்காகவாகிலும் ஷை கட்டிடமானது நக்ஷா அல்லது மாதிரியை கவனிக்கும்போது அந்த பிரதேசத்துக்கு தகுதியற்றதென்னும் காரணத்தாலோ அந்த பிரதேசத்துக்குத் தகுதியற்ற ஒரு காரியத்துக்காக உத்தேசிக்கப்படுகிறதென்ற காரணத்தினாலோ (அதைப் புதுப்பிப்பதற்கு அனுமதி கொடுக்க) மறுத்திருந்தால் அவருக்கு ஏற்பட்ட சேதம் அல்லது நஷ்டத்துக்காகவாகிலும் ஷை கட்டிடத்தின் சொந்தக்காரருக்கு பிரதிபலன் கொடுக்கவேண்டும் :

ஆனால் அப்படி மறுத்ததற்கு அடுத்து முந்திய மூன்று வருஷ காலத்துக்கோ அதற்கு மேற்பட்டோ இருந்திராத அல்லது மனிதர் வசிப்பதற்கு தகுதியற்றதாய் இருந்திருக்கிற யாதொரு கட்டிடத்தைப் புதுப்பிக்கக்கூடாதென்று தடுத்திருப்பது விஷயமாய்க் கன்டோன்மென்ட் அதிகார சபையார் யாதொரு பிரதிபலனும் கொடுப்பதற்கு உள்ளாகமாட்டார்கள்.

அனுமதி செல்லாமற் போவது.

183. ஒரு கட்டிடத்தைக் கட்டுவதற்கோ புதுப்பிப்பதற்கோ கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் இதில் முன்னால் நிபந்தனை கண்டிருக்கிறபடி கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒவ்வொரு அனுமதியும் அது கொடுக்கப்படும் தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்கு செலாவணியாகும் ; மேலும், அனுமதியைப் பெற்றிருக்கும் நபராவது அவர் மூலமாய்ச் சட்டப்படி பாத்தியதை கொண்டாடும் யாதொருவராவது அப்படி அனுமதிக்கப்பட்ட கட்டிடத்தை அந்தக் காலத்துக்குள் தொடங்காவிட்டால், அதற்குப் பிறகு இதில் முன்னால் நிபந்தனை கண்டிருக்கிறவிதமாய் புதிதாக அனுமதி பெறாமல் அதைத் தொடங்கக்கூடாது.

சட்ட விரோதமாய் கட்டுவதும் புதுப்பிப்பதும்.

184. எவராவது—

(a) 179-வது, 180-வது பிரிவுகளில் சொல்லியிருக்கிறபடி சட்டசம்மதமான ஒரு நோடிஸ் கொடுத்திருக்காமலாவது, யாதொரு கட்டிடம் அனுமதிக்கப்படுவதற்கு அல்லது அனுமதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவதற்கு முன்னாவது,

(b) 181-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு கட்டளையை அனுசரித்து நடக்காமலாவது,

(c) அனுமதி மறுக்கப்பட்டிருக்கும்பொழுதாவது அது செல்லாமற் போயிருக்கும் பொழுதாவது,

ஒரு கட்டிடத்தைக் கட்டவோ அல்லது புதுப்பிக்கவோ தொடங்கினாலும், அதைக் கட்டிக் கொண்டேபோனாலும் கட்டி முடித்தாலும், அவர் - ஐந்நூறு ரூபாய்வரையில் அபராதம் விதிக்கப்படுவதற்குள்ளாவார்.

கட்டுவதையோ புதுப்பிப்பதையோ நிறுத்தவாவது இடித்துவிடவாவது அதிகாரம்.

185. யாதொரு கன்டோன்மெண்ட் அதிகார சபையார் - கன்டோன்மெண்டிலுள்ள யாதொரு நிலத்தின் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரருக்கு எப்போதாகிலும் எழுத்து மூலமாய் நோடிஸ் கொடுத்து, யாதொரு கட்டிடத்தைக் கட்டுவது அல்லது புதுப்பிப்பது 184-வது பிரிவின்படி குற்றமாகுமென்று கன்டோன்மெண்ட் அதிகாரி நினைக்கும் எந்த விஷயத்திலாயினும் அப்படி கட்டுவதையோ புதுபிப்பதையோ நிறுத்தும்படி அதன்மூலமாய்க் கட்டளையிடலாம்; மேலும், அப்படிப்பட்ட யாதொரு விஷயத்திலே, அப்படி கட்டப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட கட்டிடத்தையாவது அதன் யாதொரு பாகத்தையாவது தங்களுக்கு அவசியமாகத் தோற்றுகிறபடி மாற்றவேண்டுமென்றோ இடித்துவிடவேண்டுமென்றோ அதேமாதிரி கட்டளையிடலாம்:

ஆனால், கன்டோன்மெண்ட் அதிகார சபையார் அப்படிப்பட்ட யாதொரு கட்டிடம் அல்லது அதன் பாகத்தை மாற்றவேண்டுமென்றோ இடித்துவிட வேண்டுமென்றோ உத்தரவு செய்வதற்கு பதிலாக தங்களுக்கு நியாயமாகத் தோற்றக்கூடிய தொகையை இதற்கு ஈடாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

சகாயச் சட்டங்கள் செய்ய அதிகாரம்.

186. யாதொரு கன்டோன்மெண்ட் அதிகார சபையார்—

(a) கன்டோன்மெண்டில் ஒரு கட்டிடத்தைக் கட்டும் அல்லது புதுப்பிக்கும் உத்தேசத்தைக்குறித்து கன்டோன்மெண்ட் அதிகார சபையாருக்கு இன்ன மாதிரியாய் நோடிஸ் கொடுக்க வேண்டுமென்பதையும், நோடிஸுடன் இன்ன சங்கதியையும் நக்ஷாக்களையும் சவதரிக்க வேண்டுமென்பதையும்,

(b) குறிப்பிட்ட யாதொரு விஸ்தீர்ணம் அல்லது விஸ்தீர்ணங்களில் இன்ன மாதிரியான அல்லது இன்ன விவரமுள்ள கட்டிடத்தைக் கட்டலாம் அல்லது புதிப்புக்கலாம் என்பதையும் இன்ன காரியத்துக்காக ஒரு கட்டிடத்தைக் கட்டலாம் அல்லது புதுப்பிக்கலாம் என்பதையும் அந்தப்படி கட்டலாகாது என்பதையும்

(c) கட்டப்போகும் அல்லது புதுப்பிக்கப்போகும் கட்டிடத்திலிருக்கும் யாதொரு அறை அல்லது அறைகள் குறைந்தது இவ்வளவு கன அளவுள்ளவையாயிருக்கவேண்டுமென்பதையும்,

(d) கன்டோன்மெண்டிலாவது அதன் யாதொரு பாகத்திலாவது கட்டப்படக்கூடிய கட்டிடங்களின் மாதிரியைக்காட்டும் நக்ஷாக்களையாவது விவரக்குறிப்புகளையாவது கன்டோன்மெண்ட் அதிகார சபையார் சவதரிப்பதன்மேல் இன்ன கட்டணங்கள் செலுத்தத் தக்கவையாகுமென்பதையும்

நிர்ணயித்து சகாயச் சட்டங்கள் செய்யலாம்.

பிதுக்கங்களும் தடங்கல்களும்.

187 (1) கன்டோன்மெண்டிலுள்ள யாதொரு கட்டிடத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதார் எவரும் - கன்டோன்மெண்ட் அதிகார சபையாரின் எழுத்துமூலமான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் யாதொரு தெருவுக்கோ அதிலுள்ள யாதொரு சாக்கடைக்கால், ஜலதாரை அல்லது நீர்க்காலுக்கோ மேற்புறத்தில் தொங்கிக் கொண்டிருக்கும்படியாகவாவது அதற்குள் பிதுங்கிவரும்படியாவது அதை ஆக்கிரமிக்கும்படியாவது யாதொரு பிதுக்கத்தையாகிலும் கட்டுக்கோப்பையாகிலும் ஒரு கட்டிடத்துடன் சேர்க்கவாயினும் அதற்கு எதிராக அல்லது நேராக அமைக்கவாயினும் கூடாது.

(2) கன்டோன்மெண்ட் அதிகாரசபையார்-அப்படிப்பட்ட யாதொரு கட்டிடத்தின் சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரருக்கு எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்து அதன் மூலமாய் மேற்சொல்லியபடிக்குள்ள அப்படிப்பட்ட யாதொரு பிதுக்கம் அல்லது ஆக்கிரமிப்பை மாற்றும்படியோ அப்புறப்படுத்தும்படியோ உத்தரவு செய்யலாம்:

ஆனால், இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில் சட்டப்படி ஏற்கனவே இருக்கிற யாதொரு பிதுக்கம் அல்லது ஆக்கிரமிப்பின் விஷயத்தில் கன்டோன்மென்ட் அதிகார சபையார் மேலே கண்டபடி அப்புறப்படுத்துவதனாலாவது மாற்றுவதனாலாவது ஏற்படும் யாதொரு சேதத்துக்காக பிரதிபலன் கொடுக்கவேண்டும்.

(3) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - எழுத்து மூலமான உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாய் குறித்த யாதொரு தெருவின் ப்ளிந்த் அல்லது அடித்தரைச்சுவரின் ரேகைக்கப்பால் தரைமட்டத்திலிருந்தாவது தெருவிலிருந்தாவது அந்த உத்தரவில் குறிப்பிடப்படக்கூடிய உயரத்துக்கும் அளவுக்கும் அந்தத்தெருவிலுள்ள கட்டிடங்களின்மேல் மெத்தைகளிலிருந்து பிதுங்கி வரும்படி திறந்தலையான தாழ்வாரங்களோ, மெத்தை வீட்டின் முகப்புகளோ அறைகளோ அமைப்பதற்கு ஷை கட்டிடங்களின் சொந்தக்காரர்கள் அல்லது அனுபோகதாரர்களுக்கு அனுமதி கொடுக்கலாம்.

சாக்கடைகள் முதலியவைகளின் மேல் அனுமதியில்லாமல் கட்டிடங்கள் கட்டுவது.

188. கன்டோன்மென்ட் அதிகார சபையார் - கன்டோன்மென்டிலுள்ள யாதொரு பொது ஜலதாரை, சாக்கடை, கல்வர்ட், நீர்க்கால் அல்லது தண்ணீர்க்குழாயின்மேல் தங்களுடைய எழுத்து மூலமான அனுமதியைப் பெறாமல் புதிதாய் யாதொரு கட்டிடத்தைக் கட்டியிருக்கிற அல்லது புதுப்பித்திருக்கிற யாதொரு நபருக்கு எழுத்து மூலமான நோடிஸ் கொடுத்து அதன் மூலமாய் ஷை கட்டிடத்தை இடித்துத் தள்ளிவிடும்படியோ தங்களுக்கு யுக்தமாகத் தோற்றுகிறபடி அதன் விஷயமாய்ப் பிரவர்த்திக்கும்படியோ உத்தரவு செய்யலாம்.

சாக்கடைக்கால்களும் அழுக்குத் தண்ணீர் ஜலதாரைகளும்.

189. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார்-யாதொரு தெருவிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரருக்கு எழுத்து மூலமான நோடீஸ் கொடுத்து, அவர் தம்முடைய சொந்த செலவிலும் கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குத் தகுதியாகத் தோற்றுகிற மாதிரியும் அந்தக் கட்டிடத்திலிருந்து சேரும் மழைத் தண்ணீர் விழுவதற்சாகவும் அதைக் கொண்டுபோய் வெளியே விழும்படிச் செய்வதற்தாகவும் சரியான பத்தல்களையும் குழாய்களையும் அமைத்து அவைகளை நல்ல ஸ்திதியில் வைத்திருக்கவேணுடுமென்றாவது அந்தக் கட்டிடத்துக்கும் அல்லது நிலத்துக்கும் யாதொரு சாக்கடைக்கால் அல்லது ஜலதாரைக்கும் சம்பந்தமாகிலும் போக்குவரவு மார்க்கமாகிலும் ஸ்தாபித்து அதைப் பராமரித்து வரவேணுடுமென்றாவது உத்தரவு செய்யலாம்.

(2) கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலத்திலிருந்து தண்ணீரை நன்றாய் வடியச்செய்யும் காரியத்துக்காக, கன்டோன்மென்ட் அதிகாரசபையார்-அந்தக் கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரருக்காவது குத்தகைதாரருக்காவது எழுத்து மூலமான நோடிஸ் கொடுத்து—

(a) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கட்டிடங்களுக்கு இடையிலுள்ள யாதொரு முற்றம், சந்து அல்லது வழிக்கு தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற சாமான்களைக் கொண்டும் மாதிரியாகவும் தளவரிசை போடவேண்டுமென்றாகிலும்,

(b) அப்படிப்பட்ட யாதொரு தளவரிசையை மராமத்து செய்து சரியான நிலைமையில் வைத்திருக்கவேண்டுமென்றாகிலும்

உத்தரவு செய்யலாம்.

விளக்குகளுக்கு ப்ராக்கெட் என்னும் சாதனங்கள் அமைப்பதற்குள்ள அதிகாரம்.

190. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடத்தின் வெளிப்புறத்துக்காகிலும் மராமத்துக்காகிலும் தீங்காவது அசௌகரியமாவது உண்டாகாதமாதிரியாய் விளக்குகள் வைப்பதற்காக ப்ராக்கெட் என்னும் சாதனங்களை அதில் அமைக்கலாம்.

தெருக்கள்.

யாதொரு தெரு, நிலம் முதலியவைகளைச் சிறிதுகாலத்துக்கு அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பது.

191. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் சங்கிரமித்திருக்கிற யாதொரு தெரு அல்லது நிலத்தை, கட்டிட சாமான்கள் சேர்த்துவைக்கும் காரியத்துக்காகவாவது அதில் சிறிது காலத்துக்குக் குழி தோண்டும் காரியத்துக்காகவாவது அதன்மேல் சிறிது காலத்துக்கான யாதொரு கட்டுக்கோப்பு அமைக்கும் காரியத்துக்காகவாவது, பொதுஜனங்களின் க்ஷேமம் அல்லது சௌகரியத்தை உத்தேசித்து அவர்கள் நிர்ணயிக்கக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு சிறிது காலம் அனுபோகத்தில் வைத்துககொண்டிருக்க எழுத்துமூலமான உத்தரவைக் கொண்டு அனுமதி கொடுக்கலாம்; மேலும், அவர்கள் - அப்படிப்பட்ட அனுமதி கொடுப்பதற்காக யாதொரு கட்டணம் வாங்குவதுமல்லாமல் தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால் அந்த அனுமதியை ரத்துசெய்தும் விடலாம்.

தெருக்களை ஏற்படுத்துவதும் மூடிவிடுவதும்.

192. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸருடைய அனுமதியை முன்னதாகப் பெறாமல் யாதொரு தெருவை நிரந்தரமாய் மூடிவிடவுங்கூடாது, புதிதாய் ஒரு தெருவை ஏற்படுத்தவுங்கூடாது.

(2) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - பஹிரங்கமான விளம்பரம் பிரசித்தம் செய்து அதன் மூலமாய், யாதொரு தெருவையாவது அதன் யாதொரு பாகத்தையாவது மரமத்து செய்வதற்காகவாகிலும், சாக்கடைக்கால் ஏற்பாடு ஜலசர்ப்பிரா அல்லது விளக்கு போடுவதற்காயினும் இந்த ஆக்டினாலோ அதன்படியோ செயயவேண்டியிருக்கிற அல்லது செய்ய அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிற வேறே யாதொரு வேலையைச் செய்வதற்காயினும் சம்பந்தப்பட்ட யாதொரு வேலையைச் செய்யுங் கார்யத்துக்காகவாகிலும் சிறிதுகாலத்துக்கு மூடிவைக்கலாம் :

ஆனால், எவையேனும் வேலைகள் அல்லது மரமத்துகள் காரணமாகவாவது வேறே யாதொரு காரணத்தினாலாவது கன்டோனமென்ட் அதிகார சபையாரிடத்தில் சங்கிரமித்திருக்கும யாதொரு தெருவின் ஸ்திதியாகிலும் யாதொரு தண்ணீர் கட்டுவேலைகள், சாக்கடைக்கால், கல்வர்ட் அல்லது வளவின் ஸ்திதியாகிலும் பொது ஜனங்களுக்கு வெகுசாய் அபாயம் விளைக்கக்கூடியதாயிருக்கும்பட்சத்தில், கன்டோன்மென்ட் அதிகார சபையார்—

(a) அக்கம்பத்தில் இருக்கும் கட்டிடங்களையும், நிலத்தையும் பாதுகாப்பதற்கு நியாயமான சகல ஏற்பாடுகளும் செய்வதுமல்லாமல் அவைகளிடத்தில் நியாயமாய்ப போவதற்கு வழியும் ஏற்படுத்தவேண்டும்.

(b) ஜனங்களுடைய பிராணத்துக்கும் சொத்துக்கும் பங்கோபஸ்து ஏற்படுவதற்காகப் போதுமான தடைகள் அல்லது அடைப்புக்கள் கடடும்படி செய்வதுமல்லாமல், அந்தத் தடைகள் அல்லது அடைபபுகளுக்கு சூரியாஸ்தமனமுதல் சூரியோதயம் வரையில் போதுமானபடி விளக்கு போடும்படி செய்யவும் வேண்டும.

193. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார்-கன்டோன்மென்டிலுள்ள யாதொரு தெருவுக்கு ஒரு பெயர் கொடுக்கும்படிச் செய்வதுமல்லாமல், தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற யாதொரு கட்டிடத்தின்மேல் அந்தப் பெயரை காட்டிவைக்கும்படியும் செய்யலாம்; மேலும், அவர்கள் - அப்படிப்பட்ட யாதொரு கட்டிடத்துக்கு ஒரு நம்பர் கொடுக்கும்படியும் செய்யலாம்.

தெருக்களின் பெயர்களும் கட்டிடங்களின் நம்பர்களும்.

(2) யாராகிலும் ஷை பெயர் அல்லது நம்பரை அழித்து விட்டாலும் எடுத்துவிட்டாலும் விகாரப்படுத்தினாலும், மாற்றிவிட்டாலும், கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் உத்தரவை அனுசரித்துக் கொடுக்கப்பட்ட யாதொரு பெயர் அல்லது நம்பரிலிருந்து வித்தியாசப்படும்படியான யாதொரு பெயர் அல்லது நம்பரை அமைத்தாலும் அவர் - இருபது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

எல்லைகளும் மரங்களும்.

194. (1) எந்த சாமானைக் கொண்டாயினுஞ்சரி எந்த வகையைச் சேர்ந்ததாகவாயினுஞ்சரி, யாதொரு எல்லைச்சுவர், வேலி அல்லது அடைப்பை, கன்டோன்மென்ட அதிகார சபையாருடைய எழுத்து மூலமான அனுமதியில்லாமல் யாதொரு கன்டோன்மென்டுகுள் கட்டக்கூடாது.

எல்லைச் சுவர்களும் வேலிகளும் அடைப்புகளும்

(2) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - கன்டோன்மென்டிலுள்ள யாதொரு நிலத்தின் சொந்தக்காரருக்காவது குத்தகைதாரருக்காவது எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்து—

(a) தகுதியற்றதாகவாவது, பார்க்கக்கூடாததாகவாவது மற்றப்படி ஆட்சேபனைக்கிடந்தருவதாகவாவதிருக்கும் யாதொரு எல்லைச்சுவர், வேலி அல்லத அடைப்பை ஷை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தும்படியாகிலும்,

(b) ஷை நோடிஸில் குறிப்பிடப்படக்கூடிய சாமானைக்கொண்டாயினும், வகையுள்ளதாகவாயினும் அளவுகளுள்ளதாகவாயினும் போதுமான அளவுக்கு எல்லைசசுவர்கள், வேலிகள் அல்லது அடைப்புகள் ஷை நிலத்தின்மேல் கட்டவேண்டுமென்றாகிலும்,

(c) அப்படிப்படட நிலத்தைச் சேர்ந்த எல்லைச் சுவர்கள், வேலிகள் அல்லது அடைப்புகளை நல்ல ஸ்திதியில் வைத்திருக்கவேண்டுமென்றாகிலும்

உத்தரவு செய்யலாம்:

ஆனால், கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய சம்மதத்தைப் பெற்றாவது அவர்களுடைய உத்தரவின்படியாவது கட்டப்பட்டிருக்கிற அல்லது இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும்போதேயிருக்கிற அப்படிப்பட்ட யாதொரு எல்லைச்சுவா, வேலி அல்லது அடைப்பின் விஷயத்திலே, கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அதை அப்புறபபடுத்துவதனால் விளையும் சேதத்துக்காக பிரதிபலன் கொடுக்கவேண்டும்.

195. (1) கன்டோன்மென்டுக்குள்ளிருக்கும் யாதொரு தனி நபரின் சொந்த அடைப்பில் நின்றிருக்கும முதிர்ச்சியடைந்த யாதொரு மரத்தை யாதொருகாரணத்தினால வெட்டித்தள்ளுவது அவசியமாகுமென்று கன்டோன்மென்ட அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், கன்டோன்மென்ட் அதிகார சபையார் ஷை நிலத்தின் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரருக்கு எழுத்து மூலமான நோடிஸ் கொடுத்து, அந்த நோடிஸில் குறிப்பிடப்பட்டிருக்ககூடிய காலத்துக்குள் அந்த மரத்தை வெட்டித்தள்ளவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

மரங்களை வெட்டித் தள்ளுவதும் அவைகளிலிருந்து கிளைகளை வெட்டுவதும் அவைகளை ஒழுங்காகத் தறிப்பதும்.

யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார்—

(a) கவர்ன்மென்டாருக்குச் சொந்தமானதாய் கன்டோன்மென்டிலுள்ள நிலத்தில் நின்றிருக்கும் யாதொரு மரத்தின் கிளைகளை வெட்டுவிக்கலாம் அல்லது அதை ஒழுங்காய் கத்தரிக்கும்படிச் செய்யலாம் ; அல்லது

(b) பகிரங்கமான விளம்பர பிரசித்தஞ்செய்து, அந்த விளம்பர மூலமாய், கன்டோன்மென்டிலுள்ள நிலத்தின் சகல சொந்தக்காரர்களும் குத்தகைதாரர்களுமாவது அப்படிப்பட்ட யாதொரு நிலத்தின் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரருக்கு எழுத்து மூலமான நோட்டீஸ் கொடுத்து அதன்மூலமாய் அவராவது - ஷை விளம்பரம் அல்லது நோட்டீஸில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய மாதிரியாக ஷை நிலத்தில் நின்றிருக்கும் சகல மரங்களிலிருந்தாகிலும் எந்த மரத்திலிருந்தாகிலும் கிளைகளை வெட்டவேண்டுமென்றாயினும் அவைகளை ஒழுங்காய்க் கத்தரிக்கவேண்டுமென்றாயினும், அப்படிப்பட்ட நிலத்திலுள்ள பட்டுப்போன மரங்களை அப்புறப்படுத்தவேண்டுமென்றாயினும் உத்தரவு செய்யலாம்.

பொது நிலத்தைத் தோண்டுவது.

196. யாராகிலும் கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய எழுத்து மூலமான அனுமதியில்லாமலே தனி நபர்களின் சொந்த சொத்தாயிராமல் கன்டோன்மென்டிலுள்ள யாதொரு திறந்தவெளியான இடத்தின் மேற்பரப்பைத் தோண்டினால், அவர்-இருபது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கவராவார் ; மேலும், தொடர்ச்சியாய்ச் செய்யப்பட்டுவரும் யாதொரு குற்றத்தின் விஷயத்தில், அவர்-குற்றம் தொடர்ந்து வருகிற தினங்களில் முதல் தினத்துக்குப் பிற்பட்ட ஒவ்வொரு தினத்துக்காகவும் ஐந்து ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

நிலத்தை அக்கிரமமாய் உபயோகிப்பது.

197. (1) கன்டோன்மென்டிலுள்ள கல் வெட்டியெடுக்கும் யாதொரு இடத்தில் வேலை செய்வதாவது கன்டோன்மென்டிலுள்ள யாதொரு இடத்தின் தரையிலிருந்து கல், மண் அல்லது வேறே சாமானை அப்புறப்படுத்துவதாவது அப்படிப்பட்ட இடத்துக்கு சமீபத்தில் வாசஞ்செய்கிற அல்லது அங்கே அடிக்கடி வருகிற நபர்களுக்கு அபாயகரமாயிருக்குமென்றாகிலும் அசங்கியம் அல்லது சங்கடம் விளைக்கிறதென்றாகிலும் வெகுசாய் விளைக்கக்கூடியதாயிருக்குமென்றாகிலும் கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் - ஷை நிலம் அல்லது இடத்தின் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரருக்கோ அந்தப்படி செய்வதற்காயினும் அப்புறப்படுத்துவதற்காயினும் உத்தரவாதியாயிருக்கும் நபருக்கோ எழுத்துமூலமான நோட்டீஸ் கொடுத்து, ஷை கல் வெட்டியெடுக்கும் நிலத்தில் வேலை செய்துவராமலாவது வேலைசெய்ய அனுமதி கொடுக்காமலாவது ஷை சாமானை அப்புறப்படுத்தாமலாவது தடுக்கலாம், அல்லது அதன் காரணமாக ஏற்படுகிற அல்லது வெகுசாய் ஏற்படக்கூடிய அபாயத்தைத் தடுக்கும் காரியத்துக்காகவாவது அசங்கியம் அல்லது சங்கடத்தை நீக்கும் காரியத்துக்காகவாவது கன்டோன்மென்ட் அதிகார சபையார் கட்டளையிடக்கூடிய ஏற்பாடுகளை அது விஷயத்தில் அவர் செய்யவேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் யாதொரு விஷயத்தில் உடனே அபாயம் நேரிடுவதைத் தடுப்பதற்காக ஷை முறையை அனுசரிப்பது அவசியமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால, அவர்கள் - வழியில் போகிறவர்களின் பாதுகாப்புக்காக சரியான வேலி அல்லது அடைப்பு ஏற்படுத்தவேண்டுமென்று எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு உத்தரவு செய்யலாம்.

12-ம் அத்தியாயம்.

மார்க்கெட்டுகள், ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகள், வியாபாரங்கள், தொழில்கள்.

பொது மார்க்கெட்டுகளும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளும்.

198. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் கன்டோன்மென்டுக்குள்ளாகிலுஞ்சரி வெளியிலாகிலுஞ்சரி, தங்களுக்குத் தகுதியாகத் தோற்றும் சங்கியையுள்ள பொது மார்க்கெட்டுகளையும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் பொது தொட்டிகளையும், அந்தந்த மார்க்கெட்டுகளிலாவது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளிலாவது வியாபாரம் நடத்துகிற அல்லது அவைகளுக்கு அடிக்கடி வருகிற நபர்களின் உபயோகத்திற்காக கொட்டில்கள், கடைகள், கொட்டகைகள், கூண்டுகள் இதர கட்டிடங்கள் அல்லது சௌகரியங்கள் ஆகிய இவைகள் சகிதமாக ஏற்படுத்தி பராமரித்து வரலாம் ; மேலும், அப்படிப்பட்ட மார்க்கெட்டுக்குரிய கட்டிடங்களில், அங்கே விற்பனை செய்யப்படும் சரக்குகளை எடை போடுவதற்காகவாவது அளப்பதற்காகவாவது இடங்கள், யந்திரங்கள், திராசுகள், அளவு கருவிகள் ஆகிய இவைகளை ஏற்படுத்தலாம்.

(2) அப்படிப்பட்ட மார்க்கெட் அல்லது ஆடுமாடு முதலிய அடிக்கும் தொட்டியானது கன்டோன்மென்ட் ஹத்துக்களுக்கு வெளியிலிருந்தால், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அவைகளைப் பார்வையிடும் விஷயத்திலும் அவைகள் சம்பந்தமாய்ச் சரியான ஒழுங்கேற்படுத்தும் விஷயத்திலும் அவை அந்த ஹத்துக்களுக்குள் இருந்தாற்போலவே அதிகாரமுடையவர்களாவார்கள்.

(3) கன்டோன்மென்ட் அதிகார சபையார் எந்தக் காலத்திலாகிலும் பஹிரங்கமான விளம்பரம் பிரசித்தம் செய்து அதன் மூலமாய் யாதொரு பொது மார்க்கெட்டையாவது ஆடுமாடு முதலியவை அடிக்கும் பொது தொட்டியையாவது அதன் யாதொரு பாகத்தையாவது மூடிவிடலாம்.

(4) கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் அல்லாமல் வேறே யாதொரு பிரதேச அதிகார சபையாரால் பரிபாலனம் செய்யப்பட்டுவரும் விஸ்தீர்ணத்தின் ஊற்றுக்களுக்குள் யாதொரு பொது மார்க்கெட்டையாவது ஆடுமாடு முதலியவை அடிக்கும் பொது தொட்டியையாவது அந்த அதிகார சபையாருடைய அனுமதியில்லாமலாகிலும் அந்த அதிகார சபையார் அங்கீகரிக்கக்கூடிய திட்டங்களின்மேலன்றி மற்றப்படியாகிலும் ஸ்தாபிப்பதற்கு இந்தப் பிரிவிலுள்ளதெதனுலும் அனுமதி ஏற்படுவதாகக் கருதப்படமாட்டாது.

யாதொரு பொது மார்க்கெட்டை உபயோகிப்பது.

199. (1) எந்த நபரும் - கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய எழுத்துமூலமாயுள்ள பொதுவான அல்லது விசேஷமான உத்தரவில்லாமல் யாதொரு பொது மார்க்கெட்டிலே எந்தப் பிராணியையாவது வஸ்துவையாவது விற்பனை செய்யவுங்கூடாது, விற்பனைக்காகக் காட்டி வைக்கவுங்கூடாது.

(2) இந்தப் பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளை மீறி நடக்கும் யாதொரு நபரும் அப்படிப்பட்ட நபரால் விற்பனைக்காகக் காட்டிவைக்கப்படும் யாதொரு பிராணியும் அல்லது வஸ்துவும் நிர்வாக உத்தியோகஸ்தருடைய அல்லது இது விஷயமாய்க் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் யாதொரு உத்தியோகஸ்தர் அலலது ஊழியக்காரருடைய உத்தரவினலாகிலும் அதன்படியாகிலும் ஷை மார்க்கெட்டிலிருந்து சுருக்க வகையாய் அப்புறப்படுத்தப்படலாம்.

கொட்டில் கட்டணங்களும் வாடகைகளும் இதர கட்டணங்களும் விதித்து வாங்குவது.

200. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார்—

(a) யாதொரு பொது மார்க்கெட்டிலாவது ஆடுமாடுகள் அடிக்கும் பொது தொட்டியிலாவதுள்ள யாதொரு கொட்டில், கடை, நிலை, கொட்டகை அலலது கூண்டை அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காகவாகிலும் உபயோகிப்பதற்காகவாகிலும், யாதொரு பொது மார்க்கெட்டில் விற்பனைக்காக சரக்குகளைக் காட்டிவைப்பதற்சாகவாகிலும், அங்கே விற்பனை செய்யப்படும சரக்குகளை எடை போடுவதற்காகவாகிலும, ஆடுமாடு முதலியவை அடிக்கும் யாதொரு பொது தொட்டியில் பிராணிகளைக் கொல்வதற்காகவாகிலும் தங்களுக்கு தகுதியாகத் தோற்றுகிற கொட்டில் கட்டணங்கள், வாடகைகளும் இதர கட்டணங்களும் வாங்கலாம்;

(b) டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸருடைய அனுமதியைப் பெற்று மேலே சொல்லப்பட்டபடி விதிக்கப்படக்கூடியதான கொட்டில், கட்டணங்களையும் வாடகைகளையும் இதர கட்டணங்களையுமாவது அவைகளின யாதொரு பாகத்தையாவது ஏக காலத்தில் ஒரு வருஷத்துக்கு மேற்படாத யாதொரு கால அளவுக்குக் குத்தகைக்கு விடலாம்;

(c) யாதொரு பொது மார்க்கெட்டிலாவது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியிலாவதுள்ள யாதொரு கொட்டில் கடை, நிலை, கொட்டகை அல்லது கூண்டை அனுபோகத்தில் வைத்துக்கொள்ளும் அல்லது உபயோகிக்கும் உரிமையைத் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற கால அளவுக்கும் ஷரத்துகளின்மேலும் பஹிரங்கமாய் ஏலம் போடலாம், அல்லது டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸருடைய அனுமதியைப் பெற்று பஹிரங்கமானதல்லாத விற்பனை மூலமாய் ஒருவகை செய்யலாம்.

கொட்டில் கட்டணங்கள், வாடகைகள் முதலியவைகளைப் பிரசித்தம் பண்ண வேண்டுமென்பது.

201. யாதொரு பொது மார்க்கெட்டிலாவது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியிலாவது விதிக்கப்படக்கூடிய எவையேனும் கொட்டில் கட்டணங்கள், வாடகைகள் இதர கட்டணங்கள் ஆகிய இவைகளின் அட்டவணைக்கும், அப்படிபபட்ட மார்க்கெட்டையாகலும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் பொது தொட்டியாகிலும் உபயோகிபபது விஷயமாய் ஒழுங்கேற்படுத்தும் காரியத்துக்காக இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட சகாயச் சட்டங்களுக்கும் பிரதி ஒன்றை இங்கிலீஷ் பாஷையிலும் கன்டோன்மென்ட் அதிகார சபையார் கட்டளையிடக்கூடிய இதர பாஷை அல்லது பாஷைகளிலும் அச்சிட்டு ஷை மார்க்கெட்டிலாயினும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியிலாயினும் நன்ருய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் ஒட்டிவைக்கவேண்டும்.

சொந்த மார்க்கெட்டுகளும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளும்.

202. (1) கன்டோன்மென்டுக்குள்ளிருக்கும் யாதொரு இடத்துக்கு சந்தர்ப்பத்துக்கேற்றபடி மார்க்கெட்டாகவோ ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியாகவோ கன்டோன்மென்ட அதிகார சபையார் லைஸென்ஸ் கொடுத்திருந்தாலன்றி மற்றப்படி, யாதொரு பொது மார்க்கெட்டாயிராமல் கன்டோனமென்டிலிருக்கும் வேறே யாதொரு இடத்தை மார்க்கெட்டாக உபயோகிக்கவுங்கூடாது, ஆடுமாடு முதலியவை அடிக்கும் பொது இடமாயிராமலிருக்கும் அப்படிப்பட்ட யாதொரு இடத்தை ஆடுமாடு முதலியவை அடிக்கும் இடமாக உபயோகிக்கவுங்கூடாது.

ஆனால், இந்தப் பிரிவிலுள்ளதெதுவும் கவர்ன்மென்டாரால் ஸ்தாபிக்கப்பட்டு பாராமரிக்கப்படும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியின் விஷயத்தில் பிரயோகப்படமாட்டாது.

(2) இந்தப் பிரிவிலுள்ளதெதனாலும்,—

(a) யாதொரு திருவிழா அல்லது சடங்கு காலத்தில் யாதொரு இடத்தில் யாதொரு பிராணியை, முன்னாவது பின்னாவது நோடிஸ் கொடுப்பது விஷயமாய நிர்வாக உத்தியோகஸ்தர் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டின் அனுமதியை முன்னதாகப் பெற்று பொதுவான அல்லது விசேஷ நோடிஸ் மூலமாய் இது விஷயமாக விதிக்கக்கூடிய எவையேனும் திட்டங்களுக்குட்பட்டு, கொல்வதற்கு நிர்ப்பந்தம் ஏற்படுவதாகவாகிலும்,

(b) பிராணிகளைப் சேனைகள் ஆகாரமாய் எடுத்துக்கொள்வதற்காவது அதன் மாமிசத்தை படைகளுக்கு விற்பனை செய்யும் காரியத்துக்காவது கொல்லும்பட்சத்தில் மதாசாரத்தை அனுசரித்து அந்தப் பிராணிகளைக் கொல்வதற்காக கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் அனுமதியை முன்னதாகப் பெற்று, நிர்வாக உத்தியோகஸ்தர் இடங்களைப் பிரத்தியேகப்படுத்தி வைபபதற்குத் தடை ஏற்படுவதாகவாகிலும் கருதப்படமாட்டாது.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (a) அடையாளமிட்ட பகுதியின்படி நிர்வாக உத்தியோகஸ்தரால் விதிக்கப்பட்ட யாதொரு திட்டத்தின் பிரகாரம் யாதொரு நபர் நடந்துகொள்ளத்தவறினால், அவர்-ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராததண்டனையும், தொடர்ச்சியாயக் குற்றம் செய்யப்பட்டுவரும் விஷயத்தில், குற்றம் தொடர்ச்சியாய்ச் செய்யப்படும் தினங்களில் முதல் தினத்துக்குப் பிற்பட்ட ஒவ்வொரு தினத்துக்கும் பத்து ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான அபராத தண்டனையும் விதிக்கப்படத்தக்கவராவார்.

சொந்த மார்க்கெட்டுக்காகவாவது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிக்காகவாவது லைஸென்ஸ் கொடுப்பதற்கான திட்டங்கள்.

203. (1) கன்டோன்மென்டில் யாதொரு சொந்த மார்க்கெட்டையாவது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியையாவது திறக்க யாதொரு நபருக்கு லைஸென்ஸ் கொடுப்பதற்காக, கன்டோன்மென்ட் அதிகார சபையார் - தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற கட்டணங்கள் வாங்கலாம்; மேலும், அவர்கள் - அப்படிப்பட்ட லைஸென்ஸை, இந்த ஆக்டுக்கும் அதன்படி செய்யப்படும் சகாயச் சட்டங்களுக்கும் பொருத்தமாய் இருக்கும்படி தாங்கள் தகுதியென நினைத்து ஏற்படுத்தக்கூடிய திட்டங்களுக்குட்பட்டுக் கொடுக்கலாம்.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அப்படிப்பட்ட யாதொரு லைஸென்ஸ் கொடுக்காமல் மறுப்பதற்குள்ள காரணங்களைச் சொல்லாமலே அந்தப்படி மறுக்கலாம்.

லைஸென்ஸில்லாமல் சொந்த மார்க்கெட் அல்லது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியைத் திறந்து வைத்திருப்பது முதலியதற்குத் தண்டனை.

204. (1) யாதொரு நபர் யாதொரு சொந்த மார்க்கெட்டையாகிலும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் சொந்த தொட்டியையாகிலும் பொது ஜனங்களின் உபயோகத்துக்காகத் திறந்துவைப்பதற்கு லைஸென்ஸ் பெறாமலாவது அதற்குரிய லைஸென்ஸ் சிறிது காலத்துக்கு ரத்து செய்யப்பட்டிருக்கும்போதாவது அது ரத்துசெய்யப்பட்ட பிறகாவது அதைத் திறந்துவைத்திருந்தால், அவர் - ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கவராவார்; மேலும், அவர் - குற்றம் தொடர்ச்சியாய்ச் செய்யப்படும் விஷயத்தில், அந்தப்படி குற்றம் தொடர்ச்சியாய்ச் செய்யப்படும் தினங்களில் முதல் தினத்துக்குப் பிற்பட்ட ஒவ்வொரு தினத்துக்காகவும் ஐந்து ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

(2) யாதொரு சொந்த மார்க்கெட்டையாவது ஆடுமாடு முதலியவை அடிக்கும் சொந்த தொட்டியையாவது திறந்து வைப்பதற்கான லைஸென்ஸ் கொடுக்கப்பட்டாலும், மறுக்கப்பட்டாலும், சிறிது காலத்துக்கு ரத்து செய்யப்பட்டாலும், ரத்து செய்யப்பட்டாலும், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அந்தப்படி கொடுத்திருப்பது, ரத்து செய்திருப்பது, சிறிதுகாலத்துக்கு ரத்து செய்திருப்பது அல்லது ரத்து செய்திருப்பதைக் குறித்து இங்கிலிஷிலும் தங்களுக்கு அவசியமாகத் தோற்றுகிற வேறே பாஷை அல்லது பாஷைகளிலும் நோடிஸ் ஒன்றை அந்த நோடிஸ் எந்த இடத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த இடத்தின் பிரவேச வாயிலிலாகிலும் அதற்குச் சமீபத்திலாகிலும் நன்றாய்த் தெரியும்படியான ஒரு இடத்தில் ஒட்டும்படி செய்யவேண்டும்.

லைஸென்ஸ் கொடுக்கப்பெற்றிராத மார்க்கெட் அல்லது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியை உபயோகித்தால் தண்டனை.

205. யாதொரு மார்க்கெட்டுக்காவது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிக்காவது இந்த ஆக்டினாலாகிலும் அதன்படியாகிலும் யாதொரு லைஸென்ஸ் பெறவேண்டியதாயிருந்தும் அப்படிப்பட்ட லைஸென்ஸ் பெறாமலே அம் மார்க்கெட்டாவது ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியாவது திறந்து வைக்கப்பட்டிருக்கிறதென்றாகிலும், அதற்காகக் கொடுக்கப்பட்ட லைஸென்ஸ் அந்த காலத்தில் சிறிது காலத்துக்கு ரத்து செய்து வைக்கப்பட்டிருக்கிறதென்றாகிலும் ரத்து செய்யப்பட்டிருக்கிறதென்றாகிலும் யாதொரு நபருக்குத் தெரிந்திருந்

னும் அவர் அப்படிப்பட்ட மார்க்கெட்டில் யாதொரு வஸ்துவை விற்பனை செய்தாலும் விற்பனைக்காகக் காட்டிவைத்தாலும் அப்படிப்பட்ட ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியில் யாதொரு பிராணியைக் கொன்றாலும், அவர் - ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்; மேலும், அவர் - குற்றம் தொடர்ச்சியாய்ச் செய்யப்பட்டுவரும் விஷயத்தில், குற்றம் செய்யப்படும் தினங்களில் முதல் தினத்துக்குப் பிற்பட்ட ஒவ்வொரு தினத்துக்கும் ஐந்து ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கவராவார்.

ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளை உபயோகிக்கக் கூடாதென்று தடுப்பதும் அது விஷயமாய் நிர்ப்பந்தம் ஏற்படுத்துவதும்.

206. (1) சுகாதார சம்பந்தமான காரணங்களை உத்தேசித்து பின்னே சொல்லப்பட்டபடி செய்வது அவசியமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்பட்டால், அவர்கள் - பஹிரங்கமான விளம்பரம் பிரசித்தம் செய்து, ஒரு மாதத்துக்கு மேற்படாமல் அந்த நோடிஸில் குறிப்பிடக்கூடிய காலத்துக்காகிலும், ஒரு மாதத்துக்கு மேற்படாமல் அவர்கள் அதே மாதிரியான நோடிஸ் மூலமாய் பின்னும் குறிப்பிடக்கூடிய காலத்துக்காகிலும் அந்த நோடிஸில் குறிபபிடபபட்ட ஆடுமாடு முதலியவை அடிக்கும் சொந்த தொட்டியை உபயோகிக்கக்கூடாதென்றோ அந்தப்படி குறிப்பிடப்பட்ட வகையைச் சேர்ந்த யாதொரு பிராணியை அதில் கொலலக்கூடாதென்றோ தடுக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி வெளிவிடப்பட்ட ஒவ்வொரு விளம்பரத்திற்கும் நகல் ஒன்றை, அது எந்த ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்தத் தொட்டியில் நன்றாய்த் தெரியும்படியான இடத்தில் ஒட்டிவைக்க வேண்டும்.

ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளைப் பார்வையிடுவதற்குள்ள அதிகாரம்.

207. (1) கன்டோன்மென்ட் போர்ட் ஏதாகிலும் இருந்தால் அதன் ப்ரெஸிடென்டாலாவது ஹெல்த் ஆபிஸராலாவது எழுத்து மூலமாக இது விஷயமாக அதிகாரம் கொடுக்கப் பெற்றவராய் கன்டோன்மென்ட் அதிகார சபையைச் சேர்ந்திருக்கும் யாதொரு ஊழியக்காரர் இந்த அத்தியாயத்தில் கண்ட நிபந்தனைகளை மீறி யாதொரு இடத்தில் யாதொரு பிராணி கொல்லப்பட்டுக்கொண்டிருக்கிறதென்றோ கொல்லப்படப்போகிறதென்றோ நம்புவதற்குக் காரண மிருந்தால், அவர் - பகலிலாயினும் இரவிலாயினும் எந்த நேரத்திலாவது அந்த இடத்துக்குள் பிரவேசித்து அதைப் பார்வையிடலாம.

(2) மேலேகண்ட ஒவ்வொரு உத்தரவிலும், இன்ன இடத்துக்குள் பிரவேசிக்க வேண்டுமென்றும் அது இன்ன பிரதேசத்தில் இருக்கிறதென்றும், ஏழு தினங்களுக்கு மேற்படாமல் இன்ன கால அளவுக்கு அந்த உத்தரவு செலாவணியாகுமென்று குறிப்பிட வேண்டும்.

சகாயச் சட்டங்கள் செய்ய அதிகாரம்.

208. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - பிரதேச கவர்ன்மென்டாரின் அனுமதியைப் பெற்று அடியிற்கண்ட சகல விஷயங்களுக்காகவாவது அவைகளில் எதற்காகவாவது நிபந்தனை ஏற்படுத்துவதற்காக இந்த ஆக்டுடன் பொருத்தமாயிருக்கும் சகாயச் சட்டங்கள் செய்யலாம்; அவையாவன :—

(a) இன்ன தினங்களிலும் இன்னமணி நேரங்களிலும யாதொரு சொந்த மார்க்கெட் அல்லது ஆடுமாடு முதலியவை அடிக்கும் சொந்த தொட்டியை உபயோகத்துக்காகத் திறந்து வைக்கலாமென்பது;

(b) அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளின் உருவக் குறிப்பு, காற்று வருவாய், சாக்கடைக்கால் ஏற்பாடு ஆகிய இவைகள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதும் அவைகளைக் கட்டுவதற்கு இன்ன சாமான்கள் உபயோகிக்கவேண்டுமென்பதும்;

(c) அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளையும் ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டிகளையும் அவைகளைச் சேர்ந்த நிலங்களையும் கட்டிடங்களையும் சுத்தமாயும் சுகாதார ஸ்திதியிலும் வைத்திருப்பதும் அங்கிருந்து அசுத்தங்களையும் கழிகடை வஸ்துக்களையும் அப்புறப்படுத்துவதும் அவைகளை உபயோகிக்கிற அல்லது அங்கே அடிக்கடி வருகிற நபர்களின் உபயோகத்துக்காக சுத்தமான தண்ணீரையும் போதுமான சங்கியையுள்ள மலஜலபாதை மறைவிடங்களையும் மூத்திரம் பெய்யும் இடங்களையும் சர்ப்பரா செய்வதும்;

(d) ஆடுமாடு முதலியவை அடிக்கும் யாதொரு தொட்டியில் இன்ன மாதிரியாக பிராணிகளைக் கொட்டியில் அடைத்துவைக்கவேண்டுமென்பது;

(e) இன்ன மாதிரியாய்ப் பிராணிகளைக் கொல்லலாமென்பது;

(f) கொல்வதற்காகக் கொண்டுவரப்பட்டு வியாதி காரணமாகவாவது வேறே யாதொரு காரணத்தினாலாவது மனிதர்கள் சாப்பிடுவதற்குத் தகுதியற்றவைகளாயிருக்கும் பிராணிகளை ஒருவகை செய்வது அல்லது கொன்றுவிடுவது;

(g) கொல்லப்பட்ட பிறகு, வியாதி காரணமாகவாவது வேறே யாதொரு காரணத்தினாலாவது மனிதர்கள் சாப்பிடுவதற்குத் தகுதியற்றவையாயிருப்பதாகத் தெரியவரும் பிரேதங்களை அழித்துவிடுவது.

வியாபாரங்களும் தொழில்களும்.

துணிதோய்க்கும் இடங்கள் யேற்படுத்துவது.

209. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - வண்ணார் தங்களுடைய தொழிலைச் செய்வதற்காகத் தகுந்த இடங்கள் எற்படுத்தி, அவைகளை உபயோகிப்பதற்காக தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற தொகை செலுத்த வேண்டுமென்று உத்தரவு செய்யலாம்.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - மேலே சொல்லப்பட்ட இடங்களை எற்படுத்தி யிருந்தால், அவர்கள் பஹிரங்கமான விளம்பரம் பிரசித்தம் செய்து கன்டோன் மென்டிலுள்ள வேறே யாதொரு இடத்தில் வண்ணார் துணிகளைத் தோய்க்கக்கூடாதென்று தடுக்கலாம்.

ஆனால், ஷை தடை உத்தரவானது - யாதொரு வண்ணான் தன்னுடைய சொந்த துணிகளையாவது, துணிகள் எந்த இடத்தில் தோய்க்கப்படுகின்றனவோ அந்த இடத்தின் அனுபோகதாரராயிருக்கும் வேறே யாதொரு நபருடைய துணிகளையாவது தோய்ப்பதற்குப் பிரயோகப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி வெளிவிடப்பட்ட யாதொரு விளம்பரத்தில் கண்ட யாதொரு தடை உத்தரவை எவராகிலும் மீறி நடந்தால், அவர் - இருபது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

சில தொழில்கள் நடத்துவதற்கு லைசென்ஸுகள் அவசியமாகுமென்பது.

210. (1) அடியிற்கண்ட வகுப்புகளைச் சேர்ந்த எந்த நபரும், அதாவது—

(a) கசாயிக்காரர்களும், பறவைகள், வேட்டை மிருகங்கள் அல்லது மீன் விற்கிறவர்களும்,

(b) லாபத்துக்காகப் பன்றிகளை வைத்துக்கொண்டிருக்கும் நபர்களும், இந்தியாவில் கொல்லப்பட்ட பன்றிகளின் மாமிசத்தில் வியாபாரம் செய்கிறவர்களும,

(c) பால்கறக்கும் கால் நடைகளையும் பால் கறக்கும் வெள்ளாடுகளையும் லாபத்துக்காக வைத்துக்கொண்டிருக்கிறவர்கள்,

(d) பன்றிகள், பால்கறக்கும் கால் நடைகள் அல்லது பால் கறக்கும் வெள்ளாடுகளல்லாத வேறே பிராணிகளை லாபத்துக்காக வைத்துக்கொண்டிருக்கும் நபர்கள்,

(e) பாற்காரர்கள், வெண்ணெய் வியாபாரம் செய்கிறவர்கள், நெய் செய்கிறவர்களும் விற்கிறவர்களும்,

(f) ரொட்டி, பிஸ்கோத்து, அல்லது கேக் என்னும் பணியாரம் செய்கிறவர்களும், இந்தியாவில் செய்யப்படும் ரொட்டி, பிஸ்கோத்து அல்லது கேக் என்னும் பணியாரத்தை விற்கிறவர்களும்,

(g) பழம் அல்லது காய்கறி தினுசுகள் விற்கிறவர்கள்,

(h) காற்றுபுகட்டிய அல்லது எனங்களில் போட்டுவைக்கக்கூடிய இதர நீர் வகைகளையாவது ஐஸ் (பனிக்கட்டி(அல்லது ஐஸ் க்ரீம் என்னும் தின்பண்டத்தையாவது உற்பத்தி செய்கிறவர்களும் அவைகளை விற்கிறவர்களும்,

(j) (பன்றிகளின் மாமிசம், பால், வெண்ணெய், ரொட்டி, பிஸ்கோத்து, கேக், பழம், காய்கறி வகைகள், காற்றுபுகட்டிய அல்லது எனங்களில் போட்டுவைக்கக்கூடிய நீர் வகைகள் அல்லது ஐஸ் க்ரீம அல்லாமல் வேறே) அழுகிப் போகக்கூடிய தன்மையுடையனவாய் மனிதர்கள் சாப்பிடுவதற்கான எவையேனும் மருந்து வகைகள், ஔஷதச் சாமான்கள் அல்லது ஆகார வஸ்துக்கள் அல்லது பானவஸ்துக்களை விற்கிறவர்கள்,

(k) குடிக்கும் காரியங்களுக்காக உபயோகிக்கப்படும் தண்ணீர் விற்கிறவர்கள்,

(l) வண்ணார்,

(m) உலர்ந்த புல், வைக்கோல், மரம், கறி அல்லது தீப்பற்றி யெரியத்தக்க இதர வஸ்துக்களில் வியாபாரம் செய்கிறவர்கள்.

(n) பாணவேடிக்கை சாமான்கள், கிரோஸின் எண்ணெய், பெட்ரோலியம் அல்லது தீப்பற்றி யெரியத்தக்க வேறே எண்ணெய் அல்லது ஸ்பிரிட் என்னும் சாராயத்தில் வியாபாரம் செய்கிறவர்கள்,

(o) தோல் பதனிடுகிறவர்களும் சாயம் போடுகிறவர்களும்,

(p) எந்த வியாபாரம் அல்லது தொழிலிலிருந்து அருவருப்புண்டாக்கத்தக்க அல்லது அரோக்கியமான நாற்றம் வெளிவருகிறதோ அந்த வியாபாரம் அல்லது தொழில் நடத்தும் நபர்கள்,

(q) கோதுமை, அரிசி முதலிய இதர தானியங்களையாவது மாவையாவது விற்கிறவர்கள்,

(r) சர்க்கரை அல்லது மிட்டாய் வகைகள் செய்கிறவர்களும் விற்கிறவர்களும, கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடம் இது விஷயமாய் லைசென்ஸ் பெறுவதற்காக விண்ணப்பம் செய்துகொண்டு அதைப் பெற்றிருந்தாலன்றி மற்றப்படி, கன்டோன்மென்டின் எந்த பாகத்திலும் தங்களுடைய வியாபாரம் வேலை அல்லது தொழிலை, நடத்தக்கூடாது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு லைசென்ஸானது - ஒரு வருஷ காலத்துக்குச் சட்டப்படி செலாவணியாய்க் கொண்டிருக்கும்; மேலும், அந்த லைசென்ஸ் மூலமாக எந்த வியாபாரத்தை ஸ்தாபிக்கவாவது பராமரிக்கவாவது உத்தேசிக்கப்படுகிறதோ அந்த வியாபாரமானது பொது ஜனங்களுக்கு அருவருப்புண்டாக்கத்தக்கதாகவாகிலும் அபாயகரமாகவாகிலுமிருக்குமென்று நம்புவதற்குக் கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு முகாந்தரம் இருந்தாலன்றி மற்றப்படி அப்படிப்பட்ட லைசென்ஸை கொடுக்காமல் நிறுத்திவிடக்கூடாது.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் என்ன சொல்லியிருந்தபோதிலும் பாதகமில்லாமலே,—

(a) இந்த ஆக்ட் வழங்கத் தொடங்கும் காலத்தில், கன்டோன்மென்டின் யாதொரு பாகத்திலே தம்முடைய வர்த்தகம், வேலை அல்லது தொழிலை நடத்திக்கொண்டிருந்த எந்த நபரும் - அந்த பாகத்தில் அப்படிப்பட்ட வர்த்தகம் அல்லது தொழிலை நடத்துவதற்கான லைசென்ஸுக்காக விண்ணப்பம் செய்துகொள்ள அவர் கடமைப்பட்டவராவாரென்று கண்டு எழுத்து மூலமாய் மூன்று மாதத்துக் குறையாத நோட்டீஸைக் கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடமிருந்து வரப்பெற்றுக் கொள்ளுகிறவரையில், ஷை லைசென்ஸுக்காக விண்ணப்பம் செய்துகொள்ள கடமைபட்டவராகமாட்டார்; மேலும், அவருக்கு லைசென்ஸ் கொடுக்க கன்டோன்மென்ட் அதிகார சபையார் மறுக்கும் பட்சத்திலே, அவர்கள் - அந்தப்படி மறுப்பது காரணமாய் உண்டாகக்கூடிய யாதொரு நஷ்டத்துக்காகப் பிரதிபலன் கொடுக்கவேண்டும்;

(b) பெட்ரோலியம் எண்ணெயை விற்பனை செய்வதற்காகவாவது சேர்த்து வைப்பதற்காகவாவது, விஷ வஸ்துக்களையாகிலும் வெள்ளைப் பாஷாணத்தையாகிலும் விற்பனை செய்வதற்காகவாவது சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதற்காகவாவது யாதொரு நபர் 1899-ம் வருஷத்திய இந்துதேசத்து பெட்ரோலியம் ஆக்டினாலே 1919-ம் வருஷத்து விஷவஸ்துக்களாக்டினாலோ அல்லது அதன்படியோ மேலே கண்டபடி விற்பனை செய்வதற்காக, சேர்த்து வைப்பதற்காக அல்லது விற்பனைசெய்ய சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருப்பதாக லைசென்ஸ் பெறவேண்டியவராயிருக்கும் யாதொரு விஷயத்தில், அவர் ஷை லைசென்ஸ் பெறவேண்டுமென்று உத்தரவு செயயக்கூடாது.

1899-ம் வருஷத்து 8-வது ஆக்ட். 1919-ம் வருஷத்து 12-வது ஆக்ட்.

(4) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - இந்தப் பிரிவின்படி லைசென்ஸுகள் கொடுப்பதற்காக, பிரதேச கவர்ன்மென்டாரின் அநுமதியை முன்னதாகப் பெற்று தாங்கள் நிஷ்கரிஷை செய்யக்கூடிய கட்டணங்கள் வாங்கலாம்.

லைசென்ஸுகளில் சேர்க்கப்படக்கூடிய திட்டங்கள்.

211. 210-வது பிரிவின்படி கொடுக்கப்படும் யாதொரு லைசென்ஸில், லைசென்ஸ்தாரர் கன்டோன்மென்டின் இன்ன பாகத்திலே தம் வர்த்தகம், வேலை அல்லது தொழிலை நடத்தலாமென்று குறிப்பிட்டிருக்கவேண்டும்; மேலும் அதில், மனிதர்கள் சாப்பிடுவதற்காக உத்தேசிக்கப்பட்டவையாய் குறிப்பிடப்பட்டிருக்கும் எவையேனும் சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோவதற்கான மணி நேரங்கள் விஷயமாயும் முறை விஷயமாயும ஒழுங்கு ஏற்படுத்தியிருக்கவேண்டியதுமல்லாமல், இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட சகாயச் சட்டங்களை அநுசரித்து வேறே எந்த திட்டங்களை விதிப்பது தகுதியாகுமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குத் தோற்றுகிறதோ அந்த திட்டங்கள் அடங்கியும் இருக்கலாம்.

பொது நிபந்தனைகள்.

லைசென்ஸை மாற்றுவதற்கான அதிகாரம்.

212. இந்த அத்தியாயத்தின்படி கொடுக்கப்பட்ட லைசென்ஸின் பிரகாரம் யாதொரு இடத்தை உபயோகிப்பதனால் அசங்கியம் அல்லது சங்கடம் உண்டாகிறதென்றாவது பிராணனுக்காகிலும் தேகாரோக்கியத்துக்காகிலும் வெகுசாய் அபாயம் விளையக்கூடுமென்றாவது யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் தெரிந்து திருப்தியடைந்தால், அந்த அதிகார சபையார் - ஷை இடத்தின் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அநுபோகதாரருக்கு எழுத்து மூலமான நோடிஸ் கொடுத்து ஷை இடத்தை உபயோகிப்பதை நிறுத்திவிடவேண்டுமென்றாயினும், அது இனிமேல் அசங்கியம் அல்லது சங்கடம் விளைக்கக்கூடியதாகவாவது அபாயகரமானதாகவாவது இராமலிருக்கும்படி செய்வதற்காக என்ன மாறுதல்கள் செய்யவேண்டுமென்று அல்லது என்ன அம்சங்களைச் சேர்க்கவேண்டுமென்று அல்லது என்ன சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் அபிப்பிராயப்படுகிறார்களோ அப்படிப்பட்ட மாறுதல்கள் முதலியவைகளைச் செய்யவேண்டுமென்றாயினும் உத்தரவு பண்ணலாம்.

லைசென்ஸில்லாமலாவது 212-வது பிரிவை மீறியாவது வர்த்தகம் முதலியவை நடத்துவது.

213. எந்த வர்த்தகம், தொழில், அல்லது வேலைக்கு லைசென்ஸ் வேண்டியிருக்கிறதோ அந்த வர்த்தகம், தொழில் அல்லது வேலையை எவராவது லைசென்ஸில்லாமலாகிலும், அதற்குரிய லைசென்ஸ் சிறிது காலத்துக்கு ரத்து செய்யப் ட்டிருக்கும்போதாகிலும், அது ரத்து செய்யப்பட்ட பிறகாகிலும் நடத்தினுல் அவரும், எவராவது 212-வது பிரிவின்படி நோடிஸ் வர பெற்றுககொண்ட பிறகு யாதொரு கட்டிடம் அல்லது இடத்தை ஷை லைசென்ஸை மீறி உபயோகப் படுத்தினுலும் உபயோகப்படுத்த அனுமதி கொடுத்தாலும் அவரும் - இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கவர்களாவார்கள்; மேலும், அவர்கள் - குற்றம் தொடர்ச்சியாய்ச் செய்யப்பட்டு வரும் விஷயத்திலே, அந்தப்படி தொடர்ச்சியாய்க் குற்றம் செய்யப்படும் தினங்களில முதல் தினத்துககுப் பிற்பட்ட ஒவ்வொரு தினத்துக்காகவும் நாற்பது ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான அபராத தண்டனை விதிக்கப்படததக்கவர்களாவார்கள்.

அசுத்தங்கள் முதலியவைகள் போட்டு பிராணிகளை வளர்ப்பது.

214. யாராகிலும் கன்டோன்மென்டிலிருக்கும் ஜனங்களுக்குப் பால் சர்ப்பரா செய்யும் காரியத்துக்காக வைத்து வைக்கப்பட்டாவது அவர்களுடைய ஆகாரத்துக்கு உபயோகிக்க உத்தேசிக்கப் பட்டாவதிருக்கும் யாதொரு பிராணியை அசுத்தமான அல்லது விஷத்தன்மையுள்ள வஸ்துக்களை போடடு போஷித்தாலும் எந்தஇடத்தில் சுகாதார சம்பந்தமான காரணங்களை உத்தேசித்து ஆடுமாடுகளை மேய்க்கக்கூடாதென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் பஹிரங்கமான விளம்பரமூலமாய்த் தடுத்திருக்கிறுர்களோ அந்த இடத்தில் அதை மேயவிட்டாலும், அவர்-ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

பிரவேசிப்பது, பார்வையிடுவது, கைப்பற்றுவது.

பிரவேசிக்கவும் கைப்பற்றவுமுள்ள அதிகாரங்கள்.

215. (1) யாதொரு போர்டின் ப்ரெஸிடென்டாவது வைஸ் ப்ரெஸிடென்டாவது, நிர்வாக உத்தியோகஸ்தர், ஹெல்த் ஆபிஸர், அஸிஸ்டென்ட் ஹெல்த் ஆபிஸர், அல்லது இது விஷயமாய்க் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் அதிகாரம் கொடுக்கப்பெற்று அவர்களைச் சேர்ந்தவராயிருக்கும் வேறே யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரராவது—

(a) பார்வையிடும் காரியத்துக்காக கன்டோன்மென்டிலுள்ள யாதொரு மார்க்கெட், கட்டிடம், கடை, கொட்டில் அல்லது வேறே இடத்தில் எந்தக் காலத்திலாகிலும பிரவேசிக்கலாம்; மனிதர்கள் சாப்பிடுவதற்காகவாவது பானம் செய்வதற்காகவாவது மருந்தாய் உபயோகிப்பதற்காகவாவது உத்தேசிக்கப்பட்ட யாதொரு பிராணி, சாமான் அல்லது வஸ்துவானது விற்பனைக்காகக் காட்டிவைக்சப்பட்டிருந்தாலுஞ்சரி, அதை விலைகூறித்திரிந்தாலுஞ்சரி, அது விற்பனை செய்யுங்காரியத்துக்காகவோ விற்பனைகுத் தயார் செய்யப்படும் காரியத்துக்காகவோ யாதொரு இடத்தில் போட்டுவைக்கப்படடிருந்தாலுஞ்சரி, கொண்டுவரப்பட்டாலுஞ்சரி, அதையாகிலும், அப்படிப்பட்ட யாதொரு வஸ்துவைத் தயாரிப்பதற்கோ, செய்வதற்கோ, போடுவதற்கோ ஏற்ற யாதொரு பாத்திரம் அல்லது எனத்தையாகிலும் பார்வையிடலாம்; மேலும், ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியாக உபயோகிக்கப்படும் யாதொரு தொட்டியில் பிரவேசித்துப் பார்வையிடுவதுமல்லாமல் அங்கே யிருக்கும் யாதொரு பிராணி அல்லது வஸ்துவை பரீக்ஷை செய்யலாம்;

(b) அப்படிப்பட்ட யாதொரு பிராணி, சாமான் அல்லது வஸ்துவானது வியாதி பிடித்ததாகவாகிலும் அனுரோக்கியமானதாகவாகிலும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி மனிதர்கள் சாப்பிடுவதற்கோ பானம் செய்வதறகோ மருந்தாய் உபயோகிபபதற்கோ தகுதியற்றிருப்பதாகவாகிலும், வேறே வஸ்துக்கள் கலக்கப் பெற்றிருப்பதாகவாகிலும், அது என்ன வஸ்துவென்று சொல்லப்படுகிறதோ அந்த வஸ்துவாயிராமலிருப்பதாகவாகிலுமிருந்தால், அதையும் அப்படிப்பட்ட யாதொரு பாத்திரம் அல்லது எனமானது அதில் தயாரிக்கப்படும், செய்யப்படும் அல்லது போடப்படும யாதொரு வஸ்துவை சந்தர்ப்பத்துக்கேற்றபடி அனுரோக்கியகரமானதாகவோ, மனிதர்கள் சாப்பிடுவதற்காயினும் மருந்தாய் உபயோகிப்பதற்காயினும தகுதியற்றதாகவோ செய்யக்கூடிய விதமாகவாவது ஸ்திதியிலாவது இருந்தால், அதையும் கைபபற்றலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கைப்பற்றப்பட்டு அழிந்துபோகக்கூடிய தன்மையுள்ளதாயிருக்கும் யாதொரு வஸ்துவானது சந்தர்ப்பத்துக்கேற்றபடி வியாதி பிடித்ததாயிருக்கிறதென்றாகிலும் அனுரோக்கியகரமானதாயிருக்கிறதென்றாகிலும் மனிதர் சாப்பிடுவதற்கோ பானம் செய்வதற்கோ மருந்தாய் உபயோகிப்பதற்கோ தகுதியற்றதாயிருக்கிறதென்றாகிலும் ஹெல்த் ஆபிஸராவது அஸிஸ்டென்ட் ஹெல்த் ஆபிஸராவது அபிப்பிராயப்பட்டால் அவருடைய உத்தரவைக்கொணடு அதை உடனே அழித்துவிடலாம்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கைப்பற்றப்பட்ட ஒவ்வொரு பிராணி, சாமான், பாத்திரம், எனம் அல்லது வேறே வஸ்துவானது (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அழிக்கப்படாவிட்டால், அதை மாஜிஸ்ட்ரேட்டுக்குமுன் கொண்டுபோகவேண்டும்.

(4) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கைப்பற்றுகிறகாலத்திலே, வியாதிபிடித்திருக்கிற பிராணி அல்லது பிரேதத்துக்காவது, அனாரோக்கியகரமாகவாகிலும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி மனிதர்கள் சாப்பிடுவதற்கோ பானம் செய்வதற்கோ மருந்தாய் உபயோகிப்பதற்கோ தகுதியற்றதாகவாகிலும் வேறே வஸ்துக்களுடன் கலக்கப்பட்டாகிலும் என்ன வஸ்துவென்று சொல்லப்படுகிறதோ அந்த வஸ்துவாயிராமலாகிலுமிருக்கும் யாதொரு சாமான் அல்லது வஸ்துவுக்காவது, (1) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்ட (b) அடையாளமிட்டபகுதியில் சொல்லியிருக்கிற விதமாகவாயினும ஸதிதியிலாயினுமிருக்கும் யாதொரு பாத்திரம் அல்லது ஏனத்துக்காவது சொந்தக்காரராகிலும் அதை சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கிற நபராகிலும் நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார் ; மேலும், ஷை பிராணி, சாமான், பாத்திரம், ஏனம் அல்லது வேறே வஸ்துவானது-கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குப் பறிமுதலாவதற்காவது, அழித்துவிடப்படுவதற்காவது, அது விற்பனைக்குக் காட்டிவைக்கப்படுவதையாகிலும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி சாப்பிடுவதற்கோ பானஞ் செய்வதற்கோ மருந்தாய் உபயோகிப்பதற்கோ தயார்செய்வதற்காக உபயோகிக்கப்படுவதையாகிலும் தடுக்கும்படியாக ஒருவகை செய்யப்படுவதற்காவது உட்பட்டதாகும்.

1-வது விவரணம்.—அப்படிப்பட்ட யாதொரு வஸ்துவானது நெய்யாய் விற்பனை செய்யபபடுவதற்காக (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் யாதொரு இடத்தில் காட்டிவைக்கப்பட்டாகிலும் சேர்த்துவைக்கப்பட்டாகிலும் அந்த இடத்துக்குக் கொண்டுவரப்பட்டாகிலுமிருந்து அதில் முற்றிலும் பாலிலிருந்தே உண்டாக்கப்படாத யாதொரு வஸ்து அடங்கியிருந்தால், இந்தப் பிரிவின் காரியங்களுக்காக, அது - என்ன வஸ்துவாயிருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அந்த வஸ்துவாயிராமலிருப்பதாகக் கருதப்படும்.

2-வது விவரணம்.—ஊதல் கொடுக்கப்பட்ட மாமிசமானது - மனிதர்கள் சாப்பிடுவதற்குத் தகுதியற்றதாயிருப்பதாகக் கருதப்படும்.

3-வது விவரணம்.—யாதொரு ஆகாரப் பொருளாவது பானப்பொருளாவது - தேகாரோக்கியத்துக்குத் தீங்குண்டாக்கத்தக்கதாயிராத யாதொரு வஸ்து அதனுடன் சேர்க்கப்பட்டிருப்பது காரணத்தினாலேயே அது என்னவஸ்துவென்று சொல்லப்படுகிறதோ அந்த வஸ்துவாயிராமலிருப்பதாகக் கருதப்படமாட்டாது ; ஆனால்—

(a) அப்படிப்பட்ட வஸ்துவானது - ஷை சாமானை கொண்டுபோவதற்காகிலும் உட்கொள்ளுவதற்காகிலும் தகுதியான நிலைமையிலுள்ள வியாபார வஸ்துவாயிருக்கும்படித் தயார்செய்வதற்கு சேர்ப்பது அவசியமாயிருந்து, அந்தப்படி அது சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமேயொழிய, பிரஸ்தாப ஆகாரவஸ்து அலலது பான வஸ்துவின் பரிமாணத்தையாகிலும் அளவையாகிலும், எடையையாகிலும் அதிகப்படுத்துவதற்காகவோ அது மட்டமான வஸ்துவாயிருப்பதை மறைப்பதற்காகவோ மோசடியாய்ச் சேர்க்கப்பட்டிருக்கக் கூடாது ; அல்லது,

(b) ஷை ஆகாரப் பொருளையாவது பானப்பொருளையாவது உற்பத்தி செய்கிற, தயாரிக்கிற அல்லது கொண்டுபோகிற முறையில் ஷை வேறே வஸ்துவானது பிரஸ்தாப சாமானுடன் கலந்துபோவதைத் தவிர்க்கமுடியாமலிருந்திருக்கவேண்டும் ; அல்லது,

(c) பிரஸ்தாப சாமானின் சொந்தக்காரராவது அதைத் தம் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நபராவது ஸ்பஷ்டமாகவும் தெளிவாகவும் எழுதியிருக்கிற அல்லது அச்சிட்டிருக்கிற லேபில் அதன்மேல் ஒட்டியாகிலும் அதனுடன் சேர்த்துவைத்தாகிலும் பஹிரங்கப்படுத்தும் தன்மையுள்ள வேறே மார்க்கத்திலாகிலும் அப்படிப்பட்ட வஸ்து சேர்க்கப்பட்டிருக்கிறதென்று போதுமானபடி தெரிவித்திருக்கவேண்டும் ; அல்லது,

(d) ஷை சொந்தக்காரராவது நபராவது பிரஸ்தாப சாமானானது குறித்த ஒரு தன்மையுடையதாகுமென்றும் வஸ்துவாகுமென்றும் லக்ஷணமுடையதாகுமென்றும் எழுத்துமூலமாய் உறுதிகூறப்பட்டதன்மேல் கிரயத்துக்கு வாங்கியிருந்து, அது அப்படிப்பட்ட தனமையுடையதலலவென்றும் வஸ்துவல்லவென்றும் லக்ஷணமுடையதல்லவென்றும் நம்புவதற்கு அவருக்கு முகாந்திரம் இருந்திராமலிருக்கவேண்டும் ; மேலும், அவர்-அதை எந்த நிலைமையிலும் எந்த விவரங்களைக கண்டும் கிரயத்துக்கு வாங்கினாரோ அதே நிலைமையிலும் விவரஙகளைச் சொல்லியும் விற்பனைக்காகக் காட்டிவைத்திருக்கவேண்டும், அல்லது விலைகூறித்திரியவேண்டும் அல்லது விற்பனைக்குக் கொணடுவந்திருக்கவேண்டும்.

கால்நடைகளையும் மாமிசத்தையும் இறக்குமதி செய்வது.

216. (1) கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய எழுத்துமூலமான அனுமதியில்லாமல், எந்த நபரும் - மனிதர்கள் சாப்பிடுவதற்காக உத்தேசிக்கப்பட்ட யாதொரு பிராணியையாகிலும் கவர்ன்மென்டாராலாவது கன்டோன்மென்ட் அதிகார சபையாராலாவது பராமரிக்கப்பட்டுவரும் யாதொரு ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியிலல்லாமல் மற்றப்படி கன்டோன்மென்டுக்கு வெளியில கொல்லப்பட்ட யாதொரு பிராணியின் மாமிசத்தையாகிலும் கன்டோன்மென்டுக்குள் கொண்டுவரக்கூடாது.

கால்நடைகளையும் மாமிசத்தையும் இறக்குமதி செய்வது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவை மீறி கொண்டுவரப்படும் யாதொரு பிராணியாவது மாமிசமாவது நிர்வாக உத்தியோகஸ்தராலாகிலும் கன்டோன்மென்ட் அதிகார சபையைச் சேர்ந்த யாதொரு ஊழியக்காரராலாகிலும் கைப்பற்றப்பட்டு விற்பனை செய்யப்படலாம், அல்லது கன்டோன்மென்ட் அதிகார சபையார் கட்டளையிடக்கூடியபடி வேறேவிதமாய் ஒருவகை செய்யப்படலாம் ; மேலும், அது விற்பனை செய்யப்பட்டால், அந்தப்படி விற்பனை செய்வதனுல் கிடைக்கும் பணத்தை கன்டோன்மென்ட் நிதிக்கு வரவாக வைக்க வேண்டும்.

(3) எவராகிலும் (1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட நிபந்தனைகளை மீறி நடந்தால், அவர் - ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

(4) இந்தப் பிரிவில் சொல்லியிருப்ப தெதுவும் சுத்தம் செய்யப்பட்ட அல்லது உப்பிட்டு பாதுகாத்துவைக்கப்பட்ட மாமிசத்துக்காவது, கன்டோன்மென்டுக்கு வெளியே சாப்பிடுவதற்காக அதன் வழியாய் ஓட்டிக்கொண்டு போகப்படும் பிராணிகளுக்காவது கொண்டுபோகப்படும் மாமிசத்துக்காவது, உடனே வீட்டில் சாப்பிடுவதற்காக யாதொரு நபரால் கன்டோன்மென்டில் கொண்டுவரப்படும் மாமிசத்துக்காவது பிரயோகப்படமாட்டாது :

ஆனல், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - பஹிரங்கமான விளம்பரம் பிரசித்தம் செய்து, இந்தப் பிரிவில் கண்ட நிபந்தனைகள் - யாதொரு வகையைச் சேர்ந்ததாயிருக்கும் சுத்தஞ்செய்யப்பட்ட அல்லது உப்பிட்டு பாதுகாத்து வைக்கப்பட்ட மாமிசத்துக்காவது குறிப்பிட்ட ஒரு இடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மாமிசத்துக்காவது பிரயோகப்படுமென்று ஷெ விளம்பரமூலமாய்க் கட்டளையிடலாம்.

13-ம் அத்தியாயம்.

ஜலசர்ப்பராவும், சாக்கடைக்கால் ஏற்பாடும், விளக்குபோடுவதும்.

ஜலசர்ப்பரா.

217. (1) வீடுகளில் உபயோகிப்பதற்காகப் போதுமான அளவுக்கு ஜலசர்ப்பரா ஏற்படும்படி கவர்ன்மென்டார் ஏற்பாடு செய்து வைத்திராத ஒவ்வொரு கன்டோன்மென்டிலும், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அந்தப்படி ஜலம் சர்ப்பரா செய்யவேண்டும் அல்லது அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

ஜலசர்ப்பராவைப் பராமரித்து வருவது.

(2) சாத்தியமானவரையில கன்டோன்மென்ட் அதிகார சபையார்-ஷெ ஜலம் சர்ப்பராவானது வருஷமுழுவதும் இருந்து வருவதற்கும் அந்த ஜலம் சகல காலங்களிலும் சுத்தமாயும் மனிதர்கள குடிப்பதற்குத் தகுதியாக இருப்பதற்கும் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்.

218. (1) கன்டோன்மென்ட் அதிகார சபையார்-பஹிரங்கமாய் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், (ராணுவ கட்டுவேலை அதிகாரிகளின் அல்லது பொதுக் கட்டுவேலைகள் இலாகாவின் மேல்விசாரணையிலிராத வேறே) யாதொரு ஏரி, ஓடை, ஊற்று கிணறு, குளம், நீர்நிலை, அல்லது வேறே ஆதாரமானது கன்டோன்மென்டின் ஹத்துக்களுக்குள் இருந்தாலுஞ்சரி அதற்கு வெளியே யிருந்தாலுஞ்சரி, அதிலிருந்து கன்டோன்மென்டிலுள்ள பொது ஜனங்களின் உபயோகத்துக்காக ஜலம் கிடைக்கிறதாயிருந்தாலும் கிடைக்கும்படி செய்யக்கூடுமானலும் ஷெ ஏரிமுதலியவை பொது ஜலசர்ப்பரா ஆதாரமாகுமென்று நிர்ணயிக்கலாம்.

பொது ஜலசர்ப்பரா ஆதாரங்களின் மேல்விசாரணை.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு ஆதாரமும் - கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் மேல்விசாரணையில் இருக்கவேண்டும்.

பொதுஜனங்கள் குடிக்கும் ஜல சர்ப்பராவுக்கான யாதொரு சொந்த ஆதாரத்தைப் பராமரித்து வரவேண்டு மென்றாவது மூடிவிடவேண்டுமென்றாவது உத்தரவு செய்ய அதிகாரம்.

219. கன்டோன்மென்ட் அதிகார சபையார் எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி அதன்மூலமாய், குடிக்கும் காரியங்களுக்காக உபயோகிக்கப்படும் ஜல சர்ப்பராவுக்கான யாதொரு ஆதாரத்தின் சொந்தக்காரராவது அதன் மேல்விசாரணை வகிக்கும் நபராவது—

(a) அதை நல்லநிலைமையில் வைத்துவைத்து, அப்போதைக்கப்போது அதிலிருந்து சேற்றையும், கழிகடை வஸ்துக்களையும் அழிந்துபோகக்கூடிய பூண்டு முதலியவைகளையும் பரிஷ்கரிக்கவேண்டுமென்றாவது,

(b) அது அசுத்தப்படாமல் கன்டோன்மென்ட் அதிகார சபையார் கட்டளையிடக்கூடியபடி பாதுகாக்க வேண்டுமென்றாவது,

(c) அதிலுள்ள ஜலமானது குடிக்கும் காரியங்களுக்குத் தகுதியற்றதாயிருக்கிறதென்று கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குத் திருப்திகரமாக ருஜுசெய்யப்பட்டால், பொது ஜனங்கள் அதனிடத்தில் போவதையாகிலும் அந்த ஜலத்தை உபயோகிப்பதையாகிலும் தடுப்பதற்காக ஷெ நோடிஸில் குறிப்பிடக்கூடிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்றாவது

உத்தரவு செய்யலாம் :

ஆனால், யாதொரு கிணற்றின் விஷயத்திலே, மேலே சொல்லப்பட்ட நபர் - ஷெ நோடிஸில் கண்டபடி நடந்துகொள்வதற்கு பர்த்தியாய், அந்த கிணற்றைச் சரியாய் பரா மரித்து வருவதற்குள்ள சகல உத்தரவாதத்தினின்றும் விடுதலையாக விரும்புவதாகவும் பொது ஜனங்களின் உபயோகத்துக்காக அதைக் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் மேல்விசாரணையிலும் மேற்பார்வையிலும் வைக்கத் தாம் சித்தமாயிருப்பதாகவும் தெரிவிக்கலாம்; அவர் அந்தப்படி செய்யும்பட்சத்தில், அவர் - ஷெ நோடிஸின் பிரகாரம் நடந்துகொள்ளக் கடமைபட்டவராகமாட்டார்; மேலும், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - ஷெ கிணற்றின் மேல்விசாரணையையும் மேற்பார்வையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஜல சர்ப்பரா செய்வது.

220. (1) யாதொரு கட்டிடத்தின் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரர் அந்தக் கட்டிடம் அல்லது நிலத்தை, வீட்டில் உபயோகிப்பதற்கு ஜலம் கிடைக்கும்படி செய்வதற்காக தாங்கள் நிர்ணயிக்கக்கூடிய அளவுள்ளதாயும் விவரங்களின்படியுமுள்ள குழாய்கள் மார்க்கமாக யாதொரு பொது ஜல சர்ப்பரா ஆதாரத்துடன் சம்பந்தப்படுத்த வேண்டுமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் உத்தரவு செய்யலாம்.

(2) அந்தப்படி ஜல சர்ப்பராவுடன் சம்பந்தம் ஏற்படுத்தப்பெற்ற ஒவ்வொரு கட்டிடத்தின் அனுபோகதாரரும் - தாம் ஏதேனும் தண்ணீர் வரி செலுத்தினுல் அதற்கு பிரதியாக கன்டோன்மென்ட் அதிகார சபையார் நிர்ணயிக்கக்கூடிய அளவுக்கு வீட்டில் உபயோகிப்பதற்காக ஜலம் பெறுவதற்கு பாத்தியதையுடையவராவார்.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி (ஜல) சர்ப்பராவின் அளவு விஷயமாய் வரையறை ஏற்படுத்தியிருந்தால் அதற்கு அதிகமாய் சர்ப்பரா செய்யப்படும் சகல ஜலத்துக்காகவும், தண்ணீர் வரி விதிக்கப்பட்டிராத யாதொரு கன்டோன்மென்டில் இந்தப் பிரிவின்படி சர்ப்பரா செய்யப்படும் சகல ஜலத்துக்காகவும் கன்டோன்மென்ட் அதிகார சபையார் நிஷ்கரிஷை செய்யக்கூடிய ஒரு வீதத்தின்படி தொகை செலுத்தவேண்டும்.

(4) வீட்டில் உபயோகிப்பதற்காகத் தண்ணீர் சர்ப்பரா செய்வதில்,—

(a) பிராணிகளுக்காகவாவது அந்தப் பிராணிகளாகிலும் வண்டிகளாகிலும் விற்பனைக்காகவோ வாடகைக்காகவோ வைத்து வைக்கப்பட்டிருந்தால் அந்த வண்டிகளைக் கழுவுவதற்காகவாவது,

(b) யாதொரு வர்த்தகம், செய்முறை அல்லது வியாபாரத்துக்காகவாவது,

(c) தண்ணீர் தொட்டிகள், நீஞ்சலடிக்கும் ஸ்தலங்கள் அல்லது எவையேனும் அலங்கார சம்பந்தமான அல்லது யந்திர சம்பந்தமான காரியங்களுக்காகவாவது,

(d) தோட்டங்களுக்காகவாவது நீர்ப்பாசன காரியங்களுக்காகவாவது,

(e) ரஸ்தாக்கள் அல்லது வழிகள் அமைப்பதற்காகவாவது அவைகளுக்கு தண்ணீர் தெளிப்பதற்காகவாவது,

(f) கட்டிடங்கள் கட்டும் காரியங்களுக்காகவாவது

செய்யப்படும் யாதொரு சர்ப்பரா அடங்குவதாகக் கருதப்படமாட்டாது.

ஜலம் எடுத்துக்கொண்டு போகும்படி உத்தரவு செய்ய அதிகாரம்.

221. கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலத்துக்கு சுத்த ஜலம் போதுமான அளவுக்கு சர்ப்பரா ஆகவில்லையென்று கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்குத் தோற்றினுல், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அந்தக் கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாருக்கு எழுத்து மூலமான நோடிஸ் அனுப்பி, அந்தக் கட்டிடத்தில் குடியிருக்கிற அல்லது வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கிற நபர்களின் தேவைகளுக்காகப் போதுமான அளவுக்கு யாதொரு பொதுஜல சர்ப்பரா ஆதாரத்திலிருந்து ஜலம் பெறவேண்டுமென்றும், நிர்ணயிக்கப்பட்ட அளவுள்ளவையாயும் விவரங்களின்படியுள்ளவையாயுமிருக்கும் தண்ணீர் குழாய்கள் சர்ப்பரா செய்யவேண்டுமென்றும் ஷெ காரியங்களுக்காக அவசியமாயிருக்கும் சகல ஏற்பாடுகளும் செய்யவேண்டுமென்றும் அந்த நோடிஸ் மூலமாய் உத்தரவுசெய்யலாம்.

உடன்படிக்கை செய்துகொண்டு ஜல சர்ப்பரா செய்வது.

222. (1) கன்டோன்மென்ட் அதிகார சபையார் - உடன்படிக்கை செய்துகொண்டு, கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரருக்கு யாதொரு பொது ஜல சர்ப்பரா ஆதாரத்திலிருந்து, வீட்டுக் காரியமல்லாத வேறே யாதொரு காரியத்துக்காக, இந்த ஆக்டுக்கும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கும் சகாயச் சட்டங்களுக்கும் பொருத்தமாயிருப்பவையாய், கன்டோன்மென்ட் அதிகார சபையாரும் ஷெ சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரர் ஆகிய இவர்கள் உடன்படிக்கை மூலமாய் ஏற்படுத்தக்கூடிய ஷரத்துகளின் மேலும் திட்டங்களின் மேலும் ஏதாவது ஜலம் சர்ப்பரா செய்யலாம்.

(2) கன்டோன்மென்டில் வாசம் செய்பவர்கள் வீடுகளில் உபயோகிப்பதற்குப் போதுமான ஜல சர்ப்பராவாகும்படிச் செய்யும் காரியத்துக்காக எந்தக் காலத்திலாகிலும் ஜல சர்ப்பராவை நிறுத்திவிடுவதோ அதன் அளவைக் குறைப்பதோ அவசியமென்று தோன்றினால், கன்டோன்மென்ட் அதிகார சபையார் அந்தப்படியே செய்யலாம்.

ஜல சர்ப்பரா நின்றுபோனால் கன்டோன்மென்ட் அதிகார சபையார் உத்தரவாதிகளல்லவென்பது.

223. இந்த ஆக்டின்படி கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு யாதொரு பொறுப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் பாதகமில்லாமலே, அந்த சபையார் - தற்செயலாய் ஏற்படும் யாதொரு விபத்துகாரணமாகவோ மழையின்மையினாலோ, தவிர்க்க முடியாத யாதொரு காரணத்தினாலோ சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஜல சர்ப்பரா நின்றுபோனாலும் குறைக்கப்பட்டாலும் அந்தப்படி நின்றுபோவதற்காகவாயினும் குறைக்கப்படுவதற்காயினும் யாதொரு பறிமுதல், தண்டனை அல்லது நஷ்ட ஈட்டுக்கு உள்ளாகமாட்டார் ; ஆனால், 222-வது பிரிவின்படி செய்துகொள்ளப்பட்ட ஜல சர்ப்பரா சம்பந்தமான யாதொரு உடன்படிக்கையிலே, அப்படி நின்றுபோகும் விஷயத்திலாவது குறைக்கப்படும் விஷயத்திலாவது பறிமுதல், தண்டனை அல்லது நஷ்டஈட்டுக்காக நிபந்தனை வெளிப்படையாய் ஏற்படுத்தப்பட்டிருந்தால், அந்தப்படி உள்ளாவார்கள்.

சகல விஷயங்களிலும் பிரயோகப்படக்கூடிய திட்டங்கள்.

224. இதில் முன்னால் என்ன சொல்லியிருந்தபோதிலுமாவது 222-வது பிரிவின்படிக்கான யாதொரு உடன்படிக்கையில் என்ன சொல்லியிருந்தபோதிலுமாவது பாதகமில்லாமலே, யாதொரு கட்டிடம் அல்லது நிலத்துக்குக் கன்டோன்மென்ட் அதிகார சபையார் அடியிற்கண்ட திட்டங்களுக்கு உட்பட்டு ஜல சர்ப்பரா செய்ய ஏற்றுக்கொள்ளவேண்டியதுமல்லாமல், அந்தப்படி அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கருதப்படவும்வேண்டும் ; அந்த திட்டங்களாவன :—

(a) யாதொரு கட்டிடம் அல்லது நிலத்திலாவது அதன் மேலாவது கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் சர்ப்பரா செய்யப்பட்ட ஜலமானது குழாய்கள், சாக்கடைக்கால்கள் அல்லது வேறே கட்டு வேலைகள் மராமத்து செய்யப்படாமலிருப்பது காரணமாக வீணாக்கப்பட்டால், அந்தக் கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரராகிலும், குத்தகைதாரராகிலும், அனுபோகதாரராகிலும் - அந்த விஷயம் தமக்குத் தெரிந்திருக்கும்பட்சத்தில், அதைப்பற்றி இது விஷயமாய்க் கன்டோன்மென்ட் அதிகார சபையார் நியமிக்கக்கூடிய உத்தியோகஸ்தரிடத்தில் தெரிவிக்கவேண்டும் ;

(b) நிர்வாக உத்தியோகஸ்தராவது இது விஷயமாகக் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் எழுத்துமூலமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் வேறே யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரராவது - ஜல சர்ப்பராவுக்குச் சம்பந்தப்பட்ட சகல குழாய்களையும், குழாய் மறைகளையும், கட்டு வேலைகளையும், இசைப்புகளையும் பரிசோதனை செய்து அப்படிப்பட்ட ஜலம் வீணாக்கப்படுகிறதாவென்றாகிலும் துர்வினியோகப்படுத்தப்படுகிறதாவென்றாகிலும் நிச்சயித்தறியும் காரியத்துக்காக, கன்டோன்மென்ட் அதிகார சபையரால் ஜல சர்ப்பரா செய்யப்பெறும் யாதொரு வளவிலாயினும் அதன் மேலாயினும் பிரவேசிக்கலாம் ;

(c) கன்டோன்மென்ட் அதிகார சபையார்-அடியிற்கண்ட விஷயங்களில் யாதொரு பொது ஜல சர்ப்பராவுக்கும் அதிலிருந்து யாதொரு காரியத்துக்காக ஜல சர்ப்பரா செய்யப்படும் யாதொரு கட்டிடம் அல்லது நிலத்துக்குமுள்ள சம்பந்தத்தை நீக்கிவிடலாம் அல்லது அந்தப்படி சர்ப்பரா செய்வதைத் திருப்பிவிடலாம் :—

(i) ஷை கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரராகிலும் அனுபோகதாரராகிலும் தண்ணீர் வரியையாவது ஜல சர்ப்பராவுக்குச் சம்பந்தபட்ட வேறே கட்டணங்களையாவது அந்த வரி அல்லது கட்டணம் பாக்கியாய் ஏற்படுகிற தேதியிருந்து ஒரு மாதத்துக்குக்குள் செலுத்தாவிட்டாலும் ;

(ii) (b) அடையாளமிட்ட பகுதியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் யாதொரு பரிசோதனையையாவது விசாரணையையாவது செய்யும் காரியத்துக்காக ஷை கட்டிடத்திலாகிலும் நிலத்திலாகிலும் நிர்வாக உத்தியோகஸ்தரையாயினும் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரையாயினும் ஷை கட்டிடம் அல்லது நிலத்தில் பிரவேசிக்கவிட அனுபோகதாரர் மறுத்தாலும், அல்லது அப்படிப்பட்ட பரிசோதனை அல்லது விசாரணை செய்யாமல் தடுத்தாலும் ;

(iii) அனுபோகதாரர் வேண்டுமென்றாவது அசட்டையாகவாவது ஜலத்தை துர்வினியோகப்படுத்தினாலும் வீணாக்கும்படி செய்தாலும் ;

(iv) அனுபோகதாரர் வேண்டுமென்றாவது அசட்டையாகவாவது தம்முடைய மீட்டர் என்னும் அளவு கருவியையாகிலும் யாதொரு குழாயையாகிலும் தண்ணீர் கட்டு வேலைகளிலிருந்து ஜலத்தைக் கொண்டுவரும் மறையையாகிலும் கெடுத்தாலும் சேதப்படுத்தினாலும் ;

(v) ஷை கட்டிடம் அல்லது நிலத்துக்கு ஜல சர்ப்பரா செய்வதற்குச் சம்பந்தப்பட்ட எவையேனும் குழாய்கள், மறைகள், கட்டு வேலைகள் அல்லது இசைப்புகள் நிர்வாக உத்தியோகஸ்தரால் பரிசோதனை செய்யப்படுவதன்மேல், ஜலம் வீணாகும்படி செய்யக்கூடிய அளவுக்கு மராமத்தில்லாமலிருப்பதாகத் தெரியவந்தாலும் ;

(d) (c) அடையாளமிட்ட பகுதியில் சொல்லியிருக்கிற யாதொரு விஷயத்தில் சம்பந்தத்தை நீக்கிவிடுவதற்காவது ஜலம் வருவதற்கான வழியைத் திருப்புவதற்காவது பிடிக்கும் செலவுகளை ஷெ கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரராகிலும் அனுபோக தாரராகிலும் கொடுக்கவேண்டும்;

(e) (c) அடையாளமிட்ட பகுதியின்படியாவது அதை அனுசரித்தாவது நடத்தப் படும் எந்த நடவடிக்கையினாலும் யாதொரு நபர் - தாம் மற்றப்படி உள்ளாயிருக்கக்கூடிய தண்டனை அல்லது பொறுப்பினின்றும் விடுதலையாகமாட்டார்.

கன்டோன்மென்டுக்கு வெளியிலிருக்கும் நபர்களுக்கு சர்ப்பரா செய்வது.

225. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - தாங்கள் நிர்ணயிக்கக்கூடிய எவையேனும் ஷரத்துகளின்மேல் யாதொரு பொது ஜல சர்ப்பரா ஆதாரத்திலிருந்து, கன்டோன்மென்டின் ஹத்துக்களுக்குள் வாசம் செய்யாத யாதொரு நபர் யாதொரு காரியத்துக்காக ஜலம் எடுத்துக்கொண்டு போகவாவது ஜலம் சர்ப்பரா செய்யப் பெறவாவது அனுமதி கொடுக்கலாம்; மேலும், அவர்கள் அந்தப்படி சர்ப்பரா செய்வதை நிறுத்திவிடலாம் அல்லது குறைத்துவிடலாம்.

தண்டனை.

226. எவராகிலும்,—

(a) வீட்டில் உபயோகிப்பதற்காக கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் சர்ப்பரா செய்யப்பட்ட ஜலத்தை வீட்டுக்காரியங்களல்லாமல் வேறே காரியங்களுக்கு உபயோகித்தாலும்,

(b) கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் உடன்படிக்கை செய்துகொண்டு ஜலமானது குறித்த ஒரு காரியத்துக்காக சர்ப்பரா செய்யப்படும்பட்சத்தில், அந்த ஜலத்தை வேறே யாதொரு காரியத்துக்காக உபயோகித்தாலும்,

அவர் - ஐம்பது ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்; மேலும், துர்விநியோகம் செய்யப்பட்ட ஜலத்தின் கிரயத்தை அவரிடத்தில் வசூலிக்க கன்டோன்மென்ட் அதிகார சபையார் பாத்தியதையுடையவர்களாவார்கள்.

ஜலசர்ப்பரா விஷயமாகவும் ஜலதாரை விஷயமாகவும் இதர விஷயங்களிலும் சம்பந்தங்கள் ஏற்படுத்துவது.

கம்பிகள், சம்பந்தங்கள் முதலியவைகளை அமைப்பதற்குக் கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு அதிகாரம்.

227. கன்டோன்மென்ட் அதிகார சபையார்—

(a) யாதொரு ரஸ்தா அல்லது தெரு அல்லது ரஸ்தாவாகவோ தெருவாகவோ ஏற்படுத்தப்பட்டாகிலும் உத்தேசிக்கப்பட்டாகிலுமிருக்கும் யாதொரு இடத்தின் மூலமாகவாவது அதற்குக் குறுக்கேயாவது கீழாவது மேலாவது, சொந்தக்காரருக்காகிலும் அனுபோகதாரருக்காகிலும் நியாயமாய் எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்த பிறகு, யாதொரு நிலம் அல்லது கட்டிடத்துக்குள்ளாவது அதன் மூலமாகவாவது அதற்குக் குறுக்கேயாவது கீழாவது மேலாவது, கன்டோன்மென்டுக்குள் இருக்கும் யாதொரு கட்டிடத்தின் பக்கத்தின் மேலாவது ஜலசர்ப்பரா, விளக்குபோடுவது, சாக்கடைக்கால் அல்லது ஜலதாரை சம்பந்தமான யாதொரு ஏற்பாட்டை நடத்திக்கொண்டேபோகும், நிலையாய் ஏற்படுத்தும் அல்லது நல்ல ஸ்திதியில் வைத்துவரும் காரியத்துக்காகவாயினும்,

(b) தண்ணீர் சர்ப்பரா செய்யும் அல்லது வெளியே விழும் தண்ணீருக்காக ஏற்பாடு செய்யும் அல்லது தண்ணீரைப் பங்கிடு செய்யும் காரியத்துக்காகவாயினும், சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரருக்கு நியாயமாய் எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்த பிறகு, யாதொரு நிலம் அல்லது கட்டிடத்தின் மூலமாகவாவது அதன் குறுக்கேயாவது கீழாவது மேலாவது கன்டோன்மென்டுக்கு வெளியே இருக்கும் யாதொரு கட்டிடத்தின் பக்கத்தின் மேலாவது சாக்கடைத் தண்ணீரை அப்புறப்படுத்தும் அல்லது அது வெளியே போய் விழும்படி செய்யும் காரியத்துக்காகவாயினும்,

யாதொரு கேபில் என்னும் மின்சாரக் கம்பியையாவது வேறே கம்பியையாவது குழாயையாவது சாக்கடைக்காலையாவது ஜலதாரையையாவது யாதொரு வகையான வாய்க்காலையாவது கொண்டுபோகலாம்; மேலும், அவர்கள் - அப்படிப்பட்ட யாதொரு கேபில், கம்பி, குழாய், சாக்கடைக்கால், ஜலதாரை அல்லது வாய்க்கால் எதற்காக உபயோகிக்கப்படக்கூடுமோ அல்லது உபயோகிக்க உத்தேசிக்கப்படுகிறதோ அந்தக் காரியத்துக்காக ஷெ கேபில் முதலியவைகளை மராமத்து செய்யவோ நல்ல ஸ்திதியில் வைத்துவைக்கவோ அவசியமாக அல்லது யுக்தமாக இருக்கக்கூடிய சகல செய்கைகளையும் காரியங்களையும் எல்லாக் காலங்களிலும் செய்யலாம்:

ஆனால், வேலையைச் சரியாய் நடத்துவதற்கு நியாயமாக அவசியமாயிருக்கிற அளவுக்குமேல் எவ்வித சங்கடமும் ஏற்படும்படி செய்யக்கூடாது:

மேலும், அப்படிப்பட்ட யாதொரு வேலையைச் செய்துமுடிப்பதால் நேராக ஏற்படுகிறதாய் சொந்தக்காரர் அல்லது அநுபோகதாரருக்கு உண்டாகும் யாதொரு சேதத்துக்காக அவருக்குப் பிரதிபலன் கொடுக்கப்படவேண்டும்.

தரையின் மேற்பரப்புக்குமேல் கம்பி முதலியவைகளைப் போடுவது.

228. யாதொரு நிலத்தின் மேற்பரப்புக்குமேலாவது யாதொரு கட்டிடத்தின் மூலமாகவாவது மேலாகவாவது பக்கத்தின்மேலாவது யாதொரு கேபில், கம்பி, குழாய், சாக்கடைக்கால், ஜலதாரை அல்லது வாய்க்கால் அமைக்கப்படும் அல்லது கொண்டுபோகப்படும் பட்சத்தில், அப்படிப்பட்ட நிலம் அல்லது கட்டிடத்தைக் கிரமமாய் அநுபவிப்பதற்குச் சொந்தக்காரர் அல்லது அநுபோகதாரருக்குள்ள பாத்தியதைகளில் சாத்தியமானமட்டில் சிறிதும் தலையிடாதபடி அப்படிப்பட்ட கேபில், கம்பி, குழாய், சாக்கடைக்கால், ஜலதாரை அல்லது வாய்க்காலை அமைக்கவாவது கொண்டுபோகவாவது வேண்டும்; மேலும், அப்படிப்பட்ட யாதொரு அநுபோக பாத்தியதைக்கு முக்கியாம்சத்தில் பாதகம் ஏற்பட்டால், அது விஷயமாய்ப் பிரதிபலன் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் கொடுக்கப்படத்தக்கதாகும்.

அனுமதியில்லாமல் பிரதான குழாயுடன் சம்பந்தம் ஏற்படுத்தக்கூடாதென்பது.

229. கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் அநுமதியில்லாமல், எந்த நபரும் - எந்த காரியத்துக்காகவாகிலுஞ்சரி, யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் கட்டப்படும் அல்லது பராமரித்துவரப்படும் அல்லது அவர்களிடத்தில் சங்கிரமித்திருக்கும் யாதொரு கேபில், கம்பி, குழாய், சாக்கடைக்கால், ஜலதாரை, அல்லது வாய்க்காலுடன் எந்த காலத்திலும் எவ்வித சம்பந்தம் அல்லது ஒட்டும் ஏற்படுத்தவோ ஏற்படுத்தும்படி செய்யவோகூடாது.

பெருல்களை நிர்ணயிக்கவும் மீட்டர் முதலியவைகளை ஏற்படுத்தவும் அதிகாரம்.

230. கன்டோன்மென்ட் அதிகார சபையார்-காஸ் என்னும் வாயு ஏதாவது சர்ப்பரா செய்வதாயிருந்தால் அதற்காக உபயோகிக்கப்படவேண்டிய பெருல் (ferrule) என்னும் சுரைகளின் அளவை நிர்ணயிப்பதுமல்லாமல், கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் யாதொருவளவுக்கு சர்ப்பரா செய்யப்படும் யாதொரு ஜலத்தின் அளவையாவது காஸ் வாயுவின் அளவு அல்லது தன்மையையாவது பரீக்ஷித்துப் பார்க்கும் காரியத்துக்காக மீட்டர் என்னும் அளவு கருவிகளையாகிலும் இதர உபகரணங்களையாகிலும் ஏற்படுத்தலாம்.

பார்வையிடுவதற்கான அதிகாரம்.

231. ஜலசர்ப்பரா சம்பந்தமான பிரதான குழாய்களிலிருந்தாவது (சாதாரண) குழாய்கள், சாக்கடைக்கால்கள், ஜலதாரைகள், அல்லது வாய்க்கால்களிலிருந்தாவது யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் ஜலமாவது காஸாவது சர்ப்பரா செய்யப்படுகிற யாதொரு வீடு அல்லது நிலத்துக்குள் போகும் பெருல்களும் ஒட்டுக் குழாய்களும், சம்பந்தங்களும் மீட்டர்களும் நிலைக்குழாய்களும் அவைகளின்மேல் அல்லது அவைகளுக்குச் சம்பந்தப்பட்டுள்ள சகல இசைப்புகளும் அப்படிப்பட்ட யாதொரு வீட்டுக்குள்ளாவது அப்படிப்பட்ட யாதொரு நிலத்தின் எல்லைகளுக்குள்ளாவது இருக்கும் குழாய்களும் இசைப்புகளும் கட்டுவேலைகளும எல்லா விஷயங்களிலும் கன்டோன்மென்ட் அதிகார சபையார் பார்வையிடுவதற்குட்பட்டும் அவர்களுக்குத் திருப்திகரமாகவும் அமைக்கப்படவேண்டும்.

வீதங்களையும் கட்டணங்களையும் நிச்சயிப்பதற்கு அதிகாரம்.

232. கன்டோன்மென்ட் அதிகார சபையார் - பிரதான குழாய்களிலிருந்து ஒட்டுகளையாவது அவைகளுடன் சம்பந்தங்களையாவது ஜலம் அல்லது காஸ் சர்ப்பரா செய்வதற்கான குழாய்களையாவது தாங்களாகிலும் தங்களைச் சேர்ந்தவர்கள் மூலமாகவாகிலும் ஏற்படுத்துவதற்காகவோ சர்ப்பரா செய்யப்பட்ட ஜலம் அல்லது காஸின் அளவு அல்லது தன்மையை பரீக்ஷித்துப் பார்ப்பதற்கான மீட்டர்கள் அல்லது இதர உபகரணங்களுக்காகவோ வாங்கவேண்டிய கட்டணங்களை நிச்சயிப்பதுமல்லாமல் அந்தப் பிரகாரமே அப்படிப்பட்ட கட்டணங்களை விதித்தும் வாங்கலாம்.

கவர்ன்மெண்டார் ஜல சர்ப்பராசெய்யும் விஷயங்களுக்கு இந்த அத்தியாயம் பிரயோகப்படுவது.

கவர்ன்மென்ட் ஜல சர்ப்பரா.

233. (1) யாதொரு கன்டோன்மென்டில், மிலிடெரி வொர்கஸ் ஸர்விஸெஸ் என்னும் ராணுவ கட்டுவேலை அதிகாரிகளின் அல்லது பப்ளிக் வொர்கஸ் (பொதுக்கட்டு வேலைகளுக்கான) இலாகாவின் மேல்விசாரணையின் கீழ் ஜலசர்ப்பரா செய்யப்பட்டுவந்தால், (இந்தப் பிரிவில் இதற்குப் பின்னும் 234-வது பிரிவிலும் ஆபிஸர் என்று உதகரிக்கப்பட்டிருக்கும்) மிலிடரி வொர்க்ஸ் ஸர்விஸெஸ் அல்லது பப்ளிக வொர்க்ஸ் இலாகாவின் ஆபிஸரானவர்- கன்டோன்மென்டின் எல்லைகளுக்குள்ளிருந்தாலுஞ்சரி வெளியிலிருந்தாலுஞ்சரி, (கன்டோனமென்ட் அதிகார சபையின் மேல்விசாரணையிலுள்ளதாயும் பொது ஜனங்களுக்கான ஜல சர்ப்பராவின் ஆதாரமாயுமிராத) யாதொரு ஏரி, அருவி, ஊற்று, கிணறு, குளம், நீர்நிலை அலலது இதர ஜலாதாரத்தைப் பொது ஜனங்களுக்கு ஜல சர்ப்பரா செய்வதற்கான ஆதாரமாகுமென்று நிர்ணயித்து, தமக்குத் தகுதியாகத் தோற்றுகிற விதமாய் கன்டோன்மென்டில் ஒரு நோடிஸ் பிரசுரிக்கலாம்; மேலும், அவர்-அப்படிப்பட்ட யாதொரு ஜலாதாரத்தை நல்ல ஸ்திதியில் வைத்திருக்கும் காரியத்துக்காகவாவது அதில் எவ்வித அசுத்தமும்

சேராமலாகிலும் அதை உபயோகிக்காமலாகிலும் பாதுகாக்கும் காரியத்திற்காகவாவது, கன்டோன்மென்ட் அதிகார சபையாரை 219-வது பிரிவினுல் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட யாதொரு அதிகாரத்தைச் செலுத்தும்படி கேட்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கும் யாதொரு ஜல சர்ப்பராவின் விஷயத்தில், இந்த அத்தியாயத்தின் அடியிற்கண்ட நிபந்தனைகள், அதாவது, 220, 222, 223, 224, 226, 227, 228, 229, 230, 231, 232-வது பிரிவுகளிற்கண்ட நிபந்தனைகள், சாத்தியமானமட்டில் கன்டோன்மென்டுக்கு ஜலம் சர்ப்பரா செய்யப்படும் விஷயத்துக்குப் பிரயோகப்படவேண்டும் ; மேலும், இப்படி பிரயோகப்படும் காரியத்துக்காக, கன்டோன்மென்ட் அதிகார சபையாரைக் குறித்துச் சொல்லியிருப்பவைகளே ஷை ஆபிஸரைக் குறித்துச் சொல்லியிருப்பவைகளாகக் கொள்ளவேண்டியதுமல்லாமல், கன்டோன்மென்ட் அதிகார சபையின் நிர்வாக உத்தியோகஸ்தரையாவது, இதர உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரையாவது குறித்துச் சொல்லியிருப்பவைகள் இது விஷயமாய் ஷை ஆபிஸரால் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கக்கூடிய நபரைக்குறித்துச் சொல்லியிருப்பவைகளாகக் கொள்ளவும்வேண்டும்.

கட்டணங்களை வசூலிப்பது.

234. 233-வது பிரிவிற்கண்ட நிபந்தனைகள் பிரயோகப்படும் எந்த விஷயத்திலும், கன்டோன்மெனடில் விதிக்கப்பட்ட ஏதேனும் தண்ணீர் வரியும் ஜலம் சர்ப்பரா செய்யப்படுவதனுலும் 233-வது பிரிவைப் பிரயோகிப்பதனுல் இந்த அத்தியாயத்திற்கண்ட நிபந்தனைகளின் பிரகாரமும் விதிக்கப்படக்கூடிய இதரமான சகல கட்டணங்களும் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் வசூலிக்கப்படும் ; அப்படி வசூலிக்கப்பட்ட சகல தொகைகளுமாவது ஒவ்வொரு விஷயத்திலும் பிரதேச கவர்ன்மென்டார் தீர்மானிக்கக்கூடிய சங்கியாபரிமாணத்தின்படிக்கான அவைகளின் பாகமாவது கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் ஷை ஆபிஸருக்குச் செலுத்தப்படவேண்டும்.

14-ம் அத்தியாயம்.

கன்டோன்மென்டுகளிலிருந்து ஒழுங்கீனமான நபர்கள் முதலியவர்களை அப்புறப்படுத்துவதும் நீக்குவதும் ஸ்திரீ புருஷ சம்பந்தமான துன்மார்க்கங்களை அடக்குவதும்.

வேசிவீடுகளையும் விபசாரிகளையும் அப்புறப்படுத்த அதிகாரம்.

235. கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடமானது வேசி வீடாகவோ விபசார சம்பந்தமான காரியங்களுக்காகவோ உபயோகிக்கப்படுகிறதென்று சங்கதி தெரியவருவதன்மேல், கன்டோன்மென்டின், கம்மாண்டிங் ஆபிஸர்-(தாம்) வரப்பெற்ற சங்கதியின் சாராமசத்தைக்கண்டு எழுத்துமூலமான ஒரு உத்தரவு பிறப்பித்து அதன் மூலமாய் மேற்படி கட்டிடத்தின் சொந்தக்காரர், குத்தகைதாரர், அதில் குடியிருப்பவர் அல்லது அதின் அனுபோகதாரரை, நேரிலோ, அதிகாரங் கொடுக்கப்பெற்ற ஏஜன்ட் மூலமாகவோ தம்முன் ஆஜராகும்படி வரவழைக்கலாம் ; அதன்மேல் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர் - மேற்படி சங்கதி வாஸ்தவமானதென்பதைப்பற்றித் திருப்தியடைந்தால், அவர் எழுத்துமூலமான உத்தரவு பிறப்பித்து அதைக்கொண்டு, சந்தர்ப்பத்துக் கேற்றபடி சொந்தக்காரர், குத்தகைதாரர், குடியிருப்பவர் அல்லது அனுபோகதாரரை ஷை உத்தரவில் குறிப்பிடக்கூடிய கால அளவுக்குள் அந்தக் கட்டிடம் மேலேகண்டபடி உபயோகிக்கப்படுவதை நிறுத்திவிடவேண்டுமென்று கட்டளையிடலாம்.

(அங்குமிங்கும்) திரிந்து கொண்டிருப்பதற்கும் விபசாரத்தின் பொருட்டு தொந்தரவு செய்வதற்கும் தண்டனை.

236. (1) எவராவது ஒரு கன்டோன்மென்டில் விபசாரம் செய்யுங் காரியத்துக்காக (அங்குமிங்கும்) திரிந்துகொண்டிருந்தாலும் யாதொரு நபரை ஸ்திரீ புருஷ சம்பந்தமாக துன்மார்க்கமாய் நடக்கும்படி தொந்தரவு செய்தாலும், அவர் - ஒரு மாதம் வரையில் காவல் தண்டனையாவது இருநூறு ரூபாய் வரையில் அபராதமாவது விதிக்கப்படத்தக்கவராவார்.

(2) தொந்தரவு செய்யப்பட்ட நபராவது எவர் முன்னிலையில் குற்றம் செய்யப்பட்டதோ அந்த ராணுவ உத்தியோகஸ்தராவது கன்டோன்மென்டில் வேலையில் அமர்ந்திருப்பவராய் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸரால் இது விஷயமாக அதிகாரங்கொடுக்கப்பெற்ற ராணுவ பொலீஸைச் சேர்ந்த அல்லது ஆகாயப்படை பொலீஸைச் சேர்ந்த எவர் முன்னிலையில் குற்றம் செய்யப்பட்டதோ அவராவது, கன்டோன்மென்டில் வேலையில் அமர்ந்திருந்து ஸப் இன்ஸ்பெக்டரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்திலிருக்கும் ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தர் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிசரால் இது விஷயமாய் அதிகாரங் கொடுக்கப்பெற்றிருந்தால் அந்த உத்தியோகஸ்தராவது முறையிட்டுக்கொண்டாலன்றி மற்றப்படி, இந்தப் பிரிவின்படிக்கான யாதொரு குற்றத்துக்காக எந்தப் பிராதையும் தொடரக்கூடாது.

கன்டோன்மென்டிலிருந்து காமாதுரர்களான நபர்களை அப்புறப்படுத்துவது.

237. கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர், தமக்கு அவசியமாகத் தோற்றும் விசாரணை செய்த பிறகு கன்டோன்மென்டில் வசிக்கும் அல்லது அடிக்கடி வந்துபோகும் யாதொரு நபர் விபசாரம் செய்கிறதாகவாவது 236-வது பிரிவின்படிக்கான குற்றம் செய்ததாகவாகிலும் அப்படிப்பட்ட குற்றம் செய்வதற்கு உடந்தையாயிருந்த

தாகவாகிலும் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாகவாவது திருப்தியடைந்தால், அவர் எழுத்துமூலமான உத்தரவு பிறப்பித்து, அந்த உத்தரவில் குறிப்பிடப்படக்கூடிய காலத்துக்குள் அந்த நபர் கன்டோன்மென்டை விட்டு வெளியே போகவேண்டுமென்றும், கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபீஸரின் எழுத்துமூலமான அனுமதியில்லாமல அவர் அதில் மறுபடியும் பிரவேசிக்கக்கூடாதென்றும் அதில் கண்டு அதை மேற்படி நபரிடத்தில் சேர்ப்பிக்கலாம்.

ஒழுங்கீனமாய் நடந்துகொள்ளும் நபர்களைக் கன்டோன்மென்டுகளிலிருந்து அப்புறப்படுத்துவதும் நீக்குவதும்.

238. (1) கன்டோன்மென்டில் விசாரணை அதிகாரம் செலுத்தும் யாதொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கன்டோன்மென்டில வசிக்கும் அல்லது அடிக்கடி வந்துபோகும் யாதொரு நபர்—

(a) சூதாடுவதாக ஒரு தடவைக்கு மேல் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிற அல்லது பொதுவாய் சூதாடுவதற்கான வீட்டையாகிலும் ஒழுங்கீனமாய் சாராயம் முதலியவை குடிப்பதற்கான கடையையாகிலும் வேறே யாதொரு வகையைச் சேர்ந்த ஒழுங்கீனமான வீட்டையாகிலும் வைத்துவருகிற அல்லது அப்படிப்பட்ட வீடு அல்லது கடைக்கு அடிக்கடி வந்துபோகிற ஒழுங்கீனமான நபரென்றாகிலும்,

(b) கன்டோன்மென்டுக்குள்ளாயினுஞ்சரி வேறே எங்காயினுஞ்சரி இந்தியன் பினல் கோடின் 17-ம் அத்தியாயத்தின்படி தண்டனை விதிக்கப்படத்தக்க ஒரு குற்றத்தைச் செய்ததாக ஒரு தடவைக்குமேல் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாகவாகிலும், 1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

(c) கன்டோன்மென்டுக்குள்ளாயினுஞ்சரி வேறே எங்காயினுஞ்சரி, ராணுவ ஆக்ட் 156-வது பிரிவின்படி தண்டனை விதிக்கப்படத்தக்க யாதொரு குற்றத்தைச் செய்ததாக குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாகவாகிலும்,

(d) கன்டோன்மென்டுக்குள்ளாயினுஞ்சரி வேறே எங்காயினுஞ்சரி, 1898-ம் வருஷத்திய கிரிமினல் ப்ரோஸீஜர் கோட் என்னும் குற்ற விசாரணைச் சட்டத்தின் 8-ம் அத்தியாயத்தின்படி அவருடைய நன்னடக்கைக்காக முச்சிலிக்கா எழுதிக்கொடுக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறதாகவாகிலும், 1898-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

சங்கதி வரப்பெறுவதின்மேல், (அப்படி) வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட சங்கதியின் சாராம்சத்தை எழுத்துமூலமாக ரெகார்ட் செய்து ஷை நபர் கன்டோன்மென்டை விட்டு ஏன் வெளியே போகும்படி கேட்கப்படக்கூடாதென்பதற்கும் அதில் மறுபடியும் பிரவேசிக்காமல் ஏன் தடுக்கப்படக்கூடாதென்பதற்கும் ஹாஜராய் காரணம் காட்டும்படிக் கேட்டு அவருக்கு ஸம்மன் பிறப்பிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு ஸம்மனுடனும் மேலேகண்ட ரெகார்டுக்கு ஒரு நகலும் அனுப்பவேண்டும்; மேலும், அந்த நகலை, யாருக்கு விரோதமாய் ஸம்மன் பிறப்பிக்கப்படுகிறதோ அந்த நபரிடத்தில ஸம்மனுடன் சேர்ப்பிக்கவேண்டும்.

(3) மாஜிஸ்ட்ரேட்டானவர் அப்படி ஸம்மன் அனுப்பி வரவழைக்கப்பட்ட நபர் தம்முன் ஹாஜராகும்போது, வரப்பெற்றுக்கொள்ளப்பட்ட சங்கதி வாஸ்தவமானதா என்பதைப்பற்றி விசாரணை செய்யத் தொடங்கி தமக்குத் தகுதியாகத்தோற்றுகிறபடி பின்னும் சாக்ஷியமும் எடுக்கவேண்டும். மேலும், அப்படிப்பட்ட விசாரணையின்மேல், ஷை நபர் (1) குறிப்பிட்ட உட்பிரிவில் விவரித்திருக்கும் யாதொரு வகையைச் சேர்ந்த நபரென்றும் கன்டோன்மென்டில் ஒழுங்கைச் சரியாய்ப் பாதுகாப்பதற்கு மேற்படி நபரை அதிலிருந்து வெளியே போகும்படி கேட்பதும் கன்டோன்மென்டுக்குள் மறுபடியும் பிரவேசிக்கக்கூடாதென்று தடுப்பதும் அவசியமென்றும் அந்த மாஜிஸ்ட்ரேட்டுக்கு தோற்றினால், அவர் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸருக்கு ஷை சங்கதியை ரிபோர்ட் செய்வதுமல்லாமல், கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர் அப்படி கட்டளையிட்டால் மேற்படி நபருக்கு எழுத்துமூலமான ஒரு உத்தரவு பிறப்பித்து அந்த உத்தரவில் குறிப்பிடக்கூடிய காலத்துக்குள் கன்டோன்மென்டிலிருந்து வெளியே போகவேண்டுமென்றும் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸரின் எழுத்துமூலமான அனுமதியில்லாமல் அதில் மறுபடியும் பிரவேசிக்கக்கூடாதென்றும் அந்த உத்தரவில் கண்டு அதை ஷை நபரிடத்தில் சேர்ப்பிக்கவேண்டும்.

ராஜத்துரோகமாய் நடந்துகொள்ளும் நபர்களைக் கன்டோன்மென்டிலிருந்து அப்புறப்படுத்துவதும் நீக்குவதும்.

239. (1) கன்டோன்மென்டிலுள்ள யாதொரு நபர் மகாராஜ சக்ரவர்த்தியவர்களைச் சேர்ந்த துருப்புகளின் எந்தப் பிரிவாருக்குள்ளாவது ராஜவிசுவாசமின்மையோ ப்ரீதியின்மையோ ஒழுங்குத்தவறுதல்களோ வெகுசாய் உண்டாக்கக்கூடுமென்று தமக்குத்தெரிந்திருக்கிற யாதொரு காரியத்தைச் செய்தாலும், செய்விததாலும், செய்விக்க எத்தனித்தாலும், அப்படிப்பட்ட யாதொரு காரியத்தை வெகுசாய் செய்யக்கூடியவரென்று கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபீஸர் நம்புவதற்கு நியாயமிருக்கிற யாதொரு நபராயிருந்தாலும், கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர் எழுத்துமூலமான ஒரு உத்தரவைச் செய்து அதைச் செய்வதற்கான காரணங்களை அதில் காணுவதுமல்லாமல், அந்த உத்தரவில் குறிப்பிடக்கூடிய காலத்

துக்குள் கன்டோன்மென்டிலிருந்து மேற்படி நபர் வெளியே போகவேண்டுமென்றும் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸருடைய எழுத்துமூலமான அனுமதியில்லாமல் அவர் மறுபடியும் அதில் பிரவேசிக்கக்கூடாதென்றும் அந்த உத்தரவில் கண்டிருக்கவும் வேண்டும் :

ஆனால், யாதொரு நபருக்கு விரோதமாய் இந்தப் பிரிவின்படிக்கான யாதொரு உத்தரவை ஏன் செய்யக்கூடாதென்பதற்கு காரணங்காட்ட நியாயமான அவகாசம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய அவருக்கு விரோதமாய் அப்படிப்பட்ட உத்தரவு எதுவும் செய்யப்படக்கூடாது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி செய்யப்பட்ட ஒவ்வொரு உத்தரவையும் ஜில்லாவின் பொலீஸ் ஸூபரின்டென்டென்டுக்கு அனுப்பவேண்டும் ; அவர் அதன் நகல் ஒன்றை சம்பந்தப்பட்ட நபரிடத்தில் சேர்ப்பிப்பார்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு உத்தரவு செய்யப்படுவதன்மேல், கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸர் அதன் நகல் ஒன்றைப் பிரதேச கவர்ன்மென்டாருக்கு உடனே அனுப்பவேண்டும்.

(4) பிரதேச கவர்ன்மென்டார்-தாங்கள் நிர்ணயிக்கக்கூடிய விசாரணை செய்த பிறகு மேற்படி உத்தரவின் நியாயத்தைக்குறித்தும அதைப் பிறப்பிப்பதற்குண்டான அவசியத்தைக் குறித்தும் ஒரு ரிபோர்ட் அனுப்பும்படி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டைத் தாங்களாகவே கேட்கலாம ; மேலும், யாருக்கு விரோதமாய் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அந்த நபர் உத்தரவின் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் தங்களுக்கு விண்ணப்பம் செய்துகொண்டால், அவர்கள் மேலே கண்டபடி செய்யவேண்டும்.

(5) பிரதேச கவர்ன்மென்டார் (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி அனுப்பப்பட்ட யாதொரு உத்தரவின் நகலை வரப்பெற்றுக்கொண்ட பிறகு எப்போதாகிலும், அல்லது (4) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஒரு ரிபோர்ட் கேட்கப்பட்டிருந்தால் அந்த ரிபோர்ட்டை வரப்பெற்றுக்கொள்வதன்மேலும், மேற்படி உத்தரவை மாற்றவோ ரத்துசெய்யவோ வேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டால், அந்த விஷயத்தை ஆலோசனை சபையிலுள்ள கவர்னர்ஜெனரலவர்களின் ஆலோசனைக்கு அனுப்பலாம் ; அவர்-அதன்மேல் தமக்குத் தகுதியாகத்தோற்றுகிற உத்தரவுகளைச் செய்யவேண்டும்.

(6) இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு உத்தரவினால் ஒரு கன்டோன்மென்டிலிருந்து நீக்கப்பட்டிருக்கிற யாதொரு நபர் - மேற்படி உத்தரவின் தேதியிலிருந்து ஒரு மாதம் கழிந்துபோன பிறகு எப்போதாகிலும், அதை ரத்துசெய்வதற்காக கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளலாம் ; மேலும், அப்படிப்பட்ட விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன்மேல, மேற்படி ஆபிஸர் தமக்கு அவசியமாகத் தோற்றுகிற ஏதேனும் விசாரணை செய்த பிறகு விண்ணப்பத்தைத் தள்ளிவிடலாம் அல்லது உத்தரவை ரத்துசெய்யலாம்.

தண்டனை. 240. எவராவது—

(a) இந்த அத்தியாயத்தின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவை, அதில் குறிப்பிட்டுள்ள கால அளவுக்குள் அனுசரித்து நடக்கத்தவறினாலும், அனுமதியில்லாமல் அவர் கன்டோன்மென்டில் மறுபடியும் பிரவேசிக்கக் கூடாதென்று தடுக்கும் யாதொரு உத்தரவு அமுலில் இருக்கும்போது அப்படிப்பட்ட அனுமதியில்லாமல் கன்டோன்மென்டில் மறுபடியும் பிரவேசித்தாலும்,

(b) யாதொரு நபர் கன்டோன்மென்டிலிருந்து வெளியே போகும்படி இந்த அத்தியாயத்தின் பிரகாரம உத்தரவு செய்யப்பட்டிருந்து அதில் மறுபடியும் பிரவேசிப்பதற்கு அவசியமான அனுமதியைப் பெற்றிருக்கவில்லையென்று தெரிந்திருந்தும் அப்படிப்பட்ட நபருக்கு கன்டோன்மென்டில் இருக்க இடங்கொடுத்தாலும் அல்லது அவரை ஒளித்து வைத்தாலும்,

அவர்-இருநூறு ரூபாய் வரையில் அபராதமும் தொடர்ச்சியாகச் செய்யப்பட்டு வரும் குற்றத்தின் விஷயத்தில் அப்படி அவர் பிடிவாதமாய்க் குற்றம் செய்துகொண்டே வந்திருக்கும் தினங்களில் முதல் தினத்துக்குப்பிற்பட்ட ஒவ்வொரு தினத்துக்கும் பத்து ரூபாய் வரையில் அதிகப்படியான அபராதமும் விதிக்கப்படத்தக்கவராவார்.

15-ம் அத்தியாயம்.

அதிகாரங்களும் நடவடிக்கைமுறையும் தண்டனைகளும் அப்பீல்களும்.

பிரவேசிப்பதும் பார்வையிடுவதும்.

பிரவேசிப்பதற்குள்ள அதிகாரம்.

241. போர்டின் ப்ரெஸிடென்டாவது, வைஸ் ப்ரெஸிடென்டாவது, நிர்வாக உத்தியோகஸ்தராவது, ஹெல்த் ஆபிஸராவது, அஸிஸ்டென்ட் ஹெல்த் ஆபிஸராவது ஹெல்த் ஆபிஸராலாவது அஸிஸ்டென்ட் ஹெல்த் ஆபிஸராலாவது, பிரத்தியேகமாய் அதிகாரம கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது, இதுவிஷயமாய்க் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் பொதுவான அல்லது விசேஷ உத்தரவு மூலமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே யாதொரு நபராவது-யாதொரு விசாரணை அல்லது பரிசோதனை செய்ய, அளவெடுக்க, மதிப்பு

போட அல்லது ஸர்வே செய்யவாகிலும், இந்த ஆக்டிலாயினும் அதன்படியாயினும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதாகவோ அவசியமாயிருப்பதாகவோ, இந்த ஆக்டிலாயினும் அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதியிலாயினும் சகாயச்சட்டத்திலாயினும் உத்தரவிலாயினும் கண்ட நிபந்தனைகளின் காரியங்களில் எதற்காகவாவது அந்த நிபந்தனைகளை அனுசரித்தாவது செய்யவேண்டியதாகவோ செய்து முடிக்கவேண்டியதாகவோயிருக்கும் யாதொரு வேலையைச் செய்யவாகிலும் உதவி உத்தியோகஸ்தர்கள் அல்லது வேலையாட்களுடன்கூடவோ அவர்களில்லாமலோ யாதொரு கட்டிடம் அல்லது நிலத்துக்குள்ளாவது அதன்மேலாவது பிரவேசிப்பது சட்டசம்மதமாகும் :

ஆனால், இந்தப் பிரிவிலுள்ளதெதனாலும், யாதொரு நபருக்கு 207-வது பிரிவிலாகிலும் 215-வது பிரிவிலாகிலும் சொல்லியிருக்கும் யாதொரு அதிகாரம் கொடுப்பதாகவாவது அப்படிப்பட்ட அதிகாரத்தை யாதொரு நபருக்குக் கொடுக்க அனுமதி ஏற்படுகிறதாகவாவது கருதப்படமாட்டாது.

போர்டின் யாதொரு மெம்பர் பார்வையிடுவதற்குள்ள அதிகாரம்.

242. ப்ரெஸிடென்டின் அனுமதியை முன்னதாகப்பெற்று, போர்டின் யாதொரு மெம்பரானவர் - முழுவதுமாகிலும் சிறிதுமட்டிலாகிலும் போர்டாரின் செலவில் கட்டப்பட்ட அல்லது பராமரிக்கப்படும் யாதொரு கட்டுவேலை அல்லது ஸ்தாபனத்தையும் மேற்படி போர்டாருக்குச் சொந்தமாகவாவது அவர்களுடைய சுவாதீனத்திலாவது இருக்கிற யாதொரு ரெஜிஸ்டர், புஸ்தகம், கணக்கு அல்லது வேறே தஸ்தவேஜையும் பார்வையிடலாம்.

பார்வையிடுவது முதலியதற்குள்ள அதிகாரம்.

243. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் பொதுவான அல்லது விசேஷமான உத்தரவின் மூலமாக யாதொரு நபருக்கு—

(a) கன்டோன்மென்டிலுள்ள யாதொரு கட்டிடம் அல்லது நிலத்திலாவது அதன் மேலாவதிருக்கும் யாதொரு சாக்கடைக்கால், கக்கூஸ், மலஜலபாதை மறைவிடம், மூத்திரம் பெய்யும் இடம், சாக்கடைக்குழி, குழாய், ஜலதாரை அல்லது வாய்க்காலைப் பார்வையிடவும், தங்களுக்கு யுக்தமாகத் தோற்றினால் சந்தர்ப்பத்துக்கேற்றபடி யாதொரு சாக்கடைக்கால், கக்கூஸ், மலஜலபாதை மறைவிடம், மூத்திரம் பெய்யுமிடம், சாக்கடைக்குழி, குழாய், ஜலதாரை அல்லது வாய்க்காலிலிருந்து ஏற்படும் யாதொரு அசங்கியம் அல்லது சங்கடத்தை தடுக்கும் காரியத்துக்காகவாகிலும் அப்புறப்படுத்தும் காரியத்துக்காகவாகிலும் தரையைத்தோண்டும்படி செய்யவும்,

(b) கன்டோன்மென்டில் கட்டிக்கொண்டுவரும் வேலைகளைப் பரீக்ஷைசெய்ய அல்லது மட்டங்கள் எடுக்க அல்லது யாதொரு மீட்டர் என்னும் அளவு கருவியை அப்புறப்படுத்த, பரிசோதனைசெய்ய, பரீக்ஷைசெய்ய, அதற்கு பர்த்தியாக வேறொன்றை அமைக்க அல்லது அதைப்படிக்கவும்,

அனுமதிகொடுக்கலாம்.

(2) அந்தப்படி பார்வையிடுவதன்மேல், அசங்கியம் அல்லது சங்கடத்தைத் தடுப்பதற்காவது அப்புறப்படுத்துவதற்காவது தரையைத் தோண்டுவது அவசியமென்று தோன்றினால், அதற்காகப் பிடிக்கும் செலவை பிரஸ்தாப நிலம் அல்லது கட்டிடத்தின் சொந்தக்காரராகிலும் அனுபோககாரராகிலும் கொடுக்கவேண்டும்; ஆனால், அசங்கியம் அல்லது சங்கடம் ஏற்பட்டிருக்கவில்லையென்றாயினும், அந்தப்படி தோண்டினதாலன்றி மற்றப்படி ஏற்பட்டிராதென்றாயினும் காணப்பட்டால், பார்வையிடும் காரியத்துக்காக தோண்டப்பட்ட, பிரதிகூலமாய் பாதிக்கப்பட்ட அல்லது அப்புறப்படுத்தப்பட்ட தரையையோ யாதொரு கட்டிடம், சாக்கடைக்கால் அல்லது வேறே கட்டுவேலையின் பாகத்தையோ கன்டோன்மென்ட் அதிகார சபையாருடைய செலவில் சந்தர்ப்பத்துக்கேற்றபடி தூர்த்துவிடவேண்டும், மறுபடியும் அமைக்கவேண்டும் அல்லது செப்பனிடவேண்டும்.

கட்டுவேலை நடந்துவரும் நிலத்துக்குச் சமீபத்திலிருக்கும் நிலத்தில் பிரவேசிக்க அதிகாரம்.

244. (1) யாதொரு கன்டோன்மென்டின் நிர்வாக உத்தியோகஸ்தரானவர் - உதவி உத்தியோகஸ்தர்கள் அல்லது வேலையாட்களுடனாகிலும் அவர்களில்லாமலாகிலும், இந்த ஆக்டினாலாவது அதன்படியாவது அனுமதிக்கப்பட்டிருக்கும் யாதொரு கட்டுவேலைக்கு ஐம்பது கஜ தூரத்துக்குள்ளிருக்கிற நிலத்தினமேல் ஏதேனும் மண்ணையோ, ஜல்லியையோ கலலையோ வேறே சாமான்களையோ போட்டுவைக்கும் காரியத்துக்காகவாயினும் மேற்படி கட்டுவேலையிடத்தில் போகும் காரியத்துக்காகவாயினும் அதற்குச் சம்பந்தப்பட்ட வேறே யாதொரு காரியத்துக்காகவாயினும் பிரவேசிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி யாதொரு நிலத்தில் பிரவேசிப்பதற்குமுன் நிர்வாக உத்தியோகஸ்தரானவர் - அனுபோகதாரருக்காவது அனுபோகதாரர் எவரும் இராவிட்டால் சொந்தக்காரருக்காவது அந்தப்படி தாம் பிரவேசிக்க உத்தேசித்திருப்பதாக மூன்று தினத்துக்குக் குறையாமல் முன்னதாக நோடிஸ் கொடுக்கவேண்டும்; மேலும், அந்தப்படி செய்வதன் நோக்கத்தை அதில் காணவேண்டும்; அல்லாமலும், அப்படிப்பட்ட காரியத்துக்காக வேண்டியிருக்கக்கூடிய நிலத்துக்கு அடைப்படைத்துப் பிரிக்கவேண்டுமென்று அனுபோகதாரராவது சொந்தக்காரராவது கேட்டுக்கொள்ளும் பட்சத்தில் அவர் அந்தப்படியே செய்யவேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி கொடுக்கப்பட்ட யாதொரு அதிகாரத்தைச் செலுத்துகையில், நிர்வாக உத்தியோகஸ்தரானவர் சாத்தியமானமட்டில் குறைவாய் சேதம் உண்டாகும்படிச் செய்யவேண்டும்; மேலும் அப்படிப்பட்ட சேதம் நிலையானதாயிருந்தாலுஞ்சரி சிறிது காலத்துக்கானதாயிருந்தாலுஞ்சரி, பிரதிபலனானது ஷை நிலத்தின் சொந்தக்காரருக்காவது அனுபோகதாரருக்காவது அவ்விருவருக்குமாவது கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் கொடுக்கப்படத்தக்கதாகும்.

வளைவை உடைத்து பிரவேசிப்பது.

245. யாதொரு இடத்துக்குள் பிரவேசிக்க இந்த ஆக்டினாலாகிலும் அதன்படியாகிலும் அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு நபர் யாதொரு கதவு, வாயில் (கேட்) அல்லது வேறே தடையை,—

(a) அந்தப்படி பிரவேசிக்கும் காரியத்துக்காக அதைத் திறப்பது அவசியமென்று தமக்குத் தோற்றும் பக்ஷத்திலும்,

(b) சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர் இராமலிருக்கும் பக்ஷத்திலும் அல்லது அவர் இருந்து அந்தக் கதவு, வாயில் அல்லது தடையைத் திறக்கமாட்டேனென்று நிராகரிக்கும் பக்ஷத்திலும்

திறக்கலாம் அல்லது திறக்கும்படி செய்யலாம்.

பகல்காலத்தில் பிரவேசிக்க வேண்டுமென்பது.

246. இந்த ஆக்டிலே வேறே விதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருக்கிறபடியன்றி மற்றப்படி, இந்த ஆக்டினாலாகிலும் அதன்படியாகிலும் பிரவேசிக்க அனுமதிகொடுக்கப்பட்டிருக்கும் எந்த விஷயத்திலும் சூரியோதயத்துக்கும் சூரியாஸ்தமனத்துக்கும் இடையிலன்றி மற்றப்படி பிரவேசிக்கக்கூடாது.

சாதாரணமாய் சொந்தக்காரரின் அனுமதி பெற வேண்டுமென்பது.

247. இந்த ஆக்டிலே வேறே விதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருக்கிறபடியன்றி மற்றப்படி, எந்தக்கட்டிடம் அல்லது நிலத்திலாகிலும் அனுபோகதாரருடைய அனுமதியில்லாமலாவது அனுபோகதாரர் எவரும் இராதபக்ஷத்தில், சொந்தக்காரருடைய அனுமதியில்லாமலாவது பிரவேசிக்கக்கூடாது; மேலும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி ஷை அனுபோகதாரருக்காகிலும் சொந்தக்காரருக்காகிலும் அந்தப்படி பிரவேசிக்க உத்தேசித்திருப்பதாக நாலு மணிநேரத்துக்குக் குறையாத எழுத்து மூலமான நோடிஸ் கொடுக்காமல் பிரவேசிக்கக்கூடாது:

ஆனால், பார்வையிடப்படவேண்டிய நிலமானது குதிரைகளுக்கான லாயமாயிருந்தாலும், கால்நடைகளுக்கான கொட்டகையாயிருந்தாலும், மலஜலபாதை மறைவிடம், கக்கூஸ் அல்லது மூத்திரம் பெய்வதற்கான இடமாயிருந்தாலும், கட்டப்பட்டுவரும் கட்டு வேலையாயிருந்தாலும் ஷை நோடிஸ் எதுவும் அவசியமாகமாட்டாது.

சமூக அசாரங்களையும் மதாசாரங்களையும் கவனிக்கவேண்டுமென்பது.

248. மனிதர்கள் வாசம் செய்வதற்கான யாதொரு இடத்தில் இந்த ஆக்டின்படி பிரவேசிக்கும்போது, பிரவேசிக்கும் இடத்தில குடியிருப்பவர்களின் சமூக அசாரங்களையும் மதாசாரங்களையும் க்ரமமாய் கவனிக்கவேண்டும்; மேலும், யாதொரு ஸ்திரீ வாஸ்தவமாய் குடியிருக்கும் அறையில், அதைவிட்டு அவள் போகலாகுமென்று அவளுக்குத் தெரிவித்து, அவள் அங்கிருந்து போவதற்கு நியாயமான சகல சௌகரியமும் ஏற்படுத்திக்கொடுக்கிறவரையில் பிரவேசிக்கவுமகூடாது உடைத்துத் திறக்கவும் கூடாது.

1860-ம் வருஷத்து 45-வது ஆக்ட்.

தடங்கல் உண்டாக்கினால் தண்டனை.

249. இந்தியன் பினல் கோட் 21-வது பிரிவின் தாற்பரியப்படி ஸர்க்கார் உத்தியோகஸ்தராயிராமல், கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்ட யாதொரு நபரையாவது கன்டோன்மென்ட் அதிகார சபையார் சட்டப்படி ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கும் யாதொரு நபரையாவது சந்தர்ப்பத்துக்கேற்றபடி அவர் தம்முடைய கடமையைச் செய்யும்போதாகிலும், இந்த ஆக்டிலோ அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டம் அல்லது உத்தரவிலோ கண்ட நிபந்தனைகளை அனுசரித்தாயினும் அவைகளின் காரணமாகவாயினும் தாம் செய்ய அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் அல்லது செய்யவேண்டியிருக்கும் யாதொன்றை செய்யும்போதாகிலும் தம்முடைய ஒப்பந்தத்தை நிறைவேற்றும்போதாகிலும், எவராவது அவருக்குத் தடங்கல் ஏற்படுத்தினாலும் அவரைத் தொந்தரவு செய்தாலும், அவர் நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்.

போலீஸ் உத்தியோகஸ்தர்களின் அதிகாரங்களும் கடமைகளும்.

வாரன்ட் இல்லாமலே பிடிப்பது.

250. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையில் வேலையிலே அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் போலீஸ் படையைச் சேர்ந்த எவராவது யாதொரு நபர் 4-வது ஷெட்யூலில குறிப்பிடப்பட்டுள்ளவையாய் இந்த ஆக்டில் கண்டிருக்கிற நிபந்தனைகளில் எதையாவது மீறி நடப்பதாகத் தமக்குத் தோற்றினால், அவரை வாரன்டில்லாமலே பிடிக்கலாம்:

ஆனால்,—

(a) 4-வது ஷெட்யூலின் B பாகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அப்படிப்பட்ட யாதொரு நிபந்தனையை மீறி நடக்கும் விஷயத்திலே, எந்த நபரையும் - அவர் தம்முடைய பெயரையும் மேல்விலாசத்தையும் தெரிவிக்க சம்மதிக்கும் பட்சத்தில், அந்தப்படி தெரிவிக்கப்படும் பெயராவது மேல்விலாசமாவது சரியானதல்லவென்று சந்தேகிப்பதற்கு நியாயமான காரணமிருந்தாலன்றி மற்றப்படி, மேலேகண்ட பிரகாரம் பிடிக்கக்கூடாது ; ஷை பெயர் அல்லது மேல்விலாசம் சரியானதல்லவென்று ருஜு செய்வது பிடிக்கும் உத்தியோகஸ்தரைப் பொறுத்ததாகும் ; மேலும், அந்தப்படி பிடிக்கப்பட்ட எந்த நபரையும் - அவருடைய பெயரையும் மேல்விலாசத்தையும் நிச்சயித்தறிந்த பிறகு டிடியல் செய்துவைக்கக் கூடாது ; மேலும்,

(b) யாதொரு நபரை—

(i) தன்பமடைந்த நபர் அல்லது எந்த ராணுவ உத்தியோகஸ்தரின் முன்னிலையில் பிரஸ்தாப குற்றம் செய்யப்பட்டதோ அந்த உத்தியோகஸ்தர் கேட்டுக்கொள்வதன் மேலன்றி மற்றப்படியாவது,

(ii) கன்டோன்மென்டில் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருந்து இது விஷயமாய்க் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபீஸரால் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் எந்த ராணுவ பொலீஸ் அல்லது ஆகயப்படை பொலீஸைச் சேர்ந்தவர் முன்னிலையில் பிரஸ்தாப குற்றம் செய்யப்பட்டதோ அவராகிலும் கன்டோன்மென்டில் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருந்து இது விஷயமாய்க் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபீஸரால் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் ஸப் இன்ஸ்பெக்டரின் அந்தஸ்துக்குக் குறையாத அந்தஸ்துடைய யாதொரு பொலீஸ் உத்தியோகஸ்தராகிலும் கேட்டுக்கொள்வதன்மேலாகிலுமன்றி மற்றப்படியாவது

236-வது பிரிவின்படிக்கான யாதொரு குற்றத்துக்காகப் பிடிக்கக்கூடாது.

பொலீஸ் உத்தியோகஸ்தர்களின் கடமைகள்.

251. இந்த ஆக்டிலாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்திலாவது கண்டிருக்கும் நிபந்தனைகளுக்கு விரோதமாய் செய்யப்படும் யாதொரு குற்றத்தைப்பற்றி கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு உடனே சங்கதி தெரிவிப்பதும் கன்டோன்மென்டைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் ஊழியக்காரர்களும் சட்டப்படிக்கான தங்கள் அதிகாரத்தைச்செலுத்த உதவிபுரிவதும் சகல பொலீஸ் உத்தியோகஸ்தர்களின் கடமையாகும்.

நோடிஸுகள்.

நோடிஸுகளில் நியாயமான காலம் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கவேண்டுமென்பது.

252. எதைச் செய்வதற்காக இந்த ஆக்டிலாவது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது சகாயச் சட்டத்திலாவது காலம் நிஷ்கரிஷை செய்யப்பட்டிருக்கவில்லையோ அதைச் செய்யவேண்டுமென்று இந்த ஆக்டின் படியாகிலும் ஷை விதி அல்லது சகாயச் சட்டத்தின் படியாகிலும் பிறப்பிக்கப்பட்ட யாதொரு நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையிலே உத்தரவு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில், அந்த நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையில் அதைச் செய்வதற்காக நியாயமான ஒருகாலம் குறிப்பிடவேண்டும்.

கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் பிறப்பிக்கப்பட்ட நோடிஸுகளை அதிகார வாயிலாய் சரியானவையாகுமென்பதும் அவை சட்டப்படி செலாவணியாகுமென்பதும்.

253. இந்த ஆக்டின்படியாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி, சகாயச் சட்டத்தின்படியாவது பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையிலும்—

(a) போர்ட் ஒன்று இருக்கும் பட்சத்தில் அந்த போர்டின் ப்ரெஸிடென்டாகிலும் நிர்வாக உத்தியோகஸ்தராகிலும், போர்ட் இராத பட்சத்தில் நிர்வாக உத்தியோகஸ்தராகிலும்,

(b) இது விஷயமாய்க் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் பிரத்தியேகமாக அதிகாரம் கொடுக்கப்பெற்ற எவையேனும் கம்மிட்டிகளின் மெம்பர்களாவது கையெழுத்து போடவேண்டும்.

நோடிஸ் முதலியவைகளைச் சேர்ப்பிப்பது.

254. (1) இந்த ஆக்டின்படியாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியாவது பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையும் வேறே விதமாக வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி—

(a) ஷை நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையை யாருக்காக அது உத்தேசிக்கப்பட்டிருக்கிறதோ அவருக்கு நேரில் கொடுத்தாகிலும் கொடுப்பதாகச் சொல்லியாகிலும் தபால்மூலமாய் அனுப்பியாகிலும்,

(b) அப்படிப்பட்ட நபர் காணவிட்டால், ஷை நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையை, அவர் கடைசியாய் வாசஞ்செய்துகொண்டிருந்ததாகவோ வியாபாரம் நடத்திக்

கொண்டிருந்ததாகவோ தெரியவரும் இடத்தில் நன்றாய்த் தெரியும்படியான ஸ்தானத்தில் ஒட்டியோ, கன்டோன்மென்டுகுள்ளிருந்தால், அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஒரு புருஷர் அல்லது ஊழியக்காரரிடத்தில் ஷை நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையை நேரில் கொடுத்தோ அல்லது கொடுப்பதாகச் சொல்லியோ, அல்லது அது எந்த கட்டிடம் அல்லது நிலத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்தக் கட்டிடம் அல்லது நிலத்தின் நன்றாயத் தெரியும்படியான ஒரு பாகத்தின்மேல் ஒட்டும்படி செய்தோ சேர்ப்பிக்கவேண்டும் அல்லது கொடுக்கவேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு நோடிஸ் உத்தரவு அல்லது கட்டளையை யாதொரு கட்டிடம் அல்லது நிலத்தின் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரரிடத்தில் சேர்ப்பிக்கவேண்டியிருந்தாலும் சேர்ப்பிக்க அனுமதி கொடுக்கப்பட்டிருந்தாலும், அதில் சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரரின் பெயரைக் காணுவது அவசியமாகாது; மேலும், வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருக்கிற படிக்கன்றி மற்றபடி, அதை—

(a) ஷை நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையை ஷை சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரருக்காவது பல சொந்தக்காரர்கள், குத்தகைதாரர்கள் அல்லது அனுபோகதாரர்கள் இருந்தால் அவர்களில் ஒருவரிடத்திலாவது கொடுத்தோ அல்லது கொடுப்பதாகச் சொல்லியோ, அல்லது

(b) அப்படிப்பட்ட சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரர் எவரும் காணப்படாவிட்டால், ஷை நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையை அப்படிப்பட்ட சொந்தக்காரர், குத்தகைதாரர் அல்லது அனுபோகதாரரின் அதிகாரம் கொடுக்கப்பெற்ற எஜெண்ட் எவராவது இருந்தால் அவரிடத்திலாவது அப்படிப்பட்ட சொந்தக்காரர், குத்தகைகாரர் அல்லது அனுபோகதாரரின் குடும்பத்தைச் சேர்ந்த யாதொரு வயது வந்த புருஷர் அல்லது ஊழியக்காரரிடத்திலாவது கொடுத்தோ அல்லது கொடுப்பதாகச் சொல்லியோ அது சது சம்பந்தப்படுகிற கட்டிடம் அல்லது நிலத்தின் நன்றாய்த் தெரியும்படியான பாகத்தில ஒட்டும்படி செய்தோ சேர்ப்பிக்கலாம்.

(3) யாதொரு நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையை எந்த நபருக்குச் சேர்ப்பிக்கவேண்டுமோ அவர் மைனராய் (வயது வராதவராய்) இருக்கும் பட்சத்தில், அவருடைய கார்டியனுக்காவது அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஒரு புருஷர் அல்லது ஊழியக்காரருக்காவது சேர்ப்பித்தால் அது மைனருக்குச் சேர்ப்பித்ததாகக் கருதப்படும்.

நோடிஸ் கொடுக்கும் முறை.

255. இந்த ஆக்டினாலாவது அதன்படியாவது பொது நோடிஸாகவோ நோடிஸில் குறிப்பிட்டிருக்கும் யாதொரு நபருக்குக் கொடுக்கவேண்டியிராத நோடிஸாகவோ கொடுக்க அல்லது சேர்ப்பிக்கவேண்டியிருக்கும் ஒவ்வொரு நோடிஸும் - வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றபடி, அதன் பிரதி ஒன்று கன்டோன்மென்ட் அதிகார சபையார் கட்டளையிடக்கூடிய பிரதேச சமாசாரப் பத்திரிகையிலோ மாதிரியாகவோ பிரசித்தம் செய்யப்பட்டாலும், அப்படிப்பட்ட காலத்தில் அப்படிப்பட்ட வேறே பொது இடத்திலோ, கன்டோன்மென்ட் அதிகார சபை ஆபிஸில் அப்படிப்பட்ட நன்றாய்த் தெரியும் பாகத்திலோ ஒட்டப்பட்டாலும் போதுமானபடி கொடுக்கப்பட்டிருப்பதாகவாயினும் சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவாயினும் கருதப்படும்.

நோடிஸில் கண்டபடி நடந்துகொள்ளாத விஷயத்தில் கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் அதிகாரங்கள்.

256. யாதொரு நபர் யாதொரு வேலையைச் செய்துமுடிக்கவேண்டுமென்றாவது யாதொரு காரியத்தைச் செய்யவேண்டுமென்றாவது உத்தரவு செய்து அந்த நபருக்கு இந்த ஆக்டின்படியாகிலும் இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியாகிலும் பிறப்பிக்கப்பட்ட யாதொரு நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையிற்கண்ட ஷரத்துகளின்படி நடந்துகொள்ளாத விஷயத்திலே, கன்டோன்மென்ட் அதிகார சபையார் - தவறிப்போன நபர் அந்தப்படி தவறிப்போனதற்காக தண்டிக்கப்படுவதற்குள்ளாயிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, அதற்காக பிராது தொடரப்பட்டிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி யாதொரு தண்டனை விதிக்கப்பட்டிருந்தாலுஞ்சரி இராவிட்டாலுஞ்சரி, அப்படிப்பட்ட நபருக்கு எழுத்துமூலமான நோடிஸ் கொடுத்த பிறகு, ஷை நபர் செய்யவேண்டியதாய் அல்லது செய்துமுடிக்கவேண்டியதாயிருக்கும் காரியம் அல்லது வேலையைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமாயிருக்கக்கூடிய நடவடிக்கைகள் நடத்தலாம்; மேலும், அதன்பொருட்டு செய்யப்படும் சகல செலவுகளும் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் வசூல் செய்யப்படக்கூடியவையாகும்.

பணத்தை வசூலிப்பது.

சொந்தக்காரர் கொடுக்கத் தவறிப்போனால் அனுபோகதாரர் உத்தரவாதியாவது.

257. (1) 256-வது பிரிவில் சொல்லியிருக்கிறபடிக்குள்ள யாதொரு நோடிஸானது யாதொரு நபர் எந்த சொத்தின் சொந்தக்காரராயிருக்கிறாரோ அந்த சொத்தின் விஷயமாய் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தால், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அப்படிப்பட்ட சொத்து அல்லது அதன் யாதொரு பாகத்தின் அனுபோகதாரர் அந்த சொத்தின் விஷயமாய் அவர் செலுத்தக்கூடிய ஏதாவது

வாடகையை அது பாக்கியாய் ஏற்பட்டுக்கொண்டே வருகையில், 256-வது பிரிவின்படி சொந்தக்காரரிடமிருந்து வசூலிக்கத்தக்க தொகையாகிறமட்டிலும் சொந்தக்காரரிடம் செலுத்துவதற்கு பர்த்தியாகத் தங்களிடம் செலுத்தவேண்டுமென்று உத்தரவு செய்யலாம் :

ஆனால், அனுபோகதாரரானவர் - கன்டோன்மென்ட் அதிகார சபையார் கேட்டுக்கொள்வதன்மேல தம்முடைய வாடகைத் தொகையையாவது அது எந்த நபருக்குச் செலுத்தக்கூடியதோ அந்த நபரின் பெயரையாவது மேல்விலாசத்தையாவது தெரிவிக்க மறுத்தால், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - 256-வது பிரிவின்படி வசூலிக்கத்தக்க மொத்த தொகையை அனுபோகதாரரிடமிருந்து வசூலிக்கலாம்.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி சொந்தக்காரருக்கு பர்த்தியாக அனுபோகதாரரிடம் வசூலிக்கப்படும் யாதொரு தொகையானது - சொந்தக்காரருக்கும் அனுபோகதாரருக்கும் இதற்கு விரோதமாக ஒப்பந்தம் ஒன்றும் இராதபட்சத்தில், சொந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படும்.

ஏஜெண்டுகளும் ட்ரஸ்டிகளும் விடுதலையாவது.

258. (1) யாதொரு நபர் ஏஜெண்டாகவோ ட்ரஸ்டியாகவோ யாதொரு அசையாப் பொருளின் வாடகையைப் பெறுவது காரணமாகவாவது, ஷை சொத்தை யாதொரு பாயசகாரிக்கு வாடகைக்கு விட்டால வாடகை பெறுக்கொள்ளக்கூடிய நபரின் ஏஜெண்டாகவோ ட்ரஸ்டியாகவோ இருப்பது காரணமாகவாகவாவது, ஷை சொத்தின் சொந்தக்காரின்மேல் ஏற்பட்ட பொறுப்பை நிறைவேற்றக் கடமைப்பட்டவராயிருந்து அந்தப்படி செய்வதற்குப் பணம் வேண்டியதாயிருந்தால் அவர் - பிரஸ்தாப காரியத்துக்குப் போதுமானதாய் சொந்தக்காரருடையதாக இருக்கும் பணத்தைத் தம் வசத்தில வைத்துக்கொண்டிருந்தாலன்றி மற்றப்படியாவது, தம்முடைய சொந்த அக்கிரமச்செயல் அல்லது தவறுதல் இல்லாவிட்டால் பணத்தை அந்தப்படி தம் வசத்தில் வைத்துக்கொண்டிருந்திருக்கக்கூடுமானாலன்றி மற்றப்படியாவது ஷை பொறுப்பை நிறைவேற்றக் கடமைப்பட்டவராகமாட்டார்.

(2) யாதொரு ஏஜென்ட் அல்லது ட்ரஸ்டியை (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பரிகாரம் பெற பாத்தியதையுடையவராகும் யாதொரு சங்கதியை ருஜுசெய்வது அவரைப் பொறுத்ததாகும்.

(3) யாதொரு ஏஜென்ட் அல்லது ட்ரஸ்டியானவர் இந்தப் பிரிவின்படி பரிகாரம் பெற சுதந்தரம் கொண்டாடி அந்தப்படி பெறுவதற்குத் தமக்குள்ள உரிமையை ஸ்தாபித்திருந்தால், கன்டோன்மென்ட் அதிகார சபையார் - எழுத்துமூலமான நோடிஸ் அனுப்பி, மேலே சொல்லப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதற்காக சொந்தக்காரரின் சார்பாவாவது அவருடைய உபயோகத்துக்காகவாவது தம்மிடத்தில் வரும் முதல் பணத்தை உபயோகிக்கவேண்டுமென்று உத்தரவு செய்யலாம் ; மேலும், அவர் - அந்த நோடிஸின்படி நடக்கத் தவறிப்போவதன்மேல், அந்தப் பொறுப்பைத் தாமே நிறைவேற்றுவதற்குக் கட்டுப்பட்டவராயிருப்பதாக கருதப்படுவார்.

வசூலிக்கும் முறை.

259. இந்த ஆக்டின்படி கன்டோன்மென்ட் அதிகார சபையார் வசூலிக்கத்தக்கதாகும் சகல பணமும் - வேறே விதமாய் வெளிப்படையாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி வியாஜ்ஜியம் மூலமாகவாவது மாஜிஸ்ட்ரேட்டுக்கு விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், அந்தப் பணம் எவரிடத்திலிருந்து வசூலிக்கத்தக்கதாகுமோ அவருடைய அசையும்பொருளை ஜப்திசெய்து விற்பனை செய்வதுமூலமாகவாவது வசூலிக்கப்படத்தக்கதாகும் ; மேலும் அது - யாதொரு சொந்தக்காரர் அந்த ஹோதாவிலே செலுத்தத்தக்கதாயிருந்தால, அது செலுத்தப்படுகிற வரையில் அந்த சொத்தின்மேல் முதல் பொறுப்பாகும்.

மத்தியஸ்த கம்மிட்டிகள்.

யாதொரு மத்தியஸ்த கம்மிட்டி ஏற்படுத்தவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொள்வது.

260. இந்த ஆக்டின்படி கன்டோன்மென்ட் அதிகார சபையார் யாதொரு பிரதிபலன் கொடுக்க உட்பட்டிருக்கிறார்களா என்பதைக் குறித்தாவது அந்தப்படி செலுத்தப்படத்தக்க பிரதிபலன் தொகையைக் குறித்தாவது விவாதம் ஏற்பட்டால், அப்படிப்பட்ட பிரதிபலனைச் சுதந்தரித்துக் கேட்கும் நபர் - பிரஸ்தாப விஷயத்தை யாதொரு மத்தியஸ்த கம்மிட்டியாரின் அபிப்பிராயத்துக்கு அனுப்பவேண்டுமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையாருக்கு விண்ணப்பஞ் செய்துகொள்ளலாம் ; உடனே, கன்டோன்மென்ட் அதிகார சபையார் - விவாத விஷயத்தைத் தீர்மானம் செய்வதற்காக யாதொரு மத்தியஸ்த கம்மிட்டியைக் கூட்டவேண்டும்.

மத்தியஸ்த கம்மிட்டியைக் கூட்டுவதற்கான நடவடிக்கை.

261. யாதொரு மத்தியஸ்த கம்மிட்டியைக் கூட்டவேண்டியதாயிருக்கும்போது கன்டோன்மென்ட் அதிகார சபையார் - தீர்மானம் செய்யவேண்டிய விஷயம் இன்னதென்று கண்டு ஒரு பகிரங்கமான நோடிஸ் பிரசித்தம் செய்து உத்தரவுக்கு நகல்களை டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்டரேட்டுக்கும் சம்பந்தப்பட்ட மற்றொரு நபருக்கும் உடனே

அனுப்பவேண்டியதுமல்லாமல், 262-வது பிரிவின்படி அந்தக் கம்மிட்டியின் எந்த மெம்பர்களைத் தாங்கள் நேமகம் செய்ய பாத்தியதையிருக்கிறதோ அந்த மெம்பர்களை சாத்தியமான சீக்கிரத்தில நேமகம் செய்யவும் வேண்டும; மேலும், அவர்கள் - அந்தக் கம்மிட்டியின் யாதொரு மெம்பரையாவது மெம்பர்களையாவது நேமகம் செய்ய பாத்தியதையுடைய இதர நபர்களை அப்படிப்பட்ட மெம்பர் அல்லது மெம்பர்களை அந்தப் பிரிவிலகண்ட நிபந்தனைகளை அனுசரித்து நேமகம் செய்யும்படி எழுத்துமூலமான நோடிஸை அனுப்பி கேட்கவேண்டும்.

மத்தியஸ்த கம்மிட்டியின் அமைப்பு.

262. (1) ஒவ்வொரு மத்தியஸ்த கம்மிட்டியிலும் ஐந்து மெம்பர்கள் இருக்கவேண்டும்; அதாவது:—

(a) கவர்ன்மென்டார் அல்லது கன்டோன்மென்ட் அதிகார சபையின ஊழியத்திலிராத நபராயும் கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸரால் நியமிக்கப்படவேண்டியவராயுமிருக்கும் ஒரு அக்கிராசனாதிபதி;

(b) கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் நேமகம் செய்யப்படும் இரண்டு நபர்கள்;

(c) சம்பந்தப்பட்ட மற்றொரு நபரால் நேமகம் செய்யப்படும் நபர்கள்; அவர்கள் சாதாரணமாய்க் கன்டோன்மென்டில் வாசம் செய்கிறவர்களாயும் வரிகள் செலுத்துவதற்குட்பட்டவர்களாயும் இருக்கவேண்டும்.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையாராவது சம்பந்தப்பட்ட வேறே நபராவது கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸராவது 261-வது பிரிவில் சொல்லியிருக்கும் நோடிஸ் பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து எழு தினங்களுக்குள தாங்களாகிலும் அவராகிலும் செய்ய பாத்தியதையுடைய நேமகத்தைச் செய்யத் தவறிப்போய்விட்டாலும், அந்தப்படி நேமகம் செய்யப்பட்ட யாதொரு மெம்பர் பிரவர்த்திக்காமல் அசட்டை செய்தோ அல்லது நிராகரித்தோ இருந்து கன்டோன்மென்ட் அதிகார சபையாராயினும் அந்த மெம்பர் எவரால் நேமகம் செய்யப்பட்டாரோ அந்த வேறே நபராயினும் ஷை மெம்பர் ஸ்தானத்தில் வேறே மெம்பரை நேமகம் செய்யவேண்டுமென்று டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கேட்டதிலிருந்து எழு தினங்களுக்குள் அந்தப்படி செய்யத் தவறிப்போய்விட்டாலும், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் - ஷை காலிஸ்தானம் அல்லது காலிஸ்தானங்களைப் பூர்த்தி செய்ய சந்தர்ப்பத்துக்கேற்றபடி மெம்பர் அல்லது மெம்பர்களை நேமகம் செய்யவேண்டும்.

நேராய் அக்கறையுடையவராயும் உடனே ஊழியம் செய்ய முடியாதவராயுமிருக்கும் எந்த நபரையும் நேமகம் செய்யக்கூடாதென்பது.

263. (1) பிரஸ்தாப விஷயத்தில் நேராக அக்கறையுடையவராயும் கம்மிட்டியின் காரியங்களுக்காக உடனே ஊழியம் செய்யக்கூடாதவராயுமிருக்கும் எந்த நபரையும் மத்தியஸ்த கம்மிட்டியின் மெம்பராக நேமகம் செய்யக்கூடாது.

(2) நேமகம் செய்யப்பட்டிருக்கும் யாதொரு நபர் பிரஸ்தாப விஷயத்தில் நேராய் அக்கறையுடையவராகவாவது நேமகம் செய்யப்படுவதற்கு மற்றப்படி யோக்கியதையற்றவராகவாவது இருப்பதாக டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் அபிப்பிராயப்பட்டாலும் மேற்சொல்லிய யாதொரு நபர் உடனே ஊழியம் செய்யக்கூடாவிட்டாலும், ஷை நபரை நேமகம் செய்த கன்டோன்மென்ட் அதிகார சபையாராவது வேறே நபராவது வேறே மெம்பரை நேமகஞ்செய்யவேண்டுமென்று டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கேட்டுக்கொண்டதிலிருந்து எழு தினங்களுக்குள் அந்தப்படி செய்யத் தவறிப்போய்விட்டாலும், அந்தப்படி தவறிப்போவதானது - 262-வது பிரிவின் தாற்பரியப்படி நேமகம் செய்யத் தவறிப்போயிருப்பதாகக் கருதப்படும்.

மத்தியஸ்த கம்மிட்டிகளின் சபைகளும் அவைகளின் அதிகாரங்களும்.

264. (1) யாதொரு மத்தியஸ்த கம்மிட்டி கிரமமாய் அமைக்கப்பட்டிருக்கும்போது, கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அது சங்கதியை ஒவ்வொரு மெம்பருக்கும் எழுத்துமூலமான நோடிஸைக்கொண்டு தெரிவிக்கவேண்டும்; அதன்பிறகு, கூடிய சீக்கிரத்தில், ஷை கம்மிட்டியார் சபை கூடவேண்டும்.

(2) அந்தக் கம்மிட்டியின் அக்கிராசனாதிபதியானவர் - இன்ன இடத்திலும் இன்ன காலத்திலும் சபைகள் கூடவேண்டுமென்று நிஷ்கரிஷை செய்யவேண்டும்; மேலும் அவர் - அப்போதைக்கப்போது அவசியமாயிருக்கக்கூடியபடி சபையைத் தள்ளிவைத்துக் கொள்ளவும் அதிகாரமுடையவராவார்.

(3) ஷை கம்மிட்டியார் - சாட்சியத்தைப்பெற்று அதைப் பதிந்துகொள்ள அதிகாரமுடையவர்களாவதுமல்லாமல் சாட்சிகளைப் பிரமாணம் செய்விக்க அதிகாரமுடையவர்களுமாவார்கள்; மேலும், அந்தக் கம்மிட்டியின் அக்கிராசனாதிபதி எழுதிக் கேட்டுக்கொள்வதன்மேல், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டானவர் - சாட்சிகள் ஹாஜராகவும் கம்மிட்டியாருக்கு அவசியமாயிருக்கும் தஸ்தவேஜுகளை ஹாஜர்படுத்தவும் ப்ராஸெஸ் என்னும் கட்டளைகள் பிறப்பிக்கவேண்டும்; அல்லாமலும் அவர் - ஷை ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளை, அவை தமக்கு முன் ஹாஜராகவாவது ஹாஜர்ப்படுத்தவாவது பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளாயிருந்தால் எப்படியோ அப்படியே, அமுலுக்குக் கொண்டுவரலாம்.

மத்தியஸ்த கம்மிட்டிகளின் தீர்மானங்கள்.

265. (1) ஒவ்வொரு மத்தியஸ்த கம்மிட்டியின் தீர்மானமும் - அக்கிராசனாதிபதியும் மற்ற மெம்பர்களில் குறைந்தது மூன்று பேரும் ஹாஜராயிருக்கிற யாதொரு சபையில் எடுக்கப்பட்ட வோட்டுகளில் பெரும்பான்மையான வோட்டுகளை அனுசரித்திருக்கவேண்டும்.

(2) பிரேரேபணை செய்யப்பட்ட யாதொரு தீர்மானத்துக்கு அனுகூலமாயுள்ள வோட்டுகள் பெரும்பான்மையானவையாயிராவிட்டால், அக்கிராசனாதிபதியின் அபிப்பிராயத்தை ஒத்து நடக்கவேண்டும்.

(3) யாதொரு மத்தியஸ்த கம்மிட்டியின் தீர்மானம் முடிவானதாவதுமல்லாமல் அதைப்பற்றி எந்தக் கோர்ட்டிலும் ஆட்சேபணை செய்யக்கூடாது.

பிராதுகள்.

பிராதுகள்.

266. இந்த ஆக்டிலே வேறே விதமாய் வெளிப்படையாக நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, எந்தக் கோர்ட்டாரும் இந்த ஆக்டினாலாவது அதன்படியாவது தண்டனை விதிக்கத்தக்கதாய் செய்யப்பட்டிருக்கும் யாதொரு குற்றத்தை, சம்பந்தப்பட்ட கன்டோன்மென்ட் அதிகார சபையாராவது இது விஷயமாய் பொதுவான அல்லது விசேஷ உத்தரவுமூலமாக கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே நபராவது பிராது செய்வதன்மேல் அல்லது அவர்களிடமிருந்து சங்கதி தெரிவிக்கப்படுவதன்மேலன்றி மற்றப்படி, விசாரணை செய்யத் தொடங்கக்கூடாது.

குற்றங்களுக்காக ராஜி செய்துகொள்வது.

267. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாராவது இது விஷயமாய்ப் பொதுவான அல்லது விசேஷ உத்தரவுமூலமாகக் கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே நபராவது - 14-வது அத்தியாயத்தின்படிக்கான குற்றமாயிராமல் இந்த ஆக்டினாலாவது அதன்படியாவது தண்டனை விதிக்கப்படத் தக்கதாயிருக்கும் யாதொரு குற்றத்தின் விஷயத்தில் நடவடிக்கைகள் தொடருவதற்கு முன்னாகிலும் பின்னாகிலும், ராஜி செய்துகொள்ளலாம் :

ஆனால், கன்டோன்மென்ட் அதிகார சபையாராலாவது அவர்கள் சார்பிலாவது பிறப்பிக்கப்பட்ட யாதொரு நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையின்படி நடந்துகொள்ளத் தவறிப்போவதனால் ஏற்படும் எந்தக் குற்றத்தின் விஷயத்திலும், அதன்படி நடந்துகொள்வது எம்மட்டில் சாத்தியமோ அம்மட்டில் நடந்துகொண்டாலன்றி மற்றப்படியும் அந்தப்படி நடந்துகொள்ளுகிற வரையிலுமன்றி மற்றப்படியும், ராஜி செய்துகொள்ளலாகாது.

(2) யாதொரு குற்றத்தின் விஷயத்தில் ராஜி செய்துகொள்ளப்பட்டிருந்து, குற்றம் செய்தவர் காவலில் இருக்கும்பட்சத்தில், அவரை விடுதலை செய்துவிடவேண்டும்; மேலும், அந்தப்படி ராஜி செய்துகொள்ளப்பட்ட குற்றத்தின் சம்பந்தமாய், பின்னும் நடவடிக்கை எதுவும் நடத்தக்கூடாது.

தண்டனை சம்பந்தமான பொது நிபந்தனைகள்.

பொது தண்டனை.

268. இந்த ஆக்டிலே வெளிப்படையாய்த் தண்டனை ஏற்படுத்தப்பட்டிராத விஷயத்தில், எவராகிலும் - அதில் கண்ட யாதொரு நிபந்தனையின்படி வெளிவிடப்பட்ட யாதொரு நோடிஸ், உத்தரவு அல்லது கட்டளையின்படி நடந்துகொள்ளத் தவறினாலும், இந்த ஆக்டிற்கண்ட நிபந்தனைகளை மற்றப்படி மீறி நடந்தாலும், அவர் - இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கவராவார்; மேலும், தொடர்ச்சியாய்த் தவறிக்கொண்டிருக்கும் அல்லது மீறி நடந்துகொண்டிருக்கும் யாதொரு விஷயத்தில், அவர் அந்தப்படி பிடிவாதமாய்த் தவறிக்கொண்டிருக்கும் அல்லது மீறி நடந்துகொண்டிருக்கும் தினங்களில் முதல் தினத்துக்குப் பிற்பட்ட ஒவ்வொரு தினத்துக்காகவும் இருபது ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான அபராத தண்டனை விதிக்கப்படத் தக்கவராவார்.

லைஸென்ஸ்களை ரத்து செய்வதும் அவைகளைச் சிறிது காலத்துக்கு ரத்து செய்து வைப்பதும்.

269. இந்த ஆக்டின்படி லைஸென்ஸ் கொடுக்கப்பெற்ற யாதொரு நபராவது அப்படிப்பட்ட நபருடைய யாதொரு ஏஜென்ட் அல்லது ஊழியக்காரராவது அந்த லைஸென்ஸில் கண்ட எவையேனும் திட்டங்களையாகிலும், அந்த லைஸென்ஸினால் அனுமதி கொடுக்கப்பெற்றிருக்கும் யாதொன்றை இன்ன மாதிரியாகவோ இன்ன சந்தர்ப்பங்களிலோ இன்ன திட்டங்களுக்கு உட்பட்டோ செய்யவேண்டும் அல்லது செய்யப்படலாமென்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்தும் காரியத்துக்காக இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு சகாயச் சட்டத்தையாகிலும் மீறி நடந்தால், கன்டோன்மென்ட் அதிகார சபையார்-இந்த ஆக்டின்படி ஏற்பட்டிருக்கும் வேறே யாதொரு தண்டனைக்கு பாதகமில்லாமலே, எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு யாதொரு லைஸென்ஸை ரத்து செய்துவிடலாம், அல்லது தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற கால அளவுக்கு அதை ரத்து செய்து வைக்கலாம்.

கன்டோன்மென்ட சொத்துக்குச் சேதம் ஏற்படும் விஷயத்தில் செலுத்தப் படக்கூடிய தொகையை வசூலிப்பது.

270. கன்டோன்மென்ட் அதிகார சபையாரின் சொத்துக்குச் சேதம் உண்டாக்கினது காரணமாக யாதொரு நபர் யாதொரு தண்டனைக்கு உள்ளாயிருந்தால், அவர் - அந்த சேதத்தைக் கட்டிக் கொடுக்க உட்பட்டவராவார்; மேலும், அந்த சேதத்தின் விஷயமாய்ச் செலுத்தப் படக்கூடிய தொகை - விவாதம் ஏற்படும் விஷயத்தில், அந்தப் படி தண்டனைக்கு உள்ளாகும் நபர் எந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டாரோ அந்த டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டால் நிச்சயிக்கப்படத்தக்கதாகும்; மேலும், கேட்கப்படுவதன்மேல் அந்தத் தொகை செலுத்தப்படாமற்போனால், அதை - ஷை நபருடைய அசையும் பொருளை ஜப்தி செய்து விற்பனை செய்வது மூலமாக வசூலிக்கவேண்டும்; அல்லாமலும், ஷை மாஜிஸ்ட்ரேட் அப்பிரகாரமே அதை வசூலிப்பதற்காக வாரன்ட் பிறப்பிக்கவேண்டும்.

வரையறை.

பிராது தொடருவதற்கு வரையறை.

271. எந்தக் கோர்ட்டாரும் இந்த ஆக்டினுலாவது அதன்படியாவது தண்டனை விதிக்கப்படத் தக்கதாய் செய்யப்பட்ட யாதொரு குற்றத்துக்காக எந்த நபரையும் - அது சம்பந்தமாய் யாதொரு மாஜிஸ்ட்ரேட்டிடத்தில் குற்றம் செய்யப்பட்ட ஆறு மாதத்துக்குள் பிராது செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி விசாரணை செய்யக்கூடாது.

வியாஜ்ஜியங்கள்.

கன்டோன்மென்ட் அதிகார சபையார் நிர்வாக உத்தியோகஸ்தர் முதலியவர்களின் பாதுகாப்பு.

272. யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரின்மேலாவது 10-வது பிரிவைச் சேர்ந்த (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட அதிகாரியினமேலாவது கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸரின்மேலாவது போர்டின் யாதொரு மெம்பரின்மேலாவது கன்டோன்மென்ட் அதிகார சபையைச்சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரின்மேலாவது இந்த ஆக்டின்படியாகிலும் அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்தின்படியாகிலும் நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்ய உத்தேசிக்கப்பட்ட யாதொரு காரியத்துக்காக எந்த கோர்ட்டிலும் வியாஜ்ஜியமாயினும் பிராதாயினும் தொடரக்கூடாது.

வியாஜ்ஜியங்களைக் குறித்து நோடிஸ் கொடுக்க வேண்டுமென்பது.

273. (1) யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையாரின்மேலாவது போர்டின் யாதொரு மெம்பரின்மேலாவது கன்டோன்மென்ட் அதிகார சபையைச் சேர்ந்த யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரின்மேலாவது இந்த ஆக்டை அனுசரித்தாகிலும் அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்தை அனுசரித்தாகிலும் செய்யப்பட்டதாகவோ செய்யப்பட்டதாய் பொருள்படுவதாகவோவுள்ள யாதொரு காரியத்துக்காக, கன்டோன்மென்ட் அதிகார சபையரின் ஆபிஸில் எழுத்து மூலமான நோடிஸ் சேர்ப்பித்த பிறகு இரண்டு மாதம் கழிகிறவரையிலும், அப்படிப்பட்ட மெம்பர், உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரின் விஷயத்தில் எழுத்து மூலமான நோடிஸை அவருடைய ஆபிஸ் அல்லது வாசஸ்தலத்தில் கொடுத்து அல்லது சேர்ப்பித்திருக்காலுமன்றி மற்றப்படியும், அந்த நோடிஸில் வியாஜ்ஜிய மூலத்தையும் தேடும் பரிகாரத்தையும் சுதந்தரித்துக் கேட்கும் பிரதிபலன் தொகையையும் வாதியாயிருக்க உத்தேசிப்பவரின் பெயரையும் வாசஸ்தலத்தையும் ஸ்பஷ்டமாய்க் கண்டிருந்தாலன்றி மற்றப்படியும், பிரஸ்தாப ப்ளெய்ன்டில் அப்படிப்பட்ட நோடிஸ் கொடுக்கப்பட்டதென்றாயினும் சேர்ப்பிக்கப்பட்டதென்றாயினும் கண்டிருந்தாலன்றி மற்றப்படியும், வியாஜ்ஜியம் எதையும் தொடரகூடாது.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையாராவது மெம்பராவது உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது வியாஜ்ஜியம் தொடரப்படுவதற்குமுன் போதுமானபடி நஷ்டம் கட்டிக்கொடுப்பதாக வாதிக்குச் சொல்லியிருந்தால், அந்தப்படி சொல்லப்பட்ட தொகைக்கு அதிகமாக யாதொரு தொகையை வாதி வசூல் செய்யக்கூடாது; மேலும், அந்தப்படி கொடுப்பதாகச் சொல்லியபின் பிரதிவாதிக்கு பிடித்த சகல செலவுகளையும் கொடுக்க வாதி கடமைபட்டவராவார்.

(3) (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருக்கிறபடிக்குள்ள வியாஜ்ஜியம் எதையும் - அது அசையாப் பொருளை வசூல் செய்வதற்காவது அதற்குள்ள பாத்தியதையை நிர்ணயம் செய்வதற்காவது நடத்தப்படும் நடவடிக்கையாயிருந்தாலன்றி மற்றப்படி, வியாஜ்ஜிய மூலம் ஏற்படும் தேதியிலிருந்து ஆறு மாதம் கழிந்து போன பிறகு நடத்தக்கூடாது.

(4) யாதொரு வியாஜ்ஜியத்தில் சுதந்தரித்துக்கேட்கப்படும் பரிகாரமானது இன்ஜங்க்ஷன் என்னும் தடை உத்தரவாக மாத்திரமேயிருந்து நோடிஸ் கொடுப்பதனுலாவது வியாஜ்ஜியம் தொடருவதை அல்லது நடவடிக்கை நடத்துவதைத் தள்ளிவைத்துக் கொள்வதனுலாவது அதன் நோக்கம் நிறைவேறாமற்போவதாயிருக்கும்பட்சத்தில், அந்த வியாஜ்ஜியத்துக்கு (1) குறிப்பிட்ட உட்பிரிவில் சொல்லியிருப்பதெதுவும் பிரயோகப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

அப்பீல்களும் புனராலோசனை செய்து திருத்துவதும்.

நிர்வாக உத்தரவுகளின் மேல் அப்பீல்கள்.

274. (1) 5-வது ஷெட்யூலின் இரண்டாம் கலத்தில் சொல்லியிருக்கும் யாதொரு உத்தரவினால் யாதொரு நபருக்குத் துன்பம் ஏற்பட்டிருந்தால், அவர் - அது விஷயமாய் அதன் மூன்றும் கலத்தில குறிப்பிடப் பட்டிருக்கும் அதிகாரியிடத்தில் அப்பீல் செய்துகொள்ளலாம்.

(2) அப்படிப்பட்ட அபபீல் எதுவும் - அது விஷயமாய் ஷை ஷெட்யூலின் நான்காம் கலத்தில் குறிப்பிடப்பட்ட கால அளவு கழிந்துபோவதன்மேல் செய்யப்படடால், ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(3) மேற்சொல்லியபடி குறிப்பிட்டிருக்கும் கால அளவை 1908-ம் வருஷத்திய இந்து தேசத்து கால நிர்ணய சட்டத்தில் கால அளவுகளை வரையறுத்துக் கணக்கிடுவது விஷய மாய்க் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து கணக்கிடவேண்டும். 1908-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

அப்பீல் மனு.

275. (1) 274-வது பிரிவின்படிக்கான ஒவ்வொரு அப்பீலையும் - எந்த உத்தரவின் மேல் அப்பீல் செய்து கொள்ளப்படுகிறதோ அந்த உத்தரவுக்கு நகல் சஹிதமாக எழுத்து மூலமான மனு அனுப்பி செய்துகொள்ள வேண்டும்.

(2) அப்படிப்பட்ட யாதொரு மனுவை - எந்த உத்தரவின்மேல் அப்பீல் செய்து கொள்ளப்படுகிறதோ அந்த உத்தரவைப் பிறப்பித்த அதிகாரியிடத்தில் செய்துகொள்ள லாம்; அதன்மேல், அந்த அதிகாரியானவர் - அதை அபபீல் அதிகாரிக்கு அனுப்பக் கடமை பட்டவராவார்; மேலும், சமாதானம் சொல்லும் உத்தேசத்துடன் தாம் செய்ய விரும்பும் யாதொரு ரிபோர்ட்டை அதனுடன் சேர்த்து அனுப்புலாம்.

அப்பீல் முடிகிறவரையில் நடவடிக்கை நடத்துவதை நிறுத்திவைப்பது.

276. 137-வது பிரிவைச் சேர்ந்த (a) அடையாளமிட்ட பகுதியின்படியாவது 140-வது பிரிவின்படியாவது 176-வது பிரிவின்படியாவது, 238-வது பிரிவின்படியாவது பிறப்பிக்கப்பட்ட நோடிஸில் கண்டுள்ள உத்தரவல்லாத வேறே யாதொரு உத்தரவின்மேல் செய்துகொள்ளப்படும் அப்பீல் ஏற்றுக் கொள்ளப்பட்டதன்மேல், அந்த உத்தரவை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான சகல நடவடிக்கைகளையும் அவைகளை மீறி நடந்துகொண்டதற்கான சகல பிராதுகளையும் ஷை அப்பீல் தீர்மானமாகிற வரையில் நிறுத்தி வைக்கவேண்டும்; மேலும், அப்பீலில் ஷை உத்தரவு ரத்து செய்யப்பட்டால், அதற்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளாமற்போவது குற்றமாயிருப்பதாகக் கருதப் படமாட்டாது.

புனராலோசனை செய்து திருத்துவது.

277. (1) மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய்க்குக் குறையாமல் சம்பளம் பெறுபவராய் கன்டோன்மென்ட் அதிகார சபையைச் சேர்ந்த ஊழியக்காரராயிருப்பவரை வேலையிலிருந்து தள்ளிவிட்டு பிறப்பிக்கப்பட்ட யாதொரு உத்தரவின்மேல் செய்துகொள்ளப்பட்ட அப்பீல் பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸரால் பைசல் செய்யப்பட்டிருந்தால், அந்தப்படி தள்ளிவிடப்பட்ட ஊழியக்காரர் - அதன் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் பிரஸ்தாப கம்மாண்டின் பிரதான கம்மாண்டிங் ஆபிஸருக்கு, ஷை தீர்மானத்தை புனராலோசனை செய்து திருத்தவேண்டுமென்று விண்ணப்பம செய்துகொள்ளலாம்; அவருடைய தீர்மானம் முடிவானதாகும்.

(2) கன்டோன்மென்ட் அதிகார சபையால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்மேல் செய்துகொள்ளப்படும் அப்பீல் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டால் பைசல் செய்யப்பட்டிருந்தால்; கன்டோன்மென்ட் அதிகார சபையார் - அதன் தேதியிலிருந்து முப்பது தினங்களுக்குள் பிரஸ்தாப டிஸ்ட்ரிக்டின் கம்மாண்டிங் ஆபிஸர் மூலமாக பிரதேச கவர்ன்மென்டாருக்காகிலும் இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மென்டாரால் நியமிக்கப்படக்கூடிய அதிகாரியிடத்திலாகிலும் ஷை தீர்மானத்தைப் புனராலோசனை செய்து திருத்தவேண்டுமென்று விண்ணப்பம செய்துகொள்ளலாம்.

(3) அப்பீல்கள் விஷயமாய் இந்த அத்தியாயத்தில் கண்டிருக்கும் நிபந்தனைகள் சாத்தியமானவரையில், இந்தப் பிரிவின்படி புனராலோசனை செய்து திருத்த வேண்டுமென்று செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களுக்குப் பிரயோகப்படும்.

அப்பீல் உத்தரவுகள் முடிவானவையாகுமென்பது.

278. 277-வது பிரிவில் வேறே விதமாய் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, அப்பீல் அதிகாரியின் ஒவ்வொரு உத்தரவும் முடிவானதாகும்.

அப்பீல்தாரர் சொல்லிக்கொள்ள வேண்டியதைச் சொல்லிக்கொள்ள அதிகாரம்.

279. இந்த அத்தியாயத்தின்படிக்கான அப்பீல் எதையும்-அப்பீல்தாரர் சொல்லிக்கொள்ளவேண்டியதை சொல்லிக்கொண்டிருந்தாலன்றி மற்றப்படியாவது நேரிலாகிலும் நியாயவாதி மூலமாகவாகிலும் அவர் சொல்லிக்கொள்ளவேண்டியதைச் சொல்லிக்கொள்ள நியாயமான அவகாசம் கொடுத்திருந்தாலன்றி மற்றபபடியாவது தீர்மானம் செய்யக்கூடாது.

16-ம் அத்தியாயம்.

விதிகளும் சகாயச்சட்டங்களும்.

விதிகள் செய்ய அதிகாரம்.

280. (1) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் முன்னதாக விளம்பரம் பிரசுரித்த பிறகு, இந்த ஆக்டின் காரியங்களையும் நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக விதிகள் செய்யலாம்.

(2) முக்கியமாயும், முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு பாதகமில்லாமலும், அப்படிப்பட்ட விதிகளில் அடியிற்கண்ட சகல விஷயங்களுக்காகவுமாவது, அவைகளில் எதற்காகவாவது விதிகள் செய்யலாம் :—

(a) கன்டோன்மென்டில் கவர்ன்மென்டாருக்குச் சொந்தமாயிருக்கும் நிலத்தை அனுபோகத்தில் பெறுவதற்கு அனுமதிக்காக இன்ன மாதிரியாகவும் இன்ன அதிகாரிக்கும் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டுமென்பது ;

(b) இன்ன அதிகாரியால் அந்த அனுமதி கொடுக்கப்படலாமென்பதும் அப்படிப்பட்ட யாதொரு அனுமதிகொடுக்கையில் சேர்க்கவேண்டிய திட்டங்கள் இன்னவையென்பதும் ;

(c) கன்டோன்மென்ட் அதிகார சபைகளின் ஊழியக்காரர்களை நியமிப்பதும் மேல்விசாரணை செய்வதும் மேற்பார்வையிடுவதும், சிறிது காலத்துக்குத் தள்ளிவைப்பதும், நீக்குவதும், தள்ளிவிடுவதும் அவர்களுக்கு தண்டனை விதிப்பதும் ;

(d) இன்ன சந்தர்ப்பங்களில் கன்டோன்மென்ட் அதிகார சபைகளைச் சேர்ந்த ஊழியக்காரர்களிடமிருந்து ஜாமீன் கேட்கவேண்டுமென்பதும் அப்படிப்பட்ட ஜாமீன் தொகையும் தன்மையும் இன்னதென்பதும் ;

(e) கன்டோன்மென்ட் அதிகார சபைகளைச் சேர்ந்த ஊழியக்காரர்களுக்கு ரஜா வர்த்தனையாவது, வராமலிருக்கும்போதும் கொடுக்கப்படும் வர்த்தனையாவது பதிலி வர்த்தனையாவது கொடுப்பது ;

(f) ப்ராவிடென்ட் பண்ட் என்னும் எதிர்கால சகாய நிதிகளை ஏற்படுத்துவதும் அவைகளை நிர்வாகம் செய்வதும் இன்ன சந்தர்ப்பங்களிலும் இன்ன திட்டங்களுக்குட்பட்டும் அவைகளுக்கு கன்டோன்மென்ட் நிதிகளிலிருந்தும் கன்டோன்மென்ட் அதிகார சபைகளைச் சேர்ந்த ஊழியக்காரர்களாலும் சந்தா தொகைகள் கொடுக்கப்பட வேண்டுமென்பதும் ;

(g) கன்டோன்மென்ட் அதிகார சபைகள் கணக்குகள் வைத்துவருவதும் அந்தக் கணக்குகள் இன்ன மாதிரியாய்த் தணிக்கை செய்யப்படவேண்டுமென்பதும் பிரசித்தம் செய்யப்படவேண்டும்மென்பதும் ;

(h) கன்டோன்மென்ட் நிதியிலிருந்து இன்ன நபர்களாலும் இன்ன மாதிரியாகவும் பணம் கொடுக்கப்படலாமென்று வரையறுப்பது ;

(i) வாவு செலவு எஸ்டிமேட்டுகளை (உத்தேசச் கணக்குகளை) கன்டோன்மென்ட் அதிகார சபைகள் தயார் செயவதும இன்ன நபர்களாலும் இன்ன திட்டங்களுக்குட்பட்டும் அந்த எஸ்டிமேட்டுகள் ஜாரி செய்யபபடலாமென்று வரையறுப்பதும் ;

(j) மத்தியஸ்த கம்மிட்டிகள் நடவடிக்கை முறையைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவது ;

(k) இந்த ஆக்டின் காரியங்களுக்காக யாதொரு அதிகாரி உபயோகித்து வைத்துவரவேண்டிய ரெஜிஸ்டர்களையும் ஸ்டேட்மென்டுகளையும் நமூனுக்களையும் நிர்ணயிப்பது.

விதிகள் சம்பந்தமாய் உடன்சேர்க்கையான நிபந்தனைகள்.

281. (1) 280-வது பிரிவின்படி செய்யப்பட்ட யாதொரு விதியானது - பொதுவாய் சகல கன்டோன்மென்டுகளுக்காகவுமாவது ஒரு கன்டோன்மென்ட் அல்லது பல கன்டோன்மென்டுகளின் முழுவதுக்காகவும் அல்லது அதன் யாதொரு பாகத்துக்காகவாவது செய்யப்படலாம்.

(2) அந்தப்படி செய்யப்படும் சகல விதிகளையும் இந்தியா கெஜெட்டிலும் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்கள் வேறெந்த மாதிரியாகவாவது கட்டளையிடக்கூடுமானல் அந்த மாதிரியும் பிரசித்தஞ்செய்யவேண்டும் ; அந்தப்படி பிரசித்தம் செய்யப்படுவதனமேல் அவை இந்த ஆக்டில் சேர்க்கப்பட்டிருந்தாற்போலவே செலாவணியாகும்.

சகாயச் சட்டங்கள் செய்ய அதிகாரம்.

282. இந்த ஆக்டிலும் அதன்படி செய்யப்பட்ட விதிகளிலும் கண்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு கன்டோன்மென்ட் அதிகார சபையார் - இந்த ஆக்டிற் கண்ட வேறே யாதொரு நிபந்தனையின்படி செய்ய அதிகாரம் கொடுக்கப்பெற்றிருக்கும் எவையேனும் சகாயச் சட்டங்களுக்கு உடன் சேர்க்கையாக கன்டோன்மென்டில் அடியிற்கண்ட சகல விஷயங்களுக்காகவுமாவது அவைகளில் எதற்காகவாவது சகாயச் சட்டங்கள் செய்யலாம் ; அவையாவன :—

(1) ஜனனங்கள், மரணங்கள், விவாஹங்கள் ஆகிய இவைகளை ரெஜிஸ்டர் செய்வதும் ஸென்ஸஸ் எடுப்பதும் ;

(2) கட்டாயமாய் அம்மை குத்திக்கொள்ளவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்துவது ;

(3) இந்த ஆக்டின்படி வரிகள், சுங்கங்கள், கட்டணங்கள் ஆகிய இவைகள் வசூலிப்பது விஷயமாயும் வரப்பற்றிக்கொள்வது விஷயமாயும் வரிகளை வாபஸ் செய்வதற்காகவும் ஒழுங்கேற்படுத்துவது ;

(4) தெருக்களில் யாதொரு வகையைச் சேர்ந்த வண்டிகள் முதலியவைகளின் போக்குவரவு விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவது அல்லது அது கூடாதென்று தடுப்பது ;

(5) சூரியாஸ்தமனதுக்கும் சூரியோதயத்துக்கும் இடையில் தெருக்களிலே நின்றிருக்கும், ஓட்டிக்கொண்டுபோகப்படும், கொண்டுபோகப்படும் அல்லது தள்ளிக்கொண்டு போகப்படும் வண்டிகளுக்கு இன்ன மாதிரியாய் விளக்கு போடவேண்டுமென்பது ;

(6) கன்டோன்மென்டின் எல்லைகளுக்குள் பட்டியாய்த் திரிந்துகொண்டிருக்கும் சொந்தக்காரரில்லாத பிராணிகளைக் கைப்பற்றுவதும் பறிமுதல் செய்வதும் ;

(7) தீபிடித்துக்கொள்வதைத் தடுப்பதும் தீயை அவிப்பதும் ;

(8) கட்டிட வேலைகள் நடந்துகொண்டிருக்கையில் பொது ஜனங்களுக்கும் அதன்மேல் வேலைசெய்யும் நபர்களுக்கும் பாதுகாப்பு ஏற்படும்பொருட்டு அந்த வேலைகளுக்கு சாரங்கள்போட்டு அடைப்பு ஏற்படுத்துவது ;

(9) சாக்கடைக்கால்கள் (Ventilation shafts) வென்டிலேஷன் ஷாப்ட்ஸ் என்னும் காற்றுவருவாய் சம்பந்தமான உபகரணங்கள், குழாய்கள், வாட்டர் க்ளோஸெட் என்னும் தண்ணீர் வேகமாய் விழுந்து மலம் அடித்துக்கொண்டு போகும்படி ஏற்படுத்தப்பட்ட க்கூஸ்கள், கக்கூஸ்கள், மலஜலபாதை மறைவிடங்கள், மூத்திரம்பெய்யும் இடங்கள், சாக்கடைக்குழிகள், சாக்கடைககால் சம்பந்தமான இதர கட்டுவேலைகள் ஆகிய இவைகளைக் கட்டுவது, மாற்றுவது, பராமரித்துவருவது, பாதுகாப்பது, சுத்தஞ்செய்வது அவைகளுக்கு மராமத்துசெய்வது ஆகிய இவைகள் சம்பந்தமாய் இந்த ஆக்டில் பிரத்தியேகமாக நிபந்தனை கண்டிராத யாதொரு மாதிரியாய் ஒழுங்கேற்படுத்துவது ;

(10) சாக்கடைச் சேறும் அசுத்தமாக்கப்பட்ட தண்ணீரும் அருவருப்புண்டாக்கத்தக்க அல்லது தடங்கல் உண்டாக்கத்தக்க வேறே வஸ்துக்களும் சாக்கடைக்காலில் போய் விழும்படி செய்வது விஷயமாயாவது அவைகளில் போட்டுவைப்பது விஷயமாயாவது ஒழுங்கேற்படுத்துவது அல்லது அவைகளைத் தடுப்பது ;

(11) பொதுஜன தேகாரோக்கியத்துக்கு அபாயம் நேரிடுவதைத் தடுக்கும்பொருட்டு பிராணிகளையாவது யாதொரு வகையைச் சேர்ந்த பிராணிகளையாவது லாயங்களில் கட்டிவைப்பது விஷயமாகவாகிலும் மந்தைகளாய்ச் சேர்த்துவைப்பது விஷயமாகவாகிலும் ஒழுங்கேற்படுத்துவது அல்லது அவைகளைத் தடுப்பது ;

(12) பிரேதங்களைச் சரியாய் ஒருவகை செய்வதும் புதைப்பதற்கும் தகனம் செய்வதற்குமான இடங்கள் விஷயமாயும் பிரேதங்களை ஒருவகை செய்வதற்கான இதர இடங்கள் விஷயமாயும், அவைகள் கவர்ன்மென்டாராலாவது கன்டோன்மென்ட் நிதியின் செலவிலாவது ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் பராமரிக்கப்பட்டுவந்தாலும் அவைகளை உபயோகிப்பதற்காக வாங்கப்படும் கட்டணங்கள் விஷயமாயும் ஒழுங்கேற்படுத்துவதும் டி நிலங்கள் விஷயமாய் நிர்வாகம் செய்வதும் ;

(13) திரிந்துகொண்டே சாமான்களை விற்பனை செய்கிறவர்களாவது யாதொரு நபராவது தம் சாமான்களை விற்பனை செய்வதற்காகவாகிலும் யாதொரு வேலையைச் செய்வதற்காகவாகிலும் யாதொரு கொட்டகை அல்லது கொட்டில் அமைத்துக்கொள்வதற்காகவாகிலும் யாதொரு தெரு அல்லது இடத்தை உபயோகிப்பதற்கு அனுமதி கொடுப்பது, அதன் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவது அல்லது அதைத் தடுப்பதும் அந்தப்படி உபயோகித்துக்கொள்வதற்காவது அனுபவிப்பதற்காவது கட்டணங்கள் விதிப்பதும் ;

(14) முகாம் செய்யும் இடங்கள், பௌண்டுகள், துணி தோய்க்கும் இடங்கள், செராய்கள், ஹோடல்கள், டாக்பங்களாக்கள், தங்குவதற்கான இடங்கள், போஜன விடுதிகள், குடியிருப்பு இடங்களாக வாடகைக்கு விடப்படும் கட்டிடங்கள், வாசஞ்செய்வதற்கான கிளப்புகள், சாப்பாட்டு வீடுகள், கேவ் என்னும் சிற்றுண்டிச் சாலைகள், பொது ஜனங்களின் வேடிகைக்கான அல்லது விநோதத்துக்கான அல்லது அவர்கள் போவதற்கான இடங்கள் ஆகிய இவைகளின் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதும் அவைகளை மேல்விசாரணை செய்வதும் ;

(15) காற்றுபுகட்டிய தண்ணீர் வகைகளையாவது ஏனங்களில் போட்டுவைக்கத்தக்க இதர தண்ணீர் வகைகளையாவது, வெண்ணெய், பால், மிட்டாய் வகைகள் மனிதர்கள் சாப்பிடுவதற்கான ஆகாரப் பொருள்கள் அல்லது பானப்பொருள்களையாவது செய்வதற்காகிலும் விற்பனை செய்வதற்காகிலும் உபயோகிக்கப்படும் கட்டிடங்களின் காற்று வருவாய் விஷயமாயும் அவைகளில் விளக்குபோடும் விஷயமாயும் அவைகளை சுத்தஞ்செய்யும் விஷயமாயும் அவைகளைச் சேர்ந்த சாக்கடைக்கால் ஏற்பாட்டு விஷயமாயும் அவைகளுக்கு ஜலசர்ப்பரா செய்யும் விஷயமாயும் ஒழுங்கேற்படுத்துவது ;

(16) 210-வது பிரிவின்படி கொடுக்கப்பட்ட லைஸென்ஸுகள் மூலமாய் இன்ன விஷயங்கள் சம்பந்தமாக திட்டங்கள் ஏற்படுத்தலாமென்பது ;

(17) அபாயகரமான அல்லது அருவருப்புண்டாக்கத்தக்க வர்த்தகங்கள் நடத்தப்படும் இடங்கள் சுத்தமாயிருக்கும்படி பார்த்துக்கொள்வதற்காகவாவது அவைகளிலிருந்து தீங்குண்டாக்கத்தக்க, அருவருப்புண்டாக்கத்தக்க அல்லது அபாயகரமான பலன்கள் மிகக் குறைவாய் ஏற்படும்படி செய்வதற்காகவாவது அந்த இடங்களை மேல்விசாரணை செய்வதும் மேற்பார்வையிடுவதும் ;

(18) கன்டோன்மென்டிலிருக்கும் யாதொரு நிலத்தில் யாதொரு சுற்றுச்சுவர், அடைப்பு, கூடாரம், விதானம் அல்லது சிறிது காலத்துக்கான வேறே கட்டுக்கோப்பை எந்த சாமானைக்கொண்டாயினும்சரி எந்த தன்மையுடையதாகவாயினும்சரி கட்டுவது விஷயமாய் ஒழுங்கேற்படுததுவது ;

(19) தெருக்கள் அமைப்பதும், தெருக்கள் அமைப்பதற்கும் இன்ன இடத்தில் தெருக்கள் இருக்கவேண்டுமென்று நிச்சயிப்பதற்கும் போதுமானபடி ஏற்பாடு செய்யாமல் கட்டிடங்கள் கட்டுவது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதும் அந்தப்படி கட்டாமல் தடுப்பதும் ;

(20) பொது பார்க்குகள், தோட்டங்கள், இதர பொது இடங்கள் ஆகிய இவைகளை உபயோகிப்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதும், சாலை மரங்களையும், மரங்களையும், புல்லையும், தெருக்களையும், பொது இடங்களையும் சேர்ந்த இதர வஸ்துக்கள் ஆகிய இவைகளைப் பாதுகாப்பதும் ;

(21) பிராணிகள் புல் மேய்வது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவது ;

(22) பொது ஜனங்கள் ஸ்நானம் செய்வதற்கும் துணிகள் தோய்ப்பதற்குமான இடங்கள் விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவது ;

(23) துண்டு பத்திரிகைகளையும் விளம்பரங்களையும் ஒட்டுவது விஷயமாயும் பெயர் குறிப்பிட்டுள்ள பலகைகள், அடையாளப் பலகைகள், அடையாள ஸ்தம்பங்கள் ஆகிய இவைகளின் நிலமை அளவு, ரூபம், மாதிரி ஆகிய இவைகள் விஷயமாயும் ஒழுங்கேற்படுத்துவது ;

(24) முகத்தலளவையாலாகிலும் எடுத்தலளவையாலாகிலும் துண்டு கணக்காகவாகிலும் வேறே யாதொரு முறைப்படிக்காகிலும் சாமான்களை விற்பனை செய்வதற்கான முறையை நிஷ்கரிஷை செய்வது ;

(25) கன்டோன்மென்டுக்குள்—

(a) சரக்குகளைத் தூக்கிக்கொண்டு போவதற்காக அப்போதைக்கப்போது கூலிக்கு வேலைசெய்யும் போர்ட்டர்களுக்கும்,

(b) வாடகைக்கு விடப்படும் பிராணிகள் அல்லது வண்டிகளுக்கும்,

(c) வாடைக்குக் கொடுப்பதற்காகவோ ஓட்டுவதற்காகவோ வைத்திருக்கும் வண்டிகள், படகுகள் அல்லது சாமான்களையுமாவது பிராணிகளையுமாவது ஏற்றிக்கொண்டு போவதறகான இதர சாதனங்களின் அல்லது பிராணிகளின் சொந்தக்காரர்கள அல்லது ஓட்டுகிறவர்களுக்கும்,

(d) அப்படிப்பட்ட வண்டிகளையாவது சாதனங்களையாவது தள்ளிக்கொண்டு போகிற அல்லது கொண்டுபோகிற நபர்களுக்கும்,

லைசென்ஸுகள் அவசியமாகும்படி செய்வது ;

(26) 25-வது பகுதியின்படி அவசியமாயிருக்கும் யாதொரு லைசென்ஸுக்காக செலுத்தத்தக்க கட்டணத்தை நிர்ணயிப்பதும் அப்படிப்பட்ட லைசென்ஸுகளை இன்ன திட்டங்களுக்குட்பட்டு கொடுக்கலாம், புனராலோசனைசெய்து திருத்தலாம், சிறிது காலத்துக்கு ரத்துசெய்துவைக்கலாம் அல்லது ரத்துசெய்துவிடலாமென்று நிர்ணயிப்பதும் ;

(27) அந்தப்படி அப்போதைக்கப்போதைய கூலிக்கு வேலைசெய்யும் போர்ட்டர்களின் ஊழியங்களுக்கான கட்டணங்கள் விஷயமாயும் அப்படிப்பட்ட பிராணிகள், வண்டிகள் அல்லது இதர ஏற்றிக்கொண்டுபோவதற்கான சாதனங்களுக்குரிய வாடகை விஷயமாயும் 25-வது பகுதியில் கண்டிருக்கும் வண்டிகள் அல்லது ஸாதனங்களை தள்ளிக்கொண்டுபோகும் அல்லது கொண்டுபோகும் நபர்களுக்கான பிரதிபலனுக்காகவும் ஒழுங்கேற்படுத்துவது ;

(28) சுகாதார சம்பந்தமான காரியங்களுக்காகவாவது வியாதியைத் தடுக்கும் காரியங்களுக்காகவாவது பொதுஜன க்ஷேமம் அல்லது சௌகரியத்தை விருத்திசெய்யும் காரியத்துக்காகவாவது, யாதொரு அசங்கியம் அல்லது சங்கடத்தை உண்டாக்குகிற அல்லது வெகுசாய் உண்டாக்கக்கூடியதாயிருக்கிற யாதொரு காரியம் விஷயமாயும், இந்த ஆக்டினாலாகிலும் அதன்படியாகிலும் எந்தக் காரியம் சம்பந்தமாய் ஒழுங்கேற்படுவதற்காகிலும் அதைத்தடுப்பதற்காகிலும் நிபந்தனை கண்டிருக்கவில்லையோ அந்தகாரியம் விஷயமாயும் ஒழுங்கேற்படுத்துவது அல்லது அதைத் தடுப்பது ;

(29) கன்டோன்மென்டிலுள்ள கட்டிடங்கள் அல்லது நிலத்தின் சொந்தக்காரர்கள் சிறிது காலம் கன்டோன்மென்டிலிராவிட்டாலும் கன்டோன்மென்டில் வாசம் செய்யாவிட்டாலும் அவர்கள் இந்த ஆக்டின் சகல காரியங்களுக்காகவுமாவது அவைகளில் எதற்காக

வாவது அதன்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச்சட்டத்தின் சகலகாரியங் களுக்காகவாவது அவைகளில் எதற்காகவாவது கன்டோன்மென்டிலோ அதற்கு சமீபத்தி லோ வாசம் செய்யும் நபர்களை ஏஜெண்டுகளாக நியமிக்கவேண்டுமென்று இன்ன சந்தர்ப் பங்களிலும் இன்ன மாதிரியாகவும் உத்தரவு செய்யலாமென்பது ;

(30) தொத்து வியாதி அல்லது ஒட்டு வியாதி கன்டோன்மென்டுக்குள் பரவாமல் தடுப்பது;

(31) யாதொரு தொத்து வியாதி அல்லது ஒட்டு வியாதியினால் வருந்திக்கொண் டிருக்கிற அல்லது வருந்திக்கொண்டிருப்பதாக நியாயமாய் சந்தேகிக்கப்படுகிற பிராணி களை கன்டோன்மென்டில் பிரத்தியேகப்படுத்திவைப்பது அல்லது அப்புறப்படுத்துவதும் அங்கிருந்து விலக்குவதும் ;

(32) கன்டோன்மென்டுக்குள் இருந்தாலுஞ்சரி அதற்கு வெளியிலிருந்தாலுஞ்சரி, பொதுஜல சர்ப்பரா ஆதாரங்களையும் ஜலத்தைப் பங்கிடு செய்யும் சாதனங்களையும், அவை களுக்குத் தீங்கு நேராமலாவது, அவைகள் அசுத்தப்படாமலாவது அவைகளிடம் எவரும் போகாமலாவது மேற்பார்வை யிடுவதும், அந்தக் காரியங்கள் விஷயமாய் ஒழுங்கேற்படுவ தும் அவைகளை சுத்தி செய்விப்பதும், பாதுகாப்பதும் ;

(33) தண்ணீர் கட்டு வேலைகளுடன் ஏற்படுத்தப்படும் சம்பந்தங்களை இன்ன மாதி ரியாய்க் கட்டவேண்டுமென்றாவது பராமரிக்க வேண்டுமென்றாவது, அந்தப்படி கட்டுவ தற்கும் பராமரிப்பதற்கும் இன்ன நபர்களை வேலையில் அமர்த்திக்கொள்ளவேண்டும் அல் லது அமைத்துக்கொள்ளலாமென்பது ;

(34) ஜல சர்ப்பராவுக்கும் ஜலத்தை உபயோகிப்பதற்குமான கட்டணங்களை வசூ லிப்பதும் வரப்பற்றிக்கொள்ளுவதும் உட்பட அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட சகல விஷய ங்கள், வஸ்துக்கள் சம்பந்தமாயும் ஒழுங்கேற்படுத்துவதும் ஷை கட்டணங்களைச் செலுத் தாமல் தப்பித்துக்கொள்வதைத் தடுப்பதும் ;

(35) பாடசாலைகளைப் பராமரிப்பதும் பொதுவாய்க் கல்வியை அபிவிர்த்தி செய் வதும் ;

(36) மரங்களையாவது செடிகளையாவது வெட்டுவது அல்லது அழிப்பது, குழிகள் வெட்டுவது, மண்ணை அப்புறப்படுத்துவது அல்லது கல்வெட்டியெடுப்பது முதலிய காரி யங்கள் விஷயமாய ஒழுங்கேற்படுத்துவதாகிலும் அவைகளைத் தடுப்பதாகிலும் ஜலசர்ப்பரா வைப் பராமரிப்பதற்காயினும், மண்ணைப் பாதுகாப்பதற்காயினும் நிலம் சரக்காதிருக்காம லும், கணவாய்கள் அல்லது நீரோட்டங்கள் ஏற்படாமலும், தடுப்பதற்காயினும் நிலம் அறு த்துக்கொண்டு போகாமலும் அதன்மேல் மணல், பரல்கற்கள் அல்லது கல்வந்து படியாம லும் பாதுகாப்பதற்காயினும் அவசியமாகுமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையா ருக்கு தோற்றினால் அந்தப்படி ஒழுங்கேற்படுத்துவது அல்லது தடுப்பது ;

(37) கன்டோன்மென்டுக்குள்ளிருக்கும் வளவுகளை லாயங்களாகவாவது, மாட்டு தொழுவங்களாகவாவது, செம்மறியாடுகள், வெள்ளாடுகள் அல்லது கோழிகளுக்கு வசதியி டமாகவாவது உபயோகிக்க லைசென்ஸுகள் அவசியமாகும்படிச் செய்வது ;

(38) பொதுவாக இந்த ஆக்டின்படி கன்டோன்மென்டைப் பரிபாலனம் செய்வது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவதற்காக.

சகாயச்சட்டங்களை மீறி நடந்தால் தண்டனை.

283. இந்த ஆக்டின்படி கன்டோன்மென்ட் அதிகாரசபையாரால் செய்யப்பட்ட யாதொரு சகாயச் சட்டத்திலே, அதை எவராகிலும் மீறி நடந்தால் அவர்—

(a) நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனையாகிலும்,

(b) நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனையும், அந்தப்படி தொடர்ச் சியாய் மீறி நடந்துகொண்டேயிருக்கும் விஷயத்தில், அந்தப்படி மீறி நடந்ததற்காக குற்ற வாளியென்று முதல் தடவை தீர்மானிக்கப்பட்ட பிறகு மீறி நடந்துகொண்டே வரும் ஒவ் வொரு தினத்துக்கும் இருபது ரூபாய்க்கு மேற்படாமல் அதிகப்படியான அபராத தண்ட னையுமாகிலும்,

(c) பிரஸ்தாப சகாயச் சட்டத்தை மீறி நடக்கும் நபர் அந்தப்படி மீறி நடப்பதை நிறுத்த வேண்டுமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடமிருந்து நோடிஸ் வரப் பெற்றுக்கொண்ட பிறகு மீறி நடந்துகொண்டேவரும் ஒவ்வொரு தினத்துக்காகவும் பத்து ரூபாய்க்கு மேற்படாமல் அபராத தண்டனையுமாகிலும்

விதிக்கப்படத்தக்கவராவார்.

சகாயச்சட்டங்களுக்குச் சம்பந்தப்பட்ட உடன்சேர்க்கையான நிபந்தனைகள்.

284. (1) இந்த ஆக்டின்படி சகாயச் சட்டங்கள் செய்யக் கொடுத்திருக்கும் அதிகார மானது - அவை முன்னதாகப் பிரசித்தம் செய்யப்பட்ட பிறகு செய்யப்பட வேண்டுமென்னும் திட்டத்துக்கும் அவை பிரதேச கவர்ன்மென்டாரால் அங்கீகரித்து ஊர்ஜிதம் செய்யப்பட்டு பிர தேச ஸர்க்கார் கெஜட்டில் பிரசித்தம் செய்யப்படுகிறவரையில் செலாவணியாகக் கூடாதென்னும் திட்டத்துக்கும் உட்பட்டு கொடுக்கப்படுகிறது.

(2) பிரதேச கவர்ன்மெண்டார் யாதொரு சகாயச் சட்டத்தை ஊர்ஜ்ஜிதப்படுத்தும் போது அதில் தங்களுக்கு அவசியமாகத் தோற்றுகிற யாதொரு மாறுதல் செய்யலாம்.

(3) பிரதேச கவர்ன்மெண்டார் - தங்களுடைய உத்தேசத்தை முன்னதாகப் பிரசித்தஞ்செய்த பிறகு, தாங்கள் ஊர்ஜ்ஜிதம் செய்திருக்கிற யாதொரு சகாயச் சட்டத்தை ரத்து செய்யலாம்; அதன்மேல், அந்தச் சகாயச்சட்டம் செலாவணியாவது நின்று போகும்.

விதிகளையும் சகாயச் சட்டங்களையும் பார்வையிடுவது சாத்தியமாயிருக்க வேண்டுமென்பது.

285. (1) இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட சகல விதிகளுக்கும் சகாயச் சட்டங்களுக்கும் ஒரு நகலை, கன்டோன்மெண்ட் அதிகார சபையாருடைய ஆபீஸில் வைத்து வைக்கவேண்டியதுமல்லாமல், அவைகளை கன்டோன்மேண்டில் வாசம் செய்யும் யாதொரு நபர் ஆபிஸ் மணி நேரங்களில் கட்டணமில்லாமலே பார்வையிடுவது சாத்தியமாயிருக்க வேண்டும்.

(2) அப்படிப்பட்ட சகல விதிகளுக்கும் நகல்களை பொது ஜனங்களுக்கு விற்பனைசெய்வதற்காக கன்டோன்மெண்ட் அதிகார சபையாரின் ஆபிஸில் வைத்துவைக்கவேண்டும்.

17-ம் அத்தியாயம்.

உடன்சேர்க்கையான நிபந்தனைகள்.

இந்த ஆக்டிலும் விதிகளிலும் கண்டிருக்கும் சில நிபந்தனைகளை கன்டோன்மெண்டுகளுக்கு வெளியிலிருக்கும் இடங்களுக்கும் வியாபிக்கும்படிச் செய்வது.

286. பிரதேச கவர்ன்மெண்டார்-பிரதேச ஸர்க்கார் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாயும் பிரதிபலன் சம்பந்தமாகவாவது மற்றப்படியாகவாவது தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிறபடி விதிக்கும் திட்டங்களுக்குட்பட்டும், 9, 10, 11, 12, 13, 14, 15-வது அத்தியாயங்களிலாகிலும் இந்த அத்தியாயங்களில் அடங்கியிருக்கும் விஷயம் எந்த கனடோன்மெண்டுக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த கன்டோன்மெண்டுக்காக இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது சகாயச் சட்டத்திலாகிலும் கண்டிருக்கும் நிபந்தனைகளில் எதையாவது யாதொரு நிர்ப்பந்தம் அல்லது திருத்தத்துடனே அது இல்லாமலோ பிரஸ்தாப கன்டோன்மெண்டுக்கப்பாலும் அதற்கு சமீபத்திலுமுள்ள யாதொரு விஸ்தீர்ணத்துக்குப் பிரயோகப்படும்படி செய்யலாம். அதன்மேல், அம்மாதிரி பிரயோகப்படும்படி செய்யப்பட்ட ஒவ்வொரு சட்டதிட்டம், வீதி அல்லது சகாயச் சட்டமும் ஷை விஸ்தீர்ணம் கன்டோன்மெண்டில் சேர்ந்ததாயிருந்தால் எப்படியோ அப்படியே அதற்குப் பிரயோகப்படும்.

1882-ம் வருஷத்து 41-வது ஆக்ட்.

ரெஜிஸ்டர் செய்வது.

287. (1) யாதொரு ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதாரவு மூலமாய் சொத்தை ட்ரான்ஸ்பர் செய்வதற்குச் சம்பந்தப்பட்ட 1882 - வருஷத்திய சொத்து ட்ரான்ஸ்பரைக் குறித்த ஆக்ட் 54-வது பிரிவைச் சேர்ந்த 2-வது 3-வது பாராக்களும் 59, 107, 23-வது பிரிவுகளும் இந்த ஆக்ட் வழங்கும் தேதியிலும் அந்த தேதியிலிருந்தும் ஒவ்வொரு கன்டோன்மெண்டுக்கும் வியாபிக்கும்.

1908-ம் வருஷத்து 16-வது ஆக்ட்.

(2) 1908-ம் வருஷத்திய இந்து தேசத்து ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் காரியங்களுக்காக அந்த ஆக்ட் 9-வது பிரிவின்படி யாதொரு கன்டோன்மெண்டானது ஸப்டிஸ்ட்ரிக்டாகவாவது டிஸ்டரிக்டாகவாவது ஏற்படாமலிருந்தால், அந்த கன்டோன்மெண்ட் எந்த டிஸ்ட்ரிக்டிலிருக்கிறதோ அந்தடிஸ்ட்ரிக்டின் ரெஜிஸட்ரரானவர் - கன்டோன்மெண்டுக்குள்ளிருக்கும் அசையாப்பொருளுக்கு சம்பந்தப்பட்டவையாய் 1-ம் நெ., 2-ம் நெ. அட்டவணைகளில் இருக்கும் பதிவுகளை வருஷாவருஷமாகிலும் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கக்கூடிய பின்னும் குறைந்த இடைக்காலங்களிலாகிலும் கன்டோன்மெண்ட் அதிகார சபையாருக்கு அனுப்பும்படி செய்யவேண்டும்.

நோடிஸுகளும் இதர, தஸ்தவேஜுகளும் சட்டப்படி செலாவணியாவது.

288. இந்த ஆக்டின்படி பிறப்பிக்கப்பட்ட யாதொரு நோடிஸ், உத்தரவு, கட்டளை, லைஸென்ஸ், எழுத்து மூலமான அனுமதி அல்லது வேறே தஸ்தாவேஜானது - எழுதப்பட்டிருக்கும் மாதிரியில் யாதொரு குறையிருப்பது காரணமாகவே சட்டப்படி செலாவணியற்றதாய்விட மாட்டாது.

யாதொரு தஸ்தவேஜு அல்லது பதிவு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடுமென்பது.

289. யாதொரு கன்டோன்மெண்ட் அதிகார சபையாருடைய சுவாதீனத்திலிருக்கும் யாதொரு ரசீது, விண்ணப்பம், நக்ஷா, நோடிஸ் அல்லது வேறே தஸ்தாவேஜுக்காவது ரெஜிஸ்டரிலுள்ள பதிவுக்காவது யாதொரு நகலானது - அதை சட்டப்படி சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டியவராலாகிலும் இது விஷயமாய்க் கன்டோன்மெண்ட் அதிகாரியால் கிரமமாய் அதிகாரம் கொடுக்கப்பெற்ற வேறே நபராலாகிலும் கிரமமாய் உறுதிமொழி கூறப்பெற்றால், அந்த தஸ்தாவேஜு அல்லது பதிவு இருப்பதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியமாகும்; மேலும், அது ஒவ்வொரு விஷயத்திலும் அதில் பதிவு செய்திருக்கும் விஷயங்களையும் விவகாரங்களையும் ருஜுசெய்வதற்காக அசல் தஸ்தவேஜாவது பதிவாவது ஹாஜர் படுத்தப்பட்டால் அது ஏற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கும் பட்சத்திலும் அந்தப்படி ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அளவுக்கும் அந்த விஷயங்களை ருஜு செய்வதற்கு சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

கன்டோன்மென்ட் அதிகார சபையைச் சேர்ந்த உத்தியோகஸ்தராவது ஊழியக்காரராவது சாட்சியம் சொல்லுவது.

290. கன்டோன்மென்ட் அதிகார சபையார் சேர்ந்திராத யாதொரு சட்டப்படிக்கான நடவடிக்கையில், கன்டோன்மென்ட் அதிகார சபையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் அல்லது ஊழியக்காரரையும், யாதொரு ரெஜிஸ்டர் அல்லது தஸ்தாவேஜில் அடங்கியுள்ளதை உறுதி மொழிகூறப்பெற்ற நகல் மூலமாய் 289-பிரிவினபடி ருஜுு செய்யக்கூடுமானல், அந்த ரெஜிஸ்டர் அல்லது தஸ்தாவேஜை ஹாஜர்ப்படுத்தும்படியாகிலும் அதில் பதிந்திருக்கும் யாதொரு விஷயம் அல்லது விவகாரத்தை ருஜுு செயவதற்காக சாட்சியாய் வரும்படியாகிலும், யாதொரு விசேஷ காரணத்தைக்கொண்டு கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படிக்கன்றி மற்றப்படி உத்தரவு செய்யக்கூடாது.

ரத்து.

291. 6-வது ஷெட்யூலில் கண்டிருக்கும் சட்டதிட்டங்கள் அதன் நான்காவது கலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அளவுக்கு ரத்து செய்யப்படுகின்றன:

ஆனல், 1910-ம் வருஷத்து கன்டோன்மென்டுகளாக்டின்படி கொடுக்கப்பட்டவையாய் இந்த ஆக்ட் செலாவணியாகத் தொடங்கும் லைஸென்ஸுகளும் அனுமதிச் சீட்டுகளும் இந்த ஆக்டின்படி கொடுககப்பட்டிருப்பவையாகக் கருதப்படும். 1910-ம் வருஷத்து 5-வது ஆக்ட்.

1-வது ஷெட்டியூல்.

டிமாண்ட் நோடிஸ்.

(91-வது பிரிவைப் பார்க்கவும்.)

ல் வசிக்கும்

க்கு.

19 -ம் வருஷம் மாதம் தேதியிலிருந்து ஆரம்பித்து 19 -ம் வருஷம் மாதம் தேதியோடு முடிவாகிற ஆகிய காலஅளவுக்கு படி (இங்கே பிரஸ்தாப தொகை எந்த சொத்து, தொழில், சந்தர்ப்பம் அல்லது வஸ்து சம்பந்தமாய் செலுத்தப்படத்தக்கதாகிறதோ அதைக் குறிப்பிடவும்) பொருட்டு விதித்து வாங்கக்கூடியதாய் இடமிருந்து பாக்கியாயுள்ள ஆகிய தொகையை இடமிருந்து கன்டோன்மென்ட் அதிகார சபையார் கேட்கிருர்களென்றும், இந்த நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து பதினைந்து தினத்துக்குள் ஷை தொகை லே கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் செலுத்தப்படாவிட்டாலும் அதைச் செலுத்தாமலிருப்பதற்குப் போதுமான காரணம் நிர்வாக உத்தியோகஸ்தருக்குத் திருப்திகரமாயிருக்கும்படி காட்டப்படாவிட்டாலும், அதைச் செலவுகள் சகிதமாக வசூல் செய்வதற்கு ஜப்தி வாரன்ட் பிறப்பிக்கப்படுமென்றும் அறியவும்.

19 -ம்வருஷம் மாதம் தேதி.

(கையொப்பம்)

நிர்வாக உத்தியோகஸ்தர்,
கன்டோன்மென்ட்.

2-வது ஷெட்யூல்.

வாரன்ட் நமூனு.

(92-வது பிரிவைப் பார்க்கவும்.)

(இங்கே வாரன்டை நிறைவேற்றும் பொறுப்பு ஏற்றப்பெற்றிருக்கும் உத்தியோகஸ்தருடைய பெயரை எழுதுக.)

ல் இருக்கும் எ. பி. என்பவர் 19 -ம் வருஷம் மாதம் தேதியிலிருந்து ஆரம்பித்து 19 -ம் வருஷம் மாதம் தேதியோடு முடிவாகிற ஆகிய கால அளவுக்கு * பொருட்டு பாக்கியாயும் படி விதிக்கத்தக்கதாயுமுள்ள ஆகிய தொகையை செலுத்தாமலும் செலுத்தாதிருப்பதற்குத் திருப்திகரமாய்க் காரணம் காட்டாமலுமிருக்கிறபடியாலும்;

* பொறுப்பு இன்னதென்று இங்கே குறிப்பிடவும்.

அதற்காக அவருக்கு டிமாண்ட் நோடிஸ் சேர்ப்பித்ததிலிருந்து பதினைந்து தினங்கள் கழிந்து போய்விட்டபடியாலும்;

இதனல் உமக்குக் கட்டளேயிடுகிறதென்னவென்ருல், 19 -ம் வருஷத்து கன்டோன்மென்டுகளாக்டில் கண்டிருக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஷை எ. பி. என்பவருடைய அசையும் பொருளை ஷை ரூ. ஆகிய தொகை அளவுக்கு ஜப்தி செய்து, இந்த வாரன்டின்படி கைப்பற்றப்பட்ட சொத்தைக் குறித்த சகல விவரங்களுடன் அதில் உறுதிமொழி கூறி எனக்கு உடனே அனுப்பவேண்டுமென்பதே.

19 -ம் வருஷம் மாதம் தேதி.

(கையொப்பம்.)

நிர்வாக உத்தியோகஸ்தர்,
கன்டோன்மென்ட்

3-வது ஷெட்யூல்.

ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் ஜாபிதாவுக்கும் விற்பனை நோடிஸுக்கும் நமூனா.

(93-வது பிரிவைப் பார்க்கவும்).

ல் வசிக்கும்

க்கு.

19 -ம் வருஷம் மாதம் தேதியிலிருந்து ஆரம்பித்து 19 -ம் வருஷம் மாதம் தேதியோடு முடிவாகிற கால அளவுக்குச் சம்பந்தப்பட்ட தாய் * ஓரத்தில் கண்டிருக்கும் பொறுப்புக்காக பாக்கியாயிருக்கும் தொகையளவுக்கும் டிமாண்ட் நோடிஸ் சேர்ப்பித்ததற்காகச் சேரவேண்டி ரூ. க்கும் இதனுடன் சேர்த்திருக்கும் ஜாபிதாவில் குறிப்பிடப்பட்ட சொத்தை இன்றையதினம் நான் கைப்பற்றியிருக்கிறேனென்றும் இந்த நோடிஸ் சேர்பிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் ஷை தொகையை வசூலிப்பதற்கான செலவுகள் சகிதமாக கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடத்தில் நீர் செலுத்தாவிட்டால் ஷை சொத்து விற்பனை செய்யப்படுமென்றும் அறியவும்.

* பொறுப்பு இன்னதென்று இங்கே குறிப்பிடவும்.

19 -ம் வருஷம் மாதம் தேதி.

(வாரண்டை நிறைவேற்றும் உத்தியோகஸ்தருடைய கையெழுத்து.)

ஜாபிதா.

(கைப்பற்றப்பட்ட சொத்தின் விவரங்களை இங்கே எழுதவும்.)

4-வது ஷெட்யூல்.

போலீஸார் வாரன்டில்லாமல் பிடிக்கக்கூடிய விஷயங்கள்.

(250-வது பிரிவைப் பார்க்கவும்.)

பிரிவு.		விஷயம்.
		A.—பாகம்.
118 (1) (a) (i)	..	குடிவெறி, முதலியவை.
167 ..	..	தொத்து வியாதி கண்டிருக்கும் நபர் உணவுப்பொருள்கள் முதலியவைகளை செய்வது அல்லது விற்பது, அல்லது துணிகளைத் தோய்ப்பது.
		B.—பாகம்.
118 (1) (a) (ii)	..	பயமுறுத்துகிற அல்லது உதாசீனமான வார்த்தைகளை உபயோகிப்பது முதலியவை.
118 (1) (a) (iii)	..	ஒழுங்குதவறி உடம்பைத் திறந்து காட்டுவது முதலியவை.
118 (1) (a) (iv)	..	பிச்சை எடுப்பது.
118 (1) (a) (v)	..	தேகவிகாரம் முதலியவைகளை வெளிக்குக் காட்டுவது.
118 (1) (a) (vii)	..	சூதாடுவது.
118 (1) (a) (xii)	..	நோடிஸ் முதலியவைகளை அழிப்பது.
118 (1) (a) (xiii)	..	கைகாட்டி மரம் முதலியவைகளை ஓடிப்பது.
118 (1) (f) ..	..	பொதுவாகச் சூதாடுவதற்கென்று வீடு ஏற்படுத்தி வைத்திருப்பது முதலியன.
118 (1) (g) ..	..	முரசு அடிப்பது முதலியவை.
118 (1) (h) ..	..	பொதுஜன அமைதி அல்லது ஒழுங்கை கலைக்கும்படி பாடுவது முதலியவை.
119 (6) ..	..	மூர்க்ககுணமுள்ள நாயை அவிழ்த்து விடுவது அல்லது ஏவி விடுவது.
125 ..	..	அபாயம் நேரிடும்படி துப்பாக்கி முதலியவைகளை சுடுவது.
176 (1) ..	..	ஆஸ்பத்திரி அல்லது டிஸ்பென்ஸரியில் ஆஜராகத் தவறிப் போனதற்காக கன்டோன்மென்டை விட்டு வெளியே போகவேண்டுமென்று நோடிஸ் கொடுக்கப்பட்டப் பிறகு கன்டோன்மென்டில் தங்கியிருப்பது அல்லது அதில் மறுபடியும் பிரவேசிப்பது.
193 (2) ..	..	தெருவின் பெயரையாவது கட்டிடத்துக்குப் போட்டிருக்கும் நம்பரையாவது அழித்தல்.
214 ..	..	அசுத்தம் முதலியவைகளைப் போட்டு பிராணிகளைப் போஷித்தல்.
236 ..	..	ஸ்திரீ புருஷ சம்பந்தமான துன்மார்க்கத்துக்காகத் திரிந்துகொண்டிருப்பது அல்லது வேண்டிக்கொள்வது.
240 (a) ..	..	வெளியே போகவேண்டுமென்று நோடிஸ் கொடுக்கப்பட்ட பிறகு கன்டோன்மென்டில் தங்கியிருப்பது அல்லது அவ்விடத்திற்குத் திரும்பி வருவது.

5-வது ஷெட்யூல்.

உத்தரவுகளின்மேல் அப்பீல்கள்.

(274-வது பிரிவைப் பார்க்கவும்.)

பிரிவு.	நிர்வாக அதிகாரியின் உத்தரவு.	அப்பீல் அதிகாரி.	அப்பீலுக்காக கொடுக்கப்பட்ட கால அளவு.
126	யாதொரு கட்டிடம், சுவர் அல்லது அதனுடன் சேர்த்துள்ள யாதொரு பாகம், அல்லது கிணறு, குளம், நீர்நிலை, குட்டை, பள்ளம் அல்லது அகழ் முதலியவைகளுக்கு மராமத்து செய்யவோ, பாதுகாக்கவோ அல்லது அடைப்பு அடைக்கவோ கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் கொடுக்கப்பட்ட நோடிஸ்.	பிரஸ்தாப ஜில்லாவின் கம்மாண்டிங் ஆபிஸர்.	நோடிஸ் கொடுக்கப்பட்டதிலிருந்து முப்பது தினம்.
134	கிணறு, குளம் முதலியவைகளைத் தூர்த்துவிடவேண்டுமென்றாவது அவைகளிலுள்ள தண்ணீரை வடியச் செய்யவேண்டுமென்றாவது கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் கொடுக்கப்பட்ட நோடிஸ்.	பிரஸ்தாப ஜில்லாவின் கம்மாண்டிங் ஆபிஸர்.	நோடிஸ் கொடுக்கப்பட்டதிலிருந்து முப்பது தினம்.
137	போதுமான அளவுக்கு சாக்கடைக்கால் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் கொடுக்கப்பட்ட நோடிஸ்.	பிரஸ்தாப ஜில்லாவின் கம்மாண்டிங் ஆபிஸர்.	நோடிஸ் கொடுக்கப்பட்டதிலிருந்து பதினைந்து தினம்.
140	சுகாதாரக் குறைகளை நீக்குவதற்காக யாதொரு கட்டிடத்துக்கு மராமத்து செய்யவேண்டுமென்றாவது அதை மாற்றி அமைக்கவேண்டுமென்றாவது கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் கொடுக்கப்பட்ட நோடிஸ்.	பிரஸ்தாப ஜில்லாவின் கம்மாண்டிங் ஆபிஸர்.	நோடிஸ் கொடுக்கப்பட்டதிலிருந்து முப்பது தினம்.
176	வைத்திய உத்தியோகஸ்தர் ரிபோர்ட் செய்வதன்மேல் யாதொரு நபரை கன்டோன்மென்டைவிட்டு அப்புறப்படுத்தவேண்டுமென்றும் அனுமதியில்லாமல் கன்டோன்மென்டுக்குள் பிரவேசிக்காதபடி தடுக்கவேண்டுமென்றும் கட்டளையிட்டு கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபிஸரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு.	பிரஸ்தாப ஜில்லாவின் கம்மாண்டிங் ஆபிஸர்.	நோடிஸ் கொடுக்கப்பட்டதிலிருந்து முப்பது தினம்.
181	யாதொரு கட்டிடத்தைக் கட்டவோ புதுப்பித்து கட்டவோ அனுமதி கொடுக்க கன்டோன்மென்ட் அதிகார சபையார் மறுப்பது.	பிரஸ்தாப ஜில்லாவின் கம்மாண்டிங் ஆபிஸர்.	மறுத்ததின் தேதியிலிருந்து முப்பது தினம்
185	யாதொரு கட்டிடத்தை மாற்றவேண்டுமென்றாவது இடித்துவிடவேண்டுமென்றாவது கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் கொடுக்கப்பட்ட நோடிஸ்.	பிரஸ்தாப ஜில்லாவின் கம்மாண்டிங் ஆபிஸர்.	நோடிஸ் கொடுக்கப்பட்டதிலிருந்து முப்பது தினம்.
188	யாதொரு ஜலதாரை, சாக்கடைக்கால், கல்வர்ட், நீர்க்கால் அல்லது தண்ணீர்க் குழாயின்மேல் அனுமதியில்லாமல் புதிதாய் கட்டப்பட்டோ புதுப்பித்துக் கட்டப்பட்டோ இருக்கும் யாதொரு கட்டிடத்தை இடித்துவிடவேண்டுமென்றாகிலும் வேறே யாதொரு விதமாய் அதன் விஷயத்தில் பிரவர்த்திக்கவேண்டுமென்றாகிலும் கண்டு கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் கொடுக்கப்பட்ட நோடிஸ்.	பிரஸ்தாப ஜில்லாவின் கம்மாண்டிங் ஆபிஸர்.	நோடிஸ் கொடுக்கப்பட்டதிலிருந்து முப்பது தினம்.
206	யாதொரு ஆடுமாடு முதலியவை அடிக்கும் தொட்டியை உபயோகிக்கக்கூடாதென்று தடுத்து அல்லது அது விஷயமாய் நிர்ப்பந்தம் ஏற்படுத்தி கன்டோன்மென்ட் அதிகார சபையாரால் கொடுக்கப்பட்ட நோடிஸ்.	டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்	நோடிஸ் கொடுக்கப்பட்டதிலிருந்து இருபத்தொரு தினம்.
238	ஒழுங்குதவறி நடக்கும் நபரைக் கன்டோன்மென்டிலிருந்து அப்புறப்படுத்தவேண்டுமென்றும் அனுமதியில்லாமல் கன்டோன்மென்டுக்குள் பிரவேசிக்காதபடி தடுக்கவேண்டுமென்றும் கண்டு மாஜிஸ்ட்ரேட்டால் பிறப்பிக்கப்பட்ட நோடிஸ்.	டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்.	நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து முப்பது தினம்.

6-வது ஷெட்யூல்.

ரத்து செய்யப்பட்ட சட்டதிட்டங்கள்.

(291-வது பிரிவை பார்க்கவும்.)

வருஷம்.	நம்பர்.	சுருக்கமான பெயர்.	எவ்வளவு வரையில் ரத்தென்பது.
1910	15	1910-ம்௵த்து கன்டோன்மென்டுகள் ஆக்ட்.	எவ்வளவு வரையில் ரத்தாகவில்லையோ அவ்வளவு.
1914	10	1914-ம்௵த்திய ரத்து செய்வதற்கும் திருத்துதவற்குமான ஆக்ட்.	முதலாவது இரண்டாவது ஷெட்யூல்களில் எவ்வளவு 1910-ம்௵த்து கன்டோன்மென்டுகள் ஆக்டுக்குச் சம்பந்தப்படுகிறதோ அவ்வளவு.
1919	18	1919-ம்௵த்திய ரத்து செய்வதற்கும் திருத்துவதற்குமான ஆக்ட்.	முதலாவது ஷெட்யூலில் எவ்வளவு 1910-ம்௵த்து கன்டோன்மென்டுகளாக்டுக்குச் சம்பந்தப்படுகிறதோ அவ்வளவு.
1919	22	1919-ம்௵த்திய கன்டோன்மென்டுகள் (திருத்துவதற்கான) ஆக்ட்.	முழுவதும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

கவர்ன்மெண்டாரின் சீர்திருத்த திட்டத்தின் தோரணையைக் கன்டோன்மென்டுகளின் பரிபாலன விஷயமாய் அமுலுக்குக் கொணடுவர என்ன மாறுதல்கள் அவசியமாகுமென்று ஆலோசிப்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டாரால் 1921-ம் வருஷ ஜனவரி மாதத்தில் ஒரு கம்மிட்டி ஏற்படுத்தப்பட்டது. ஷை கம்மிட்டியார் ராணுவ கன்டோன்மென்டுகள் எந்த முறையின்படி பரிபாலிக்கப்படுகின்றனவோ அந்த முறையைச் சாதாரண மியுனிஸிபல் சட்டத்தைப்போல் இருக்கும்படிச் செய்யும்பொருட்டு (1910-ம் வருஷத்திய 15-வது ஆக்டாகிய) கண்டோன்மென்டுகள் ஆக்டையும், 1912-ம் வருஷத்து கன்டோன்மென்ட் கோடையும் முற்றிலும் திருத்தி ஒன்றாய்ச் சேர்க்க வேண்டுமென்று சிபாரிசு செய்தார்கள்.

ஷை கம்மிட்டியாரின் சிபாரிசுகளை இப்போது இந்தியா கவர்ன்மெண்டார் பரிசீலனை செய்து, அதன்மேல் ஏற்பட்ட முடிவுகளை இந்த மசோதா ஆக்டில் சேர்த்திருக்கிறார்கள்.

பிரஸ்தாப மசோதா ஆக்டின் முக்கியமான அம்சங்கள் எவையென்றால்:—

(a) முக்கியாம்சத்தில் ராணுவ பரிபாலனத்துடன் சம்பந்தப்பட்டிராதவர்களாகவாவது அதற்குக் கீழ்பட்டவர்களாகவாவதிராத ஜனங்கள் ஏராளமாய் அடங்கியுள்ள கன்டோன்மென்டுகளின் கவர்ன்மெணடை மியுனிஸிபல் பரிபாலனத்தைப்போல் நடத்துவதற்கான அதிகாரம் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறது. இந்த சந்தர்ப்பங்கள் முற்றிலும் ஏற்பட்டிராத இதர கன்டோன்மென்டுகளில், கனடோன்மென்ட் விஷயங்களின் பரிபாலன அதிகாரமானது கன்டோன்மென்டின் கம்மாண்டிங் ஆபீஸரிடம் சங்கிரமிக்கும்; அவர் இந்த ஆக்டின் காரியங்களுக்காக சட்டப்படி சேர்ந்த ஒரு தனிச்சபையாய் ஏற்படுவார். இந்த ஏற்பாட்டினால் பொதுவாய் என்ன நேரிடுமென்றால் கன்டோன்மென்ட் அதிகார சபையானது இப்போதிருக்கிற மாதிரி கவர்ண்மென்டின் நிர்வாக காரியஸ்தராக மாத்திரம் இருப்பது நின்றுபோகும். பெரிய கன்டோன்மென்டுகளில் இப்போதிருக்கும் கன்டோன்மென்ட் கம்மிட்டிக்குப் பர்த்தியாக ஒரு கன்டோன்மென்ட் போர்ட் ஏற்படுத்தப்படும்; அந்த போர்டானது மியுனிஸிபாலிடியின் தன்மையுள்ளதாய் முக்கியாம்சத்தில் ஸ்தல சுயஆட்சி ஸ்தாபனமாயிருக்கும்.

(b) திருத்தப்பட்ட கன்டோன்மென்ட் அதிகார சபையார்களுக்கு சட்டப்படி பிரத்தியேகமான ஒரு ஹோதா ஏற்படும்; அவர்கள் தங்கள் பேராலேயே தாவா செய்யவும் தாவா செய்யப்படவும் ஒப்பந்தங்கள் செயது கொள்ளவுங்கூடும். பற்பல கன்டோன்மென்டுகளில் பற்பலவிதமாய் நடத்தப்படவேண்டிய பிரதேச விஷயங்களின் பரிபாலனத்தை ஒழுங்குபடுத்துவதற்காக சகாயச்சட்டங்கள் செய்யவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படும்.

(c) சீர்திருத்த முறையின்படிக்கான கன்டோன்மென்ட் நிதியானது கன்டோன்மென்ட் அதிகார சபையாரிடம் சங்கிரமிக்கும் பிரதேச நிதியாகும்.

(d) சீர்திருத்தப்பட்ட கன்டோன்மென்டுகளில் ஒரு போர்ட் அமைக்கப்பட்டால், அந்த போர்டில் ஒரு பகுதியார் கன்டோன்மென்டிலுள்ள ஸிவில் பிரஜைகளினின்றும் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாயிருப்பார்கள். ஆயினும், உத்தியோகஸ்தர்கள் பெரும்பாலோராயிருக்கும்படி பார்த்துக் கொள்ளப்படும்.

(e) கன்டோன்மென்ட் மாஜிஸ்ட்ரேட் என்னும் ஸ்தானம் அந்த ஹோதாவில் எடுத்துவிடப்படும். அவருக்குப் பதிலாக ஒரு "நிர்வாக உத்தியோகஸ்தர்" நியமிக்கப்படுவார். அவருக்கு கவர்ன்மென்டாரால் சம்பளம் கொடுக்கப்படும். அவருக்குரிய இதர வேலைகளுடன் போர்டின் ஸெக்ரெடரியினுடைய அலுவல்களையும் அவர் செய்வார். அவருக்கு நீதிவிசாரணை சம்பந்தமான அதிகாரங்களாவது அலுவல்களாவது இருக்காது.

(f) பிரதேச கவர்ன்மென்டுகள் கன்டோன்மென்ட் விஷயங்களில் மேற்பார்வை சம்பந்தமாயும், மேல்விசாரணை சம்பந்தமாயும் இப்பொழுது செலுத்துவதைக் காட்டிலும் அதிகமான அதிகாரங்களைச் செலுத்துவார்கள்.

(g) சேனைகளின் சுகாதாரம், க்ஷேமம், ஒழுங்கு ஆகிய இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ராணுவ அதிகாரிகள் சில விசேஷ அதிகாரங்களைத் தங்களிடத்திலேயே நிறுத்திக்கொள்வார்கள்.

டெல்லி, 1923-ம் வருஷம் மார்ச்மீ 17உ.

ஈ. பர்டன்.

எச். மான்க்ரீப் ஸ்மித்,
இந்தியா கவர்ன்மென்ட் ஸெக்ரடரி.

(A true translation)

N. DURAISWAMI RAO,
Acting Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.